இங்கிலாந்து தேச சரித்திரம்

1066 முதல் 1485 வரையில்

முதல் பாகம்

வடுவூர் - கே. துரைஸாமி ஐயங்கார் B. A.

ஓரியன்டல் ஹோம் யூனிவர்ஸிட்டி பிரஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

எல்லா உரிமைகளும் ஆசிரியருடையவை

1934

[விலை ரூபா] 1-8-0

1322

இங்கிலாந்து தேச சரித்திரம்

(1066—1485)

முதல் பாகம்

விஷய அட்டவணை

அத்தியாயம் | பக்கம்

1 முதலாவது வில்லியத்தின் வெற்றிக்கு முன் இங்கிலாந்தின் நிலைமையும் மக்களின் வாழ்க்கையும் 1

நிலத்தின் தன்மை—குடி மக்களது பயிர்த் தொழில் முதலியவை—கிராமங்கள், பட்டணங்கள் முதலியவை—ஹண்ட்ரட்—ஷயர்—குடிமக்களின் பாகுபாடு—குடி மக்களின் மகாநாடுகள்—அரசரும், அவருடைய உத்தியோகஸ்தர்களும்—சட்டம், துரைத்தன நிர்வாகம், நீதி முதலியன—மாதா கோவில் முதலிய மதஸ்தாபனம்—குடி மக்களின் வீடுகள், ஆகாரம் முதலியவை—பாஷை—இலக்கியம்—டேனிஷ் யுத்தத்தினால் ஏற்பட்ட துரைத்தன அமைப்பு சம்பந்தமான பலன்கள்—வம்சாவளிகள்.

2 ஹரால்ட் II (1066) 31

கன்பெஸர் எட்வரடினது மரணம்—ஹரால்ட் II முடி சூடல்—ஹரால்டின் அரசியல் தந்திரம்—ஹரால்டின்மீது வில்லியம் சுமத்திய பழி—வில்லியத்தின் பூர்வ வரலாறு—படையெழுச்சி முஸ்தீப்புகள்—ஹரால்டின் முஸ்தீப்புகள்—தாஸ்டீக், ஹரத்ரதா ஆகியோரது படையெடுப்பு—வில்லியத்தின் வருகை—சென்லாக்,

அத்தியாயம் பக்கம்

அல்லது, ஹேஸ்டிங்ஸ் யுத்தம்—வில்லியம் லண்டனுக்குப் போகுதல்—வில்லியம் அரசராய் ஏற்றுக்கொள்ளப்படுதல்.

3 வெற்றிகொண்ட வில்லியம் (1066—1087) 49

வில்லியம் முடி தரித்தல், அவரது நிலைமை—ஆரம்பக் கலகங்கள்—எக்ஷேதர் கலகம், புதிய கோட்டைகள், வடக்கில் கலகம்—ஹேயர்வரட் கலகம்—வில்லியத்தின் பொதுவான உத்தேசங்கள்—கோட்டைகளின் நிர்வாகம், பியூடாலிஸம் முதலியவை—வில்லியத்தின் தந்திர ஏற்பாடுகள்—வில்லியமும் மதஸ்தாபன இலாகாவும்—பாரான்களது கலகம்—ராபர்த்தின் கலகம், ஆதாவின் முடிவு—டேம்ஸ்டே புக்—வில்லியத்தின் காடுகள் முதலிய சில்லரை ஏற்பாடுகள்—மெயினைக் கைப்பற்றியது—வில்லியத்தின் மரணம்—அவருடையஅரசியல் திறமையும் குணதிசயங்களும்—சமூக நிலைமையும், மாறுதல்களும்—சம்பவக் குறிப்புகள்—வம்சாவளி.

4 வில்லியம் II (1087—1100) ... 86

இரண்டாவது வில்லியம் முடி சூடல், அவருடைய குணதிசயங்கள்—பாரான்களினது கலகம்—நார்மண்டியில் ராபர்த்தோடு சச்சரவு—ரானுல்ப் பளம்பரடு—மால்கம் கன்மாரது படையெடுப்பு—ராபர்த்தோடு புதிய சச்சரவு வில்லியமும் II, வேல்ஸும்—ராபர்த் மௌபரை கலகம்—பியூடல் கடமைகள்—வில்லியமும் II, மதஸ்தாபனமும்—முதலாவது குருசேடு—ராபர்த்—வில்லியத்தின் அகால மர

அத்தியாயம் பக்கம்

ணம்—அவருடைய ஆட்சியின் பலாபலன்கள்—சம்பவக் குறிப்புகள்—வம்சாவளி.

5 ஹெண்ரி I (1100—1135) ... 114

ஹெண்ரி I முடி சூடல்—அவருடைய சமாதான தந்திரங்களும், உரிமைப் பட்டயமும்—ராபர்த் பட்டத்திற்காகப் போர் புரிதல்—பலஸ்மி ராபர்த்தினது கலகம்—தஞ்சபரை யுத்தம்—அரசருடைய குடும்ப சம்பவங்கள்—மதஸ்தாபனத்தாருடன் சச்சரவும், சமாதானமும்—சலீஸ்புரி ராஜர்—ஹெண்ரி I மரணம், நாட்டினது அபிவிருத்திகள்—சம்பவக் குறிப்புகள்.

6 ஸ்டீவன் (1135—1154) 138

மாத்தில்தாவினது தவறு, ஸ்டீவன் அரசராதல் அவருடைய உரிமைப் பட்டயங்கள்—பாரான்களது கலகம்—நார்த்தாளர்தான், அல்லது, கொடிச்சண்டை—சலீஸ்புரி ராஜருடன் சச்சரவு—மாத்தில்தாவினது வருகை, உள் நாட்டுப் போர்—வாலிங்ஸ்போர்ட்உடன்படிக்கை—ஸ்டீவனது மரணம், அவருடைய ஆட்சியின் தன்மையும், பலாபலன்களும்—சம்பவக் குறிப்புகள்.

7 ஹெண்ரி II (1154—1189) ... 153

ஹெண்ரி II முடி சூடல், அவரது நிலைமை, குணதிசயங்கள்—அவருடைய பிரதம நடவடிக்கைகள்—தமஸ் பக்கத்—டௌலௌஸ் தகராறு, ஸ்கூடேஜ் வரி—ஐரோப்பிய நாடுகளும், ஹெண்ரியினுடைய நோக்கமும்—தமஸ் பக்கத் அரச்

அத்தியாயம் | பக்கம்

பீஷப்பாகுதல்—மதஸ்தாபனத்தாருடைய அதீதமான செல்வாக்கு—கிளாரண்டன் அரசியல் சீர்திருத்தங்கள்—ஹென்ரி II அயர்லாந்தை வெல்லுதல்—கிளாரண்டன் ஆஸீஸ், பாரான்கள் கலகம்—நார்த்தாம்ப்டன் ஆஸீஸ்—அரசருடைய மேன்பாடுகள்—சம்பவக் குறிப்புகள்—வம்சாவளி.

8 ரிச்சறட் I (1189—1199) 198

ரிச்சறட் முடி சூடுதல், அவருடைய குணாதிசயங்கள்—மூன்றாவது குருசேடும், பணச்சேகரிப்பும்—மூன்றாவது குருசேடு—அரசர் சிறைப்படுதல்—லங்க சம்புவினது ஆட்சி—ரிச்சறட் சிறை நீங்கி வருதல்—அரசர் சிறையிலிருந்து மீளுதல்—ஹுபெர்த் வள்திர் ஆட்சி—அரசருடைய கடைசிக் கால ஏற்பாடுகள், மரணம்—அவருடைய ஆட்சியினது விசேஷம்—யூதர்கள் என்னப்படும் ஜீவுகள்—சம்பவக் குறிப்புகள்.

9 ஜான் (1199—1216) 220

ஜானுடைய ஆரம்பச் செய்கையும், முடி சூடுதலும்—ஜானுடைய குணாதிசயங்கள்—ஜானுடைய இரண்டாவது விவாகம்—பாய்ட்டௌ பாரான்களோடு சச்சரவு—ஜான் நார்மண்டியை இழப்பது—நார்மண்டி போனதனால் ஏற்பட்ட பலாபலன்கள்—ஜானுக்கும் பாப்பிற்கும் தகராறு—பிட்ஸ் பீட்டருடைய மரணத்தினால் ஏற்பட்ட பலாபலன்கள், போயவனஸ் யுத்தம்—ஜானுக்கும் பாரான்களுக்கும் மறுபடி சச்சரவு—மாக்கன சரத்தா—மாக்கன சரத்தாவின் முக்கி

அத்தியாயம் பக்கம்

யத் தன்மை—ஜான் பாரான்களை ஒறுப்பது, லௌவீஸினது படை யெடுப்பு—ஜானுடைய மரணம்—சம்பவக் குறிப்புகள்.

10 ஹென்ரி III (1216—1272) ... 249

ஹென்ரி III முடி சூடுதல், பிரதம ஏற்பாடுகள்—லௌவீஸ் தோல்வி, லாம்பத்து உடன்படிக்கை—வில்லியம் மாரஷாளினது ஆட்சி—ஹென்ரியினது குணதிசயங்கள்—பாப்பினது வரிகள்—ஹென்ரியினது மூடச் செய்கைகள், ஹூபர்த்தினது ஆட்சி முடிவு—ஹென்ரி III தாமே அரசு புரிதல், பாரான்கள் கலகம்—அரசருடைய விவாகமும், அதன் பலனும்—தைலி போயரக், சேயின்றஸ் போர்கள்—ஹென்ரி பாப்பிற்குக் கடனாளியாவது—பாரில்லியமன்று—ஸீமான்-தே-மண்ட்பரத் தேசீயத் தலைவராகிறார்—மடப் பாரில்லியமன்று, ஆக்ஸ்போர்டு திட்டங்கள்—கட்சிகள், கலகாஸ்பதங்கள், பாரிஸ் உடன்படக்கை—உள் நாட்டுப் போர், லவஸ் யுத்தம்—1265-ம் வருஷத்துப் பாரில்லியமன்று—ஸீமானுடைய வீழ்ச்சி, ஈவஸ்ஹாம் யுத்தம், அதன் முடிவு—பாரான்களுடைய யுத்தத்தினால் ஏற்பட்ட நிரந்தரமான பலன்கள்—கடைசிக் குருசேடு, ஹென்ரி IIIயினது மரணம்—தாமினிகன்ஸ், பரன்சிஸ்கன்ஸ் முதலியோர் வருதல்—அஞ்சவன் ஆட்சியில் இங்கிலாந்தினது நிலைமை—சம்பவக் குறிப்புகள்.

முன்னுரை

சில வருஷ காலத்திற்கு முன்னர், இங்கிலந்து தேச சரித்திரம் என்ற பெயருடன் எங்களால் ஒரு நூல் வெளியிடப்பட்டதென்பது பலரும் அறிந்த விஷயம். இப்போது வெளியாகும் இந்தப் பகுதி, அந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டு, வெளியிடப் பெறுகிறதோ வென்று எவரும், முதல் பார்வையில், ஐயம் கொள்ளலாம். ஆயினும் இதை ஒரு முறை படிப்பவருக்கு அந்த ஐயம் உடனே நீங்கிவிடுமென்பது நிச்சயம். முன்னர் வெளியிடப் பெற்றது சுருக்கமாகவும், பல நூலாசிரியர்களால் எழுதப்பட்டுள்ள முதல் நூல்களைத் தழுவாமலும், மிக அவசரத்தில் எழுதப்பட்டதென்பதை நாங்களே உணர்ந்தமையால், அதை அறுதியாக நீக்கிவிட்டு, ஆங்கிலத்திலுள்ள மூலாதார சரித்திர நூல்களிலிருந்து விஷயங்களைத் திரட்டி, காலக்கிரமப்படி தெளிவாக விவரித்தெழுதி யிருக்கின்றனம். இதன் புதிய அமைப்பு இதைப் படிப்போருக்கே நிதரிசனமாக விளங்கிவிடுமாதலால், இதைக் குறித்து நாம் விரிவாக எழுதுவது மிகையாகும்.

மேல் நாட்டுச் சரித்திரங்கள், விக்ஞான சாஸ்திரங்கள் முதலிய உயர்தர நூல்களைத் தமிழில் எழுதவேண்டுமென்ற வேட்கையும், ஊக்கமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. உயர்தர வகுப்புகளில் தாய்ப் பாஷையின் மூலமாகவே கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்ற கிளர்ச்சி சில வருஷ காலமா யிருந்துவருகிறது. அவ்வாறே பல

பாடங்களை நடத்தலாமென்று கல்வி இலாகா அதிகாரிகளது அநுமதியும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதைப் பெரும்பாலோர் அசட்டை செய்யினும், சில சுத்த வீரர்கள் துணிந்து, இங்கிலாந்து தேச சரித்திரம் முதலியவைபோன்ற பாடங்களைத் தமிழிலேயே கற்பிக்க ஆரம்பித்திருக்கின்றனர். இப்புதிய ஏற்பாடு காலக்கிரமத்தில் வேரூன்றிப் பெருத்துத் தழைத்துப் பரவும் என்பது நிச்சயமாய் எதிர்பார்க்கத் தக்கதேயானாலும், இந்த மேலான நோக்கம் விரைவில் கைகூடுவதற்கு பலவகையான இடையூறுகள் குறுக்கில் வழிமறித்து, எவரும் பரபரப்போடு முயற்சிக்காமல் நின்று மலைக்கும்படி செய்கின்றன.

முதலாவது. நமக்கு அவசியம் தேவையான நூல்கள் எவை யெவையோ அவைகளைப் பிரசுரிக்கும் உரிமை, மொழி பெயர்க்கும் உரிமை ஆகியவை வெள்ளை மக்களான வர்த்தகர்களிடம் ஏகபோகமா யிருந்து வருகின்றன. அதனால் அவர்கள் வருஷவாரி நம் சிறார்களிடத்திலிருந்து நிரந்தரமாக இலக்ஷக்கணக்கான பொருளை வசூலித்துத் திரட்டிக் கொண்டு போகிறார்கள். ஆகவே, ஷை நூல்களை தேச பாஷையில் மொழிபெயர்ப்பது அவர்களுடைய ஏகபோக உரிமையான கற்பகத் தருவினது அடிவேரை அறுத்துவிட முயற்சிபபதும்போ லாகுமாதலால், நம் போன்றவர் அவைகளைத் தமிழில் மொழிபெயர்க்க வெள்ளை மக்கள் மனதார அநும்தி தருவார்களென்று நாம் எதிர்பார்ப்பது மனித இயற்கைக்கு விரோதமான தொன்றை எதிர்பார்ப்பதுபோலாகும்.

நாம் அவர்களுடைய நூல்களைத் தொடாமல், மூலாதாரமான வேறு நூல்களை வைத்துக்கொண்டு, புஸ்தகங்களைத் தயாரிப்பதாக வைத்துக்கொள்வோம். அவர்களுக்காக

நாம் தேச சரித்திரத்தின் விவரங்களை வேறுபடுத்தலாமா? நரியைப் பரியாகவும், பரியை நரியாகவும் மாற்றுவது கூடுமா? பூகோளம், பழைய சரித்திரங்கள், நாட்டின் எல்லைகள் ஊர்கள் முதலியவை அடங்கிய படங்கள் ஆகியவற்றை நாம் வேறுபடுத்தி, நமது கற்பனு சக்தியைக் காட்டலாமா? வெள்ளை மக்களும் முதல் நூல்களிலிருந்தே அவர்களுடைய நூல்களைத் தயாரித்திருக்கிறார்களாதலால், நமது நூல்களுக்கும் அவர்களுடையவற்றிற்கும் விஷய ஒற்றுமை இருப்பது நிச்சயமே. அதைக் கொண்டு, அவர்கள் நம்மீது ஐயாயிரம் பதினுயிரத்திற்கு தாவா தொடுத்தால், அதிலிருந்து நாம் தப்புவது தம்பிரான் புண்ணியமாக முடிகிறது. வெள்ளை மக்களுடைய புஸ்தக உரிமை வழக்குகளை நீதிஸ்தலத்தார் முதல் வகுப்பு வழக்குகளென்று வகுத்திருக்கிறார்களாதலால், அவைகள் வெள்ளைக்கார நீதிபதிகளாலேயே பரிசிலனை செய்யப்பட வேண்டுமென்ற விதியை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்திய ஹைகோர்ட் ஜட்ஜுகள் இவ்வித வழக்குகளைப் பரிசிலனை செய்தால், வெள்ளைக்கார வாதிகளுக்கு சரியான நீதி கிடைக்காதென்பது இதன் கருத்தாம். அனல் இந்தியராகிய பிரதிவாதிகள் தங்களுக்கு வெள்ளைக்கார நீதிபதிகள் பட்சபாதமற்ற நீதி வழங்குவார்களென்று உறுதியாக நம்பவேண்டுமாம். வேறு வழியில்லை யாகையால் நாம் நம்பியே தீருகிறேம். ஆனல் கிரியாம்சையில் அந்த நீதி எவ்வளவுதூரம் பட்சபாதமற்றதா யிருக்கிறதென்பது நியாயஸ்தலத்தில் புகுந்து பழகும் துர்ப்பாக்கியத்திற்கு இலக்கானவருக்கே உள்ளபடி விளங்கும்.

இது நிற்க, இரண்டாவது இடையூறு பணச்செலவு. நூல்களைத் தமிழில் வெளியிட நமக்கு ஏராளமாகப்பணம்

பிடிக்கிறது. வெள்ளை மக்களால் வெளியாக்கப்படும் நூல்கள் செங்கோலின் அதிகாரம், செல்வாக்கு ஆகிய சர்வ வல்லமையும்வாய்ந்த இரண்டு மாந்திரீக இறகுகளால் பறந்து உலகம்முழுதிலும் பரவிப் பொன்முட்டைகளை இடுகின்றன. தமிழ் நூல்களோ, பன்னிரண்டு ஜில்லாவிற்குள், தாய் தகப்பனற்ற அநாதைக் குழந்தைகள்போல், தேடுவாரற்று, தமிழில் அபிமானமுள்ளவரான ஆயிரத்தில் ஒருவரால் தர்ம விஷயமாய் ஆதரிக்கப்படுகின்றன. சில சமயங்களில் அதுவும் நிச்சயமாய் எதிர்பார்க்கக் கூடாததாகிவிடுகிறது. இந்த இங்கிலாந்து தேச சரித்திர வெளியீடு சம்பந்தமான புள்ளிகளைக் கொண்டே நாம் இதை விளக்கலாம். நாம் முன்னர் வெளிவிட்ட நூல் 1000 பிரதிகள் தயாராவதற்குப் பிடித்த மொத்தச் செலவு ரூ 1500. சுமார் 300 உபாத்தியாயர்கள் இனமாக மாதிரிப் பிரதிகள் பெற்றுக் கொண்டார்கள். அவை ஒவ்வொன்றையும் அனுப்ப தபாற் செலவு எட்டெட்டணு வீதம் நாங்களே செலவிட் டனுப்பினேம். சுமார் பத்து உபாத்தியாயர்களே புஸ்தகங்களை வரவழைத்துக் கொண்டனர். அவை மொத்தம் சுமார் 250 புஸ்தகங்கள் ஆயின. ஒவ்வொன்றுக்கும் சராசரி ரூ 2. வீதம் தேறியது. எங்களுடைய மொத்தச் செலவு ரூ 1650 ஆயிற்று; மொத்த வரவு ரூ. 500; இதில் விளம்பரச் செலவுகள், மூன்று வியாஜ்ஜியங்களின் செலவுகள் ஆகியவை சேர்க்கப் படவில்லை.

இது பழைய புஸ்தக சம்பந்தமான அநுபவ சாரம். இப்போது வெளியாகும் நூலைப்பற்றியும் சில தகவல்களைத் தெரிவிக்கிறேம். எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு 1066—1485 வரையில் உள்ள பகுதி பாடமாக வைக்கப்பட்டிருப்பதாகவும், அதைத் தயாரித்து வெளியிடுமாறும் எமது

நண்பர்களான சில ஆசிரியர்கள் எழுதியதன்மேல், இதைத் தயாரிக்க ஆரம்பித்தவுடன், இவ்வித நூல் வெளிவரப் போவதாய் எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் தெரிவித்ததில், இதுவரையில் கேட்கப்பட்டுள்ள பிரதிகள் மொத்தம் சுமார் 75 ஆகிறது. இப்போது வெளியிடப்படுகிற நூலில் 1000 பிரதிகள் தயாரிக்க ரூ. 500-க்குமேல் பிடித்தது. இதில் நூலாசிரியருடைய உழைப்புக் கூலி சேர்க்கப்படவில்லை. ஆனல், ஏற்கனவே மாதிரிப்பிரதி பெற்றுக்கொண்ட பழைய நண்பர்களில் சுமார் இருநூறு பேர்கள் வரையில் மறவாமல் மாதிரிப்பிரதி கேட்டிருக்கிறார்கள். அவைகளை எங்களுடைய செலவில் அனுப்ப ஒவ்வொரு புஸ்தகத்திற்கும் தபாற்செலவு 6 அணு வாகும். மேலே குறித்தபடி 75 புஸ்தகங்களுக்கு ஆர்டர் அனுப்பி யிருப்போர்களில் பலர், சிறுவர்களது விஷயமாதலால், கமிஷன் தாராளமாகக் குறைத்தனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொண் டிருக்கிறார்கள்.

இந்த நிலைமையில், இலாபத்தைக் கருதியோ, ஜீவனோபாயமாகவோ, இதை வர்த்தகமாய் எவரேனும் மேற்கொள்ள நினைப்பார்களா? தமிழ்மொழி பெயர்ப்பு துரிதத்தில் நடைபெறுமென்பதற்கு இது நற்குறியாகுமா?

வெள்ளை மக்களுடைய உரிமை, பண விரயம் ஆகிய இரண்டு அடிப்படையான இடையூறுகள் ஒருபுறம் இருக்க, இங்கிலாந்து தேச சரித்திரமாகிய இந்நூலை நாம் தமிழில் ஆக்க முயன்றால், விஷயப் புதுமையாலும், பாஷையினது வேறுபாட்டினாலும் உண்டாகும் இடையூறுகளும், மூளைக் குடைச்சல்களும் கணக்கிலடங்கா வென்பதை வேத வாக்கியமாய் எவரும் ஏற்றுக் கொள்ளலாம்.

மேல் நாட்டாருடைய ஊர்ப் பெயர்களும், மனிதர்களுடைய பெயர்களும் நாம் காதால் கேளாதனவா யிருக்கின்

றன. இங்கிலீஷ் பாஷையினுடைய அகராதியைக் கரை கண்டவர்களுக்குக்கூட, அப்பெயர்களுடைய கருத்துக்கள் விளங்குவதில்லை. வெள்ளை மக்களுக்கே தங்கள் பெயர்களுடைய கருத்துக்கள் தெரிகின்றனவா வென்பதே சந்தேகம். எந்த சமூகத்தாரும் பரம்பரையாகத் தமது முன்னோரால் உபயோகிக்கப்பட்டு வந்த பெயர்களை வைத்துக் கொள்ளுகின்றனர்; ஆனல், அவற்றில் பெரும்பாலானவைகளுடைய கருத்தைத் தெரிந்துகொள்வதில்லை.

நம் நாட்டுப் பெயர்களுக்கும், இங்கிலீஷ்காரர்களுடைய பெயர்களுக்கும் முக்கியமான ஒரு வேறுபாடிருக்கிறது. தமிழ்ப் பாஷையை அறிந்த அன்னிய நாட்டாருக்கு, நம்முடைய பெயர்கள் இன்ன கருத்துடையவை என்பது சுலபத்தில் விளங்கிப் போகும். ஆனல் வெள்ளைக்காரர்களுடைய பெயர்களில் பெரும்பாலானவை பைபிலில் சம்பந்தப்பட்டவையாயும் இல்லை; அகராதியைக் கொண்டு தெரிந்துகொள்ளக் கூடியவைகளாயுமில்லை. அதுவன்றி, ஒவ்வொருவரும் இரண்டு மூன்று பெயர்களை அடுக்காக வைத்துக் கொள்ளுகின்றனர்; ஆணும் பெண்ணும் ஒரே பெயரை வைத்துக்கொள்ளுகிறார்கள். அவைகள் நமக்குப் புதுமையாயிருக்கின்றன.

இதுவன்றி இலக்கண சம்பந்தமான சில இடைஞ்சல்களும் இருக்கின்றன. இங்கிலீஷ் பாஷையினது எழுத்துக்களோ மிக சொற்பமானவை; அதில் உயிர் எழுத்துக்கள் ஐந்தே இருக்கின்றன. எந்த பாஷைக்கும் உயிரெழுத்துக்களே சொற்களுக்கு ஜீவாதாரமானவை. அதனலேயே அவைகளுக்கு உயிர் உழுத்துக்கள் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஒரு பாஷையில் எழுத்துக்கள் சம்பூர்ணமாயிருக்கின்றன வென்பதற்கு அறிகுறி, அந்த பாஷையின்

ஒரு சொல்லை எத்தனைபேர் உச்சரித்தாலும் ஒரே விதமான ஓசையை உண்டாக்குவதே யாகும். அந்த அம்சத்தில் இங்கிலீஷ் பாஷை மிக இளப்பமானதென்பது வெள்ளை மக்களாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள விஷயம். தமிழில் குற்றெழுத்துகள் ஐந்தும், நெட்டெழுத்துகள் ஏழும் ஆகப் பன்னிரண்டு உயிரெழுத்துக்கள் இருக்கின்றன. ஆனால் இங்கிலீஷில், நம் குற்றெழுத்துகள் ஐந்துமே எல்லா உயிரெழுத்துகளுடைய வேலைகளையும் செய்கின்றன. அதாவது, ஓர் உயிரெழுத்து, சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி, பல ஓசைகளைத் தருகின்றது. உதாரணமாக, Put, But என்ற இரண்டு சொற்களையும் எடுத்துக்கொண்டு பார்த்தால், 'u' என்னும் உயிரெழுத்து, ஒன்றில் 'உ' என்னும் ஓசையையும், மற்றதில் 'அ' என்னும் ஓசையையும் உண்டாக்குகிறது. இந்த விஷயத்தில் அநுபவத்தால் ஏற்பட்ட வழக்காறே சட்டமாயிருக்கிறதன்றி, பகுத்தறிவாலோ, இலக்கண விதிகளைக் கொண்டோ, நாம் எந்தச்சொல்லினுடைய ஓசையையும் உயிரெழுத்துகளிலிருந்தே திட்டமாக நிர்ணயிப்பது சாத்தியமானதல்ல. வழக்காறிலும் பல சொற்களை அவரவர் தம் தம் போக்கில் உச்சரிக்கிறார்கள். பெயர்ச்சொற்களை எடுத்துக்கொண்டாலோ, மனிதருக்குப் பைத்தியம் பிடிக்க வேறு மருந்து தேவையில்லை.

இதுவன்றி, F, Z முதலிய இருபிறப்பு எழுத்துக்களும், க,ட,த,ப என்னும் எழுத்துக்களுடைய மிருதுவான எழுத்துக்களும், தமிழில் இல்லையாதலால், அவைகளை உள்ளபடி, தமிழில் உச்சரிப்பது இயலாத காரியமாயிருக்கிறது.

எனவே, இந்த இங்கிலாந்து தேச சரித்திரத்தைப் பலர் தமிழில் எழுத முயன்றால், பெயர்களை ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாய் எழுதுவார்களென்பது நிச்சயமாய்

எதிர் பார்க்கக்கூடிய விஷயம். ஒரு மாணவர் ஒருவருடைய புஸ்தகத்தைப் படித்து, விடைக் காகிதத்தில், பெயர்களை ஒரு மாதிரி எழுத, பரீட்சகர்கள் வேறொருவருடைய புஸ்தகத்தையோ, இங்கிலீஷ் புஸ்தகத்தையோ படித்தவர்களாயிருந்தால், மாணவருடைய கதி எப்படியாகும்? அவருக்குப் பெரிய சுன்னம் கிடைக்குமென்று நாம் நிச்சயமாக தீர்க்க தரிசனம் கூறலாம்.

எனவே பெயர்கள் யாவற்றிற்கும் ஒரே மாதிரியான உச்சரிப்புகள் ஏற்பட்டாலன்றி மாணவருக்குப் பாதுகாப்பு ஏற்படாது; அதுவன்றி, பிற்காலத்தில், பொது மக்களுடைய வழக்காறிலும், முரண்பாடும் மயக்கமும் ஏற்படுவது திண்ணம். இவ்வாறு ஒரே சீரான உச்சரிப்பை நிலைக்க வைப்பது, நாம் மேலே குறித்த மற்ற இரண்டு இடையூறுகளைக் காட்டிலும், மிக விபரீதமானதா யிருக்கிறது. கூடிய வரையில் அவைகளை நிலைப்பானவைக ளாக்க பகுத்தறிவிற்கொத்த சில யுக்திகளைக் கடைப்பிடித்து, அவைகளுடைய ஆதிக்கருத்து என்னவாக இருக்கலாமென்பதைக் கூடிய வரையில் அறிந்து தமிழில் மாற்றினால், அது நிலைத்து நிற்கும். அர்த்தமேஇல்லாமல் அவரவருடைய மனம்போனபடி மாற்றினால், ஏற்கனவே, குளறுபடைக் கிருப்பிடமாகத் தோன்றும் மேல்நாட்டுப் பெயர்கள் நம் நூல்களில் ஒரே குப்பைமேடாக மாறிப் போவது நிச்சயம்.

அவைகளுக்கு நாம் ஒரே நிலைப்பான உச்சரிப்பை ஏற்படுத்த வேண்டுமானால், அந்த விஷயத்தில் நாம் செய்யும் யுக்தி பகுத்தறிவிற்கு ஒத்ததா யிருப்ப தவசியம். ஏற்கனவே, தமிழில் உபயோகிக்கப்பட்டுள்ள சில பெயர்களை நாம் இங்கு கவனிக்க வேண்டும். இங்கிலாண்ட், ஸ்காட்லாண்ட், நியுபவுண்ட்லாண்ட் என்பவை முறையே இங்கி

லாந்து, ஸ்காட்லாந்து, நியுஜீலாந்து என்று மாற்றப் பட்டிருக்கின்றன. 'லாண்ட்' என்பதற்கு வெள்ளையர் பாஷையில் 'நிலம்' என்பது கருத்து; 'லாந்து' என்பது இங்கிலீஷ் வார்த்தையுமல்ல, தமிழ் வார்த்தையுமல்ல. அதற்கு 'நிலம்' என்ற அர்த்தமும் உண்டாகவில்லை. அப்படி இருக்க, என்ன காரணத்தினால், எந்த இலக்கண விதியைக் கொண்டு, 'லாண்டு' என்பது 'லாந்து' என்று வெளவாலாக மாற்றப்பட்டிருக்கிறதென்பது நமக்கு விளங்கவில்லை. ஆனாலும், இவை பழக்கத்தில் இருப்பதால், இவைகளை அப்படியே நாம் இந்த நூலில் சில இடங்களில் உபயோகித்திருக்கிறோமானாலும், இவ்வாறு எவ்வித நோக்கமுமின்றி அர்த்தமில்லாமல் மாற்றுவது பகுத்தறிவைக் கொலை செய்வது போன்றதே யன்றி வேறல்ல.

எனவே நாம், கூடிய வரையில், இங்கிலீஷ் பெயரினது கருத்தை யறிந்து, அது கெடாதபடி மாற்றுவதே ஒழுங்கான காரியம்; அதுவே காலக்கிரமத்தில் நிலைப்பை யடைவதற்கும் உரியதாகும். அப்போதே மாணவருக்கும், பரீட்சகருக்கும் மயக்கமற்ற ஒற்றுமை ஏற்படும்; பொது ஜன வழக்காறும் சமரீதி யடையும்; இங்கிலீஷ் வழக்காறுக்கும், தமிழ் வழக்காறுக்கும் அதிக வேறுபாடு இராது.

ஆனால், இங்கிலீஷ் பெயர்களது கருத்தை அறிவதெப்படி என்னும் வினா அடுத்தபடியாக உண்டாவது சகஜமே. அதற்கு நம்மிடம் எவ்விதமான சாதனங்கள் இருக்கின்றன என்ற கேள்வியும் எழுவ தியற்கையே.

வெள்ளைக்காரர்கள் தாங்கள் ஆரிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். பாஷா தத்துவ நிபுணர்கள் இங்கிலீஷ், சமஸ்கிருதம், லத்தீன், கிரீக்,

முதலிய பாஷைகள் நெருங்கிய ஒற்றுமையுடைய ஒரு குடும்ப பாஷைகள் என்று கண்டுபிடித்து, அதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

வேறு பல ஆராய்ச்சியாளர்கள் திராவிடர்களும், ஆரியர்களும் வட ஆப்பிரிக்காவிலிருந்தும், மத்தியத்தரைக் கடலைச் சுற்றிய நாடுகளிலிருந்தும் சில ஆயிரம் வருஷங்களுக்கு முன்னர், அதாவது, ரோம், கிரீஸ் முதலியவை பிராபல்ய மடைந்திருந்ததற்கு முன்னர் அங்கிருந்து காலக்கிரமத்தில் இங்கே வந்தவர்கள் என்றும், இப்போதும், ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பல ஜாதியாருக்கும் நம் நாட்டாருக்கும் ஏராளமான ஒற்றுமைகள் இருக்கின்றன வென்றும் கண்டுபிடித்துப் பல சான்றுகளோடு நிர்ணயித்திருக்கிறார்கள். அதுவன்றி, நாம் நம்முடைய பழைய சரிதங்களை ஆராய்ந்து பார்த்தாலும், மிக ஆச்சரியகரமான எண்ணிறந்த மர்மங்கள் நமக்கே அகப்படுகின்றன. நம்முடைய துவாரகை, நாகலோகம், அதலம், பாதாள லோகம், கவுஞ்சம் முதலியவற்றைப் பற்றிய தகவல்கள், பாப்பிலன், ஈகிப்த், கிரீட், அசிரியா முதலியவற்றைப்பற்றிக் கிடைத்துள்ள தகவல்களோடு சந்தேகத்திற் கிடமின்றி ஒத்துப்போகின்றன. அவைகளை யெல்லாம் நாம் விரிவாக விளக்கப் புகுந்தால், இந்த முன்னுரையே ஒரு பெரிய நூலாய்ப் பெருகிவிடுமாதலால், அவைகளை வேறு ஏதேனும் சந்தர்ப்பம் கிடைக்குமானால், அதற்கு வைத்துக்கொண்டு, இப்போதைக்கு அவசியமான சில மர்மங்களை மாத்திரம் இங்கு வெளியிடுவோம்.

நம் நாட்டில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய பாஷைகள் பேசப்படும் பிரதேசங்களில், ஆரி

யர்கள் திராவிடர்கள் ஆகியோர் பலவகையான பட்டப் பெயர்களையும், ஜாதிப் பெயர்களையும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவைகள் ஐரோப்பாவிலுள்ள நாடுகளில் இருக்கின்றனவா, அல்லது, இருந்தனவா என்பதை நாம் சுருக்கமாக ஆராய்வோம்.

உதாரணமாக, மலையாளத்தை எடுத்துக் கொள்ளுவோம். கேரளன், சேரன், வஞ்சியன், சேரளாதன், நாயர், மேனன், அச்சன், அச்சி, மலைப்பாரி முதலிய பல பெயர்கள் அவர்களுக்கே பிரத்தியேகமாய் உரியனவா யிருக்கின்றன. அவர்களுடைய நாடு பரசுராம க்ஷேத்ரம் என்று குறிக்கப் படுகிறது. அவர்கள் தலையின் உச்சியில் குடுமி வைத்திருக்கிறார்கள்; சிவப்பான சரீரமுடையவர்களா யிருக்கிறார்கள். அவர்களுடைய ஆண் பெண் பாலாருடைய ஆடைகள் மிக சொற்பமானவைகள். அவர்கள் நல்ல சூரத்தனம் வாய்ந்தவர்கள்; சுறுசுறுப்பு, கட்டுப்பாடு, மேற்பட்டவரைக் கீழ்ப் பட்டவர் அதீதமான பயபக்தி விநயத்தோடு பணிவது, ஸ்திரீகள் தமது சுயேச்சைப்படி சம்பந்தம் செய்துகொள்வது முதலிய பல சிறப்பியல்புகள் அங்கே காணப்படுகின்றன.

நம் பாஷைகளில் 'ச' வென்பது 'ஜ' வென்று மாறிப் போவதுண்டு. இராசன், இராஜன், சயம், ஜயம், சீயர், ஜீயர் ஆகியவை சமக் கருத்துடைய ஜதைகள். ஐரோப்பாவில் (Germany) என்பதை எடுத்துக்கொள்வோம். இதை நாம் பழக்கத்தில் ஜேர்மனி என்று உச்சரிக்கிறோம். சேரமனை என்பது சாதாரணமாக ஜேரமனை என்று மாறக் கூடியது. அதற்கு சேரனுடைய இருப்பிடம் என்று அர்த்தமாகிறது. அவர்கள் ஆதியில் ரோமிலிருந்து போனவர்கள் என்பதை மத்தியகாலச் சரித்திரத்தால் நாம் தெரிந்து

கொள்ளுகிறோம். ரோமில் சேரவய்யஸ், அச்சையன்ஸ் என்பவர்கள் ஆண்டிருக்கிறார்கள். அச்சையன்ஸ் என்பவர்கள் பர்ஸியா (Persia)விலிருந்து போனவர்கள் என்று ஐரோப்பிய ஆசிரியர்கள் பலர் நிர்த்தாரணம் செய்திருக்கிறார்கள். பர்ஸியாவில் பரசப்பா என்ற ஒரு தெய்வம் இருந்தது. அது அசுர குருவான சுக்கிரன் (Venus). பரஸியா என்பதற்கு பரசுராம க்ஷேத்ரம் என்பதே கருத்து. மலபார் ஹில் என்பதில் பார்ஸிக்காரர்கள் இருக்கிறார்கள்; நமது மலபாரில் நம்முடைய மலையாளிகள் இருக்கிறார்கள். பர்ஸியாக்காரர்களை இரணியன் (Iranian) என்றும் குறிப்பதுண்டு. அவர்களில் சிலர் லங்க மன்னஸ் (Arta Xerxes Longamannus) என்று பெயர் வைத்திருந்தார்கள். சிலர் தேரையஸ் ஐயர் (Darius Ier) என்று பெயர் வைத்துக் கொண்டிருந்தார்கள். அதில் 'ஐயர்' என்பது விடப்பட்டுப் போயிருக்கிறது. தேரையஸ் என்றே அரசரைக் குறிக்கிறார்கள். தேரை ஆசு என்பது கடகராசியைக் குறிப்பது. ராவணன் முதலியோரை கடகர் என்று குறிப்பதுண்டு. தியாகராஜ ஸ்வாமிகள் ஒரு கீர்த்தனையில் 'ராவண கடகாதுலு' என்று பாடி இருக்கிறார். அதாவது, ராவணன் கடகராசி தேசத்தான் என்ற கருத்து ஏற்படுகிறது. பர்ஸியாவில் அச்சையன் என்றும், அச்சையமேனடு என்றும் அரசர்கள் இருந்திருக்கிறார்கள். அங்கு இளாம் (Elam) என்ற ஓர் இளவரசர் நாடு இருந்தது. அதுவே இளங்கை, அல்லது, இலங்கை என்று குறிக்கப்பட்டது. நம் புராணங்களில் அது இளாவர்த்தம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

மலையாளத்தில் சில ஜெமீந்தார்கள் இளாத்து........ அச்சன் நம்பூதிரிப்பாடு என்பது போன்ற பட்டப் பெயர்களை வைத்திருக்கிறார்கள். நம்முடைய மனுக்கள் ஜாப்தாவில் ஒரு

ரிஷி இரணிய ரோமா என்று குறிக்கப்பட்டிருக்கிறார். இதில் இரணியனும், ரோமனும் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

ஜெர்மனியில் நார்வை, நார்ஸ், நார்மன் என்னும் வகுப்பார் இருக்கின்றனர். நார்மன் இங்கிலாந்தில் கட்டிய கோட்டைகள் மேனர் (Manor) என்னப்பட்டன. அதன் சொந்தக்காரர் பாரான் (Baron) என்று குறிக்கப்பட்டார். பாரி என்பதும் பூமிக்குடையவன் என்னும் கருத்தைத் தருகிறது. இங்கிலீஷில் (Barry, Parry) என்னும் பெயர்கள் இருக்கின்றன. ஐரோப்பாவின் மத்தியகாலச் சரித்திரத்தில் சில சக்கரவர்த்திகள் கேரள வஞ்சியன்ஸ் (Carlovingians) என்று குறிக்கப்பட்டனர். கேரளாஸ் (Carlos) என்னும் ஊர் இருக்கிறது; ஹஸ்-கேரள்ஸ் என்போர் இங்கிலாந்தின் ஆதிகால அரசருடைய மெய்காப்பாளர். நார்மண்டியில் ஒரு கோட்டையின் பெயர் ஜேரப்பராய் (Gerberoi) என்பது. இங்கிலாந்தின் பிற்கால அரசர் சிலர் சேரிளஸ், அல்லது, கேரளஸ் (Charles) என்று பெயர் வைத்துக் கொண்டிருந்தனர். சில இங்கிலீஷ் அரசர்கள் ஜெர்மன் அரச குமாரிகளை மணந்தனர்; அவர்களுடைய பெயர்கள் சேரளாத்தி (Charlotte), கேரளன்ன (Caroline) என்பன. இங்கிலாந்தில் லங்காஸ் திரையன் (Lancastrian) என்ற ஒரு வகுப்பார் இருந்தனர். இன்னும் பலர் லங்கசம்பு (Longchamp), லங்கஸ்வரடு (Longsword), லங்கவல்லவ் (Longfellow), லங்கமன் (Longman), லங்கஸ்வரது (Longsworth) என்று பெயர் வைத்துக்கொண்டிருந்திருக்கிறார்கள்.

இங்கிலீஷ்காரர்களில் பலர் 'கிராப்'வைத்துக் கொள்வது மலையாளிகளின் உச்சிக்குடுமிபோலிருக்கிறது. ஜேர்

மன், நார்மன், ரோமன், அச்சைசயன் முதலியோர் நல்ல சூரர்கள்.

இத்தனை ஒற்றுமைகள் இருப்பதைக் கருதி நாம் ஜேர் மனியை ஜேரமனே என்று மொழி பெயர்த்திருக்கிறோம். அதற்கு ஜேரனுடைய இடம் என்பது பொருள்.

இதை விட்டு, நாம் பிரான்ஸை எடுத்துக்கொண்டால், அதன் அரசர்களில் ஒரு வகுப்பார் போயரப்பன் (Bourbon) என்று குறிக்கப்படுகிறார்கள். போயர் (Boer) என்னும் ஜாதியார் பிரான்ஸில் இருப்பது பிரசித்தமான விஷயம். போயவனுஸ், போயளக்னி என்பது போன்ற ஊர்ப் பெயர் களு மிருக்கின்றன. போயதாயற (Boudoir) என்பது போய னுடைய அரசப் பெருமாட்டியின் சயன அறை. நம்முடைய நாட்டில் நாம் ஒட்டர்களை போயர் என்று குறிக்கிறோம். அவர்கள் தமிழ்போலவே இருக்கும் ஒருவித தெலுங்கு பாஷை பேசுவார்கள்; ஸ்திரீகளும், புருஷரும் அழகாயும், சரீரக் கட்டுடையவர்களாயு மிருப்பார்கள். அவர்கள் நல்ல உழைப்பாளிகள். இரவில் நன்றாகக் குடித்துவிட்டு அமர்க் களப் படுத்திக்கொண் டிருப்பார்கள்.

இவர்களை விட்டு நாம் இங்கிலாந்தை எடுத்துக் கொண்டு, ஆதிக்குடிகளுடைய பெயர்கள் முதலியவற்றை ஆராய்ந்தால், ஆச்சரியகரமான பல மர்மங்கள் வெளியாவது நிச்சயம். இங்கிலாந்தின் ஆதிகால அரசர்களுடைய பெயர் கள் அதிக குணக்குடையவைகளாய்க் காணப்படுகின்றன. அவைகளை நாம் சரியாக உச்சரிக்கமாட்டாமல் திணறு கிறோம். எட்கார், எத்திலிங், எத்தில்ரெட், எத்தில்வுள்ப், எட்வரட், எட்மண்ட், எட்ரட், எட்வை என்பன நமக்கு கல் மண் முதலிய உயிரற்ற வஸ்துக்களுடைய பெயர்கள் போல் தோன்றுகின்றன.

இங்கிலாந்தில் வில்லியன் (Villien), கவுண்டு, (Count), கவுண்டச்சீ (Countess), காட்டர் (Cotter), காடவன் (Godwin), ஏயடு (Ead), கண்டர்புரி (Canter-

bury), கவண்ட் காரிடன் (Covent Garden), கவுண்டி (County) என்னும் பெயர்கள் காணப்படுகின்றன. இங்கிலாண்டு என்பதில் 'லாண்டு' என்பதை நீக்கினால், இங்கு என்பது மிஞ்சுகிறது. அதற்கு இங்கு, அல்லது, இங்கர் என்பவருடைய இடம் என்ற பொருள் ஏற்படுகிறது.

வில்லி என்னும் ஒரு ஜாதியார் நம் நாட்டில் செங்கல்பட்டு முதலிய இடங்களில் காணப்படுகிறார்கள். அவர்கள் காடுகளிலேயே இருப்பவர்கள். அவர்கள் ஆவாரம் பட்டை முதலியவற்றை சேகரம் செய்து கொணர்ந்து விற்பார்கள்; வரப்பெலிகள் முதலிய ஜெந்துக்களை ஆகாரமாய் உண்பார்கள். அவர்களுடைய உடம்பு வெண்குஷ்டத்தின் சாயலுடையதா யிருக்கும்.

வில்லிகளுடைய ஊர் வில்லி ஆசு; அது வில்லாஜ், அல்லது, வில்லேஜ் என்று மாறி இருக்கிறது. அரசர்கள் வில்லி + ஐயம், அல்லது, வில்லையம் என்று பெயர்வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வில்தரன் ஆசு Wilderness என்று குறிக்கப்படுகிறது. (Billingham) என்பது வில்லிங்க ஆம் அல்லது, வீடு என்ற அர்த்தத்தைத் தருகிறது. (Mandaville) என்று ரிச்சறட் காலத்தில் ஒரு சீமான் இருந்தார். மாண்டவில்லி என்றால் மாட்சிமை தங்கிய வில்லி யென்ற பொருளைத் தருகிறது. 'மாண்ட' என்பது சிறந்த தமிழ்ச் சொல். நம்மிலும் வில்லி புத்தூர், வில்லி பாரதம் என்ற பெயர்கள் இருக்கின்றன.

நம் நாட்டில் வேட்டுவர்கள் ஏயர் என்று குறிக்கப்பட்டதாக ஆதாரமிருக்கிறது. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரது பெயர் ஏயர் கோன் கலிக்காம நாயனார் என்பது. மார்க்கண்டேயர் என்பவரும் வேட்டுவ குலத்து அந்தணர். ஏயர் என்போர் தெலுங்கு தேசத்தாரா யிருந்தால், அவர்கள் இங்கர் என்று குறிக்கப்பட்டனர். களிங்கம், குலிங்கம் என்பன பழைய ஐம்பத்தாறு தேசங்களில் சேர்ந்தவை. களிங்கர் என்பவர் (கள் + இங்கர், அதாவது) கள்ள வகுப்பைச் சேர்ந்த இங்கர். அவர்கள் இப்போதைய

தெலுங்க நாட்டில் இருந்தவர்கள். தெலுங்கர் என்பதன் சரியான உச்சரிப்பு தேள் இங்கர் என்பதாகும். 'தேள்' என்பது கார்த்திகையாகிய விருச்சிக ராசியைக் குறிப்பது. அதன் தெய்வமாகிய கார்த்திகேயன் என்னப்படும் சுப்ரமணியத்தைப் பிரதானமாக வழிபடுவோரே அவர்கள். சுப்ரமணியர் வேடர் குலப் பெண்ணை அபகரித்துப் போய் மணப்பது வள்ளி திருமணமல்லவா? தேளக, தேளகு என்று மாறியிருக்கிறது. அவர்கள் தேள்கி (Delhi) என்ற இடத்தில் சக்கரவர்த்திகளாயிருந்தவர்கள். பர்ஷியாக்கடலின் ஓரத்தில் இருந்து அழிந்துபோன பாப்பிலன் (Babylon) என்னுமிடத்தில் தேளக்(Telloh)என்று ஓர் ஊர் இருந்திருக்கிறது. பாப்பிலனிருந்து வந்தவரே பாப்பிலி மகாராஜா(Raja of Bobbili). பாப்பிலனில், நாபு நாய்டு, நாபு சத்ரேசர், நாபு சத்நேசர், வேல் சேஷர் என்னும் பெயருடைய அரசர்கள் ஆண்டிருக்கிறார்கள். அங்கு 'Bel' (வேல், அல்லது, பல்) என்பது முக்கியமான தெய்வம். தெலுங்கரில் ஒரு வகுப்பார்'வேல்' நாடு என்று குடும்பப்பெயர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

உலகத்தில் ஏழு அதிசயங்களில் ஒன்றாகிய ஆகாயத் தோட்டத்தை அமைத்தவர்கள் பாப்பிலன் அரசர்களே. அதுவே தான் நமது துவாரகை; அதன் கோவிலின் மேல் து வாஸஹ என்ற எழுத்துக்கள் செதுக்கப் பட்டிருக்கின்றன. பரிசுத்தமான வாசுதேவனுடைய அகம் என்பது அதன் கருத்து. அதற்குப் பக்கத்தில் Basrah (வாஸரஹ்) என்ற ஊர் இருக்கிறது. இடிந்துபோன கோட்டைகள் இப்போதும் ஆகாயத்தை அளாவிக்கொண்டு நிற்கின்றன. துவாராகையில் ஆகாயத்தோட்டம் இருந்ததாக பாரதம்சொல்லுகிறது. அங்கு காணப்படும் பட்டண அமைப்பின் விவரமும், கிரீஸ் தேசத்தார் பாப்பிலனைப் பற்றி எழுதியிருக்கும் வர்ணனையும் ஒன்றாயிருக்கின்றன. பர்ஷியன் கடல் மேற்கு சமுத்திரத்தைச் சேர்ந்ததல்லவா. துவாரகை மேற்கு சமுத்திரத்திலிருந்து அழிந்து போனதாகச் சொல்லப்படுகிறது. துவாரகையில் சாளுவன், களிங்கன் முதலியோர் இருந்த

தாக பாகவதம் சொல்லுகிறது. பாப்பிலனில் சாள்வர் (Chaldees) என்பவர்கள் இருந்திருக்கிறார்கள். வடக்கு பாப்பிலனுக்கு, ஊர், என்று பெயர். அதன் அரசர்கள் ஊர்-இங்கர் (Ur—Engur) என்று குறிக்கப்பட்டனர். தெலுங்க தேசத்துஜெமீந்தார்கள் ராமராயனி இங்கர் என்பதுபோன்ற பெயர்களை வகிக்கின்றனர். மைசூரில் ஹெப்பார், மண்டயம் முதலிய இடங்களிலுள்ள சில ஐயங்கார்கள் நாரணிங்கர், ராமிங்கர் என்று பெயர்கள் தரிக்கிறார்கள். கிரீஸுக்குப் பக்கத்தில் கடலில் தேளாஸ் (Delos) என்ற தீவிருக்கிறது. பழைய ஈகிப்தில் அக்கன் எட்டன் என்ற அரசனுடைய பட்டணத்தின் பெயர் தேள்-இல் (Tell—EL) என்பது. நார்மன் அரசர் ஹேஸ்டிங்ஸ் யுத்தம் நடத்திய காலத்தில் அவர் தமது சேனைகளோடு தங்கிய இடம் தேள்ஹாம் (Telham) என்பது.

தெலுங்கர் ஆந்திரர் என்றும் குறிக்கப்படுகின்றனர். இங்கிலீஷ்காரர்களுக்கு ஆதியில் மாதாகோவிலை ஸ்தாபித்த புண்ணியாத்மாவின் பெயர் செயின்ட் ஆந்த்ரவ் (St. Andrew). இங்கிலீஷில் ஆதிகாலத்து மனிதனைப்பற்றிய சாஸ்திரம் ஆந்த்ரப்பாள் ஆஜி (Anthropology) என்று குறிக்கப்படுகிறது. தெலுங்கக் குடியானவன் கம்மா என்று குறிக்கப்படுகிறான். இங்கிலீஷில் ஹம்மா (Homo) என்பது மனிதன் என்பதைக் குறிக்கும் சொல். House of Cmmons என்பதிலுள்ள காமன்ஸ் என்பது கம்மான்ஸ் என்று உச்சரிக்கப்படவேண்டும். இங்கிலீஷ் சேனைத்தலைவர் கம்ம ஆண்டார் (Commander); அவருக்குக் கீழ்ப்பட்டவர் கள்ள அண்ணல் (Colonel).

எனவே, ஆதியில் இங்கிலாந்திலிருந்தவர்கள் ஏயர் என்னப்படும் இங்கர், கள்ளர், கவுண்டர், வில்லி, காடர் முதலியோர். அவர்கள் தெலுங்கு சம்பந்தமுடையவர்கள். தேலுங்கர் அவன் என்பதற்கு வாடு என்கிறார்கள்; மன்னன் என்பதை மன்னடு என்கிறார்கள். அதே போல, மன், மன்டு; ஏயன், ஏயடு, அறன் அறடு, வரதர், அல்லது, வரர் வரடு,

திருவாளர், திருடு, பரன், பரடு என்ற பிரயோகங்கள் ஆதி கால இங்கிலீஷில் காணப்படுகின்றன.

தெலுங்கார் காரு என்ற மரியாதைச் சொல்லை உபயோகிக்கிறார்கள். ஏயகோர் (Eadgar) என்றும் இங்கிலாந்தில் அரசர் பெயர்வைத்துக் கொண்டிருந்திருக்கிறார். ஏயரவாள் என்பது ஏயராள் (Earol, Earl) என்று மாறியிருக்கிறது. அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆகாததற்கு முன்னர் ரோமன்கள் அவர்களை இளக்கரமாகக் குறித்த சொற்கள் ஹேயத்தன் (Heathen), ஹேயரசு (Heresy) முதலியவை. ஹ என்பது வழக்காறினால் ஏற்பட்ட அதிகப்படியான ஓசை. அது என்பது அஃது என்றிருப்பது போல. நம்மவர்கள்கூட அநாசார குணத்தை ஹேயகுணம் என்று குறிப்பதுண்டு. ஏயர், அல்லது, ஹேயருடைய தலைவனை ஹேயடுவே இப்போது போலீஸ் ஹேயட்(Head)கான்ஸ்டேபிளாயிருக்கிறார். Europe என்பது கூட ஏயருடைய இருப்பிடம் என்ற கருத்துடையதே.

இங்கர் என்பது இங்கு, இங்கம் என்று பலவாறாய் வருகின்றது. நாட்டு இங்க ஹாம் என்பது Nottingham ஆகிறது ராகு, இங்க, ஹாம் ராகிங்காம் Rockingham என்று மாறுகிறது. கோபு, இங்கர் கோபிங்கர் (Copinger) ஆகிறார். இவர் ஒரு பெரிய சட்ட நிபுணர். பெரிய, இங்கர், பேரிங்கர் (Berenger) ஆகிறார். இவருடைய குமாரத்தி இளையன்னரை மூன்றாவது ஹென்ரி மணக்கிறார். அன்னம் என்பது ஸ்திரீயைக் குறிக்கையில் அன்னர் என்று மாறுகிறது.

ஏயத்து, இல், இங்கு, என்பன சேர்ந்து ஏயத்திலிங்கு என்று மாறியிருக்கின்றன. அதாவது, ஏயருடைய நாட்டினது(பெரிய)வீட்டு இங்கர், என்பது அதன் கருத்து. அங்கு மனிதருடைய பெயர்களில் இங்கு, இங்கர் என்பன ஏராளமாகக் காணப்படுவதை அநுபவத்தில் பார்த்துக் கொள்ளலாம்.

உதாரணமாக, (Hemingway) என்பதை எடுத்துக் கொள்ளலாம். ஹேம, இங்க, ஐ, என்பவைசேர்ந்து ஹேமிங்கவை என்றாயிருக்கின்றன. ஹேமம் என்பது தங்கத்தையாவது, தங்க நிறமுள்ள வியாழ பகவானையாவது குறிக்கும். 'ஐ' என்பது ஐயா வென்பதன் சுருக்கம். தங்கம் போன்ற இங்க ஐயா என்பது அதன்கருத்து. இங்கிலாந்தின் ஊர்ப்பெயர்கள், மனிதருடைய பெயர்கள் முதலியவற்றில் காணப்படும் 'ing' (இங்கு) என்பதை Going, Coming ஆகியவற்றில் உள்ள வினை யெச்சக் குறியென்று நினைப்பது தவறு. முன்னவைகளில் இருக்கும் இங்கு என்பது இங்கர் என்னும் வகுப்பாரைக் குறிப்பதென்பதை கவனத்தில் வைக்கவேண்டும்.

இதுவரையில் குருடர்கள் போலத்தடவிய நாம், இந்த ஆராய்ச்சியின் மூலம், கண்களைத் திறந்துகொண்டவர்கள் ஆகிறோமென்பதை நாம் எடுத்துக் காட்டுவது மிகையாகும். ஆயினும், இது ஒருவருடைய சொல்லினாலேயே உறுதிப்படக்கூடியதல்ல. மேதாவிகளாயிருக்கும் ஆசிரியர்கள் இவ்விஷயங்களில் கவனம் செலுத்தி, இவற்றின் உண்மையைக் கண்டு விஷயத்தை நிலைநாட்ட வேண்டும். அப்போதே இதற்கு உறுதிப்பாடுண்டாகும். எனவே, நாம் நமக்கு மேற்பட்ட கல்வியறிவாளர்களுடைய பரிசீலனைக்கு இதை மிக வணக்கமாக சமர்ப்பிக்கிறோம். இதுவன்றி, இன்னம் நாம் ஆராயவேண்டிய விஷயங்கள் ஏராளமாயிருக்கின்றன. அவற்றை இரண்டாவது பாகத்தில் கவனிப்போம்.

Triplicane,
Madras.
28—8—1934.

Vaduvur - K. DURAISWAMI AYYANGAR

Author.

இங்கிலாந்து தேச சரித்திரம்

கி. பி. 1066 முதல் கி. பி. 1485 வரையில்

அத்தியாயம்—1

முதலாவது வில்லியத்தின் வெற்றிக்கு முன்

இங்கிலாந்தின் நிலைமையும் மக்களின் வாழ்க்கையும்

நிலத்தின் தன்மை

இக்காலத்தில் நாம் இங்கிலாந்து தேசத்திற்குச் சென்று, நாட்டுப்புறங்களைச் சுற்றிப் பார்த்தால், எங்கும் செழிப்பான செயற்கைத் தோட்டமே மயமாக நிறைந்திருப்பதை நாம் காண்பது நிச்சயம். மனிதர் வசிக்கும் பங்களாக்களைச் சுற்றிலும் மிக எச்சரிப்பாகப் பண்படுத்திக் காப்பாற்றப்படும் உத்தியானவனம் எவ்வித மிருக்குமோ, அதுபோலவே இங்கிலாந்தின் நிலப்பரப்பு முழுதும் இருப்பதை நாம் கண்கூடாகக் காணலாம். ஆனால், சுமார் ஆயிரம் வருஷ காலத்திற்கு முன்னர், அதன் நிலைமை முற்றிலும் வேறு மாதிரியாயிருந்தது. அப்போது நிலப்பரப்பின் பெரும் பாகத்திலும் பயங்கரமான காடுகள், சேறும் தண்ணீரும் நிறைந்த வதிகள், களர் நிலங்கள், பொட்டல் வெளிகள் ஆகியவைகளே காணப்பட்டன. பத்தொன்பதாவது நூற்

றூண்டில், 100-க்கு 20 பங்கு, உதவியற்ற பொட்டல் வெளியா யிருந்ததற்கு மாறாக, ஒன்பதாவது நூற்றூண்டில் 100-க்கு 80 பங்கு, பயன்படாத காடும், கரட்டு நிலமுமா யிருந்தது. மற்ற 20 பங்கில், 5 பங்குகூட சாகுபடிக்குக் கொண்டுவரப்படாமல் இருந்தது. அக்காலத்தில் தானியங் களும், புல்லுமே பெரும்பாலும் விளைவிக்கப்பட்டன. ஒரு வருஷம் பயிரிடப்படும் நிலப்பகுதியை மறு வருஷம் தரி சாக விட்டு வைப்பார்கள். அதுவன்றி, இன்னின்ன பருவ காலத்தில் இன்னின்ன தானியத்தை விளைவிப்பதென்ற ஓர் ஒழுங்கையும் குடியானவர்கள் சிறிதும் தவறாமல் அநு சரித்தனர். அக்காலத்தில் நிலத்தை உழுவதற்கு குடியான வர்கள் எருதுகளை உபயோகித்தனர். அவர்களுடைய கலப்பை மிக கனமானதாயும், அவ்வளவு திறமையாகத் தயாரிக்கப் படாததாயும் இருந்தது.

குடிமக்களது பயிர்த்தொழில் முதலியவை

இங்கிலீஷ் குடியானவர்கள் பரம்பரையாகப் பயிர்த் தொழில் செய்யும் வேளாண்மைக்காரர்களாயும், ஆடுமாடு களை மேய்க்கும் இடையர்களாயும் இருந்தனர். ஆதி காலத்திலிருந்தே அவர்கள் சுயேச்சையாகவும், சுயாதீன மாகவும் இருந்து வாழ்க்கை நடத்தும் மனப்போக்குடைய வர்களாகவே இருந்தனர். அந்தக் காரணத்தினுலேயே அவர்கள் ஐரோப்பாக் கண்டத்தை விட்டு, அதோடு சம்பந் தப்படாமல் தனித்து கடலில் இருக்கும் சிறிய தீவாகிய இங்கிலாந்திற்குப் போய்க் குடியேறினர் என்றும் நாம் ஒரு வாறு கருதலாம். அதே போல இங்கிலாந்திற்குள்ளேயே ஒரு ஜில்லாவில், அல்லது, ஓர் ஊரில் இருந்தவர்களும், இன் னெரு ஜில்லாவில், அல்லது, ஊரில் இருந்தவர்களும் ஒருவ

ரிடத்தொருவர் எவ்வித சம்பந்தமும் வைத்துக் கொள்ளாம லேயே இருந்து வந்தனர். அப்போது இங்கிலாந்தின் முழு திலும் சுமார் இருபது லக்ஷம் ஜனங்களுக்குக் குறை வாகவே இருந்தனராதலால், எல்லோரும் தூர தூர இருந்தனர். அதுவன்றி, ஓர் ஊரிலிருந்து இன்னோர் ஊருக்குப் போக வசதிகள் இல்லையாதலால், ஓரிடத் தில் பஞ்சம் நேர்ந்தால்கூட, சுபிக்ஷமாயிருக்கும் இன் னோரிடத்திலிருந்து, தேவையானவற்றைத் தருவிப்பது கூடாததாயிருந்தது. நிலங்களில் சொற்ப வருமானமே கிடைத்ததானாலும், குடியானவர்கள் தங்களுடைய தேவை களுக்குரிய பொருள்களைத் தாங்களே உற்பத்தி செய்து கொண்டனர். ஏதேனும் அபூர்வ சாமான்கள் வாங்க, அவர்கள் மிக அருமையாக சந்தை, கடை முதலியவற் றிற்குச் சென்றனர். ஒரு குடியானவர், உதவியற்ற நிலத்தை வெட்டிச் சீர்ப்படுத்தி சாகுபடிக்குக் கொணர்ந் தால், அவர் அதைச் சுற்றிலும் சுவர், மர அடைப்பு, அல் லது, படல்வேலி முதலியவற்றை அமைத்து, அதைப் பாது காத்துக் கொள்வார். அவ்விதமான பழைய அடைப்பு கள் இங்கிலாந்தில் இக்காலத்திலும் இருப்பதை நாம் காண லாம். ஆனால், ஐரோப்பாக் கண்டத்தில் இத்தகைய வேலி யடைப்புகளை நாம் காண மாட்டோம். இங்கிலாந்தில், பழைய காலத்து அடைப்புகளைக் குறிக்கும் சில விகுதிகள், ஊர்ப் பெயர்கள் சிலவற்றின் முடிவில் இப்போதும் இருப் பதை நாம் காணலாம். உதாரணமாக, டன் (Ton), ஹாம் (Ham), வார்த் (Worth), ஸ்டோக் (Stoke), வோல்ட் (Fold), பர்க் (Burgh), புரி (Bury) என்பன அவைகளுள் சில விகுதிகள். டன் என்பது ஆதி காலத்தில், வேலியையோ, வேலியினால் சூழப்பட்ட இடத்தையோ குறித்தது. ஹாம் என்பதும்,

ஹோம் (Home) என்பதும் ஒரே கருத்துடையவை. அவற்றிற்கு வீடு (ஆம்) என்பது கருத்து. வார்த் என்றால் தடுக்கப்பட்ட, அல்லது, பரிதுகாக்கப்பட்ட இடம் என்பது பொருள். ஸ்டோக் என்பது முளைகளால், அல்லது, கட்டுத்தறியால் சூழப்பட்டது. வோல்ட் என்பது வெட்டப்பட்ட மரங்களாலான வேலியால் சூழப்பட்டது. பர்க் என்பது தென்னாட்டிலும், புரி என்பது மேற்கு நாட்டிலும், உபயோகத்திலிருந்த ஒரே கருத்துடைய சொற்கள். அவற்றிற்கு மறைவு என்பது கருத்து. உதாரணங்கள்: சவுதாம்டன் Southampton), நாட்டிங்ஹாம் (Nottingham), பாஸ்வார்த் (Bosworth), பேசிங்ஸ்டோக் (Basingstoke) முதலியவை. இங்கிலீஷ் குடியானவர்கள் தங்கள் நிலங்களுக்கு இவ்வாறு பலவித அடைப்புகளை ஏற்படுத்தி, அவற்றில் தங்கள் வீடுகளையும் அமைத்து அங்கேயே வசித்து வந்தனர். சுயாதீனத்தோடிருந்த ஒவ்வோர் இங்கிலீஷ் குடியானவருக்கும் சொந்தமான தனித்தனி நிலம் இருந்தது. இப்போது இருப்பது போல, அப்போதும், காமன்ஸ் (Commons) என்னப்படும் கிராமப் பொது மேய்ச்சல் தரைகள் இருந்தன. அவைகளை உபயோகிக்க எல்லாக் குடியானவர்களுக்கும் உரிமை உண்டு. அதுவன்றி, சாகுபடி நிலங்களில் பயிர்கள் அறுவடையாகி விட்டால், கால் நடைகள் ஏகபோகமாய் எல்லோருடைய நிலங்களிலும் தாராளமாக மேய விடப்பட்டன. ஏனென்றால், அவைகள் மேயும்போது விழும் சாணி, புழுக்கை முதலிய எருக்கள் இலவசமாக வயல்களுக்குக் கிடைத்தனவாதலால். இங்கிலாந்தின் தென் கிழக்குப் பாகத்தில், மேய்ச்சல் தரை நிரம்பவும் செழுமையாயிருந்தமையால், மற்ற இடங்களில் இருந்ததைவிட அங்கு அதிகமாக குடியானவர்கள் குடியேறி வசித்து வந்தனர். அங்கு மேய்ச்சல் தரைகளில் ஆடுகளும், காடுகளில் பன்றிகளும் சுயேச்சையாய் உண்டு கொழுத்தனவாதலால், அவை

குடியானவர்களுக்கு விலை மதிப்பற்ற செல்வமா யிருந்தன. நிலங்களில் வாக்லண்ட் (Folkland) என்றும், போக் லண்ட் (Bocland or Bookland) என்றும் இரண்டு வகைகள் இருந்தன. வாக்லண்ட் என்பது நாட்டினர் எல் லோருக்கும் பொதுவுடைமையாயிருந்த நிலம். அதில் சில பகுதிகளை அரசர், வீட்டான் (Witan) என்னும் கிராமப் பெரியதனக்காரருடைய சம்மதியின்மேல் தனிப்பட்ட மனி தர்களுக்குச் சொந்தமாக்கி விடலாம். அவ்வாறு தனிப்பட்ட மனிதர்களுக்கு ஏற்படும் உரிமை பெரும்பாலும் குடிமக்க ளது வாய் மூலமான சாட்சியத்தையும், அந்த மனிதருடைய பிராபல்யத்தையும் பொருத்ததாயிருந்தது: போக்லண்ட் என் பது ஸர்க்கார் கணக்குப் புஸ்தகம், பட்டயம், அல்லது, எழுத்து மூலமான இதர தஸ்தாவேஜு ஆகிய ஆதாரங்களின் மேல் ஒருவருக்குச் சொந்தமாயிருக்கும் நிலம்.

கிராமங்கள், பட்டணங்கள் முதலியவை

குடும்பம் பெருகப் பெருக உறவினர்கள் பக்கம் பக்க மாக வீடுகளை அமைத்துக்கொண்டு, ஒருவருக்கொருவர் ஆதரவாயும், பக்க பலமாயும் ஏகோபித்து வாழ்ந்தனர். அவ்வாறு வீடுகள் பெருகி கிராமங்களாயின. குடும்பப் பெயரே அந்தந்த ஊருக்கு இடப்பட்டது. உதாரணமாக, வில்லிங்கஹாம் (Billingham) என்னும் ஊரில் வில்லிங்ஸ் (Billings) என்னப்படுவோர் இருந்தனர். வில்லாஜ், அல் லது, வில்லேஜ் என்பது அவர்களுடைய சிற்றூரைக் குறிக் கிறது. (ஆஜு=ஆசு?) அக்காலத்தில் குடி மக்கள் கிரா மங்களிலேயே பெரும்பாலும் இருந்து பயிர்ச் செல வையும், கால் நடைகளை மேய்த்தலையும் கவனித்தன ராதலால், வர்த்தகமோ, வர்த்தக ஸ்தலங்களோ பல

இடங்களில் ஏற்படவில்லை. ஆதிகாலத்தில் ரோமன்ஸ் தங்கிய லண்டன் முதலிய சில இடங்கள் பட்டணங்களா யிருந்தன. அதுவன்றி சாக்கிழான் (Saxon) அரசர்கள் பலர் வசித்து வந்த இடங்கள் பட்டணங்களா யிருந்தன. அக்காலத்தில் கல்லினுல் சுவர்கள் ஏற்படவில்லையா தலால், அவ்விதம் கட்டலாமென்பதை ஜனங்கள் தெரிந்துகொள்ளவில்லை யென்று நாம் அநுமானிக்க வேண்டியதாகிறது. பட்டணங்களைச் சுற்றிலும், அகழி, மண் அலங்கம், மர அடைப்பு முதலியவை ஏற்படுத்தப்பட்டிருந்தமையால், அவைகளை நாம் கோட்டைகள் என்று கருதலாம். கொள்ளைக்காரர்கள், அன்னிய நாட்டார் முதலியோருக்கு அஞ்சி குடி மக்கள் இவ்விதமான கோட்டைப் பட்டணங்கள் சிலவற்றில் நெருங்கி வசித்து வந்தனர். ஆனுல் அக்காலத்தில் ஜனங்கள் கிராம வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தவர்க ளாதலால், பட்டண வாழ்க்கையை வெறுத்தனர். மத குருமார்களான பீஷப்புகள் (Bishop = வீழப்பு = விழுமிய அப்பா ?) வசித்த இடங்கள், பிரபல மாதா கோவில்கள், மடங்கள் முதலியவை இருந்த ஸ்தலங்கள் ஆகியவைகளைச் சுற்றி குடிமக்கள் ஏராளமாகக் குடியேறியதாலும் சில பட்டணங்கள் தோன்றின. ஆனுல், ஆதிகாலத்திலிருந்தே லண்டன் பட்டணம் வர்த்தக ஸ்தலமாகவும் அபிவிருத்தி யடைந்து வந்தமையால் அது அரசருடைய தலைமை நகரமாய் நிலைக்க சகல வகைகளிலும் அருகமானதா யிருந்தது.

ஹண்ட்ரட் (The Hundred)

கிராமங்களும், பட்டணங்களும் சுமார் 100 முதல் 120 வரையில் சேர்ந்த தொகுதி ஹண்ட்ரட் என்று குறிக்கப்

பட்டது. அதற்கு நூறு என்பது கருத்து. இது நம்முடைய தாலூகாவுக்கு சமமானதென்று நாம் கருதலாம். ஹண்ட்ரட் என்பது ஆதியில் ஒரு தொகுதியின் எண்ணிக்கையைக் குறித்த காரணப்பெயரா யிருந்ததானும், காலக்கிரமத்தில் அது அத் தொகுதியின் இடுகுறிப்பெயராக மாறிவிட்டது. தொகுதிகள் சம விஸ்தீரணமுடையவையா யிருக்கவில்லை. இங்கிலாந்தின் தெற்குப் பிரதேசங்களின் தொகுதிகள், வடக்குப் பிரதேசத் தொகுதிகளை விட சிறியவையா யிருந்தமையால் ஏராளமா யிருந்தன; வடக்குப் பிரதேசங்களில் இருந்த தொகுதிகள் வப்பன்டேக் (Wapentake) என்ற பெயரால் குறிக்கப்பட்டன. இது ஹண்ட்ரட் என்னும் தொகுதிக்கு டேனிஷ்காரர்களால் கொடுக்கப்பட்ட மாற்றுப் பெயர். தலைவருடைய பார்வைக்காக ஆயுதங்களைத் தாங்கி நிற்றல் என்பது வப்பன்டேக் என்பதன் கருத்து. துரைத்தன நிர்வாகம், போலீஸ் அதிகாரம், பண வரவு செலவு ஆகியவற்றின் சௌகரியத்திற்காக, ஹண்ட்ரட் என்னும் தொகுதிகள் ஆதியில் அமைக்கப் பட்டன. டோம்ஸ்டே (Domesday) என்னும் கணக்கு தயாரிக்கப்பட்ட காலத்தில், இந்தத் தொகுதி யெல்லை தனிப்பட்ட கனவான்களது சமஸ்தான எல்லையாக மாறி அவர்களுடைய உரிமையைப் பொருத்ததாகி யிருந்தது. ஹண்ட்ரட் என்னும் தொகுதியிலுள்ள சேனைப்படைக்கு ஒவ்வொரு வீட்டாரும், ஆயுதபாணியான ஒரு வீரனை யனுப்பவேண்டும். அந்த சேனை விருது (Fyrd) என்று குறிக்கப்பட்டது.

ஷயர்

ஷயர் அல்லது ஷிரு (Shire) என்பது பல ஹண்ட்ரட் தொகுதிகள் சேர்ந்த பெரிய பகுதி. இது நம் ஜில்லாவுக்கு

சமதையாகக் கருதக்கூடியது. சில்லா(யம்), அல்லது, சிரு(யம்) என்ருல் ஓர் இராஜ்யத்தின் சிறிய பகுதி என்பது கருத்து. அது ஷிருவென்று குறிக்கப்பட்டு, நம்மால் ஷயர் என்று உச்சரிக்கப்படுகிறது. ஆதியில் ஷயர் என்பது பல காரணங்களால் ஏற்பட்டன. (1) ஒரே வகுப்பார் வசித்து வந்த இயற்கையான பகுதிகள். (2) ஆதியில் சிற்றரசர்களுடைய சமஸ்தானங்களாயிருந்து பிறகு ஒன்று சேர்ந்தவை. (3) விசாலமான இராஜ்யமாயிருந்து, துரைத்தன நிர்வாகத்தின் பொருட்டு, பகுதிகளாக்கப்பட்டது. (4) அரச வம்சத்துப் பங்காளிகள் பங்கு பிரித்துக் கொண்டவை. (5) டேனிஷ்க்காரர்களால் ஏற்படுத்தப்பட்டவை என்று பல வகைகளில் ஷயர்கள் உண்டாக்கப்பட்டன. சில இயற்கையாய் ஏற்பட்டவை; சில அவைகளைப்போல செயற்கையா யமைக்கப்பட்டவை. ஒருபகுதியாகிய ஜில்லாவில் முக்கியமான பட்டணம் எதுவோ, அதன் பெயரே, பெரும்பாலும், அந்தப் பகுதிக்கு வைக்கப்பட்டது.

குடிமக்களின் பாகுபாடு

ஜனங்களில் மூன்று வகுப்பார் இருந்தனர். ஏயராள் (Earol=ஏயர்வாள் ?), சீயராள் (Cearol=சீயர்வாள் ?), தீயவ் (Theow=தீயவாள் ?) என்பன முக்கியமான வகுப்புகள். (ஏயர்=வேடர், அல்லது, வில்லிகள்) முதல் இரண்டு வகுப்பாரும் சுயாதீனமுடையவர்கள்; மூன்ருவது வகுப்பார் வேலைக்கார அடிமைகள். தீயவ்களில் நான்கு வகுப்பார் இருந்தனர். (1) பரம்பரையாய் அடிமையாகவே இருந்தவரும், அவருடைய சந்ததியாரும் (2) போரில் சிறைப்படுத்தப்பட்டவர்கள். இவர்கள் பெரும்பாலும் பிரிட்டன் (Briton) இனத்தாராகவே இருந்தனர் (3) பட்டினி கிடந்து இறந்து

போகக்கூடிய நிலைமையில் இருந்து, தாங்கள் ஒருவருக்கு அடிமையாயிருப்பதாய் அமர்ந்தவர்கள் (4) கடன், அபராதம் முதலியவற்றைச் செலுத்த மாட்டாத காரணத்தினால், விற்கப் பட்டவர்கள், அல்லது, தாமாகவே பிறருக்கு அடிமையானவர்கள் ஆகிய நான்குவகை அடிமைகள் இருந்தனர். ஆடு மாடுகள்போல், அடிமைகளும் சந்தைகளில் விற்கப்பட்டனர். அடிமை வியாபாரம் மிக முக்கியமான வர்த்தகமாகக் கருதப்பட்டதாகையால், அது நிரம்பவும் தீவிரமாக நடத்தப்பட்டது. நிலம் படைத்த சுயாதீனக் குடியானவர்கள் தங்கள் நிலங்களிலேயே வசித்தனர். நிலமில்லாத சுயாதீனக் குடிமக்கள், தச்சர், கம்மாளர், வலைபர், வியாபாரி, பண்ணையாள் முதலிய தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். சொந்த நிலம் படைக்காதவர்கள், நீதிஸ்தலங்களில் தங்களுக்காக உத்தரவாதமாயிருக்கும்படி எவரேனும் ஒரு சீமானைப் பொறுப்பாளியாகக் குறிப்பிட வேண்டும். ஏயராள் என்பவர்கள் நிரம்பவும் செல்வாக்கும், அதிகாரமும் உடைய பெரிய சமஸ்தானாதிபதிகள். அவர்களுக்கு நாட்டில் பல இடங்களில் நிலங்கள் இருந்தன. கான்யூட் அரசர் காலத்திற்குமுன்னர் ஏயாள் தர்மன் (Ealdormen), அல்லது, ஏயாள் தோரைமன் என்று குறிப்பிடப்பட்டவர்களே அதற்குப் பின்னர் ஏயராள் என்று குறிக்கப்படுகின்றனர். சில சமஸ்தானாதிபதிகள் தகன் (Thegn=தகை?), என்றும் தானி (Thane=தானாதிபதி?) என்றும் குறிக்கப்பட்டனர். அரசருக்கு சேவை செய்வது அக்காலத்தில் ஒரு பெரிய கௌரவதையாக மதிக்கப்பட்டதாகையால், முக்கியமான சமஸ்தானாதிபதிகள் அரசருடைய தகன்ஸ் (King's Thegns) என்று குறிக்கப்பட்டனர். அவர்கள் அரசரிடத்திலிருந்து மான்ய நிலங்கள் பெற்றவர்களாதலால்,

(1) அரசருக்காகப் போர் புரிவது, (2) அவருடைய மந்திராலோசனை சபைக்கு விஜயம் செய்வது, (3) துரைத்தன நிர்வாக விஷயத்தில் உதவுவது ஆகியவை அவர்களுடைய கடமைகளாய் ஏற்பட்டிருந்தன. அவர்களுடைய அதிகாரமும், செல்வாக்கும் படிப்படியாய் உயர்ந்துபோகவே, சில சமயங்களில் அரசருக்கு அபாயமும், துன்பங்களும் நேருவதற்கு அவர்களே காரண பூதர்களாயிருந்தனர். சொற்ப நிலம் படைத்த மத்தியத்தர மிராசுதார்கள் சீயராள் என்று குறிக்கப்பட்டனர். அவர்கள் பெரும்பாலும் பெரிய சமஸ்தானாதிபதிகளான ஏயராள் என்பவர்களுடைய அதிகாரத்திற்கும், கொடுமைகளுக்கும் உட்பட்டு நடக்க வேண்டியவர்களாயிருந்தனர்.

குடிமக்களின் மகாநாடுகள்

கிராமங்களில் குடும்பத் தலைவர்கள் பெரிய மரத்தடிகளில் ஒன்றுகூடி, கிராம நிர்வாக விஷயங்களைப்பற்றிப் பேசி முடிவுகள் கட்டுவார்கள். அத்தகைய கூட்டம் (1) வில்லேஜ் மட் (Village Mot = மடம்?) என்று குறிக்கப்படுகிறது. கிராமத்தின் தலைமை அதிகாரி தேர்தலின் மூலமாகவே நியமிக்கப்பட்டான். அவன் வில்லேஜ் றேயவ் (Village Reeve) என்று குறிக்கப்பட்டான். (Reeve= இறையவா?) இதேபோல ஒவ்வொரு ஹண்ட்ரடேக்கும், ஒவ்வொரு ஷயருக்கும் மட் என்னப்பட்ட மகாநாடு நடைபெற்றது. ஹண்ட்ரடிலுள்ள குடிமக்களின் கூட்டத்திற்கு (2) ஹண்ட்ரட்-மட் என்பது பெயர். அது வருஷத்திற்கு நான்கு முறை கூடியது. எல்லாத் தகராறுகளும், குற்ற வழக்குகளும் (Criminal Cases) அப்போது பரிசீலனை செய்யப்பட்டன. அந்த மகாநாட்டின் அக்கிராசனாதிபதி

ஹண்ட்ரட் மன் (Hundred Man) அல்லது ஹண்ட்ரட்-ஏயாள்திரு (Hundred ealder) என்று குறிக்கப்பட்டான். ஒவ்வொரு ஹண்ட்ரட் மட்டுக்கும், (3) ஷயர் மட்டுக்கும், அதததற்குள்பட்ட பட்டணங்களிலிருந்து நான்கு நான்கு மனிதர்களும், றேயவும் (Reeve) பிரதிநிதிகளாக வந்தனர். அவர்கள் தவிர, தகன்கள், இதர மிராசுதார்கள், இன்னும் பிரபலமான குடியானவர்கள் ஆகியோர் ஷை மகாநாட்டிற்கு வர உரிமையுடையவர்களாயிருந்தனர். ஓர் இனத்தார், அல்லது, ஒரு சிறிய நாட்டார் கூடும் மகாநாட்டிற்கு (4) வாக்-மட் (Folk Mot) என்பது பெயர். அது வருஷத்திற்கு இருமுறை நடைபெற்றது. அதில் அரசரே அக்கிராசனம் வகிப்பது வழக்கம். இங்கு சட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டதன்றி, போர் நடத்துவது, சமாதானம் செய்துகொள்வது, அரசரைத் தேர்ந்தெடுப்பது, அல்லது, நீக்குவது, ஒரு கிராமத்திற்கும் இன்னொன்றுக்கும், அல்லது, ஒரு ஹண்ட்ரேடுக்கும் இன்னொன்றுக்கும் ஏற்படும் பெரிய தகராறுகளைத் தீர்த்து வைப்பது முதலிய வியவகாரங்கள் நடத்தப்பட்டன. சுயாதீனத்தோடிருப்பவர் எல்லோரும் இந்த மகாநாட்டிற்கு வரலாம். ஒவ்வொரு விஷயமும் அவர்களுடைய வாக்கின்மேல், அல்லது, ஓட்டின்மேல் தீர்மானிக்கப்பட்டன. இவையன்றி (5) வீட்டா ஞஜி மட் (Witanagemot) என்ற இன்னொரு மகாநாடும் நடைபெறுவதுண்டு. இது அறிவாளிகளின் மகா நாடு (Council of the Wise Men), அல்லது, மீக்கையள் ஜீமட் (Micyl-Gemot = மீக்கைகள் ஜீமட்?) என்றும் குறிக்கப்படுகிறது. அது ஈஸ்டர், விட்ஸன்டைட், கிறிஸ்துமஸ் முதலிய முக்கியமான மாதா கோவில் திருவிழாக் காலங்களில் கூடும். சில குறித்த காரணங்களுக்

காக, இதர சமயங்களிலும் அது கூட்டப்படலாம். அரசருக்கு உதவியா யிருக்கும்பொருட்டு இந்த மகா நாடு கூட்டப்பட்டது. அநேக சிறிய இராஜ்யங்கள் சேர்ந்து வெஸ்ஸெக்ஸோடு ஒன்றுபட்டுப்போன பின், அவற்றில் அடங்கியிருந்த ஷயர் மட்டேகளுக்கெல்லாம் மேலான ஒரு மத்திய நியாயஸ்தலம் தேவையா யிருந்ததனால், காலக்கிரமத்தில் இந்த அறிவாளிகளின் மகா நாடு ஸ்தாபிக்கப்பட்டது. எல்லா எயராள்களும், அரச் பீஷப்புகளும், (Arch-Bishops) பீஷப்புகளும், முக்கியமான அப்பாத் (Abbot) பாதிரிமார்களும், சிற்றரசர்களும், சில சமயங்களில் வேல்ஸ் அரசர்களும் அடங்கியிருந்தனர். இவர்களன்றி, அரசருடைய தகன்கள் ஏராளமானவர்களும், அரசருடைய நெருங்கிய உறவினர்களான ஏயத்தேலிங்க்ஸ் (Aethelings) என்னப்பட்டவர்களும் இந்த மகாநாட்டில் கலந்துகொண்டனர். தகன்கள் அரசருடைய விருப்பத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கக்கூடியவர்களாதலால், அவர்களுடைய ஓட்டுகள், மற்றவர்களுடைய ஓட்டுகளைவிட அதிகமாயிருப்பதுபற்றி அரசருடைய கையே ஓங்கி நிற்கும். (1) அரசரைத் தேர்ந்தெடுப்பது, விலக்குவது, (2) பீஷப்பு, எயாள்தர்மன் முதலியோருடைய நியமனத்தை உறுதிப்படுத்துவது, (3)போக்லண்டை அரசர் விநியோகம் செய்ததை அங்கீகரிப்பது, (4) மதசம்பந்தமான, அல்லது, துரைத்தன சம்பந்தமான புதிய சட்டங்களை ஏற்றுக்கொள்வது ஆகிய அதிகாரங்கள் சட்டப்படி இந்த மகா சபைக்கு இருந்தன. போர் நடத்துவது, சமாதானம் செய்துகொள்வது ஆகிய விஷயங்களைப்பற்றி வாக்குவாதம் செய்வதிலும் இதன் அங்கத்தினர்கள் கலந்துகொண்டனர். இது மகா ஜனங்களின் பிரதான மந்திராலோசனை சபையாகவும், முடிவான நீதிஸ்தலமாகவும் இருந்தது. சட்டப்படி, நாட்டா

ரது நன்மைகளைப் பாதுகாக்கும்பொருட்டு இது ஏற்படுத்தப்பட்டிருந்ததானாலும், இது பூர்த்தியான பிரதிநிதித்வம் வாய்ந்த பொதுஜன சபையாயிருக்கவில்லை. செய்கையிலும், இது அரசரைக் கட்டுப்படுத்தி நிர்ணயத்தில் நிறுத்தியதாகத் தெரியவில்லை. அரசர் முரடராகவும், திடசாலியாகவும் இருந்தால், அவர் தமது சுயேச்சைப்படி நடந்து கொள்வார். அரசர் திறமை யற்றவரா யிருந்தால் ஷை சபையின் அங்கத்தினர்கள் ஒற்றுமையின்றி தம்தம் மனப்போக்கின்படி பலவாறு நடந்துகொண்டனர். நாட்டிற்கு அபாயம் நேரக்கூடிய இக்கட்டான சந்தர்ப்பங்களில் இந்த வீட்டான் சபை பயனற்றதாகவே முடிந்தது.

அரசரும், அவருடைய உத்தியோகஸ்தர்களும்

இங்கிலாந்து தேசம் ஒரே ஓர் அரசரால் ஆளப்பட்ட காலத்தில், ஷயர் நீதிஸ்தலம் மிக முக்கியமானதாக மாறிப் போயிற்று. அதில் ஏயாள்தர்மன், பிஷப், ஷீரப் (Sheriff= சீரப்பு=சிறப்பு வாய்ந்த 'தந்தை ?) ஆகியோர் இருந்து நீதி வழங்கினர். ஹண்ட்ரடிலிருந்து அதற்குப் பிரதிநிதிகள் வந்தனராதலால், அது அநேகமாகப் பிரதிநிதித்வம் வாய்ந்ததா யிருந்தது. அரசர் ஷயர் நீதிஸ்தலங்களுக்கு மேற்பட்ட பதவியிலிருந்தார். இங்கிலீஷ் இனத்தார் பிரிட்டனில் குடியேறியதற்கு முன்னர், அவர்களுக்கு அரசர் என்னப்படுபவர் ஏற்பட்டிருந்தாரோ இல்லையோ என்பது இப்போது நிச்சயமாகச் சொல்லக்கூடாத விஷயம். ஆனால், அவர்கள், பிரிட்டனுக்கு வந்த பின்னர், அரசர்களை ஏற்படுத்திக் கொண்டனரென்பது மாத்திரம் நிச்சயமான விஷயம். ஆதியில் வீட்டான் என்னப்படும் சபையைச் சேர்ந்த அறிவாளிகள் ஏதாவது ஒரு குடும்பத்தில் மிகத் திறமைசாலி

யான ஒருவரைப் பொறுக்கி, அவரை அரசராக நியமித்தனர். அக்காலத்தில், அரசர் கிராம சமுதாய நிலங்களிலிருந்து மாதாகோவில் முதலிய மத ஸ்தாபனங்களுக்கோ, அல்லது, மற்றவருக்கோ நிலத்தை மானியமாகக் கொடுக்கலாமானாலும், இராஜ்யத்தின் நிலம் முழுதிற்கும் அவரே அடிப்படையான சொந்தக்காரர் என்ற தத்துவம் அப்போது அமுலில் இல்லை. அரசர் நாட்டின் ஜனங்கள் எல்லோருக்கும் தலைவராகக் கருதப்பட்டு சகல விதங்களிலும் கௌரதையாகவும், பூஜிதையாகவும் பாராட்டப்பட்டார். எல்லா ஷயர்களுக்கும் மேற்பட்ட மத்திய அதிகார பதவியை அரசர் வகித்தார். அவர் வாக்-மட் என்னப்பட்ட ஜன சபையின் அக்கிராசனாதிபதியாயிருந்தார்; போர் நடத்துவதில் ஜனங்களின் தலைவராயிருந்தார். அவர் பல சிற்றரசர்களுக்கு மேற்பட்ட சக்கரவர்த்தியாயிருந்தால், வீட்டானாஜிமட் என்னும் அறிவாளிகளது சபையிலும் அவர் அக்கிராசனாதிபதியாயிருந்தார். அவருக்கு கிஸ்தி வருமானம் சொற்பம் ஏற்பட்டிருந்தது. கான்யூட் அரசருடைய காலத்திற்கு முன்னர் நிரந்தரமான போர்வீரர்களது படை அரசருக்கு ஏற்படவில்லை. அரசர் பராக்கிரமசாலியா யிருந்தால், அவர் சுயேச்சையாய் எதையும் நடத்திக்கொண்டு போவார்; அவர் திறமையற்றவரா யிருந்தால், அவருக்குக் கீழ்ப்பட்ட சீமான்கள் அவரவர்களுடைய இச்சைப்படி காரியங்களைச் செய்து, நாட்டின் நிர்வாகத்தைப் பெரிதும் குளறுபடியாக்கிவிடுவர். அரசருடைய அதிகாரத்திற்குப் பலவிதமான கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தனவானாலும், அரச பதவியின் அதிகாரமும் செல்வாக்கும் அபாரமாகப் பெருகிப் போயின. ஏககபரத் (Ecgbert), அவருடைய சந்ததியார் ஆகியோர் காலத்தில் வெஸ்ஸெக்ஸ் இராஜ்யம்

தலைமை ஸ்தானம் வகித்தது, டானிஷ் போர்கள், மத ஸ்தாபனங்களின் செல்வாக்கு, அரசருக்கு தகன்களின் உதவி ஏற்பட்டது ஆகிய பல காரணங்களினால், அரசர் சர்வாதிகாரமும் உடையவராய் அபிவிருத்தி யடைந்து விட்டார். ஒவ்வொரு ஷயருக்கும் தலைமை யதிகாரியாயிருந்த ஏயாள்தர்மன் எல்லோரும் அரசருடைய முக்கிய உத்தியோகஸ்தர்களான தானாதிபதிகளா யிருந்தனர். கான்யூட் அரசரது காலத்திலிருந்து இவர்கள் ஏயராள் என்று குறிக்கப்படுகின்றனர். சில ஏயராள்களுக்குப் பல ஷயர்களின் அதிகாரமும் சில சமயங்களில் ஏற்படவே, அவர்களுடைய மேன்பாடு அபாரமாகப் பெருகிவிட்டது. ஆகவே, ஒவ்வொரு ஷயரின் நிர்வாகத்தையும் ஒரே ஏயராள் நேரில் கவனிக்க இயலாத நிலைமை ஏற்படவே, ஷயர்-றேயவ், அல்லது, ஷீரப் என்ற ஒரு புதிய வகுப்பு உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களே ஷயர்களின் நிர்வாகத்தை வகித்தனர். நார்மன் அரசர்கள் ஆளத் தொடங்கிய காலத்தில், ஒவ்வொரு ஷயரின் நிர்வாகமும், ஷீரப்பின் வசம் இருந்ததேயன்றி, ஏயராளின் வசத்தில் இல்லை. ஆனால் விருத் (Fyrd) என்று குறிக்கப்பட்ட ஒவ்வொரு ஷயரினது சேனைப்படைக்கும் ஏயராளே சேனாதிபதியா யிருந்தார். ஒவ்வொரு ஷயரிலும் விதிக்கப்பட்ட அபராதங்கள், வரிகள், இதர வசூல்கள் ஆகியவற்றில் மூன்றில் ஒரு பகுதி ஏயாள்தர்மனுக்குச் சொந்தமானது. குறைந்தது ஐந்து ஹைட் நிலம் படைத்திருந்தவரே தகன் அல்லது தானி என்று குறிக்கப்பட்டார். அவருக்கு நாற்பது ஹைட் நிலம் ஏற்படுமானால், அவர் ஏயராளுக்கு சமமாவர். ஆனால் அரசருடைய மெய்காப்பாளரான தகன்கள், சமஸ்தான தகன்களைவிட, மேலான

வர்களாக மதிக்கப்பட்டனர். நிலத்தின் சொந்தக்காரரான ஒவ்வொரு சுயாதீனக் குடியானவரும் ஆயுதங்களை சேகரித்துக் கொண்டு, தேசப் பாதுகாப்பு விஷயத்தில் அரசருக்கு உதவி செய்யவேண்டும். எட்டாவது நூற்றாண்டிலிருந்து, ஷை சேனைப்படைக்கு மூன்றுவிதமான கடமைகள் ஏற்பட்டிருந்தன. (1) விருத் (Fyrd) என்னும் படையில் சேர்ந்து தலைவருக்கு மெய்காப்பாளரா யிருப்பது, (2) பட்டணத்தின் மதில் சுவர்களை சீர்திருத்தி செப்பனிடுவது; (3) ரஸ்தாக்களையும், பாலங்களையும் ஒழுங்குப்படுத்தி நல்ல நிலைமையில் வைப்பது என்பனவே அம்மூன்று கடமைகள்.

சட்டம், துரைத்தன நிர்வாகம், நீதி முதலியன

குடிமக்கள் புராதனமாய் அநுஷ்டித்துவந்த நற்பழக்க வழக்கங்களே பிற்காலத்தில் அவர்களுடைய சட்டங்களாயின. அல்வரட் (Alfred) முதலிய அரசர்கள் அவைகளையே சட்டங்களாகத் தொகுத்தனரன்றி புதிய விதி எதையும் உற்பத்தி செய்யவில்லை. எந்தக் குற்றத்திற்கும் அபராதமே விதிக்கப்பட்டது. கொலை நடந்தால்கூட, கொலை செய்தவர் கொல்லப்பட்டவருடைய வார்சுதார்களுக்கு இவ்வளவு தொகை அபராதம் செலுத்திவிட வேண்டுமென்ற நிர்ணயம் ஏற்பட்டிருந்தது. அதற்காக அவரவருடைய பதவிக்குத் தக்கபடி ஒரு பெறுமானம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அரசர், அரச்பீஷப் முதல் சாதாரண மிராசுதார் வரையில் இன்னின்னருடைய கொலைப் பெறுமானம் இவ்வளவு என்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. அது வர-கில்ட் (Wer-gild), அல்லது, விரு-கில்ட் என்று குறிக்கப்பட்டது. தீயவ் என்னப்படும் அடிமைகளுக்கு இவ்வித வர-கில்ட் ஏற்படவில்லையானலும், அவர்களுடைய சொந்தக்காரர்களுக்கு கொலை

யாளி நஷ்ட ஈடு செலுத்தவேண்டும். சிலருடைய வர-கில்ட் அடியில் வருமாறு ஏற்படுத்தப்பட்டிருந்தது :—

அரசர்	... ...	7200	ஷில்லிங்ஸ்.
ஏயாள்தர்மன்	... ...	2400	,,
அரசருடைய தானி அல்லது தகன்	... ...	1200	,,
சாதாரணத் தானி அல்லது தகன்	... ...	600	,,
சீயராள்	... ...	200	,,

சில சந்தர்ப்பங்களில், கொலை செய்யப்பட்டவர்களுடைய சுற்றத்தார் சட்டத்தைப் பொருட்படுத்தாமல் தாங்களே சுருக்கமான வழியில் கொலையாளியிடம் பழிவாங்கி விடுவதுமுண்டு. பெரிய சமஸ்தானாதிபதிகளும், ஸ்தல நீதிமன்றத்தாரும் சட்ட நிர்வாகப் பொறுப்பை வகித்தனர். தங்கள் பிரஜைகள், அல்லது, நிலமில்லாதவர்கள் குற்றங்கள் செய்யாதிருக்கும் பொறுப்பு பெரிய சீமான்களைச் சேர்ந்தது. நீதி விசாரணைக் கூட்டங்கள் வெட்ட வெளியில் நடந்தன. அங்கு நடக்கும் விவகாரங்கள் எல்லோருக்கும் கேட்கும்படி, அவை பெரும்பாலும் சரிவாயும், மேடாயும் இருக்கும் இடங்களிலேயே நடத்தப்பட்டன. குற்றம் சுமத்தப் பெற்றவன் இரண்டுவகையாகத் தன் கட்சியை நிரூபிக்கலாம். கம்பர்கேட்டர்ஸ் (Compurgators) என்னப்படும் நன்னடத்தை சாட்சிகளின் மூலமாயும், ஆர்டீயல் (Ordeal) என்னப்படும் திருவுள சாட்சியத்தினாலும் தான் நிரபராதி என்பதை அவன் மெய்ப்பித்துக் காட்டலாம். கம்பர்கேட்டர்ஸ் என்னப்படும் சாட்சிகள், குற்றம்

சுமத்தப்பெற்றவன் பொதுவாக நன்னடத்தையுடைய யோக்கியன் என்றோ, அல்லது, அவன் அந்தக் குற்றத்தைச் செய்யவில்லையென்றோ, அல்லது இரண்டையுமோ தெரிவிக்கலாம். குற்றத்தின் தன்மை, வாதி, எதிரி ஆகியோரது தராதரம் ஆகியவற்றிற்குத் தக்கபடி சாட்சிகள் அதிகமாகவோ, குறைவாகவோ விசாரிக்கப்பட்டனர். திருவுள சாட்சியம் என்பது என்னவென்றால், குற்றம் சுமத்தப்பெற்றவன் பழுக்கக் காய்ந்த ஓர் இரும்பைக் கையில் வைத்துக்கொண்டு மூன்றடி தூரம் நடந்து, பிறகு அதைக் கீழே போடவேண்டும்; அல்லது, கொதிக்கும் தண்ணீருக்குள் கிடக்கும் இரும்பையோ, கல்லையோ, அவன் கையால் எடுக்கவேண்டும். இவ்வாறு செய்ததற்கு ஏழு நாட்களுக்குப் பிறகு, அவனுடைய கை பூர்த்தியாக நல்ல நிலைமையி லிருக்குமானால், அவன் நிரபராதியென்று கருதப்படுவான். அவனைத் தண்ணீரில் தள்ளி விடுவதுமுண்டு. அவன் சாகாமல் தப்பி வந்தால், அவன் நிரபராதியென்று கருதப்பட்டான். திருவுள சோதனைபின்படி நீதி வழங்கிய முறைமை 12-வது நூற்றாண்டின் இறுதியில் விலக்கப்பட்டுப் போயிற்று. பெரும்பாலும் குற்றங்களுக்கு அபராதமே விதிக்கப்பட்டன. சிறைச்சாலை தண்டனை இருந்ததாகத் தெரியவில்லை. கொடிய குற்றங்கள் செய்தவர்கள் சட்டப் பாதுகாப்பற்ற தேசப் பிரஷ்டர்களாக்கப்பட்டனர். தேசப் பிரஷ்டர்களுடைய தலை ஓநாயினது தலை போன்றது என்று குடிமக்கள் கருதினராதலால், அவருடைய தலையை எவரும் வெட்டிவிடலாம்; அது சட்ட சம்பந்தமான செய்கையாகவும் மதிக்கப்பட்டது. இவையன்றி இன்னம் பலவிதமாகவும் நீதி செலுத்தப்பட்டது. நில மிராசுதார் ஒருவர் சட்டத்தை மீறி நடந்தால், அவர் அதற்குப் பரி

காரம் செய்கிறவரையில், அவருடைய நிலங்களைப் பறிமுதல் செய்வதும் வழக்கம். குடிமக்கள் பத்துப் பத்து நபர்கள் சேர்ந்த தொகுதிகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தனர். அந்தத் தொகுதியினருள் ஒருவர் செய்யும் குற்றத்திற்கு மற்றவர் உத்தரவாதமாக்கப்பட்டனர். இந்தத் தொகுதி விரித் பார்ஹஸ் (Frithborhs), அல்லது, டைத்திங்ஸ் (Tithings) என்று குறிக்கப்பட்டது. நாம் மேலே குறித்த நீதி விசாரணைகளில், வாதிகளும் மற்ற அங்கத்தினர்களும் சேர்ந்தே நீதிபதி ஸ்தானங்களை வகித்தமையால், நியாயம் பெரும் போக்கானதாயும், பாரபட்சமானதாயும் இருந்திருக்கு மென்றே நாம் கருதவேண்டும். இவ்வகையான பொதுஜன நியாய ஸ்தலங்களைத் தவிர, அரசர்களும், பெரிய சமஸ் தானதிபதிகளும், தங்கள் சிப்பந்திகள், தங்களைச் சார்ந் தோர் முதலியவர்களுடைய வழக்குகளைத் தாங்களே விசாரித்து நீதி வழங்கத் தங்களுடைய சொந்த நீதி ஸ்தலங்களை ஏற்படுத்திக்கொண் டிருந்தனர். சில சமஸ்தானதிபதிகள் தங்கள் நிலங்களில் இருக்கும் குடியானவர்கள் சம்பந்தப் பட்ட வழக்குகளை விசாரிக்கவும் அதிகாரம் பெற்றனர். எல்லா நீதி ஸ்தலங்களையும்விட, ஷயர் நீதிஸ்தலமே மிக முக்கியமானதா யிருந்தது. அது நீதி வழங்கியதோடு, நாட்டினுடைய ஆட்சி நிர்வாகத்தையும் வகித்தது. அவ் வாறு நீதிபதிகள் கூடும் காலங்களில், ஜனங்கள் ஒருவரை யொருவர் சந்திக்க அடிக்கடி சந்தர்ப்பம் வாய்த்தது. கிராம வாழ்க்கையில் ஒருவித ஊக்கம் ஏற்பட்டது. ஆனல், அத ஞல், பல ஷயர்களின் மனிதர்கள் ஒன்றுபடுவதோ, மொத்த மான நாட்டின் நன்மையைக் கடைப்பிடிப்பதோ, மிக துர்லப மாக முடிந்தன.

மாதாகோவில் முதலிய மத ஸ்தாபனம்

அக்காலத்தில் பீஷப்புகள், வீட்டா ஜிமட், ஷயர் மட் முதலிய நீதிஸ்தலங்களில் கலந்துகொண்டதாக நாம் தெரிந்துகொண்டோ மல்லவா. அவர்கள் ஜனங்களுக்கு மதபோதனை செய்வதைவிட, நீதி வழங்குதல், அரசியல் நிர்வாகம் முதலியவற்றிலேயே பெரும்பாலும் சம்பந்தப்பட்டிருந்தமையால், அவர்கள் நிரம்பவும் செல்வாக்கும் அதிகாரமும் வாய்ந்தவர்களா யிருந்தனர். மத ஸ்தாபனங்களில் மேலான பதவிகளை வகிக்கத் தகுதியுடையவர்கள் அகப்படுவது அரிதாயிருந்ததாகையால், ஒரு பீஷப்பு பல பீஷப்புகளின் உத்தியோகங்களை கவனித்தனர். அரச்-பீஷப்பு, ரோம் (Rome) நகருக்குச் சென்று, பாப்பினிடம் (Pope) தமது பாளையத்தின் (Pallium) அதிகாரப் பட்டயத்தைப் பெற்றுக்கொண்டு வந்தாராயினும், பாப்பின் அதிகாரம் இங்கிலாந்தின் மத ஸ்தாபனங்களில் அவ்வளவு அதிகமாகச் செல்லுபடியாகவில்லை. மத போதனை விஷயங்களில் அவைகள் ஊக்கமற்றவையாயிருந்தன. அக்காலத்து மாதாகோவில்கள் மரங்களால் கட்டப்பட்ட அநாகரிகக் கட்டிடங்களா யிருந்தன. கல்லினால் கட்டப்பட்டவை மிக அரிதாயிருந்தனவாயினும், அவற்றில் சில இப்போதும் இருக்கின்றன. அவை ரோமன்களின் தோரணைப்படி கட்டப்பட்டவை என்று குறிக்கப்படுகின்றன. அவைகள் தொழுகைக்கு மாத்திரமன்றி, கோட்டையாகவும், மகாநாடு கூடுமிடங்களாகவும் உபயோகிக்கப்பட்டன. அவற்றின் கோபுரக் கல்களில் ஏராளமான சித்திர வேலைகள் செய்யப்பட்டிருந்தன. மாதாகோவில்கள் சிறியவையாயும், பெரும்படியாகக் கட்டி முடிக்கப்பட்டவையாயும் இருந்ததன்றி வட்டமான கமான்கள், வட்டமான அல்லது முக்கோண

மான குறுகிய ஜன்னல்கள் முதலியவை உடையவைகளாயு மிருந்தன.

குடிமக்களின் வீடுகள், ஆகாரம் முதலியவை

ஆதிகாலத்தில், சாக்கிழான்கள் (Saxons) வசித்த வீடுகள் மண்சுவர்களும், வைக்கோல்களால், அல்லது, தழை களால் வேயப்பெற்ற கூரைகளும் உடையவைகளா யிருந் தன. புகை போவதற்கு கூரையில் ஒரு துவாரமும், வெளிச் சம் உண்டாவதற்கு சுவர்களில் ஓட்டைகளும் இருந்தன. கூட்டத்தின் தரை நடுவில் எப்போதும் பெரிய தீ எரிந்து கொண்டிருந்தது. புகை மேலிருந்த கூரைத் துவாரத்தினுல் வெளியேறியது. பிற்காலத்தில், அவர்களுடைய வீடுகள் மரத்தினுல் கட்டப்பட்டன. மேல் பக்கத்தில் கூரைகளோ, அல்லது, ஓடுகளோ இருந்தன. வீட்டின் முக்கியமான பாகங்கள் கூடம் (Hall), கொடிப்பந்தல் (Bower) ஆகிய இரண்டுமே. கூடத்தில்தான் எல்லோரும் பொதுவாக இருப்பது, போஜனம் செய்வது முதலிய வியவகாரங்கள் நடைபெற்றன. கொடிப்பந்தல் இருந்த இடத்தை ஸ்திரீ களும், குழந்தைகளும் உபயோகித்தனர். கூடத்தில் நீள மாகப் போடப்பட்டிருந்த விசிப்பலகையின்மேல் (பெஞ்சி யின்மேல்) குடும்பத் தலைவர், வேலைக்காரர் உள்பட எல்லோ ரும் உட்கார்ந்து நடுப்பகலில் ஒன்றாய் உண்டனர். பதவியின் கௌரவதை உயர உயர, ஓடி விசிப் பலகையில் தடைபோல வாய்க்கால் ஒன்று செய்யப்பட்டது. அதில் உப்பைப் போட்டு நிறைத்திருப்பார்கள். வேலைக்காரர்கள் உப்பிற்கு அப்பால் தான் உட்கார வேண்டும். மாமிசத் துண்டுகள் இரும்புக் கூர்க் குச்சிகளில் குத்தப்பட்டு, ஒவ்வொருவரிடத்திலும் கொடுக்கப்படும். அவரவர் தம் தமக்குத் தேவையான அளவு

வெட்டி எடுத்துக்கொள்வர். பார்லி அடை, ஓட் அடை, மாட்டிறைச்சி, பன்றி யிறைச்சி முதலியவைகளே ஆகாரம். மழை காலம் வருவதற்குமுன் அவர்கள் கால்நடைகளையெல்லாம் அறுத்து உப்புக்கண்டம் போட்டு வைத்திருப்பார்கள். ஏல் முதலிய பானங்கள் மரப் போராக்களில் நிரப்பப்பட்டு, பக்கத்தில் ஒருமேஜையின்மீது வைக்கப்பட்டிருக்கும். வெள்ளி, கண்ணாடி, மாட்டுக் கொம்பு முதலியவற்றாலான கோப்பையால் பானங்களை எடுத்து அருந்துவார்கள். நல்ல ஏராளமான தீனி, மும்முரமான குடி, வேடிக்கை, விளையாட்டு முதலியவற்றிற்குக் குறைவில்லை. அவர்களுக்கு தேனே முக்கியமான தித்திப்புப் பதார்த்தம். சிலர் பிரான்ஸிலிருந்து ஒயின் வரவழைத்து உபயோகித்தனர். இங்கிலாந்தின் தெற்கில் சிற்சில இடங்களில் ஒயினும் தயாரிக்கப்பட்டது. மர சாமான் மிக சொற்பமாகவே இருந்தன. பிரித்து நகர்த்தக் கூடிய மேஜைகள், நீண்ட விசுப்பலகைகள், பெரும்படியான சித்திர வேலைப்பாடுகளுடைய பெரிய உடுப்புப் பெட்டிகள், இரண்டொரு கட்டில்கள் முதலியவைகள் இருந்தன. வீட்டின் தலைவன் உட்கார உயரமான முதுகோடு கூடிய நாற்காலியும் இருந்தது. வேலைக்காரர்கள் தரையிலோ, அல்லது, வெளியிலிருந்த இடங்களிலோ படுத்துக் கொண்டனர். மரங்களால் கட்டப்பட்ட வீடுகளில், பெருங் காற்றின் உபத்திரவம் அதிகமா யிருந்தது. அல்வரட் (Alfred) அரசர் மெழுகுவத்தி எரிவதிலிருந்து தமது பொழுதைக் கணக்கிட்டதாகச் சொல்லப்படுகிறது. விசையாக மோதும் பெருங் காற்றினால், மெழுகுவத்தி சீக்கிரம் எரிந்து போகாமல் தடுப்பதற்கு அந்த அரசர் மெழுகுவத்தி லாந்தர்கள் செய்து கொண்டாராம். அக்காலத்தில் குடும்பம் என்றால் அதில் வேலைக்காரர்கள், குழந்தைகள்

முதலிய சகலரும் ஒன்ருகக் கருதப்பட்டனர். பெரிய சீமான்கள் வேட்டையாடுவது, புரு விடுவது முதலியவற்றில் ஈடுபட்டிருந்தனர்; வீட்டிலிருக்கையில் பாட்டுக் கேட்பது, கதை கேட்பது, வித்தையாடிகளின் வேடிக்கைகளைப் பார்ப்பது, புதிர் போட்டு விடுவிப்பது, சதுரங்கமாடுவது முதலியவற்ருல் பொழுது போக்கினர். ஸ்திரீகள் நூல் நூற்பது, நெய்வது, நூலினல் பூவேலைகள் செய்வது முதலிய காரியங்களால் பொழுதைப் போக்கினர்; ஸ்திரீகள் தங்களுடைய செம்மறியாட்டினது மயிர்களை எடுத்து கம்பளியாடைகளும் தயாரித்துக் கொண்டனர்.

பாஷை

சாக்கிழான், ஆங்கிலோ-சாக்கிழான், அல்லது, பழைய இங்கிலீஷ் பாஷையில் விகுதிப் பிரயோக மாறுதல்கள் ஏராளமாயிருந்தன. பெயர்ச் சொற்களுக்கும், பெயருரிச் சொற்களுக்கும் நான்கு நான்கு வேற்றுமைகள் ஏற்பட்டிருந்தன. அதேபோல வினைச்சொற்களும் பலவித விகுதி மாறுபாடுகள் உடையவையா யிருந்தன. அக்காலத்து இலக்கணம் மிக விரிவானதாயும், கடினமானதாயும் இருந்தது. ஆனல் மத சம்பந்தமான சொற்கள் நீங்கலாக, மற்ற வகையில், பாஷை திசைச் சொற்களின் கலப்பில்லாமல் சுத்தமாயிருந்தது. லத்தின் பாஷை மத ஸ்தாபனங்களிலும், சிறந்த படிப்பாளிகளின் நூல்களிலும் உபயோகப்பட்டிருந்தது. ஆனல் டேனிஷ்காரர் வந்தபிறகு, அநேக புதிய சொற்கள் வந்து சேர்ந்தன. பழைய விகுதிப் பிரயோகங்கள் விலக்கப்பட்டு வந்தமையால், பழைய இங்கிலீஷ் தற்கால பாஷையின் வடிவத்தை அடைய ஆரம்பித்துக் கொண்டிருந்தது.

இலக்கியம்

எந்த நாட்டினரும் ஆதிகாலத்தில் கவிகளிலேயே நூல் இயற்றினர்; அதுபோலவே, சாக்கிழான் (Saxon) களும் இயற்றினர். பழைய இங்கிலீஷில் எழுதப்பட்ட மிகப் பழமையான காவிய நூல் பியாவல்ப் (Beowulf) என்னப்படும் இதிகாசம். ஆதியில் அவர்கள் ஐரோப்பாக் கண்டத்திலிருந்து வந்து குடியேறிய காலத்தில் அதுவும் அங்கிருந்தே வந்ததென்று கூறுகின்றனர். கி. பி. 937-ல் பிரன்னன்பர்க் (Brunanburgh) என்ற இடத்தில் நடந்த போரில் ஏயத்தில்ஸ்தன் (Aethelstan=ஏயத்தில் ஸித்தன் ?) என்ற அரசர் வெற்றி பெற்றதைப்பற்றிப் பாடப்பட்டுள்ள பாக்கள் இப்போதும் இருக்கின்றன. அவை பழைய இங்கிலீஷில் இயற்றப்பெற்ற மிகப் பழமையான கம்பீரம் நிறைந்த பாக்கள். பழைய இங்கிலீஷ் பாக்களில் முக்கியமான ஒரு விசேஷம் காணப்படுகிறது. தற்கால இங்கிலீஷ் பாக்களில் வரிகளின் முடிவில் ஒரே ஓசையுடைய பிராசச் சொற்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனல் பழைய இங்கிலீஷ் பாக்களின் வரிகளில் மோனைச் சொற்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பிற்காலத்தில் பைடா (Baeda), அல்லது, 'பீட்' (Bede) என்பவர் யோவான் (John) என்பவரால் எழுதப்பட்ட புதிய ஆகமக் கிறிஸ்தவ வேதத்தை இங்கிலீஷ் வசன நடையில் மொழிபெயர்த்தார். அல்வரட் (Alfred) அரசர் லத்தீன் பாஷையிலிருந்து பல நூல்களை இங்கிலீஷில் மொழிபெயர்த்தார். அவரால் தொடங்கப்பட்ட இங்கிலீஷ் கரணகள் (English Chronicle) என்பது பல மடங்களிலும் வைக்கப்பட்டிருந்தது. அது அக்காலத்து பாஷையில் எழுதப்பட்ட தேச சரிதமாகும். டியூடானிக் இனத்தாருடைய வரலாறு அவர்களுடைய

சொந்த பாஷையிலேயே எழுதப்பட்ட மிகப் பழமையான தேச சரித்திரம் இதுவே. இது அல்வரட் அரசர் காலத்தில் தொடங்கி ஸ்டீபன் ஆட்சி வரையில் இருந்து, 1154-ல் திடீரென்று ஒரு வாக்கியத்தின் ஒரு பாகத்தோடு மொட்டையாக நிறுத்தப்பட்டிருக்கிறது. சில வைத்திய நூல்கள், செடியகராதி, கிறிஸ்தவ வேத மொழிபெயர்ப்பு, புண்ணிய புருஷர்களது ஜீவிய சரித்திரம் முதலிய நூல்களும் உற்பத்தியாயின.

டேனிஷ் யுத்தத்தினல் ஏற்பட்ட துரைத்தன அமைப்பு சம்பந்தமான பலன்கள்

டேனிஷ் யுத்தங்களுக்குப் பிறகு முக்கியமான பல மாறுதல்கள் ஏற்பட்டன. இங்கிலாந்து முழுதும் வெஸ்ஸெக்ஸ் இராஜ்யத்தோடு ஒன்றுபட்டுப் போனதோடு, அரசருக்கு ஏக சக்ராதிபதியினது அதிகாரங்கள் ஏற்படும் குறிகள் காணப்பட்டன. அதுவன்றி, பிற்காலத்தில் ஏற்பட இருந்த பியூடல் (Feudal) முறைமையின் முன்னறி குறிகளும் தோன்றலாயின. பியூடாலிஸம் (Feudalism) என்பது (1) இராஜ்யத்தில் அடங்கிய நிலம் முழுதும் அரசரால் கொடுக்கப்பட்டது, (2) அதற்குக் கைம்மாருன கடமையாக அவருடைய இராணுவப் படையில் சேவை செய்வது, வரிகள் செலுத்துவது என்னும் கொள்கையை அநுஷ்டிப்பதேயாகும். ஆனல் செய்கையில், பெரிய சமஸ்தானதிபதிகள் (1) தங்கள் சமஸ்தானத்திற்குள் சுயேச்சாதிகாரியாயிருப்பது, (2) சொந்தக் காரணத்திற்காக சுயேச்சையாகப் போர் நடத்துவது, (3) சொந்த நாணயங்களைப் பொறித்து செலாவணி நடத்துவது, (4) தங்கள் சமஸ்தானத்தில் அரசருக்கு அதிகாரமே

இல்லாமல் செய்துவிடுவது ஆகிய அநுகூலங்களில் கண்ணும் கருத்துமா யிருந்தனர். ஐரோப்பாக் கண்டத்திலிருந்த பெரிய சமஸ்தானாதிபதிகளே முக்கியமாய் இவ்விதம் செய்துகொண்டிருந்தனர். இந்த நிலைமை மாறி, பியூடாலிஸத்திற்கு அடிகோலிக்கொண் டிருந்தது. அரசருடைய அதிகாரம் பெருகியதுபோலவே, சமஸ்தானாதிபதிகளது அதிகாரமும் பெருகிப்போ யிருந்தது. ஆனால், ஏயட்கார் (Eadgar) இறக்கும் வரையில் கலகம் நேராமலே இருந்தது. நீதிஸ்தல அமைப்பு பெரிதும் மாறிப்போயிற்று. ஜனங்களுடைய நீதிஸ்தலங்களின் அதிகாரத்தில் ஒரு பாகம் அரசருடைய அதிகாரத்தில் சேர்ந்துவிட்டது. அதுவன்றி, பெரிய சமஸ்தானாதிபதிகள் தங்கள் நிலத்தில் தங்களுடைய சொந்த நீதிஸ்தலத்தை ஸ்தாபிக்க உரிமை பெற்றனர். இது ஸக் அண்ட் ஸாக் (Sac and Soc) என்று குறிக்கப் படுகிறது. ஆனால், பழைய நீதிஸ்தலங்களும் இருந்தமையால், பெரிய சமஸ்தானாதிபதிகள் ஷயர் நீதிஸ்தலங்களுக்கும் விஜயம் செய்யவேண்டியவர்களா யிருந்தனர். இவற்றால், அரசருடைய அதிகாரமும், பெரிய சமஸ்தானாதிபதிகளுடைய அதிகாரமும் முரண்பட்டனவாதலால், யாருடைய அதிகாரம் முடிவானது என்பதைப்பற்றிய போராட்டம் இருந்து வந்ததாகையால், பியூடாலிஸம் இங்கிலாந்தில் பூர்த்தியாக ஏற்படவில்லை. ஹண்ட்ரட், ஷயர், வீட்டான், மதஸ்தாபனம் முதலியவை பூர்த்தியான பியூடாலிஸம் ஏற்படுவதற்கு இடையூறுகளா யிருந்தன. ஆனால் நிலைமை ஏழாவது, எட்டாவது நூற்றாண்டுகளில் இருந்ததைவிட முற்றிலும் மாறுபட்டிருந்ததென்பது உண்மையே. பல பட்டணங்கள் தோன்றி யிருந்தன; அரசருடைய மெய்காப்பாள

ராக தகன்ஸ் என்ற வகுப்பார் ஏற்பட்டுப்போயினர். அவர்களுக்கு சில எல்லைகளுக் குள்பட்ட இடங்களில் அதிகாரம் கொடுக்கப்பட் டிருந்தது. அரசருடைய அதிகாரமும் பெருகிப்போ யிருந்தது. வீட்டா ஞஜி மட் அரசருடைய சொந்த நீதிஸ்தலம் போன்ற நிலைமையை அடைந்து விட்டது. நார்மன் படையெழுச்சி காலத்திலும், ஏக சக்கராதிபத்யத்திற்கும், பியூடாலிஸத்திற்கும் ஏற்பட்ட மல்ல யுத்தம் முடிவாகத் தீர்க்கப்படாமலேயே இருந்தது. அப்போது இங்கிலாந்து தனித்தனியான இராஜதானிகளாகப் பிரிக்கப்படாமல் இருந்தது. ஏராளமான கோட்டைகளும் உண்டாகவில்லை. பெரிய சமஸ்தானுதிபதிகளால், தமது சொந்த சச்சரவுகள் காரணமாகப் போர்கள் நடத்தப்படவில்லை. அவர்கள் சொந்த நாணயம் பொறித்து செலாவணி செய்துகொள்ளும் உரிமையையும் அநுபவிக்கவில்லை. இங்கிலீஷ் மக்கள் எந்த விஷயத்திலும் ஊக்கமின்றி மந்தமாயிருந்த நிலைமையில், டேனிஷ்காரர் வந்து சேர்ந்தது ஒரு வகையில் புதிய ஊக்கம் அளித்ததானுலும், அதனுல் அதிக மாறுதல் ஏற்படவில்லை. இங்கிலீஷ்காரருக்கு புத்துயிரும், புதிய ஆண்மைத்தனமும் ஏற்படுத்தவும், அவர்களைப் புதிய புதிய முன்னேற்றத் துறைகளில் திருப்பவும், படிப்படியாயதிகரித்துக் கொண்டிருந்த பியூடாலிஸத்தின் வன்மையை அடக்கி, அரசருடைய மத்திய அதிகாரத்தையும், ஸ்தல அதிகார ஸ்தாபனங்களையும் ஒன்றுக்கொன்று உறுதியாகப் பிணைக்கவும், நார்மன் அரசர்களுடைய பராக்கிரமமும், முரட்டுப் பயிர்ச்சியும் அவசியமாயிருந்தன.

I. எகபரத் (Ecgbert) வம்சாவளி

- எகபரத் (802—839)
  - எத்தில்உல்ப் (Ethelwulf) (839—858)
    - எத்தில்பால்ட் (Ethelbald) (858—860)
    - எத்தில்பரத் (860—866)
    - எத்திலரட் I (Ethelred) (866—871)
    - அல்வரட் (Alfred) (871—901)
      - எட்வரட் (Edward, the Elder) (901—925)
        - ஏயத்தில்ஸ்தன் (Aethelstan) (925—940)
        - எட்மண்ட் I (Edmund) (940—946)
          - ஏயடவக் (Eadwig) (955—959)
          - ஏயட்கார் (Eadgar) (959—975)
        - ஏயடரட் (Eadred) (946—955)

- ஏட்வரட் (Edward, the Martyr) (975—978)
- ஏத்திலரட் II (978—1016) = ஏ(ய)ம்மா (Emma of Normandy) = கான்யூட் (1016—1035)
  - (கான்யூட்): ஹார்த்த கான்யூட் (1040—1042)
  - (ஏத்திலரட் II):
    - ஏட்மன்ட் II (1016) (Edmund Ironside)
      - ஏட்வரட் (ஏயத்திலிங்)
        - ஏயட்கார் (ஏயத்திலிங்)
        - மார்கரத் = மால்கம் (Malcolm, King of Scots) (1057—1093)
          - ஏயட்கார் (King of Scots) (1098—1107)
          - தாவீத் (David, King of Scots) (1124—1153)
          - மாத்தில்தா (Matilda) = ஹென்ரி I (Henry I) (1100—1135)
            - பில்லியம் (William drowned) (1120)
            - மாத்தில்தா சக்கரவர்த்தினி = (1) சக்கரவர்த்தி ஹென்ரி V =(2) அஞ்சோள ஜியாவரை (Geoffrey of Anjou)
    - அல்வரட்
    - ஏட்வரட் கன்பெஸர் (Edward, the Confessor) (1042—1066)

II. நார்மன் அரசர் வம்சாவளி

ரால்ஃ அல்லது ரோலா (கங்கர்) (Rolf or Rollo, the Ganger) (927)

- வில்லியம் லங்கஸ்வர்ட் (William Longsword)
  - ரிச்சர்ட் (Richard, the Fearless)
    - ரிச்சர்ட் (Richard, the Good) (1026)
      - ரிச்சர்ட்
      - ராபர்த் (Robert, the Magnificent) = ஹேரளாத்தா (Harlotta) = ஹேரள்வன் இரண்டாவது புருஷன் (Herlwin)
        - வெற்றிகொண்ட வில்லியம் I
        - (ஹேரளாத்தா, ஹேரள்வின் மக்கள்:)
          - ஆதா, (பேயியக்ஷ் பீஷப்பு) (Odo, Bishop of Bayeux)
          - ராபரத், மார்த்தாய்ன் ஏயரான்
    - ஏம்மா
      - = (1) ஏத்திலரட் II
      - = (2) கான்யூட்

III. காடவன் (Godwin) வம்சாவளி

- சுவகன் (Swegen)
- ஹரால்ட் II (Harold, Earl of Wessex)
- ஏடீத் (Edith) = ஏட்வரட் கன்பேஸர்
- தாஸ்டீக் (Tostig Earl of Northumbria)
- கைர்த் (Gyrth, Earl of East Anglia)
- லயபவயன் (Leofwine)

அத்தியாயம்—2

ஹாரால்ட் II (1066)

கன்பெஸர் எட்வரடினது மரணம், ஹாரால்ட் II முடிசூடல்

கன்பெஸர் எட்வரட் அரசர் தேம்ஸ் நதியின் நடுவிலுள்ள ஒரு தீவில் வேஸ்ட் மின்ஸ்டர் காத்தீதிரில் (West Minster Cathedral) என்னும் மாதாகோவிலைக் கட்டி முடித்தவுடன், 1066-ம் வருஷம், ஜனவரி மாதம், 5-ம் தேதி இறந்துபோனார். அவருக்கு சந்ததி இல்லை யாதலால், இராஜ்யத்திற்கு யார் அரசராவது என்னும் விஷயம் தீர் மானிக்கப்பட வேண்டிய கடினமான நிலைமை ஏற்பட்டது. அவருடைய சகோதரர் எட்மன்ட் II என்பருடைய பெயரா ரான ஏத்திலிங் ஏயட்கார் என்பவர் இளம்பிராயத்தினரா யிருந்தார். அப்போது தேசத்தின் நிலைமை மிக அபாயகர மானதாயிருந்தது. ஹாரால்டின் சகோதரரான தாஸ்டீக் (Tostig=தாஷ்டீகமானவன்?) என்பவர் தமது சகோதரர் மீது பழி தீர்த்துக்கொள்வதற்காக நார்வே அரசருடன் சேர்ந்து மும்முரமான ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தார். நார்மண்டியிலிருந்த வில்லியம் என்பவர் இங்கிலாந்தின்மீது படையெடுப்பதற்குரிய முஸ்தீபுகளைச் செய்துகொண்டிருந் தார். ஆகவே, ஒரு சிறிய பையனை அரசராக்குவதற்கு அது ஏற்ற தருணமா யிருக்கவில்லை. அதுவன்றி, கன்பெஸர் எட் வரட் அரசர் மரணப் படுக்கையில் இருந்த காலத்தில், தமது

பிரதான மந்திரியான ஹாரால்டே தமக்குப் பின் பட்டத்திற்கு வரவேண்டுமென்று கூறினராதலால், வீட்டான் சபையார் உடனே அந்த விருப்பத்தை நிறைவேற்றி, அரசர் இறந்த அன்றைய தினமே ஹாரால்டை புதிய அரசராக வரித்தனர். மறுநாள் சவம் அடக்கம் செய்யப்பட, அதற்குப் பின்னர் ஹாரால்ட் வெஸ்ட் மின்ஸ்டரில் முடிசூட்டப் பெற்ருர். ஆனல் அரச பதவியை வகித்த சொற்ப காலத்தில், தமது நாட்டைப் பாதுகாப்பதற்காக அவர் பட்டபாடுகள் சொற்பமானவை யல்ல. அதற்காக அவர் தமது உயிரையே கொடுத்துவிட்டார்.

ஹாரால்டின் அரசியல் தந்திரம்

ஹாரால்ட் நிரம்பவும் திறமையும், பயிர்ச்சியும் வாய்ந்த போர்வீரராயினும், அடக்கமாகவும் விநயமாகவும் நடந்து கொண்டு,எதிராளிகளை சமாதானப்படுத்தும் சுபாவமுடையவராயிருந்தார். அப்படி இருந்தும், நாடு, தமக்கும், எட்வின் (Edwin),மார்க்கர் (Morkere) என்பர்களுக்குமாய் இரண்டு பட்டிருந்ததனல், தமது நிலைமை துர்ப்பலமா யிருந்ததென்பதை அவர் நன்ருய் உணர்ந்தார். இவ்விருவரும் இங்கிலாந்தின் வடக்குப் பாதியான மர்ஸியா, நார்த்தம்பிரியா என்னும் சமஸ்தானங்களுக்கு;முறையே, அதிபதிகளான ஏயராள்கள். ஹாரால்ட் அரச வம்சத்தின ரன்ருதலால், அவர் அரசரானதுபற்றி, இவர்கள் பொருமை கொண்டனர். அதுவன்றி ஹாரால்டுக்கு அரசுரிமை கிடைத்தது நியாயமானதா அல்லவா என்னும் விஷயமாகப் பலருக்கு ஏற்பட்ட சம்சயத்தினலும், புதிய அரசர் தமது நிலைமை பலவீனமா யிருந்ததென்று கருதினர். அப்போது கன்டர்புரியின் (Canterbury) அரச்பீஷப்பாக ஸ்டீகண்ட் (Stigand=ஸ்ரீகண்டர்?)

என்பவர் நியமிக்கப்பட்டிருந்த முறைமை ஒழுங்கீனமா யிருந்ததனால் ஏற்பட்ட இக்கட்டான நிலைமையினாலும், புதிய அரசர் மனத் தளர்வடைந் திருந்தார். ஆகவே, அவர் அரசராக்கப்பட்டவுடன் தமது நிலைமையை பலப்படுத்திக் கொள்ள முயன்று வடநாட்டு நார்த்தம்பிரியன்ஸ் தம்மை அரசராய் ஏற்றுக்கொண்டார்களா என்பதை நிச்சயப்படுத் திக் கொள்வதையே முதல் காரியமாகக் கருதி, யார்க் (York) நகரத்திற்குச் சென்றார். எட்வினையும், மார்க்கரை யும் சமாதானப் படுத்திக்கொள்ளும் பொருட்டு, அரசர், அவர்களுடைய சகோதரியும் வடிவழகியுமான ஏயாள் தகையீத் (Ealdgyth), அல்லது, ஏயடீத் (Eadith) என்பவளை மணந்துகொண்டார். ஆனால், இவ்விரண்டு சமஸ்தானாதிபதிகளும் இங்கிலாந்தின் வடபாகத்தை சுயா தீனமுடையதாகச் செய்துகொள்ள வேண்டுமென்ற தீர் மானத்துடனேயே இருந்தனராதலால், அரசர் விவாகம் செய்துகொண்டது பயனற்றதாக முடிந்தது. அரசர் அவ் வாறு சமாதான வழியைப் பின்பற்றாமல் கடுமையான நட வடிக்கைகளை அநுஷ்டித்து, எட்வினையும், மார்க்கரையும் அடக்கி யிருந்தால், அன்னிய நாட்டினரது படையெழுச்சி ஏற்பட்ட காலத்தில், இங்கிலாந்து முழுவதையும் ஒன்று படுத்தி, அவர்களை முறியடித்திருக்கலாம். அவர் நயமாக நடந்துகொண்டது அவருடைய கருத்திற்கு நேர் விரோத மான பலனை யளித்து, நாட்டை இரண்டுபடுத்தி துர்ப்பல மானதாக்கிவிட்டது.

ஹாால்டின்மீது வில்லியம் சுமத்திய பழி

ஏத்திலிங் ஏயட்காருக்குப் பட்டம் கிடைத்திருந்தால், வில்லியம் ஹாால்டின்மீது புகார் சொல்ல இடமேற்பட்டி

மும், அதிதமான தேகபலமும், அசுர நடத்தையும், கொடூரமான கோபமும், பழிவாங்குவதில் பச்சாதாபமற்ற மூர்க்கத் தன்மையும் வாய்ந்தவரா யிருந்தமையால், அவருடைய சுய பராக்கிரமமும், பரம்பரை குணாதிசயங்களும் அவர் உறுதியான அரசியல் நடத்துவதற்கு அநுகூலமா யிருந்தன. "ஆகாயப் பரப்பின்கீழுள்ள எந்த வீராதி வீரனுக்கும் வில்லியம் அஞ்சியவரன்று. அவருடைய வில்லை வளைக்க எவராலும் இயலாது" என்று அக்காலத்தினர் எழுதி யிருக்கின்றனர். 1047-ம் வருஷத்தில் அவருடைய சமஸ்தானத்தின் மேற்குபாகம் முழுதிலும் கலகம் ஏற்பட்டதானலும், அவர், பிரான்ஸ் அரசருடைய உதவியைக் கொண்டு, கலகக்காரர்களை அடக்கிவிட்டார். அவருடைய அதிகாரம் படிப்படியாய் அதிகரித்துக்கொண்டு போயிற்று. 1051-வது வருஷத்தில் அவர் இங்கிலாந்துக்கு ஒருமுறை வந்திருந்தார். அப்போது கன்பெஸர் எட்வரட் தமது நார்மன் நண்பர்களை உச்ச ஸ்தானத்தில் வைத்திருந்தார். அரசருக்கு சந்ததியில்லையாகையாலும், தாம் அவருக்கு ஒருவிதத்தில் உறவினராதலாலும், பிற்காலத்தில் தமக்குக் கிடைக்க இருந்த அந்த நாட்டின் நிலைமை எப்படி இருந்ததென்று அச்சமயம் பார்த்துவிட்டுப் போகலாமென்ற கருத்துடனேயே அவர் இங்கிலாந்திற்கு வந்திருந்தார். அப்போது கன்பெஸர் எட்வரடும், தமக்குப் பிறகு அவரே அரசராகலாமென்று ஏதோ ஒருவிதமாக வாக்களித்தாரென்பதும் தெரிகிறது. இங்கிலாந்திருந்து அவர் திரும்பி தம் நாட்டிற்குப் போன பிறகு, பலவகைகளிலும் அவருடைய அதிகாரம் அபிவிருத்தி யடைந்தது. அவர் ஃப்ளாண்டர்ஸ் (Flanders) நாட்டின் கவுண்டான பால்டவன் (Baldwin) என்பவருடைய புதல்வியான மாத்தில்தா (Matilda) என்பவளை

மணந்ததால், அவருக்கு ஒரு பெரிய பக்கபலம் கிடைத்தது. அவருடைய கொடிய பகைவரான அஞ்சோ (Anjou) நாட்டின் ஜீயாவரை (Geoffrey) என்பவரை அடக்கித் தமக்குக் கீழ்ப்படுத்தினர். அவர் தமது பியூடல் தலைவரான பிரான்ஸ் அரசருடைய சேனைகளையே ஒரு சந்தர்ப்பத்தில் முறியடித்து, அவர் தம்மிடம் சமாதானத்திற்கு மன்றாடும்படி செய்தார். 1063-ல், அவர் மெயின் (Maine) என்னும் நாட்டைத் தமதாக்கிக் கொண்டார். அதற்கு சமீப காலத்தில், பிரிட்டானி (Brittany) என்னும் நாட்டில் போர் நடத்தி, அதைத் தமக்கு வெற்றிகரமாகவே முடித்துக் கொண்டார். இத்தனை வெற்றிகள் ஒவ்வொன்றிலும், அவருக்குப் புதிய புதிய பிராந்தியங்கள் வந்து சேர்ந்து, வெற்றிகொண்ட வில்லியம் என்ற புகழ்ச்சிக்கு அவரை அருகமாக்கின. அந்த நிலைமையில் கன்பெஸர் எட்வர்ட் இறந்துபோகவே, பிரான்ஸ் தேசத்தில் அவர் கொண்டிருந்த நாட்டத்தை விட்டு, இங்கிலாந்தின் பட்டத்தைப் பெறுவதில் முனையலானார். அவர் தம்மை அரசராக்க வேண்டுமென்று மரியாதைக் கிரமப்படி முதன் முதலில் ஒரு விக்ஞானம் அனுப்பிக்கொண்டார்; அதன் பிறகு தமது உரிமைகளைக் காட்டி ஓர் அறிக்கை வெளியிட்டார்; முடிவாகப் படை யெழுச்சிக்கு முஸ்தீப்புகள் செய்யலானார். (1) தமது உறவு முறைமை, (2) கன்பெஸர் எட்வரடும், ஹாரால்டும் செய்த வாக்கு தத்தங்கள் ஆகிய உரிமைகளுக்குத் துணையாக மத சம்பந்தமான காரணமொன்றும் சேர்ந்துகொண்டது. 1032-ல் காடவன் முதலியோர் திரும்பி இங்கிலாந்திற்கு வந்த பிறகு, எல்லா நார்மன்களும் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட காலத்தில், கண்டர்புரி அர்ச்பீஷப்பான ராபர்த் (Robert of Jumieges) என்பவரும்

ஹவுஸ்-கேரள்ஸ் (House-Carls) என்னப்பட்ட நிரந்தரப் படை, தகன்களும், அவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்களும் அடங்கிய சமஸ்தானாதிபதிகளின் படை, இன்னும் சுயேச்சைக் குடிமக்கள் அனுப்பும் விருது (Fryd)ப் படை ஆகிய மூன்று வகைச் சேனைகள் இருந்தன. வெயில்கால ஆரம்பத்தில் ஹரால்ட் அவைகளை இங்கிலாந்தின் தெற்குக்கரையில் ஒன்றுசேர்த்து, அவர்களைப் பிரித்து முக்கியமான இடங்களில் காவலாக நிறுத்தினர். ஆனால், அது காலத்திற்கு முற்பட்டுப் போயிற்று. வில்லியம் தமது கப்பல் படையைத் தயாரித்து ஆயத்தப்படுத்த ஆகஸ்ட் மாதம் வரையில் பிடித்தது. விருதுப்படை எப்போதும் துர்ப்பலமானது. அதைச் சேர்ந்தவர்கள் காத்துக் காத்து அலுத்துப் போயினர். அது அறுவடை காலமானதால், அவரவர் தம் தம் ஊரில் இருக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. ஆகவே, சேனைகள் கலைய வாரம்பித்தன. ஹரால்ட் அரசர் தமது விருப்பத்திற்கு மாறாக தகன்களையும், அவர்களைச் சேர்ந்தவர்களையும் அனுப்பிவிட வேண்டியதாயிற்று. ஹவுஸ்-கேரள் படை மாத்திரம் மிஞ்சி நின்றது. கப்பல் படையும் லண்டனுக்கு வந்து சேர்ந்து விட்டது.

தாஸ்டீக், ஹரத்ராதா ஆகியோரது படையெடுப்பு

இங்கிலாந்து நார்மன்களுடைய வசப்பட்டது, பின்னவர்களுடைய பராக்கிரமத்தினால் மாத்திரமன்று. அதே காலத்தில் இங்கிலாந்தின் வட பாகத்தில் ஏற்பட்ட இன்னொரு படையெழுச்சி வில்லியத்திற்கு அநுகூலமாய் அரைப் பாகத்திற்குமேல் வேலை செய்துவிட்டது. தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டிருந்த தாஸ்டீக் என்பவர் தமது சமஸ்

தானத்தையும், ஏயராள் பதவியையும் மறுபடி படைய வேண்டுமென்று துடிதுடித்து, தமக்கு உதவிசெய்யும்படி ஐரோப்பாக் கண்டத்திலிருந்த ஒவ்வோர் அரசரிடத்திலும் போய்த் தண்டினர்; வில்லியத்தினிடமும் போனர்; காடவனுடைய ஒரு மகனை விலக்கி, இன்னொரு மகனை அவனுக்கு பதிலாக ஏற்படுத்துவது அவருடைய உத்தேசமல்லவாதலால், அவர் உதவி செய்ய மறுத்து விட்டார். ஆகவே, தாஸ்டீக் எப்படியோ சொற்ப கப்பல்களை சேர்த்துக் கொண்டு, இங்கிலாந்தின் சில துறைமுகங்களைக் கொள்ளையடித்துவிட்டு, ஸ்காட்லண்டிற்குப் போக, அங்கு நார்வே தேசத்தின் அரசரான ஹாரால்ட் ஹாரத்ராதா என்பவர் வந்து சந்தித்தார். அவர் கான்யூட்டைப் போல், இங்கிலாந்திற்கு அரசராக வேண்டுமென்று கருதியிருந்தாராதலால், தமக்குத் துணையாக தாஸ்டீகையும் சேர்த்துக் கொண்டார். அவர் நோர்ஸ் கப்பற் கொள்ளைக்காரர்களுடைய சந்ததியைச் சேர்ந்தவர். அவர் கான்ஸ்டான்டிநோபிலில் (Constantinople) கிழக்குச் சக்கரவர்த்திகளுடைய நோர்ஸ் படையில் சேர்ந்திருந்து, ஜெருசலேம், ஈகிப்த் முதலிய இடங்களுக்கெல்லாம் போயிருந்தவர்; ஒரு முதலையைக் கொன்று அதனால் கியாதி பெற்றவர். அவர் எப்படியோ முயன்று நார்வேயின் அரசர் ஆகிவிட்டார். அவர் வடக்கு ஐரோப்பாவில் தம்மைப் போன்ற பலசாலியும், உயரத்தில் தமக்கு சமதையாகக் கூடியவர்களும் வேறு எவருமில்லையென்று பெயர் பெற்றிருந்த பராக்கிரமசாலியான போர்வீரர். வில்லியம் ஐரோப்பாவின் இதர பாகங்களிலிருந்த வீரர்களை எப்படி ஒன்று சேர்த்திருந்தாரோ, அதுபோல, இந்த ஹாரத்ராதா ஸ்காண்டிநேவியாவின் ஆள்களையெல்லாம் ஒன்று சேர்த்திருந்தார். அவர் சுமார் முன்னூறு கப்பல்களில் தமது சேனைகளைத் திரட்

திற்குத் தெற்கில் லண்டனுக்குப் போகும் ரஸ்தா இருந்த தாகையால், வில்லியத்தினது சேனைகள் அப்புறம் போக இயலாத நிலைமை ஏற்பட்டது. அந்தக் குன்றிற்குப் பின்புறத்தில் ஒரு தோப்பு மிருந்ததாகையால் அவருடைய படைகள் பின்னடைந்தாலும், மறுபடி ஒன்றுசேர அத் தோப்பு அநுகூலமானதாயிருந்தது. ஹரால்ட் குன்றின் உச்சியில் வட்டமான பள்ளந் தோண்டச்செய்து மண்ணை அணைபோல் கட்டி, அதன்மேல் மரக்கட்டைகளைப் பொருத்தி அடைப்புத் தடைகள் செய்துகொண்டார். அவருடைய ஹவுஸ்-கேரள்ஸ் என்னப்படுவோர் ஒவ்வொருவரும் இரண்டு வீரர்களுக்கு ஒப்பானவராகக் கருதப்பட்டவர்கள். அவர்கள் நடுமத்தியில் நிறுத்தப்பட்டனர். அவர்கள் பெரும்பாலும் இரட்டைக் கவைக் கோடரிகளை வைத்திருந்தனர்; அதுவன்றி, அம்புகளைத் தடுப்பதற்கு நீண்ட கேடயங்களையும் வைத்திருந்தனர். அவர்களுக்கு இரண்டு பக்கங்களிலும் விருந்துப் படையாரும், தகன்களும் கோடரிகள், ஈட்டிகள், இருகவைக் கத்திகள், தடிகள், அறுவாள்கள் முதலியவற்றை வைத்திருந்தனர். பலர் போர்க்கவச மணிந்திருந்தனர். ஆனால் அரசர் முதல் எல்லோரும் காலாட்களாகவே தரையில் நின்றனர். அவ்வாறு இங்கிலாந்தின் சேனைகள் தெற்கு திக்கிற்கே வந்துவிட்டது வில்லியத்திற்கு நன்மையாகப் பட்டது. ஏனென்றால், தாம் தமது சேனைகளை நடத்திக்கொண்டு வடக்கில் நெடுந்தூரம் பிரயாணம் செய்யும் உபத்திரவமும் படும் விச்சயானைதைப்பற்றி அவர் மகிழ்ச்சியடைந்தவராய்த் தமது சேனைகளைத் தேள்ஹாம் (Telham) என்ற இடத்தில் நிறுத்தினர். அவருடைய படைகள் பெரும்பாலும் குதிரைப் படைகள்; அவற்றின்மேல் போர்க்கவச மணிந்த வீரர்கள் உட்கார்ந்து இலேசான ஈட்டிகளால் தாக்குவார்

கள்; அதுவன்றி வில்லியம் தமது வில் படையை மிகத் திறமையானதாகத் தேற்றி வைத்திருந்தார். ஆனால் இவர்கள் குன்றின்கீழே இருந்து மேல் நோக்கிப் போர் புரிய வேண்டி யிருந்ததாகையால், அது பிரதிகூலமானதா யிருந்தது. ஹாரால்டும், அவருக்கு இரண்டுபக்கங்களிலும் அவரது சகோதரர்களான கைரத்தும், லயபவயனும் தங்கள் அணி வகுப்பின் நடுவில் நின்றதுபோல, வில்லியமும், அவருக்கு இருபுறங்களிலும் அவருடைய ஒன்றுவிட்ட சகோதரர்களான ஆதாவும், ராபர்த்தும் நடுவில் நின்றனர். 1066-ம் வருஷம், அக்டோபர் மாதம், 14-ம் தேதி, காலை ஒன்பது மணிக்குப் போர் தொடங்கியது. நார்மன் அரசர் முதலில் தமது காலாட்களையும், வில்லாளிகளையும் அனுப்பி, எதிரிகளை அலுக்கவைக்க முயன்றார். இவர்கள் பிற்பகல் மூன்று மணி வரையில் முயன்று பார்த்தனராலும், இங்கிலீஷ் சேனைகளுக்குள் நுழைய இயலவில்லை. நார்மன் வீரர்கள் மனத் தளர்ச்சி யடையலாயினர். அப்போது வில்லியம் ஒரு தந்திரம் செய்தார். தாங்கள் தோற்று முதுகு காட்டி ஓடுவது போல நடிக்கும்படி அவர் தமது வீரர்களுக்கு உத்தரவிட, அவ்வித தந்திரங்கள் செய்வதில் கைதேர்ந்தவர்களான வீரர்கள் அவருடைய நோக்கம்போல் ஓடத்தொடங்கினர். தங்களுக்கு வெற்றி கிடைத்துவிட்டதாக நினைத்துகொண்ட இங்கிலாந்தின் சேனைகள் தங்கள் ஸ்தானத்தை விட்டுக் கீழே இறங்கி ஆற்று வெள்ளம்போல நார்மன்களைப் பின் தொடர்ந்து துரத்தவே, அதுவே சமயமென்று கண்ட வில்லியம், திரும்பிப் போர் புரியும்படி தமது வீரர்களுக்கு உத்தரவிட்டார். உடனே நார்மன் குதிரைப் படையாளரும், வில்லாளிகளும் திரும்பி, தம்மைத் துரத்தியவர்களை யெல்லாம் நாசப்படுத்திவிட்டு, ஹரால்

போகும் வழியை முதலில் பத்திரப்படுத்திக் கொண்டார். அதன் பிறகு அவர் கண்டர்புரியின் வழியாக ஸவுத்வரக் (Southwark) என்னும் இடத்திற்குப் போய், அதைக் கொளுத்தி நாசமாக்கினர்; அதற்கப்பால், லண்டன் பாலத்தைக் கடக்காமல், தேம்ஸ் நதிப் பக்கமாக மேலும் சென்று வாலிங்வோர்ட் (Wallingford) என்னுமிடத்தை யடைந்து, அங்கு ஆற்றைக் கடந்து, பர்க்ஹாம்ப்ஸ்டேட் (Berkhampstead) என்னும் இடத்தில் முகாம் செய்தார். அது, வாட்லிங் வீதி, எர்மைன் வீதி, இக்நீல்ட் வீதியாகிய என்னும் இன்னொரு ரோமன் வீதி ஆகிய முக்கியமான ரஸ்தாக்கள் வந்துசேரும் ஜீவாதாரமான இடம். அவர் அங்கே போயிருந்தது, லண்டனுக்கு வேறு எவரும் வராதபடி வழிமறித்துத் தடுப்பதுபோல முடிந்தது.

வில்லியம் அரசராய் ஏற்றுக்கொள்ளப்படுதல்

அதற்குள், வீட்டான் சபையார், எத்திலிங் எயட்காரை அரசராகத் தேர்ந்தெடுத்தனராஞலும், அவர் இளம் பிராயத்தினரா யிருந்ததன்றி, அவருக்கு சேனையும் இல்லை. அப்போது எட்வினும், மார்க்கரும் சேனைகளுடன் லண்டனுக்கு வந்தனராஞலும், யுத்தத்தை மறுபடி தொடங்கி, அபாயத்தில் அகப்பட்டுக்கொள்ள விரும்பாமல், தமது சேனைகளுடன் திரும்பிப் போய்விட்டனர். இங்கிலாந்தின் தெற்கிலும், வெஸ்ஸெக்ஸிலும் இருந்த வீரர்கள் எல்லோரும் ஹேஸ்டிங்ஸ் யுத்தத்தில் இறந்துபோய்விட்டனர். ஆகவே, வடக்கிலிருந்தும், மத்திய நாட்டிலிருந்தும், பலமான உதவி ஏற்பட்டாலொழிய, வில்லியத்தை எதிர்ப்பது பயனற்றதாகத் தோன்றியது. எனவே மேற்கு நாட்டு சீமான்கள், தாம் இனி எதிர்ப்பது பயனற்றதென்று நினைத்து, எயட்காரையும் தங்களோடுகூட அழைத்துக் கொண்டு, வில்லியத்தினிடம் சென்று அவரை அரசரா யேற்றுக் கொள்வதாகக் கூற, அவர் அதற்கு இசைந்தார்.

அத்தியாயம்—3

வெற்றிகொண்ட வில்லியம் I (1066—1087)

வில்லியம் முடி தரித்தல், அவரது நிலைமை

1066ம் வருஷம், டிஸம்பர் மீ, 25ம் தேதியாகிய கிறிஸ்துமஸ் தினத்தன்று வெஸ்ட் மின்ஸ்டரில், வெற்றி கொண்ட வில்லியம், யார்க் அரச்பிஷப் அல்திருடினல் (Aldred) முடி சூட்டப்பெற்றார். அவர் பெயருக்கு மாத்திரம் வீட்டான் சபையோரால் தேர்ந்தெடுக்கப்பட்டாரே யன்றி, உண்மையில், அவர் ஹேஸ்டிங்ஸ் போரில் பெற்ற வெற்றியினலேயே அரசரானார். எல்லா தஸ்தாவேஜுகளி லும், அவர் கன்பெஸர் எட்வர்டின் வார்சுதாரென்று குறிக் கப்பட்டதன்றி, ஹரால்டின் சொற்பகால அரசாட்சி அவரு டைய உயிரோடு மறைந்துபோய் விட்டது. அவருக்கு வெற்றியுரிமை,வார்சுரிமைஇரண்டும்இருந்தனவென்பதற்கு, அவர் முடி சூட்டப்பட்ட காலத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவம் குறிப்பிடத்தக்கது. மேற்கண்டபடி அவர் முடி சூடிய இடத் தின் வெளியில் அவருடைய நார்மன் போர்வீரர்கள் காவல் காத்து நின்றனர். உள்புறத்தில் இருந்த கூட்டத்தினர் செய்த சந்தோஷ ஆரவாரத்தைக் கேட்ட ஷை போர்வீரர் கள் உள்ளே ஏதோ கலகம் நடைபெறுவதாக நினைத்து பக்கத்திலிருந்த கட்டிடங்களில் நெருப்பை வைத்துக் கொளுத்திவிட்டனர். அந்த சுபதினம் பொருட்சேதத்

தினும் உயிர் நாசத்திலும் முடிந்தது. ஆயினும், வீட்டான்களால் அவர் வரிக்கப்பட்டு, பட்டத்திற்கு வந்ததனுல் அவருக்கு அபாரமான அநுகூலம் ஏற்பட்டது. ஒருவர் தேர்தலினுல் அரசராவதற்கும், வெற்றியினுல் மாத்திரம் அரசராவதற்கும் ஜீவாதாரமான ஒரு வேறுபாடிருக்கிறது. தேர்தலின் மூலம் அரசராகிறவருக்கு விரோதமாய் எவரேனும் ஏதாவதொரு காரியத்தைச் செய்தால், அது நாட்டின் சட்டப்படி இராஜத்துரோகக் குற்றமாகிறது; அந்தக் குற்றத்திற்குரிய தண்டனைக்கு அவர் பாத்திரராகிறுர். ஆனுல், வெற்றியினுல் அரசராகிறவருக்கு விரோதமான காரியத்தை ஒருவர் செய்தால், அது கிரமப்படி தங்கள் பூர்விக உரிமையைக் காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டு செய்யப்படும் யுத்தமாகிறதேயன்றி, நாட்டினது சட்டத்தின்படி குற்றமாகாது. இதைக் கருதியே வில்லியம் உடனே லண்டனுக்குட்போகாமல் தூர இருந்து, வீட்டான் சபையாரே தம்மை அரசராக நியமிக்கும்படி தந்திரமாக நடந்துகொண்டார். அவர் அரசராஞரேயன்றி நாட்டினது சட்டம், பழக்க வழக்கங்கள், அரசியலமைப்பு முதலியவற்றில் எவ்விதமான மாறுபாடும் ஏற்படவில்லை; தாம் நேருக்கு நேர் தமது குடிமக்களுக்கு ஒழுங்காக நீதி வழங்கவேண்டுமென்ற கருத்துடன் வில்லியம் இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக்கொள்ள முயற்சித்தார். ஆனுல், அவர் படிப்பாளியுமல்ல; அவருக்கு அப்போது வயதும் நாற்பதாகியிருந்ததாகையால், நாக்கு சரியாகப் புரளவில்லை. ஆகவே, அந்த முயற்சி பயன் படவில்லை.

நாட்டினது நிலைமை

அவர் அரசர் ஆகிவிட்டாராஞலும், அவருடைய வெற்றி பூர்த்தியாகவில்லை. ஹேஸ்டிங்ஸ் யுத்தத்தில்,

அவர் ஹரால்டின் நிரந்தரமான சேனைகளையும், இங்கிலாந் தின் தெற்கு திக்கிலும், தென்கிழக்கு திக்கிலுமுள்ள ஷயர்களது படைகளையும் நாசப் படுத்தினரேயன்றி, வடக்கிலும், மத்தியிலும் இருக்கும் நார்த்தம்பிரியா, மெர் ஸியா ஆகிய நாட்டினரோடும், தென்மேற்குப் பக்கத்தி லுள்ள நாட்டினரொடும் எதிர்த்துப் போர் புரியவேண்டிய வராயிருந்தார். அவர் அரசரானதற்கு சில வாரங்களில் எட்வனும், மார்க்கரும் வந்து வில்லியத்தை அரசராய் ஏற்றுக்கொண்டனர். ஆகவே, அரசர், அவர்கள் தங்க ளுடைய சமஸ்தானங்களை வைத்திருக்கும்படி அநுமதித்து விட்டுவிட்டார். ஆனால் ஹேஸ்டிங்ஸ் யுத்தத்தில் தமக்கு விரோதமாக வந்து போர் நடத்தியவர்கள், காட்வன் வம்சத் தார் ஆகியோரது நிலங்களையெல்லாம் அவர் பறிமுதல் செய்து, தம்மோடு வந்தவர்களுக்குப் பங்கு பிரித்துக் கொடுத்துவிட்டார். யுத்தத்தில் கலந்து கொள்ளாதவர்களை அவர் உபத்திரவிக்கவுமில்லை; அவர்கள் தங்களுடைய நிலங்களை வைத்திருக்கும்படி விட்டார். துரைத்தனம், மதஸ்தாபனம் ஆகியவற்றில் இருந்த உத்யோகஸ்தர்கள் எல்லோரும் அப்படியே வைத்துக் கொள்ளப்பட்டனர். ஹேஸ்டிங்ஸ் யுத்தத்திற்குப் பிறகு சுமார் மூன்றுமாதகாலம் வரையில், எவ்வித உபத்திரவமும் நேரவில்லையாதலால், நாடு அமைதி யடைந்துவிட்ட தென்று கருதி, அவர் ஏதோ அவசரமான காரியத்தின் பொருட்டு 1067ல் நார்மண்டிக்குத் திரும்பிச் சென்றார். அப்போது, தமது ஒன்றுவிட்ட சகோதரரும், பேயியக்ஷ பிஷப்புமான ஆதா என்பவரும், தம்முடைய முக்கிய நண்பரான வில்லியம் விட்ஸ் ஆஸ்பரன் (Fitz-Osbern) என்பவரும் தமக்குப் பிரதிநிதிகளாக இங்கி

லாந்தை நிர்வகிக்கும்படி செய்திருந்தார். ஷை இருவரில் பின்னவர் ஒரு பெரிய நார்மன் சீமான்.

ஆரம்பக் கலகங்கள்

ஆனால் அரசர் இல்லாத காலத்தில், நார்மன்கள் இங்கிலீஷ்காரரிடம் நிரம்பவும் துடுக்காக நடந்து, பல கொடுமைகளை இழைக்கத் தொடங்கினர். நார்மன்களுக்கு அரசர் வழங்கிய சொற்ப சன்மானம் திருப்தியையுண்டாக்க வில்லையாதலால், அரசப் பிரதிநிதிகளினது தூண்டுதலின் மேல் அவர்கள் இங்கிலீஷ்காரர்களுடைய நிலங்களை அபகரித்து அவற்றில் கோட்டைகளைக் கட்டத்தொடங்கி விட்டனர். அரசருடைய பிரதிநிதிகளும் இங்கிலீஷ்காரர் கள் விஷயத்தில் பயங்கரமான கொடுமைகளை இழைக்க ஆரம்பித்து விட்டனர். அவைகளை சகிக்கமாட்டாதவர் களாய் இங்கிலீஷ்காரர்கள் பல இடங்களில் கலகம் விளைக்க லாயினர். தேம்ஸ் நதிக்கு வடக்குப் பிரதேசங்களில் இருந்தவர்களும், முக்கியமாய் ஹேயர்பரட்ஷையர் (Herefordshire), கேண்ட் (Kent) முதலிய இடங்களில் இருந் தோரும் கலகம் விளைக்கத் தொடங்கினர். ஆனால், அரசர் ஊருக்குப் போனபோது, அவர் மிக தந்திரமான ஒரு காரி யம் செய்திருந்தார். அதாவது, எட்கார் எத்திலிங், எட்வன், மார்க்கர், வள்தேயப் (Waltheof) ஸ்டீகண்ட், கிளாஸ்டன் புரி (Glastonbury) அப்பாத் ஆகிய முக்கியஸ்தர்களையும் தம்மோடு கூடவே அழைத்துக்கொண்டு போய்விட்டா ராதலால், கலகக்காரர்கள் எல்லோரையும் ஒன்றுபடுத்தி நடத்தத் தக்க மனிதர் எவருமின்மையால், அப்போது ஏற்பட்ட சில்லரைக் கலகங்கள் உடனுக்குடன் தனித் தனியாய் அடக்கப்பட்டுப் போயின.

ஏக்ஷதர் (Exeter) கலகம், புதிய கோட்டைகள், வடக்கில் கலகம்

வில்லியம் நார்மண்டியிலிருந்து திரும்பிவந்த காலத்தில், நாடுமுழுதும் கலகம் ஏற்பட்டிருந்ததைக் கண்டு, தமது வெற்றி ஹேஸ்டிங்ஸ் என்னுமிடத்தில் ஆரம்பமானதேயன்றி பூர்த்தியாகவில்லை யென்பதை உணர்ந்து, ஒவ்வோரிடமாகச் சென்று கலகக்காரர்களைத் தனித் தனி யடக்கத் தொடங்கினர். அந்த வேலை நிறைவேற 1067 முதல் 1071 வது வருஷம் வரையில் சுமார் ஐந்து வருஷகாலம் பிடித்தது. முக்கியமாய் இங்கிலாந்தின் மேற்கு வடக்குப் பிராந்தியங்களே அவருக்கு அதிகமான பிரயாசையை உண்டாக்கின. தென் மேற்குப் பக்கத்திலுள்ள ஏக்ஷதர் என்ற இடத்தில் 1068-ல் ஒரு கலகம் ஏற்பட்டது. அவ்விடத்தில் ஹரால்டினது தாயும், அவருடைய பிள்ளைகளும் போய் ஒளிந்துகொண்டிருந்தனர். அந்த நகரத்தார் அரசருக்கு உட்படாமல் சுயாதீனமாயிருக்க விரும்பியதாக அரசருக்குச் செய்தி எட்டவே, அவர் அங்கே போய்ப் பதினெட்டு நாட்கள் தொடர்ச்சியாக முற்றுகை போட, ஹரால்டினது குடும்பத்தினர் தப்பி யோடிவிட்டனர். ஏக்ஷதர் அவருடைய வசமாயிற்று. அதே வருஷத்தில், எட்வன், மார்க்கர், எத்திலிங் எயட்கார் ஆகிய மூவரும் லண்டனிலிருந்து சொல்லாமல் புறப்பட்டு வடக்கே போய், ஒரு சேனையைத் திரட்டிக் கலகத்திற்கு ஆயத்தம் செய்தனர். வடக்கு நாட்டார் எயட்காரைத் தங்களுக்கு அரசராய் ஏற்படுத்திக் கொண்டனர். சுமார் இரண்டு வருஷ காலமாய் இங்கிலாந்தின்மேல் படையெடுக்க முயற்சி செய்துகொண்டிருந்தவரான டேனிஷ் அரசர்

சுவகன் ஏஸ்திரீத்சன் என்பவரையும் வடக்கு நாட்டார் தங்களுக்கு உதவி செய்யும்படி அழைக்க, அவர் அதை ஒப்புக்கொண்டிருந்தாராதலால், வடக்கத்திக் கலகம் மிக பிரமாதமானதாகத் தோன்றியது. ஆகவே வில்லியமே நேரில் புறப்பட்டு வடக்கில் பிரயாணமானர். ஆனால் அவர் போனபோது, ஒவ்வொரு பட்டணமாகத் தமது வசப்படுத்துவதும், அவ்வவ்விடத்தில் ஒவ்வொரு கோட்டை கட்டி, ஏராளமான படைகளையும், போஜன தளவாட சாமான்களையும் அங்கங்கு வைத்துவிட்டு மேலே சென்றார். கோட்டைகளைப் பிடிக்க இங்கிலீஷ் குடிமக்களிடம் சரியான வசதிகள் இல்லையாகையால், அவர்களால் நார்மன் படைகளை வெல்ல இயலவில்லை. ஆனால் நார்மன் படைகள், கலகம் விளைத்த இங்கிலீஷ்காரரை உடனுக்குடன் அடக்கிவிட்டு பந்தோபஸ்தாகக் கோட்டைகளில் இருந்தனர். வடக்கில் வில்லியம் வந்ததைக் காண ஏட்வனும், மார்க்கரும் மனத்தளர்வடைந்து, அவரிடம் சரணாகதி யடைய, அவர் அவர்களை மிக தயாளமாக நடத்தினர். ஆனல், ஏயட்கார் ஸ்காட்லண்டிற்கு ஓடிவிட்டார். அவருடைய சகோதரியினது கணவரான ஸ்காட்டிஷ் அரசர் அபாரமான செல்வாக்குடையவராதலால், அவர் வில்லியத்திற்கு விரோதமாகப் போர் புரிவாரென்று எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனல், டேனிஷ் அரசர் அதில் வந்து தலையிட்டதுபற்றி அவர் பொறுமை கொண்டிருந்தாராதலால், அவர் கலகக்காரர்களுக்கு எவ்வித உதவியும் புரியாமல் வாளா இருந்துவிட்டார். 1069-ம் வருஷத்தில் ஒரு பெரிய டேனிஷ் கப்பற் படை தோன்றி ஹம்பருக்குள் நுழைந்தது. சீவரட் (Siward) என்பவருடைய குமாரரும் ஹண்டிங்டன் (Huntingdon) ஏயராளுமான வள்தேயப் (Waltheof) என்பவர் வடக்கு நாட்டுக் கலகக்காரர்களில்

முதன்மையானவர். அவர் இங்கிலீஷ் படைகளுடன் வந்து சேர்ந்துகொண்டார். எல்லோருமாகக் கூடி, யார்க் என்னப்பட்ட இடத்தில் வில்லியம் கட்டியிருந்த மரக்கோட்டைகளைக் கொளுத்தி அங்கிருந்த படைகளை அழித்து நாசப் படுத்திவிட்டனர். அப்போது க்ளௌசேஸ்டர் ஷயரில் (Gloucester Shire) காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்த வில்லியத்திற்கு அந்தச் செய்தி எட்டியது. யார்க்கிலிருந்த சுமார் மூவாயிரம் நார்மன் போர்வீரர்கள் ஒருவர் கூட மிஞ்சாமல் எல்லோரும் கொல்லப்பட்டுப் போயினர் என்ற செய்தியைக் கேட்கவே, அவர் அபாரமான கோபங் கொண்டு, கொல்லப்பட்ட ஒவ்வொருவருக்கும் அறுபது அறுபது ஆள்கள் வீதம் தாம் கொன்று பழிக்குப்பழி வாங்கித் தீர்ப்பதாகக் கடவுள் பெயரால் பிரமாணிக்கம் செய்துவிட்டு, உடனே அவ்விடத்திலிருந்து புறப்பட்டு மூன்றாவது முறையாக யார்க்கிற்குப் போய்ச் சேர்ந்தார். சேர்ந்தவர் டேனிஷ்காரர்களுக்கு ஒரு பெரிய தொகையை லஞ்சம் கொடுத்து, அவர்கள் திரும்பித் தம் கப்பலுக்குப் போய்விடும்படி செய்துவிட்டு, ஹம்பர் நதிக்கும், டீஸ் (Tees) என்னும் நதிக்கும் இடையிலிருந்த மிக செழிப்பான பிரதேசத்தை சூரையாடத் தொடங்கி, கத்தியாலும், நெருப்பாலும் அதை அடியோடு நிர்மூல மாக்கிவிட்டார். அதைக் கண்ட வள்தேயப் என்பவர், தமது கை அதற்குமேல் ஓங்காதென்பதை உணர்ந்து, வில்லியத்திடம் போய்ச் சரணுகதி யடைந்தார். வில்லியம் மற்றவருக்குக் காட்டியதைவிட அவருக்கு அதிக தயாளம் காட்டி, அவருடைய சமஸ்தானத்தையும் அவருக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டார். மேலே குறித்த பிரதேசத்தில் வில்லியத்தினுல் ஜனங்கள் வீடுகள், கால் நடைகள், பயிர்கள், வேளாண்மை ஆயுதங்

கள் எல்லாம் அழிந்துபோகவே, வெறும் பொட்டல் வெளி தான் மிஞ்சியது. அந்த வருஷம் மாரிகாலத்தில் வடக்கு நாட்டில் வயல்களில் மாத்திரம், குளிரினாலும் பசியினாலும் இலக்ஷம் ஜனங்கள் இறந்துபோயினர். ஏராளமான ஜனங்கள் பிறருக்கு அடிமையாயினர். அதன்பிறகு ஒன்பது வருஷ காலம் நிலங்கள் சாகுபடி செய்யப்படாமலே கிடந்தன. அழிந்துபோன பட்டணங்களும், வயல்களும் சுமார் இருபத்தைந்து வருஷ காலத்திற்குப் பின்னர்கூட இருந்தன வாதலால், அவைகள் வில்லியத்தின் பித்துக் கொள்ளி மூர்க்கத்தை நினைப்பூட்டின. அவ்வாறு வடக்கு நாடு அழிபட்டுப்போனது, 1086-ல் தயாரிக்கப்பட்ட டேம்ஸ்டே புக் (Domesday Book) என்ற கணக்கினால் நன்றாகத் தெரிகிறது. அவ்வாறு வடக்கு நாட்டை நாசமாக்கியபின் வில்லியம் மேற்குப் பக்கத்திலிருந்த சீஷயர் (Cheshire) என்னும் இடத்திற்குப் போய், அதைப் பிடித்துக்கொண்டார். இங்கிலீஷ்காரர் தங்கள் சுயாதீனத்தோடிருந்த ஊர்களில் அதுவே கடைசியானது. அதை வில்லியம் பிடித்துக் கொள்ளவே, அதோடு இங்கிலீஷ்காரர்களுடைய முக்கியமான மனோராஜ்யம் அறுதியாய் ஒழிந்து போயிற்று. அப்போது எட்கார் ஸ்காட்லண்ட் அரசரான மால்கம் என்பவருடைய பாதுகாப்பில் இருந்தாராலும், மால்கம் அவருக்கு எவ்வித உதவியும் செய்யவில்லை. ஆனால், அவர் வீட் (Tweed) என்னும் ஆற்றைக் கடந்து அடிக்கடி இப்பால் வந்து, வடக்குக் கவுண்டிகளில், வில்லியம் தயாளத்தினாலோ, அல்லது, அசட்டையினாலோ விட்டிருந்த சொற்ப பாகத்தையும் கொள்ளை யடித்துக்கொண்டு போனதைத் தவிர வேறெதையும் செய்யவில்லை.

ஹேயர்வரட் (Hereward) கலகம்

வாஷ் (The Wash) என்ற ஆற்றையடுத்துள்ள நாட்டில் கடைசியாக ஒரு கலகம் நடந்தது. வடக்குப் பிரதேசங்களிலிருந்து துரத்திவிடப்பட்ட கலகக்காரர்கள் பலர் எல்லி (The Island of Ely) என்ற தீவில் போய் 1070-ம் வருஷத்தில் கூடத் தொடங்கினர். லிங்கன்ஷயர் (Lincolnshire) தகனை ஹேயர்வரட் என்பவர் அவர்களுக்குத் தலைவரானர். அவர் மிக ஆச்சரியகரமான செய்கைகளை நிறைவேற்றி வீராதிவீரர் என்று இங்கிலீஷ்காரர்களால் புகழ்ப்பெற்றவர். அதில் ஏட்வனும், மார்க்கரும், வள்தேயப்பும் சேர்ந்துகொண்டனர். எல்லி என்ற ஷை தீவு நான்கு பக்கங்களிலும் தண்ணீராலும், சேருலும், உளையாலும் சூழப்பட்டிருந்த இடம். அவ்விடத்தில் கூடியிருந்த கலகக்காரர்களும், தேசப்பிரஷ்டம் செய்யப் பெற்றவர்களும், மரத்தினல் ஒரு கோட்டை கட்டிக்கொண்டிருந்தனர். வில்லியம் சுமார் இரண்டு மயில் தூரத்திற்கு கற்களாலும், மரங்களாலும், தோலாலும் உளையின்மேல் பாதைபோட்டு, தமது சேனைகளுடன் எல்லிக்குப் போய், அங்கிருந்த கலகக்காரரை அடித்து நாசமாக்கினர். ஏட்வன் என்பவர் தம்முடைய ஆள் ஒருவனலேயே கொல்லப்பட்டு இறந்துபோனர். மார்க்கர் தமது ஆயுட்காலம் முழுதிற்கும் சிறையில் அடைக்கப்பட்டார் ; வள்தேயப் என்பவரிடம் அரசர் தயாளம் காட்டி அவரை மன்னித்து விட்டாராலும், அதன் பிறகும் அவர் இராஜத்துரோகமான காரியத்தில் சம்பந்தப் பட்டு, மரணை தண்டனையடைந்து கழுத்தறுபட்டு மாண்டுபோனர். ஹேயர்வர்ட் என்பவர் எல்லியிலிருந்து தப்பி ஓடிப்போய் விட்டாராலும், அதன்பிறகு அரசரிடம் சமாதானம் செய்துகொண்டாராதலால், அரசர் அவரை நிரம்பவும் அன்

பாக நடத்தினர். அதன்பிறகு ஹேயர்வரட் அரசரிடம் நன்றி விசுவாசத்தோடு நடந்து கொண்டாராதலால், அரசர் அவரை சேனையில் மேலான பதவிக்கு நியமித்திருந்தார். வில்லியம் தலைவர்களது விஷயத்தில் நிரம்பவும் அன்பும், சாந்தமும் வகித்தாராஞலும், மற்ற சாதாரணக் கலகக் காரரது விஷயத்தில் சிறிதும் தயாளமற்ற மூர்க்கராய் நடந்து கொண்டார். ஆனாலும், அவர் இங்கிலீஷ் கார ருக்குக் கற்பித்த படிப்பினை வீணுகப் போகவில்லை; அதோடு, இங்கிலீஷ்காரர்கள் சுயாதீனமென்ற மனோராஜ் யத்தை அடியோடு விட்டுவிட்டனர். 1068ம் வருஷத்தில் எத்திலிங் எட்கார் தமது சகோதரிகளான மார்க்கரத், கிறிஸ்டிஞ என்பவரோடு ஸ்காட்லண்டிற்கு போக, அந்த நாட்டு அரசரான மால்கம் கன்மார் என்பவர் அவர்களை ஆதரித்து வைத்திருந்து மார்க்கரத்தை மணந்து கொண் டார். 1070ல், மால்கம் டீஸுக்கும், டைனுக்கும் மத்தியப் பிரதேசத்தை அழிக்கத் தொடங்கவே, 1072ல் வில்லியம் நேரில் ஸ்காட்லண்டின்மீது படையெடுத்துச் செல்ல, அப்பர்நிதி (Abernethy) என்னும் இடத்தில் மால்கம் வில்லியத்தோடு சிநேகம் செய்து கொண்டு, எட்காரைத் தமது அரண்மனையிலிருந்து அனுப்பிவிட்டார். எட்கார் அதன்பிறகு வில்லியத்தின் அரண்மனையில் ஒரு சாதாரண சீமான் பதவிவகித்து அமைதியாயிருந்து வந்தார்.

வில்லியத்தின் பொதுவான உத்தேசங்கள்

நாம் மேலே விவரித்த கலகங்கள் தீர்ந்துபோன பின்னர், வில்லியம் முக்கியமான மூன்று விஷயங்களில் தமது கவனத்தைச் செலுத்தலானர். (1) நாட்டில் தமது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வது, (2) தம்மோடு

வந்த நார்மன்களுக்குத் தக்க பிரதிப்பிரயோசனம் செய்து வைப்பது, (3) நார்மன் சீமான்கள் அமிதமான அதிகாரம் பெற்று விடாமல் அடக்கி வைப்பது ஆகிய மூன்றும் அவருடைய முக்கியமான கருத்துகள்.

கோட்டைகளின் நிர்வாகம், பியூடாலிஸம் முதலியவை

முதலாவது உத்தேசத்தை நிறைவேற்றுவதற்கு அநுகூலமாய் அவர் நாடுகளின் முக்கியமான இடங்களில் எல்லாம், அதாவது, பெரிய பட்டணங்களிலும், இராஜ பாட்டைகள் சந்திக்கும் இடங்களிலும் கோட்டைகளைக் கட்டி, அவைகளில் ஏராளமான சேனைகளை வைத்தார். ஐரோப்பாக் கண்டத்தில் கோட்டைகள் இராஜத்துரோகி களுக்கும், கொள்ளைக்காரர்களுக்கும் புகலிமாயிருந்தது போல் இங்கிலாந்திலும் இராதபடி, வில்லியம், ஒவ்வொரு கோட்டையினது கவர்னர் முதல் போலீஸ் ஜெவான் வரையில் உள்ள சகலமானவர்களுடைய நியமனங்களையும் தாமே கவனித்து சேனைகளுக்கெல்லாம் நேரில் சம்பளம் வழங்கினர். வில்லியம் இவ்வாறு கோட்டைகள் கட்டியும், பல யுத்தங்கள் நடத்தியும் தம்மை இங்கிலாந்தில் நிலைக்க வைத்துக் கொண்டாராஞலும், அவர், தாம் கன்பேஸர் எட்வரடின் கிரமமான வார்சுதார் என்றே கூறிக் கொண்டார். அதுவன்றி, தமது நார்மன் சீமான்களால் தமக்குத் துன்பங்கள் நேராதிருப்பதற்கு, இங்கிலீஷ்கா ரர்கள், மதஸ்தாபனத்தார் ஆகியோருடைய உதவி தமக்கு இன்றியமையாதது என்பதை அவர் மிக சீக்கிரத்தில் உணர்ந்து கொண்டார். ஆகவே, அவர் அரசியல் நிர்வாக அமைப்பை அப்படியே வைத்துக்கொண்டு, காலத்திற்

கேற்ற சில மாறுபாடுகளை மாத்திரம் செய்து கொண்டார். ஸ்தல நியாயஸ்தலங்களுக்கும், அரசர், அவருடைய மந்திரி மார் ஆகியோருக்கும் நெருங்கிய சம்பந்தத்தை ஏற் படுத்தும் விஷயத்தில் அவர் பல சட்ட மாறுபாடுகளை ஏற்படுத்தினர். நில விஷயத்தில் அவர் பியூடாலிஸம் என்னும் ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டு வந்தார். அதன்படி நாட்டின் குடிமக்கள் எல்லோரும் தம் தம் நிலத்தை அரசரிடத்திலிருந்து பெற்றுக் கொண்டது போலக் கருதப்பட்டதன்றி, போர் நடக்குமானல், அரச ருக்கு உதவி செய்வதாய் ஒவ்வொருவரும் பிரமாணிக்கம் செய்து கொடுக்கவேண்டியவராயினர். போரில் அவருக்கு விரோதமாக நடந்து கொண்டவர்களுடைய நிலங்களை அரசர் பறிமுதல் செய்து, நார்மன்களுக்குக் கொடுத்து விட்டார். பழைய வாக்லண்ட் (Folkland) முழுவதையும், சண்டையில் இறந்துபோனவர்களுடைய நிலங்களையும் அரசர் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டார். அவருக்கு விரோதமாக நடந்து கொள்ளாதவர்கள் அரசருக்கு இராஜ விசுவாசப் பிரமாணம் செய்து கொடுத்துத் தமது நிலங் களைப் பெற்றுக்கொண்டனர். மற்ற நிலம் முழுதும் "ராஜா தரையாக" (Terra regis) அதாவது, அரசருடைய பிரத்தியேக சொத்தாகக் கருதப்பட்டது. நார்மன்க ளுக்கு பியூடல் ஏற்பாட்டின்படியே ஷை நிலங்கள் கொடுக் கப்பட்டன. அவ்வாறு நிலத்தைப் பெற்றுக்கொண்டவர், தமது போர்க்கவசம், ஆயுதங்கள் ஆகியவற்றை நீக்கிவைத்து விட்டு, அரசருக்கு முன்னர் மண்டியிட்டு, தமது கைகளைச் சேர்த்து, அரசருடைய கைகளில் வைத்து, "உடல், பொருள், ஆவி ஆகிய எல்லா அம்சங்களிலும் நான் உங்கள் மனிதனே. நான் உயிரோடிருந்து, இறக்கும் வரையில்

நன்றியறிதலும், நாயக விசுவாசமுமுடையவனு யிருப்பேன். அந்த விஷயத்தில் கடவுள் எனக்குத் துணைபுரிவாராக," என்று கூறுவார். உடனே அரசர் அவரை முத்தமிடுவார். அவ்வாறு முத்தமிடுவது, அந்த நிலம் அவருக்கும், அவருடைய சந்ததியாயிருக்கும் எக்காலத்திற்கும் சொந்தமாகி விட்டதென்பதைக் காட்டும் குறிப்பு. அவ்வாறு கொடுக்கப்பட்ட நிலம் பயப்பு (Fief = பயத்தல் = கொடுத்தல்?) என்று குறிக்கப்பட்டது. இவ்வாறு இங்கிலாந்து முழுதும் ஒரே இராணுவ இலாகாவாகப் மாறிப் போயிற்று. அறுபதாயிரம் நைட் (Knight) வீரர்களும், ஏராளமான சாதாரணச் சேனையாள்களும் நேரில் அரசரிடத்திலிருந்தே நிலத்தைப் பெற்றமையால், அவர்கள் எல்லோரும் அவர்களுடைய ஆயுட்காலத்தில் ஒவ்வொரு நாளிலும் அரசர் அழைத்தால் வரவும், அவருடைய கட்டளையை நிறைவேற்றவும் கடமைப் பட்டவர்களாக மாறிப்போயினர். ஆனால், வில்லியம், ஹண்ட்ரட், ஷயர் ஆகிய நீதிஸ்தலங்களையும், கன்பெஸர் எட்வரட் காலத்தில் அநுஷ்டானத்தில் இருந்த பழைய சட்டங்களையும், நிர்வாகஸ்தாபனங்களையும் மாற்றாமல் வைத்துக் கொண்டார். அவர் ஏற்படுத்திய பியூடல் நிர்வாகத்தில் நாம் இன்னம் சில முக்கியமான தகவல்களைத் தெரிந்துகொள்வ தவசியம். போர்க்கவசம் முதலிய பளுவான ஆயுதங்களோடு குதிரை மீதேறிப் போர் நடத்தும் நைட் (Knight) என்னப்படும் வீரர்கள் ஏராளமாய் இருந்தாலன்றி தாம் தமது புதிய நாட்டைப் பாதுகாப்பது கூடாத காரியமென் றுணர்ந்து கொண்ட வில்லியம் ஒவ்வொரு வீரருக்கும் போஷணை, ஆயுதம் முதலியவற்றிற்குத் தேவையான நில அளவை மூலாதார அளவாக வைத்துக்கொண்டு, நாடு முழுதையும் அதே

அளவில் துண்டு துண்டாகப் பிரித்துவிட்டார். அதற்கு நைட்ஸ் பீ (Knight's fee) என்பது பெயர். மிராசு தார்கள் நிலத்தின் வரியைப் பணமாகக் கொடுக்காமல், அரசருக்குத் தேவையானபோது நைட் என்னும் வீரர்களை உதவினர். அடி நைட்களின் போஜனச் செலவு, ஆயுதத் தின் கிரயங்கள் ஆகியவற்றிற்கு நிலத்தின் வரி உபயோகிக் கப்பட்டதாகக் கருதப்பட்டது. அரசரிடம் நேராக நிலங்களைப் பெற்றவர்கள் பாரான்ஸ் (Barons) என்று குறிக்கப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவரும் அரச ருடைய தலைமைக் குடியானவராகக் கருதப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவரும் இத்தனை நைட் வீரர்களை அனுப்ப வேண்டுமென்ற நியதி ஏற்பட்டிருந்தது. ஒவ் வொரு பாரானும் தமது நிலத்தைப் பிரித்து மொத்தக் குத்தகைக்காரர் பலரிடம் விட்டனர். அவர்கள் கீழ்க் குடியானவராகக் கருதப்பட்டனர். கீழ்க் குடியானவர்கள் எல்லோரும் தங்கள் தலைமைக் குடியானவர்களுக்காகப் போர் செய்யக் கடமைப்பட்டிருந்தனர். கீழ்க் குடியான வர்கள் தங்கள் நிலங்களைத் தங்களுக்குக் கீழ்ப்பட்ட உள் குடியானவர்கள் பலரிடம் விட்டு, அவர்களுடைய சேவை யைப் பெற்றனர். தலைமைக் குடியானவர்கள் பெரும்பா லும் நார்மன்களாகவே இருந்தனர். அதற்கு முன் சமஸ் தானதிபதிகளாயிருந்த இங்கிலீஷ்காரர்கள் பெரும்பாலோ ரும் நார்மன் பாரான்களுக்குக் கீழ்ப்பட்ட பதவிகளை யடைந்து விட்டனர். இங்கிலீஷ் பியூடல் ஏற்பாட்டினால், சட்டப்படி ஐந்து நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டன :—

(1) நிலம் வார்சுக் கிரமப்படி பரம்பரையா யனுப விக்கப்படலாம். ஆனால், வார்சுதாரன் போர் புரியும் திறமை யுடையவனா யிருக்க வேண்டும்; அல்லது, அவர் ஸ்திரீயா

யிருந்தால், அவ்வித யோக்கியதையுடைய புருஷரை அந்த ஸ்திரீ மணக்கவேண்டும்.

(2) நிலம் ஒருவரிடத்திலிருந்து இன்னொருவருக்கு மாறுமானால், இத்தனை ஆயுதங்கள், போர்க்கவசம் ஆகியவற்றைக் கொடுக்கவேண்டு மென்னும் கடமை. இது ரிலீப்ஸ் (Reliefs) என்று குறிக்கப்பட்டது.

(3) வார்சுதார் மைனரா யிருந்தால், அவருக்கு 21 வயது நிறையும் வரையில், நிலத்தை அரசர் திரும்ப அடைந்து, அதன் வருமானத்தை அனுபவிப்பது; வார்சுதாரைத் தமக்கு விருப்பமானவருக்கு மணம் புரிவிப்பது.

(4) தமக்கு மேற்பட்ட தலைவர் (i) கைதியானால், அவரை மீட்கப் பணம் கொடுப்பது, (ii) தமது மூத்த பெண்ணுக்கு விவாகம் நடத்தினால், அதற்குப் பணம் கொடுப்பது, (iii) தமது மூத்த பிள்ளையை 'நைட்' ஆக்கும்போது பணம் கொடுப்பது ஆகியவை எயிட்ஸ் (Aids) என்னப்படுகின்றன.

(5) குடியானவர் (i) வார்சில்லாமல் இறந்தாலும், (ii) பெரிய குற்றங்களைச் செய்தாலும், நிலம் பறிமுதல் செய்யப்படுவது.

வில்லியத்தின் தந்திர ஏற்பாடுகள்

வில்லியம் தமது ஏக சக்ராதிபத்யத்தை நிலைநிறுத்த இரண்டு முக்கியமான தந்திர யுக்திகளைக் கடைப்பிடித்தார். ஐரோப்பாக் கண்டத்தில் பாரான்கள் மாத்திரம் தலைவருக்குப் பிரமாணிக்கம் செய்து கொடுத்தனர். பாரான்களுக்குக் கீழ்ப்பட்ட குடியானவர்கள் தமக்கு அடுத்தபடியான மேல் எஜமானருக்கே பிரமாணிக்கம்செய்து

கொடுத்தனரன்றி, நாட்டின் தலைவருக்குச் செய்து கொடுக்கவில்லை. ஆகையால், பாரான்களுக்குக் கீழே இருந்த குடியானவர்கள் பாரான்களோடு சேர்ந்து அரசருக்கெதிரிடையாகப்போர் நடத்த முயன்றால், அக்குடியானவர்கள் சட்டப்படி இராஜத்ரோகக் குற்றம் செய்தவர்கள் ஆகமாட்டார்கள். ஆகவே, அந்த ஏற்பாட்டில் நாட்டின் தலைவரான அரசரது நிலைமை சில சமயங்களில் மிக அபாயகரமானதாகிவிடுவதுண்டு. ஆகையால், அத்தகைய விபரீத நிலைமை இங்கிலாந்தில் நேராமல் இருக்கும்பொருட்டு, வில்லியம் இங்கிலாந்தில் ஏற்படுத்திய பியூடாலிஸத்தில் ஒரு முக்கியமான மாறுதலை உண்டாக்கினார். பாரான்களான தலைமைக் குடியானவர்கள் மாத்திரமன்றி, அவர்களுக்குக் கீழ்ப்பட்ட ஒவ்வொரு குடியானவரும் தமக்கும் நேரில் பிரமாணிக்கம் செய்துகொடுக்க வேண்டுமென்ற புதிய நிர்ப்பந்தத்தை அவர் புகுத்தினார். இதுவன்றி, எந்தப் பாரானுக்கும் ஒரே இடத்தில் சேர்ந்தாற்போல் ஏராளமாக நிலத்தைக் கொடுப்பதைவிட, திக்கானுக் கொன்றாகப் பல இடங்களில் கொடுத்தால், எல்லா இடத்துக் குடியானவர்களையும் துரிதத்தில் ஒன்று சேர்ப்பது பிரயாசையாகி விடுமென்றும், பாரான்களுடைய செல்வாக்கு சில சிலவாய்ப் பிரிந்திருக்குமென்றும் கருதி அதையும் அநுஷ்டித்தார். உதாரணமாக, அரசருடைய ஒன்றுவிட்ட சகோதரரான ராபர்த் என்பவருக்கு 793 மேனர்கள் (Manors) இருந்தன. ஆனால், அவைகள் வெவ்வேறு இடங்களிலிருந்த இருபது கவுண்டிகளில் இருந்தன. சாக்கிஸான் காலத்தில் நிலங்களின் சகல உரிமைகளும் இங்கிலீஷ் குடிமக்களுக்கே சொந்தமாயிருந்தன. அவர்கள் தங்கள் ஏயாள் தர்மன்களைத் தாங்களே தேர்ந்தெடுத்தனர். வீட்டான்கள் சேர்ந்து அரசரை நியமித்தனர். அந்த ஏற்பாட்

டின்படி நாட்டின் உரிமையும் அதிகாரமும் கீழே இருந்து மேலுக்குப் போயின. வில்லியத்தினது ஏற்பாடு இதற்கு நேர் தலைகீழா யிருந்தது. சகல உரிமைகளும், அதிகாரங் களும் அரசருக்கே சொந்தமானவை. குடிமக்கள் அரச ரிடத்திலிருந்து உரிமைகளைப் பெற்று அவருடைய பண்ணை யாட்கள்போலிருந்தனர். அவர் தம்முடைய சொந்த ஷீரப்பு களைக் கொண்டே கவுண்டிகளை நிர்வகித்தார். அவர்களை நிய மிக்கவும், நீக்கவும் பூர்த்தியான • அதிகாரம் அரசருக்கே உரியதாயிருந்தது. எல்லா நீதிஸ்தலங்களிலிருந்தும் முடி வான அப்பீல் அரசருடைய நீதிஸ்தலத்திற்கே வரவேண்டு மென்றும் அரசர் கட்டளை இட்டார்; கான்யூட் அரசர் ஏற் படுத்திய நான்கு ஏயராள் சமஸ்தானங்களையும் நீக்கிவிட்டு, முக்கியமான ராஜீய தந்திர காரணத்தைக் கருதி, வேறிடங் களில் நான்கு ஏயராள்களது ஸ்தானங்களை ஏற்படுத்ினர்; வேல்ஸ் தேசத்தார், ஸ்காட்லண்ட் தேசத்தார், பிரான்ஸ் தேசத்தார் ஆகியோர் படையெடுத்து வந்தால், முன்னால் இருப்பவர் அவர்களை எதிர்த்துப் போர்புரியத் தேவையான செல்வாக்கும், சுயேச்சையான அதிகாரமும் உடையவரா யிருக்க வேண்டுமென்ற கருத்தோடு அவ்விடங்களில் நான்கு ஏயராள் சமஸ்தானங்களைப் புதியனவாக உற்பத்தி செய் தார்; வேல்ஸிற்காக, சேஸ்தர் (Chester தர் = தரை ?) ஷ்ரூவ்ஸ்புரி (Shrewsbury) என்ற இடங்களிலும், ஸ்காட் லண்டிற்காக துரஹம் (Durham, துரை + அகம் ?) என்ற இடத்திலும், பிரான்ஸிற்காக கேண்ட் (Kent) என்ற இடத் திலும் நான்கு புதிய ஏயராள் பதவிகளை ஏற்படுத்தினர். இவை பலத்தையன் ஏயராள் (இ)டம்ஸ் (Palatine Earl-doms) என்று குறிக்கப்பட்டன. இவர்களுக்கு சற்றேறக் குறைய அரசருடைய அதிகாரங்கள் இருந்தன. இவர்கள்

தங்களுடைய சொந்த ஷிரப்களை நியமித்துக் கொள்ளலாம். ஆனால் இந்த ஏற்பாட்டின்படி நியமிக்கப்படுவோர் பரம்பரையாயிருந்து வந்தால், அவர்களுக்குப் படிப்படியாய் அதிகாரமும் செல்வாக்கும் அதிகரித்துவிடு மென்று கருதி வில்லியம் அவைகளுக்கு பிஷப்புகளை அதிபதிகளாய் நியமித்தார். ஏனென்றால், அவர்கள் விவாகம் செய்துகொள்ளாததுபற்றி, சொந்தக் குடும்பம் ஏற்படாதாகையால், வில்லியம் அவர்களை நியமித்தார். கேண்ட் என்ற இடத்திற்கு தமது ஒன்றுவிட்ட சகோதரரான ஆதாவை நியமித்தார். ஆனால், அந்த ஸ்தானம் சீக்கிரத்தில் நீக்கப்பட்டுவிட்டது. இவ்வாறு நியமிக்கப்பட்ட ஏயராள்கள் தங்கள் எல்லைக்குள் சுயேச்சையாக வரி விதிக்கலாம், சட்டங்களை உண்டாக்கலாம்; ஸ்தல சேனைகளை அடக்கியாளலாம், நீதி ஸ்தலங்கள் ஏற்படுத்தித் தீர்ப்புகள் சொல்லலாம். அவர்கள் அரசருக்குச் செய்துகொடுத்த இராஜவிசுவாசப் பிரமாணத்தைத் தவிர, அரசரையும் அவர்களையும் கட்டுப்படுத்திய அம்சங்கள் வேறு எதுவுமில்லை. அவர்கள் அநேகமாய் சுயேச்சாதிபதிகளாகவே இருந்தனர்.

வில்லியமும், மதஸ்தாபன இலாகாவும்

வில்லியம் இங்கிலாந்தைக் கைப்பற்றிய காலத்தில் மத ஸ்தாபனங்களினது தலைவர்கள் துரைத்தனம், நீதி நிர்வாகம் முதலியவற்றில் அதிகமாய் ஈடுபட்டிருந்தார்களென்றும், மத ஊக்கம் மந்தித்திருந்ததென்றும் நாம் முன்னரே தெரிந்துகொண்டோம். அதுவுமன்றி, இங்கிலாந்தினது மதஸ்தாபன இலாகா ஐரோப்பாக் கண்டத்தில் சம்பந்தப்படாமல் அலாக்காயிருந்தது. எனவே, அது மலினமடைந்து, அழிந்துபோகக்கூடிய நிலைமையிலிருந்தது. நார்

மன்களுடைய சம்பந்த மேற்பட்ட பிறகு, அந்த இலாகா புத்துயிர் பெற்று, இதர கிறிஸ்தவ உலகத்தோடு அன்னியோன்னிய சம்பந்தம் பெற்று அபிவிருத்தியடையலாயிற்று. 1073-ல் ஹில்தேபரன்ட்(Hildebrand=இல்+தே+பரன்?) என்பவர் கிரிகாரி VII (Gregory VII ± மலைமேலுள்ள கரியவன்) என்னும் பெயருடன் ரோம் நகரில் பாப்பாயிருந்தார். அவருடைய அரண்மனையான பாப்பாசில் (Papacy = பாப்பு + ஆசு ?) இருந்த குருமார்கள், அவருடைய தூண்டுதலின்மேல், மதஸ்தாபன இலாகாவை ஒழுங்குப்படுத்தவும், பாதிரிமார்கள் அநுஷ்டிக்கவேண்டிய நியமநிஷ்டைக் கிரமங்களைக் கண்டிப்பாய் அமுலுக்குக் கொண்டுவரவும், ஐரோப்பாவினது எல்லா நாடுகளிலும் இருந்த மதஸ்தாபனங்களைப் பாப்பின் அதிகாரத்திற் குட்படுத்தவும் கங்கணங் கட்டிக் கொண்டு தக்க ஏற்பாடுகள் செய்யலாயினர். வில்லியம் இங்கிலாந்தின்மீது படையெடுக்குமுன் பாப்பு அவரை ஆசிர்வதித்து, மந்திர உச்சாடனக் கொடியொன்றைக் கொடுத்தனுப்பியது நமக்கு ஏற்கனவே தெரிந்த விஷயம். 1070-ல் வில்லியம் பாப்பிற்கு ஸ்ரீமுகமனுப்பி, சில பிரதிநிதிகளை (Legates) அனுப்பும்படி வேண்டிக்கொண்டார். கண்டர்புரியினது அரச்பிஷப் ஸ்டீகண்டும், இன்னம், அநேக பிஷப்புகளும், அப்பாத்களும் விலக்கப்பட்டுப் போயினர். நார்மண்டியில் பேக் (Bec) என்னப்படும் மடாலயத்தில் ப்ரியார் (Prior=பெரியார்,அல்லது,பர ஐயர் ?) பதவியையும், காயன் (Caen) என்ற இடத்தில் ஸெயின்ட் ஸ்டீவன் மாதா கோவில் அப்பாத்தாகவும் இருந்தவரான லான்பரங்க் (Lanfrac= இல்லான் பரன்கள் ?) என்பவர் கண்டர்புரியின் அரச்பிஷப்பாகவும், பேயிய‌க்ஷ் என்னும் ஊரிலிருந்த தமஸ் (Thomas) என்பவர் யார்க் அரச்பிஷப்பாகவும் நியமிக்கப்பட்டனர்

முன்னவருடைய அதிகாரம் பின்னவருடைய அதிகாரத்திற்கு மேற்பட்டதென்பதும் நிர்ணயிக்கப்பட்டுப்போயிற்று. வில்லியம் மதஸ்தான ஏற்பாடுகளைப் புதுப்பிக்க முயற்சிக்க, லான்பரங்க் அதை ஆமோதித்தார். லான்பரங்க் என்பவர் இற்றலி தேசத்தில் உள்ள பேவியா (Pavia) என்னும் ஊரில் பிறந்தவர். அவர் முதலில் வக்கீல் உத்தியோகம் வகித்து, பொருள் தேடும்பொருட்டு நார்மண்டிக்கு வந்தவர். பிறகு, அவர் விரக்திபடைந்து, உலகைத் துறந்து, சந்நியாசியாய், பேக் என்னும் மடாலயத்தில் இருந்தார். அவருடைய படிப்பினாலும், தெய்வ பக்தியினாலும், அந்த மடாலயத்திற்கே ஒரு பிராபல்யம் ஏற்பட்டது. அதன் பிறகு அவரே அதன் பெரியாராயிருந்தார். அவருக்கு வில்லியத்தின் நட்பும் ஏற்பட்டது. அவர் வில்லியத்தால் காயன் என்ற இடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஸெயின்ட் ஸ்டீவன் மாதா கோவிலின் தலைவரானார். வில்லியம் படையெடுத்ததற்கு முன்னர் பாப்பின் அநுமதி பெறும்படி அவரைத் தூண்டியவர் லான்பரங்கே. அந்த நன்றியை மறவாமல் வில்லியம் அவரைக் கண்டர்புரியினது அரச் பிஷப்பாக நியமித்தார். இருவரும் ஏகோபித்து முயன்று பல சீர்திருத்தங்களைச் செய்தனர். நார்மன் தேசத்துப் பாதிரிமார்கள் அதிகப்படிப்பும், ஊக்கமும், திடசித்தமும் உடையவர்களாயிருந்தனராதலால் அவர்களே, இங்கிலாந்தினது மதஸ்தாபனத்தைச் சேர்ந்த ஆலயங்களுக்கெல்லாம் நியமிக்கப்பட்டுப் போயினர். 1075-ல், நார்மன் பிஷப்புகள் முதலியோர் கிராமங்களிலிருந்த தங்கள் வாசஸ்தானங்களைப் பட்டணங்களுக்கு மாற்றிக் கொண்டனர்; தாங்கள் வசித்த பட்டணங்களில் நார்மன் மோஸ்தரில் பல கம்பீரமான மாதா கோவில்களை அவர்கள்கட்டினர். அவர்கள் தங்களுக்குக் கீழே இருந்த

பாதிரிமார்கள், மத போதகர்கள் முதலியோர் நன்றாகப் படித்து, உண்மையான தெய்வ பக்தியோடு, பாடுபட்டு உழைக்கும்படி செய்தனர். பாதிரிமார்கள் மணம் புரிந்து கொள்ளக் கூடாதென்ற நியமம் முதன் முதலில் அநுஷ்டானத்திற்கு வரும்படி லான்பரங்க் செய்தார். 1086-ல் வில்லியம் மதஸ்தாபனங்களுக்கு|பிரத்தியேகமான நீதிஸ்தலங்களை ஏற்படுத்தினர். பிஷப்புகள் ஹண்ட்ரட் நீதிஸ்தலங்களில் தலைமைவகிப்பது விலக்கப்பட்டது. கலியாண ரத்து, பொய்ச் சாட்சிக் குற்றம், மததூஷணை, மாந்திரீகம் முதலியவை சம்பந்தமான வழக்குகளை பிஷப்புகள் தங்களுடைய சொந்த நியாயஸ்தலங்களிலேயே பரிசீலனை செய்ய வேண்டுமென்ற நிபதிஏற்பட்டது. கிரிமினல் குற்ற வழக்குகளில் கடைசி முடிவான திருவுள சாட்சியச் சோதனைகள் மாதா கோவில்களிலேயே நடத்தப்பட்டன. அதுவன்றி, மத குருமார்கள் மீது ஏற்படும் வழக்குகளும் தங்கள் சொந்த நீதிஸ்தலங்களிலேயே பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்று லான்பரங்க் ஏற்பாடு செய்தார். இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட பிரத்தியேக நீதிஸ்தலங்களில் பிரத்தியேகமான சட்டங்களும் உண்டாக்கப்பட்டன. இந்த அமைப்பினால் காலக்கிரமத்தில் மத குருமார்கள் தனிமையான ஒரு சமூகத்தார்போலாய்விட்டனர். அவர்கள் தங்களுடைய முடிவான தலைவரான அதிபதி ரோம் நகரில் இருக்கும் பாப்பு என்று கருதினர். அதனால், பிற்காலத்தில், மத குருமார்களுக்கும், நாட்டினது அரசருக்கும் பகைமை ஏற்பட வழி உண்டாயிற்று. ஆனால் வில்லியம் லான்பரங்க் முதலிய எல்லா மதஸ்தாபன அதிகாரிகளையும் நியமித்து, சகலமான மாறுபாடுகளையும் செய்தவராகையாலும், லான்பரங்கும் அவரும் அன்னியோன்னிய நண்பர்களாயிருந்தமையாலும், அவர் துரைத்தன

நிர்வாகங்களில் இருந்ததுபோல மதஸ்தாபன நிர்வாகங்களி லும் சர்வாதிகாரங்கள் வாய்ந்தவராயிருந்தார். அவர் மத ஸ்தானங்கள் சம்பந்தமாய் பாப்பிற்கு இங்கிலாந்தில் செல் வாக்கும், அதிகாரம் அபாரமாய் ஏற்படுத்திக் கொடுத்தா ராஹுலும், தாம் சம்பந்தப்பட்ட வரையில், அவைகளை ஓர் எல்லைக்குள் கட்டுப்படுத்தி வைத்திருந்தார். உதாரணமாக, அவர் சில உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தார்: (1) பாப்பை அரசர் ஆதரித்தாலன்றி, அவருடைய உத்தரவுகளுக்கு இங்கிலாந்தில் எவரும் கீழ்ப்படிதல் கூடாது, (2) பாப்பின் ஸ்ரீமுகமும் (Papal Bull) எதுவாயிருந்தாலும், முதலில் அரசர் பார்த்து அங்கீகரித்தாலன்றி, அது நாட்டிற்குள் வரக் கூடாது. (3) அரசருடைய அநுமதியின்றி, அவருடைய உத்தியோகஸ்தரையோ, பாரான்களையோ மதத்திற்குப் புறம்பானவர்களாக்குவதோ (Excommunicate), அல்லது, அவர்கள்மீது வேறு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதோ கூடாது. (4) மத குருமார்கள் அரசருடைய சம்மதத்தைப் பெறுமல், மகாநாடுகள் (Synods) கூட்டுவதோ, சட்டங்கள், நியதிகள் முதலியவைகளை உண்டாக்குவதோ கூடாது, என் பன போன்ற பல நிர்வாகக் கட்டளைகளை அரசர் பிறப்பித் திருந்தார். பாப்பு, தமக்கு அரசர் வணக்கம் (Homage) செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டா ராஹுலும், அதற்குமுன் இங்கிலீஷ் அரசர்கள் அவ்விதம் செய்யவில்லை யாதலால் தாமும் அவ்விதம் செய்ய இயலாதென்று வில்லை யம் கூறி மறுத்துவிட்டார். ஆயினும்,பாப்பு,வில்லையம் செய்த மற்ற ஏராளமான நவீன ஏற்பாடுகளைப்பற்றி அவரது விஷ யத்தில் திருப்தியடைந்தவராகவே இருந்தார். அரசர் தமது பாரான்களை அடக்கிவைக்கும் விஷயத்தில் பாப்பு முதலிய மதஸ்தாபனத்தார் அனைவரும் அரசருக்கு உதவியே. செய்

தனர். பிரத்தியேக மதஸ்தாபன நீதிஸ்தலங்கள் ஏற்பட்டதனுல் உண்டான பிரதிகூலங்கள் அப்போது அதிகமாய் உறைக்காதிருந்ததற்கு, அரசர் மதஸ்தாபனத்தார் எல்லோரும் தமக்குக் கீழ்ப்பட்டு நடக்கும்படி செய்ததே முக்கியமான காரணமா யிருந்தது.

பாரான்களது கலகம்

வில்லியத்தின் அரசாட்சி காலத்தில் அவருக்கு மூன்று வகுப்பார் பகைவர்களா யேற்பட்டனர். (1) இங்கிலீஷ்காரச் சீமான்கள். இவர்களுடைய கலகங்களை அடக்க, அவர் 1071-ம்வருஷம் வரையில் பாடுபடவேண்டியதாயிற்று. (2) இன்னெரு வகுப்பார் அவரால் ஸ்தாபிக்கப்பட்ட நார்மன் பாரான்கள். (3) மூன்ருவது வகுப்பார் அவருடைய சொந்தப் புதல்வர்கள். நார்மன் பாரான்கள் அரசரைத் தங்களுக்கு மேற்பட்ட தலைவராகக் கருத இசைந்தனராலும், தமது சமஸ்தானத்திற்குள் தாங்கள் சுயேச்சையாகவும், சுயாதீனமாகவும் நடந்துகொள்ள விரும்பினர். வில்லியத்தினுல் ஏற்படுத்தப்பட்ட பியூடல் ஏற்பாட்டின்படி தங்கள் சமஸ்தானங்களிலும் அரசருடைய சுயேச்சையான அதிகாரமே செல்லும்படியாகும் நிலைமை ஏற்பட்டுப்போகவே, பாரான்கள் பொருமையும், அதிருப்தியும் கொண்டிருந்தனர். அவர்களும், சில இங்கிலீஷ் சீமான்களும் அரசரைத் தொலைப்பதற்காக சதியாலோசனைகள் செய்யத் தொடங்கினர். 1075-ம் வருஷத்தில், ஹேயர்போர்ட் (Hereford) ஏயராளான ராஜர்(Roger) என்பவரும், நார்போக் (Norfolk) ஏயராளான ரால்பும் (Ralph) ஒன்றுகூடி, தங்களோடு சேரும்படி வள்தேயப் (Waltheof)பை அழைத்தனர். இவர் அரசரால் நார்த்தம்பர்லண்டின் ஏயராள் பதவியைப் பெற்றிருந்த

தன்றி, அரசருடைய மருமாளான ஜூடித் (Judith) என்பவளை மணந்துகொண்டிருந்தார். அரசருடைய உத்தரவை மீறி, ரால்ப் என்பவர், ராஜருடைய சகோதரியான எம்மாவை மணந்துகொண்டிருந்தார். இவர்கள், இங்கிலாந்தைத் தங்கள் வசப்படுத்தி மூவரும் பிரித்துக் கொள்வதென்றும், மூவருள் ஒருவர் அரசராவதென்றும் தீர்மானித்திருந்தனர். வள்தேயப் முதலில் இதில் சேர்ந்துவிட்டாராலும், பிறகு இதைப்பற்றிய உண்மையை லான்பிராங்கினிடம் இரகசியத்தில் தெரிவித்துவிட்டார். ராஜரை சிறைப்படுத்தினார்கள். ரால்ப் டேன்மார்க் தேசத்திற்கு ஓடிப்போய்விட்டார். ராஜரும், வள்தேயப்பும் வீட்டான் சபையோரால் விசாரிக்கப்பட்டனர். ராஜர் சிறைச்சாலை தண்டனையும், வள்தேயப் மரண தண்டனையும் பெற்றனர். அதன் பிறகு சுமார் நூறு வருஷ காலம் வரையில் நார்மன் பாரான்களுடைய கலகம் அப்போதைக் கப்போது ஏற்பட்டுக்கொண்டே இருந்தது. அரசர் திறமையற்றவரா யிருந்தால், கலகம் அவசியம் நேருவது நிச்சயமாயிருந்தது. பாரான்கள் சில சமயங்களில் வெற்றி பெற்றனராலும், முடிவில் அரசருக்கே வெற்றி ஏற்பட்டது.

ராபர்த்தின் கலகம், ஆதாவின் முடிவு

வில்லியத்திற்கு மூன்று குமாரர்கள் பிறந்து வளர்ந்திருந்தனராலும், அரசர் அவர்களுக்கு இங்கிலாந்தில் சொந்த நிலங்கள் கொடுக்கவில்லை. அதனால், மூத்த குமாரரான ராபர்த் தமது தந்தைமீது பகைமை கொண்டு, நார்மண்டிக்குச்சென்று, பிரான்ஸ் அரசர் முதலியோருடைய உதவியைப்பெற்றுத் தமதுதந்தைக்கு விரோதமாகக் கலகம் விளைக்கத் தொடங்கினர். 1079-ம் வருஷத்தில், நார்மண்டியின்

கிழக்கெல்லையில் ஜேரப்பராய்(Gerberoi)என்ற கோட்டையி லிருந்தபடி ராபர்த் கலகம் விளைக்க, வில்லியம் நேரில் அங்கே சென்று அந்த இடத்தை முற்றுகையிட்டார். அப்போது தந்தையும், புதல்வனும் ஒருவரோடொருவர் கை கலந்து போர் செய்ய, தந்தைக்குக் காயம் ஏற்பட்டது. ஓர் இங்கிலீஷ் வீரன் அரசருடைய உயிரைக் காப்பாற்றி, அதில் தன் உயிரை இழந்தான். ஆனால், அதற்கு சிறிது காலத்திற்குப் பிறகு மைந்தன் தந்தையோடு சமாதானம் செய்து கொண்டான். வில்லியம் தமது புத்திர வாஞ்சையினால் ராபர்த்தை மன்னித்தாரானாலும், கடைசி வரையில், அவரிடம் நம்பிக்கை வைக்காமலேயே அவரை நடத்தினார். இதுவன்றி, அரசர் தம்முடைய ஒன்றுவிட்ட சகோதரரான ஆதாவையும் சிறைப்படுத்தும்படியான சில சம்பவங்கள் நேரிட்டன. அவரை அரசர் பிஷப்பாகவும், கெண்டின் ஏயராளாவும் நியமித்திருந்தார்; வல்தேயப் கொல்லப்பட்ட பிறகு, அரசர் நார்மண்டிக்குச் செல்லவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்ட போது, இங்கிலாந்தை ஆதாவினது வசத்தில் விட்டுச் சென்றிருந்தார். அக்காலத்தில் ஆதா ஏழைகளை நிரம்பவும் கொடுமையாக நடத்தியதன்றி, அக்கிரமமான பண வசூல்களினால் இங்கிலீஷ் ஜனங்களுக்கெல்லாம் கோபம் உண்டாகும்படி நடந்துகொண்டார். துரஹம் பிஷப்பின் கொலை விஷயத்தில், ஆதா நிதானம் தவறி, அதீதமான குரூரம் பாராட்டி, சம்பந்தப்பட்டவர், படாதவர் ஆகியோரை வதைத்தார். அவர் துரஹம் பிஷப்பின் தண்டத்தைத் திருடிக் கொண்டதன்றி, தாம் பாப்பின் பதவியை அடைய வேண்டுமென்று மனக்கோட்டை கட்டி, ஆல்ப்ஸ் மலைக்கப்பால் படையெடுத்துப் போவதற்காகப் போர்வீரர்களைச் சேர்க்கத் தொடங்கினார். இந்தக் கடைசிச் செய்கை வில்லி

யத்தின் கோபத்தை அபாரமாகக் கிளப்பிவிடவே, அரசர் உடனே திரும்பி வந்து, அவரை சிறைப்படுத்தி நார்மண்டிக்கு அனுப்பி, அவ்விடத்தில் ரௌவன் (Rouen) என்ற கோட்டைக்குள் பந்தோபஸ்தாக அடைத்து விட்டார்.

டூம்ஸ்டே புக் (Domesday Book)

இங்கிலாந்தில் நிலம் வைத்திருந்த ஒவ்வொருவரும் அரசருக்கு சில கடமைகள், வரிகள் முதலியவற்றைச் செலுத்தவேண்டிய நிலைமை ஏற்படவே, எவரும் விடுபட்டுப் போகாமல் இருப்பதற்கும், தமக்கு எவ்வளவு தொகைகள் கிடைக்க வேண்டுமென்பதை நிர்ணயிப்பதற்காகவும், வில்லியம் 1085-ம் வருஷம் வீட்டான் சபையாரை களௌசெஸ்டர் (Gloucester) என்னுமிடத்தில் கூட்டி, இவ் விஷயத்தில் கணக்கெடுக்கும்படி உத்தரவு பிறப்பித்து, அதற்காக சில அதிகாரிகளை நியமித்தார். அவர்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் மேனர், ஷீரப், மதகுரு, ரேயவ், ஒவ்வொரு கிராமத்திலும் ஆறு வில்லியன்கள் ஆகியோரைக் கூட்டி, அவர்கள் பிரமாணிக்கத்தின்மேல் தங்கள் கிராமங்களைப்பற்றிய தகவல்களைச் சொல்லும்படி செய்தனர். ஒவ்வொரு கிராமத்திலும் இருந்த சாகுபடி நிலம், தரிசு நிலம், அவற்றின் பெறுமானம், ஜனத்தொகை, கால்நடைகளது தொகை, அரசருக்குச் சேரவேண்டிய கடமைகள் முதலிய விவரங்கள் யாவும் சேகரிக்கப்பட்டன. இங்கிலாந்தின் முழுதும் இந்த விசாரணை முடிய சுமார் ஒருவருஷ காலம் பிடித்தது. இப்புள்ளிகள் இரண்டு புஸ்தகங்களில் அடங்கியிருக்கின்றன. அவைகளே டூம்ஸ்டே புக் என்று குறிக்கப்படுகின்றன. இது 1086-ல் முடிவடைந்தவுடன், அரசர் சலீஸ்புரி (Salisbury) என்ற இடத்தில் இருந்துகொண்டு, அந்தக் கணக்கில் குறிக்

கப்பட்டிருந்த ஒவ்வொரு குடியானவரையும் நேரில் வரவழைத்து, அவரிடம் இராஜ விசுவாசப் பிரமாணிக்கம் பெற்றுக்கொண்டார். இது அரசருடைய அதிகாரத்திற்கே உயிர் நிலையான ஏற்பாடாக முடிந்தது. நாட்டில் இருந்த எவரும் தமக்கு மேற்பட்ட எஜமானுடன் சேர்ந்து, அரசருக்கு விரோதமாக யுத்தத்திற்கு வராமல் இது தடுத்துவிட்டது. இந்தக் கணக்குப் புஸ்தகம் ஏற்பட்டதன் பயனாய், ஒவ்வொரு குடியானவரும் தவருமல் அரசருடைய மனிதரானதன்றி, அதற்குப் பிறகு பல நூற்றாண்டுகள் வரையில் வரி விதிக்கவும், போருக்கு ஆள்களைத் திரட்டவும் அதுவே ஆதாரமாயிருந்தது. சுமார் எண்ணூறு வருஷ காலத்திற்கு முன்னர் நாடு இருந்த நிலைமையை இவ்வளவு விரிவாகத் தெரிவிக்கக் கூடிய கணக்கு வேறு எந்த நாட்டிலும் இராதென்ற பெருமையும் இங்கிலாந்திற்கு இதனால் ஏற்படுகிறது.

வில்லியத்தின் காடுகள் முதலிய சில்லரை ஏற்பாடுகள்

வில்லியம் வேட்டையாடுவதில் அதிக விருப்பமுடையவர். அதனால் நாடெங்குமிருந்த காடுகளை அழிக்காமல் பாதுகாக்க உத்தரவிட்டார். அவர் ஏற்படுத்திய காடுகளில் புதிய காடு (New Forest) என்பது மிக முக்கியமானது. அது ஹாம்ப்ஷயர் என்னுமிடத்தில் இருந்தது; 90,000 ஏகரா விஸ்தீரணமுடையது. அதில் எவரேனும் ஒரு மானையோ, முயலையோ கொன்றால் அவருடைய கண்களை அவித்துவிட வேண்டுமென்று அரசர் கட்டளை இட்டிருந்தாராம். குடிமக்களுக்கு அவருடைய காட்டிலாகா நிர்வாகம் மிகவும் குரூரமாயிருந்ததாம். அவர் ஏராளமான வரிகளை

விதித்ததில் அதற்கு முன்னிருந்து நீக்கப்பட்ட டேன்கில்ட் (Danegild) என்னும் வரியை மறுபடி விதித்து, அதற்குமுன் ஒரு ஹைட் நிலத்திற்கு 2 ஷில்லிங்காயிருந்ததை 6 ஷில்லிங் காக்கி அதை மூன்று மடங்காக அதிகப்படுத்தினர். இரவில் எட்டு அடித்தவுடன் நெருப்புகளை அணைத்துவிட வேண்டு மென்று வில்லியம் ஓர் உத்தரவு பிறப்பித்தார். அவ்வாறு எட்டு மணிக்கு அடிக்கப்பட்ட மணி கர்வியூ பேல் (Curfew Bell) என்று குறிக்கப்படுகிறது. அநேகமாய் எல்லா வீடு களும் மரத்தினலான கூரை வீடுகளா யிருந்தமையால், வீடு கள் பற்றிக்கொள்ளாமல் இருக்கும் பொருட்டு அந்த உத் தரவு பிறப்பிக்கப்பட்டது. அது பதினறுவது நூற்றாண்டு வரையில் அமுலிலிருந்தது. சில கிராமங்களில் இப்போதும் இந்த மணி அடிக்கப்படுகிறது. அன்னிய நாட்டினர் இங்கி லாந்தின்மீது படையெடுத்து வாராமல் பாதுகாப்பதற்காக அவர் ஐந்து முக்கியமான துறைமுகங்களில் பலமான கோட்டைகள் கட்டியிருந்தார். டோவர் (Dover), ஹேஸ் டிங்ஸ் (Hastings,) ராம்னே (Romney), ஹைத் (Hythe) ஸாண்ட்விச் (Sandwich) ஆகிய ஐந்துமே அத்துறைமுகங் கள். அவைகள் ஸிங்க் போர்ட்ஸ் (Cinque Ports) என்று குறிக்கப்படுகின்றன.

மெயினைக் கைப்பற்றியது

இங்கிலாந்தும் நார்மண்டியும் ஓர் அரசருக்கு உட் பட்டுப் போனதுபற்றி, நார்மண்டியினது பக்கங்களில் பல தகராறுகள் ஏற்படலாயின. அதுவன்றி, நார்மண்டிக்குத் தென்மேற்கில் உள்ள மெயின் (Maine) என்னும் நாட்டை அபகரிக்க வேண்டுமென்பது நார்மன்களுடைய நெடுநாளைய அவா. வில்லியம் 1073-ல் பெரும்பாலும் இங்கிலீஷ் வீரர்

களே அடங்கிய ஒரு சேனையோடு போய் அதைக் கைப்பற்றிக் கொண்டார். அப்போது ஹேயர்வர்ட் (Hereward) என்ற புகழ்பெற்ற வீரரும் அந்தச் சேனையோடு போயிருந்தார்.

வில்லியத்தின் மரணம்

1087-ல் அவர் நார்மண்டியில் இருந்தார். அவர் பூதாகாரமாகப் பெருத்துப் போயிருந்ததைப்பற்றி பிரான்ஸ் அரசர் பிலிப் ஏதோ புரளி செய்ததாக வில்லியத்திற்குச் செய்தி கிடைக்கவே, அவர் பெரிதும் கோபங்கொண்டு, பிலிப்போடு போர் செய்ய ஆரம்பித்து, பிரான்ஸுக்கும் நார்மண்டிக்கும் இடையிலிருந்த வெக்ஸின் (Vexin) என்ற ஜில்லாவில் புகுந்து அதை நாசப்படுத்தி, மாண்டஸ் (Mantes) என்ற பட்டணத்தைக் கொளுத்தித் தரைமட்டமாக்கினார். அப்போது அவர் தமது குதிரைமேலேறிக்கொண்டு அந்த இடத்தைச் சுற்றிப்பார்த்த காலத்தில், குதிரையினது காலில் நெருப்புப்பட்டதனால், அது துள்ளிக்கிளம்பவே, வில்லியம் தம்சேணத்தின் முன்பக்கத்தில் உயரமாயிருந்த பாகத்தில் போய் விசையாக விழுந்தார். அதனால், அவருடைய உடம்பின் உள்பக்கத்தில் சில உறுப்புகள் நசுங்கிப்போயின. அந்த நிலைமையில் அவரை ரோவனுக்குக் கொண்டுபோயினர். அவ்விடத்தில் அவர் நோவினால் வேதனைப்பட்டு சில வார காலம் படுத்திருந்தார். அந்தியகாலத்தில், அவருடைய இருதயம் மிருதுப்படலாயிற்று. சிறைப்படுத்தப்பட்டிருந்த மார்க்கர், ஆதா ஆகியோரை விடுவிக்க அவர் உத்தரவிட்டார். அவர் தமது மூத்த குமாரரான ராபர்த்துக்குத் தம் பூர்விக சொத்தான நார்மண்டியைக் கொடுத்தார்; தந்தை சொல் கடவாதவரான வில்லியம் என்னும் இன்னொரு

குமாரருக்கு, தமது விலை மதிப்பற்ற சுயார்ஜிதமான இங்கிலாந்தையும், தமது முத்திரை மோதிரத்தையும் கொடுத்து, சீக்கிரம் அவ்விடத்திற்குப் போகும்படி கட்டளையிட்டார். கடைசிக் குமாரரான ஹெண்ரிக்கு 5000 பவுண்டு நிறையுள்ள வெள்ளியைக் கொடுத்தார். இந்தக் குமாரர், தமது தந்தையின் கடைசிக் காலத்தில், அவருக்கு மனித சகாயம் இன்றியமையாததா யிருந்த சந்தர்ப்பத்தில் தமக்குக் கிடைத்த வெள்ளி சரியாயிருக்கிறதாவென்று மிக ஜாக்கிரதையாக அதை நிறுத்து எடுத்துக்கொண்டு தந்தையை அநாதரவாக விட்டுப் பிரிந்து சென்றார். மிகப் பராக்கிரமசாலியான வெற்றிகொண்ட வில்லியம் உறவினரோ, நட்பினரோ இல்லாத நிலைமையில், 1087ம் வருஷம், செப்டம்பர் மாதம், 9ம் தேதி, உயிர் துறந்தார். நார்மண்டியில் கேயன் என்னுமிடத்திலிருக்கும் மாதா கோவிலில் அவருடைய சவம் அடக்கம் செய்யப்பெற்றது.

அவருடைய அரசியல் திறமையும் துணைதிசயங்களும்

அயல் நாடுகளில் அவருக்குப் பகைவர்கள் இருந்தனராலும், இங்கிலாந்தில், அவர் இறந்ததற்கு சுமார் பதினொரு வருஷத்திற்கு முன்னிருந்தே பூர்த்தியான அமைதியும், நிலைப்பான வாழ்க்கையும் ஏற்பட்டு விட்டன. அவருடைய ஆட்சியில் நாட்டின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு ஒரு மனிதர் தம் மடியில் தங்கப் பொதியைக் கட்டிக்கொண்டு நிர்ப்பயமாகப் போகலாம் என்று சரித்திராசிரியர்கள் எழுதியிருக்கிறார்கள். சொத்து மாத்திரமன்றி, ஒரு மனிதருடைய உயிருக்கோ, தேகத்திற்கோ பிறரால் எவ்வித கெடுதலும் நேருவதில்லை என்ற மன

சிம்மதியும், உறுதிப்பாடும் குடிமக்களுக்கு உண்டாகும்படி அவர் அவ்வளவு கண்டிப்பாக துஷ்டர்களை அடக்கி, சிஷ்ட பரிபாலனம் செய்திருந்தார். அவர் இங்கிலாந்தின் அரசரா யிருந்ததோடு, ஸ்காட்லண்ட், வேல்ஸ் ஆகிய அன்னிய நாடுகளுக்கும் அதிபதியாகக் கருதப்பட்டார். இவையன்றி ஐரோப்பாக் கண்டத்தில் நார்மண்டியோடு பிரிட்டனி, மேய்ன் ஆகிய நாடுகளைக் கைப்பற்றிக்கொண் டிருந்தார். அவர் பெரிய கொடுங்கோன் மன்னர். நாம் கிரமப்படி பார்த்தால், அவர் இங்கிலாந்தின்மீது படை யெடுத்து வந்ததையும், அதன் பலனாக நடத்தப்பட்ட அட்டூழியக் கொடுமைகளையும் நியாயமான செய்கைள் என்று நாம் மதிக்க இயலாது. ஆனால், இங்கிலாந்திற்கு அவர் விலை மதிக்க இயலாத ஒரு பிரமாதமான நன்மை யைச் செய்தார். அதாவது, நாடு முழுவதையும் அவர் ஒன்றுபடுத்தி, ஓர் அரசருடைய ஆளுகைக்குள் கொணர்ந்து, நாட்டினது ஒற்றுமையும், கட்டுப்பாடும் அதிகரிக்கும்படி செய்தார்; சமஸ்தானாதிபதிகள் தம் தம் நாட்டில் சுயேச்சாதி காரிகளாய், ஒருவரோடொருவர் ஒன்று சேராமல் இருந்த தனால், அரசருடைய நிலைமை துர்ப்பலப்பட்டுக் கொண்டு வந்தது. கீழே இருந்த குடிமக்களும் பல கொடுமை களுக்கு உட்படுத்தப் பட்டிருந்தனர். அதே நிலைமையில் நாடு இருந்துகொண்டு வந்திருந்தால், இங்கிலாந்து தற்காலத் தில் அடைந்துள்ள சார்வபௌமத்வம் கிடைத்திருக்குமோ என்பது சந்தேகம்; ஆகவே, இங்கிலாந்து முழுவதையும் அவர் ஓர் அரசருடைய ஆட்சிக்குட்படுத்தியது பிற்கால மேன்பாட் டிற்கு விதை நாட்டியது போல முடிந்தது. ஆனால் அவர் பல அக்கிரமச் செய்கைகளை நடத்தினாரென்பதை நாம் மறுக்க இயலாது. வள்தேயப்புக்கு அவர் மரணதண்டனை

விதித்தது பெரிய அநீதச் செய்கையாகும். அவர் காடு களை உற்பத்தி செய்வதற்கு அநேக மாதாகோவில்களையும், கிராமங்களையும் அழித்ததும் மிக அநாகரிகரமான கீழ்த்தர மனப்பான்மையைக் காட்டுவதாயிருக்கிறது. அவர் மிக பராக்கிரமசாலியான அரசரென்பது உண்மையானாலும், அவர் ஜனங்களுடைய அன்பிற்கும் புகழுக்கும் பாத்திர மானவரென்று நாம் கருதவியலாது. அவர் நல்ல மனித ரிடத்திலும், தெய்வபக்தி உடையவரிடத்திலும் சாந்தமாக நடந்து, அவர்களுக்கு நன்மைகளையே செய்தார். அவரு டைய விருப்பத்தை மீறி நடந்தவர்களது விஷயத்தில் அவர் ஈவிரக்க மற்ற பரமதுஷ்டராக நடந்து கொண்டார். அவர் அக்காலத்தினருக்குக் கொடுங்கோல் அரசராகத் தோன்றி னாராலும், அவர் செய்து முடித்த அபாரமான செய் கைகள் இனிது நிறைவேற, அவருடைய கொடுங்கோன்மை இன்றியமையாததாயிருந்ததென்றே நாம் கருதவேண்டும். முக்கியமாய், அவர் நார்மன் பாரான்களால் நாட்டிற்குத் தீங்கு நேருமென்பதை முன்யூகத்தால் நன்றாய் உணர்ந்து, இங்கிலீஷ்காரர்கள், மதஸ்தாபனத்தார் ஆகியோரது உத வியைக் கொண்டும், வேறு பல யுக்திகளாலும் பாரான்களை அடக்கியது அவருடைய ஆழ்ந்த இராஜரீக ஞானத்தைக் காட்டுகிறது. இங்கிலீஷ்காரருக்கு அவருடைய ஆட்சி காலம் மிகக்கொடிய பிரசவவேதனைக் காலமென்றே கருத வேண்டும். ஆனால், அன்னியர் ஒருவருடைய கொடுமை யாலன்றி, நாடு அவ்வாறு ஒன்று படுவது, எல்லோரும் சட்டத்திற்கு சமமாக அஞ்சி ஒழுங்கான நடத்தையைக் கடைப் பிடிப்பது, நாட்டில் அமைதி, உடல் பொருள் ஆவி என்னும் உடைமைகளுக்குப் பாதுகாப்பு ஆகிய அம் சங்கள் உறுதியாக நிலைப்பது ஆகிய ஜீவாதாரமான நன்

மைகள் ஒருகாலும் ஏற்பட்டிரா வென்பது நிச்சயம். வயதாக ஆக அவருக்குப் பண ஆசை அதிகரித்ததாம். நியாயம் அநியாயம் என்பதை அவர் கூர்மையாய் உணரும் இயற்கை உடையவரா யிருந்தாலும், தமது அதிகாரிகள் இழைத்த தீங்குகளால் தமக்கு வருமானம் ஏற்படக்கூடியதா யிருந்தால், அவர் தமது கண்களை மூடிக்கொண்டார். அவர் இங்கிலாந்தின் பழைய தலைமை நகரத்தில் ஏராளமாகப் பணத்தைச் சேர்த்து வைத்தாராம். அது விண்சேஸ்தர் (The Hoard of Winchester) சம்பந்து என்று குறிக்கப் பட்டது. அவர் தம்மோடு வந்த பளமிங்ஸ் (Flemings), ஜீவ்ஸ் (Jews) என்பவரைப் பட்டணங்களில் ஸ்தாபித்து, ஆதரித்துக் கைத்தொழில், வர்த்தகம் சிற்பம், பௌதிக ஞானம் முதலியவற்றைப் பெருக்கியது இங்கிலாந்தி னது பிற்காலப் பெருமைக்கு அடிகோலியதுபோ லாயிற்று. அயர்லண்டோடு நடந்துவந்த அடிமை வர்த்தகத்தை அவர் அடக்கினர்; தமது கடைசிக் குமாரரை அவர் இங்கிலீஷ் காரர் குமாரர் போலப் பயிற்றினர்.

சமூக நிலைமையும், மாறுதல்களும்

நார்மன் வெற்றிக்குப்பின் இங்கிலாந்தினது சமூக நிலைமை மிக விநோதமானதா யிருந்தது. குடிமக்கள் சுதேசிகள்; அரசர், அதிகாரவர்க்கத்தார், சீமான்கள், பிஷப்புகள், பாதிரிமார்கள் ஆகியோர் அன்னிய நாட்டினரான நார்மன்கள். வள்தேயப் இறந்தபின், அவருக்கு அடுத்தபடியான பெரிய சமஸ்தானாதிபதிகள் எல்லோரும் நார்மன்களே; அரசரோடு வந்து குடியேறிய நார்மன்கள் போர்வீரர்களாத லால், அவர்கள் போர் நடத்துவதையும், பிறருக்கு மேல் இருந்து அதிகாரம் செலுத்துவதையுமே அறிந்தவர்களன்றி

நிலச்சாகுபடி செய்ய அறியாதவர்கள். அவர்கள் நார்மன் பிரஞ்சு பாஷை பேசினர். இங்கிலீஷ்காரர்களில் பெரும் பாலோர் வேளாண்மைக்காரர்களும், இதர துறைகளில் பாடுபடும் பாட்டாளிகளுமாயிருந்தனர். அவர்கள் இங்கிலீஷ் பாஷை பேசினர். அரசரோ கொடுங்கோலர்; நாடு முழுதிலும் அற்ப விஷயத்தில்கூட அவருடைய இச்சையே நிறைவேறியது. இங்கிலீஷ்காரர்கள் நார்மன்களிடமிருந்து எல்லா விஷயங்களையும் ஏற்றுக்கொள்வோராயிருந்தனர். புதிய சட்டங்கள், புதிய அரசியல் அமைப்பு, புதிய கைத்தொழில்கள், புதிய மனோபாவம், புதிய இலக்கியம், புதிய துறைகளில் ஊக்கம், புதிய வர்த்தகம், புதிய பாஷை ஆகிய எல்லாவற்றையும் இங்கிலீஷ்காரர்கள் பெற்றுக் கொண்டனர். கட்டிடம் கட்டுதல், போர் நடத்துதல், கலைபயிற்றுதல், துரைத்தனம் நடத்துதல் ஆகிய எல்லா இலாகாக்களிலும் இங்கிலீஷ்காரர்கள் தேர்ச்சி பெற்றதற்கு நார்மண்டிக்கே அவர்கள் கடமைப்பட்டவர்கள். நார்மன் சம்பந்தம் ஏற்பட்டதற்குப் பின்னர், இங்கிலாந்திற்கும், இதர நாடுகளுக்கும் சம்பந்தம் அதிகரித்தது; பிரிட்டன், மேற்கு ஐரோப்பாவோடு சேர்ந்ததாகக் கருதப்பட்டது; அன்னிய நாட்டு வர்த்தகம் அதிகரித்தது. பிரான்ஸ் முதலிய நாடுகளோடு பிற்காலத்தில் பல தகராறுகள் ஏற்படவும், அதனுல் இங்கிலீஷ்காரர்களுடைய கப்பல் படைகள் அபாரமாகப் பெருகவும் அஸ்திவாரம் போடப்பட்டது; கல்விமான்கள் ஏராளமாக வந்து சேர்ந்தனர். பிரான்ஸ் நாட்டின் இலக்கியங்கள் இங்கிலாந்தில் வேரூன்றிப் போயின. போர் முறைகளிலும் பல மாறுதல்கள் உண்டாயின. நாடு முழுதிலும் கோட்டைகள் நிறைந்து போயின. குதிரை வீரர்களும், குதிரையிலிருந்து வில்

லம்புகளை உபயோகிப்போரும் சர்வ சாதாரணமாக நிறைந்து போயினர். பிரெஞ்சு, துரைத்தனத்தாருடைய பாஷையாகவும், லத்தீன், படிப்பாளிகளது பாஷையாகவும், இங்கிலீஷ், குடிமக்களது பாஷையாகவும் இருந்தன. சுருங்கக் கூறுமிடத்து, நார்மன் வெற்றி, இங்கிலீஷ் சட்டங்களையோ, இதர ஸ்தாபனங்களையோ அழிக்கவுமில்லை, விலக்கவுமில்லை, அவைகளை மாற்றி பலப்படுத்தி அப்படியே பாதுகாத்தது.

வில்லியம் I அரசாட்சியில் நிகழ்ந்த முக்கியமான சம்பவக் குறிப்புகள் :—

1066 டிசம்பர்மீ 25உ வில்லியம் முடிசூடுதல்.

1067 வில்லியம் ஆதரவையும், தமது நண்பரையும் பிரதிநிதிகளாக வைத்துவிட்டு, நார்மண்டிக்குத் திரும்புதல்.

1068 வில்லியம் எக்ஷதரைக் கைப்பற்றி, மேல்நாட்டுக் கலகத்தை அடக்குதல்.

1069 வில்லியம் யார்க்கைக் கைப்பற்றி வடக்கு நாடுகளது கலகத்தை அடக்குதல்.

1070 ஸ்டிகண்ட் விலக்கப்படுதல், லான்பரங்க் கண்டர்புரியின் அரச் பீஷப்பாகுதல்.

1071 எட்வின், மார்க்கர்களுடைய கலகம். எட்வின் மரணம். மார்க்கர் ஹேபர்வர்டுடன் சேருதல். இங்கிலீஷ்காரர்களது கடைசிக் கலகம்.

1072 வில்லியம் ஸ்காட்லண்டின்மீது படையெடுத்துச் சென்று மால்கம் தம்மைப் பணியச் செய்தல்.

1073 வில்லியம் இங்கிலீஷ் சேனையோடு சென்று மேயினைக் கைப்பற்றுதல்.

1078 ராபர்த்தின் கலகம். ஜெரப்பராய் முற்றுகை. தந்தைக்கும் மகனுக்கும் சண்டை. அரசர் காயப்படுதல். புத்திரர் சமாதானம் செய்துகொள்ளல்.

1084 டேன்கில்ட் வரி மறுபடி விதிக்கப்படுதல்.

1085 இங்கிலாந்தின் நிலக்கணிதி.

1086 டூம்ஸ்டே புஸ்தக சம்பூர்ணம்; சலிஸ்புரிப் பிரமாணிக்கம்.

1087 வில்லியம் பிரான்ஸின்மீது போர் தொடங்குதல். மான்டஸில் அரசருக்கு அபாயம் நேருதல். ரோவனில் அரசர் மரித்தல்.

வெற்றிகொண்ட வில்லியத்தின் வம்சாவளி



அத்தியாயம்—4

வில்லியம் II (ரூபஸ்) (1087—1100)

இரண்டாவது வில்லியம் முடிசூடல், அவருடைய குணாதிசயங்கள்

வெற்றி கொண்ட வில்லியத்தின் குமாரர்களுள் வில்லியம் ரூபஸ் என்பவரே தோற்றத்திலும், குணாதிசயங்களிலும் முற்றிலும் தம் தந்தையை யொத்திருந்தார். அவர் 1060ம் வருஷம் பிறந்தவர். அவர் பட்டத்திற்கு வந்த காலத்தில் அவருக்கு வயது இருபத்தேழு ஆகியிருந்தது. வெற்றி கொண்ட வில்லியம் இறப்பதற்குமுன் நோயாகப் படுத்திருந்த காலத்தில், அவர் லான்பரங்கிற்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். பின்னவர் தமது செல்வாக்கை உபயோகித்து, வீட்டான் சபையார் தமது குமாரரான வில்லியத்தை அரசராக்கச் செய்யும்படி வேண்டிக் கொண்டிருந்தார். லான்பரங்க் இளைய வில்லியத்திற்குப் பாடம் சொல்லிக் கொடுத்தவர்; அவருக்கு 'நைட்' பட்டமும் வழங்கியவர். ஆகவே, லான்பரங்க் அவரிடம் அபிமானமுடையவராயிருந்தார். அவருடைய தந்தையும் கடிதம் எழுதவே, அவர் உடனே வீட்டான் சபையாரைக் கூட்டி, இளைய வில்லியத்திற்கு முடி சூட்டும்படி சிபார்சு செய்தார். அப்போது, அவர் புதிய அரசரிடம் ஒரு பிரமாணிக்கம் பெற்றுக் கொண்டார். எந்த நடவடிக்கையிலும் தாம் தயாளத்

தோடும், பாரபட்சமின்றியும் நீதியாக நடந்துகொள்வதாகவும், மதஸ்தாபனங்களது அமைதி, சுயாதீனம், பாதுகாப்பு ஆகியவற்றிற்கு எவ்வித கெடுதலும் நேராமல் தாம் காப்பதாகவும், எல்லா விஷயங்களிலும் லான்பரங்கின் புத்திமதிப்படியும், யோசனைப்படியும் நடந்து கொள்வதாகவும் ரூபஸ் பிரமாணிக்கம் செய்தார். அதன்மேல் அவர் 1087ம் வருஷம், செப்டம்பர் மாதம், 26ம் தேதி, முடிசூட்டப்பெற்றார். அவர் தடித்த உறுதியான சரீரம் உடையவராயிருந்தார். அவருடைய உடம்பு சிவப்பாயும், தலைமயிர் செம்பட்டையாயும் இருந்தமையால், அவர் ரூபஸ் (ரூபவான் ?) 'என்று குறிக்கப்பட்டார். செங்கோல் அரசருக்குரிய குணங்கள் அவரிடம் அமையவில்லையானாலும், அவர் அபாரமான மனோதைரியமும், திடசித்தமும் வாய்ந்தவராயிருந்தார். அவருடைய பராக்கிரமத்திற்கு ஒரு சம்பவத்தைக் குறிப்பதுண்டு. அவர் ஒரு நாள் புதிய காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்த காலத்தில் மேயின் என்ற நாட்டின் கவுண்டான எல்லியாஸ் என்பவர் திடீரென்று வந்து மன்ஸ் (Mans) என்ற இடத்தைப் பிடித்துக் கொண்டாரென்று கேள்வியுறவே, அவர் சரேலென்று குதிரையைத் திருப்பி நேராகக் கடற்கரைக்குப் போய், அவருடைய திருஷ்டியில் முதன் முதலில் பட்ட மீன் பிடிக்கிற படகில் ஏறிக்கொண்டு, மும்முரமாக வீசிய கடற் காற்றிற்கு எதிர் நோக்கிப் படகை வலித்தாராம். அவருடைய உத்தியோகஸ்தர்கள், ஒழுங்கான படகும், அநுகூலமான காற்றும் அமையும் வரையில் பொறுக்கும்படி வேண்ட, அரசர் "ஓர் அரசர் தண்ணீரில் முழுகிப்போனதை நீங்கள் எப்போதாவது கேள்வியுற்றதுண்டா ?" என்றாராம். இதிலிருந்து, அவருடைய அபாரமான மனோதை

ரியம் நன்றாக விளங்குகிறது. அவர் தமது சுயநன்மையைக் கோருவதில் ஆழ்ந்த கபடமும், தந்திரமும் வாய்ந்தவர். இங்கிலாந்தை ஆளுவதில், அவர் தமது தந்தையினது பயங்கரமான முரட்டுப் பிடிவாதத்தைப் பின்பற்றி நடந்து கொண்டார். அவர் தந்தை சொல் கடவாத சற்புத்திரர்; தமது பணியாளரிடம் அவர் நிரம்பவும் தாராள குணத்தோடு நடந்து கொள்ளுகிறவர். ஆனால், அவருடைய தந்தையிடத்தில் காணப்பட்ட மேலான சில குணங்கள் மைந்தரிடம் காணப்படவில்லை. தெய்வபக்தி, கடமையை நிறைவேற்ற வேண்டுமென்ற அவா, நீதி வழுவாமை முதலிய குணங்கள் இளைய வில்லியத்தினிடம் காணப்படவில்லை. காமக் குரோத மத மார்ச்சரியம் முதலிய சகல துர்க்குணங்களும் அவரிடம் பூர்த்தியாக நிறைந்திருந்தன.

பாரான்களினது கலகம்

இவர் பட்டத்திற்கு வந்த அடுத்த வருஷமே, (அதாவது 1088ல்) ஒரு கலகம் உண்டாயிற்று. வில்லியத்தின் மூத்த குமாரரான ராபர்த் மிக மந்த குணம் வாய்ந்தவராதலால், அவர் இங்கிலாந்திற்கு அரசரானல், தாங்கள் சுயாதிகாரம் பெற்றுவிடலாமென்றும், இரண்டாவது வில்லியத்தினிடம் தமது கை ஓங்காதென்றும் கண்டு சில பாரான்கள் ஆதாவைத் தங்களுக்குத் தலைவராக ஏற்படுத்திக் கொண்டு வில்லியத்திற்கு விரோதமாகக் கிளம்பினர். ஆதா என்பவர் ராச்சேஸ்தர் (Rochester), அரன்தல் (Arundel) ஆகிய இடங்களில் இருந்த கோட்டைகளை பலப்படுத்தத் தொடங்கினர். வில்லியம் II அபாரமான ஊக்கத்தோடு முயற்சிகள் செய்தார். லான்பரங்கும் அவருக்கு உறுதியான நண்பராயிருந்தார். இங்கிலீஷ் குடிமக்கள் எல்லோரும்

அரசருக்குப் பக்க பலமா யிருந்தனர். ஏனெனில் அவர் ஒழுங்காய் அரசாளுவதாகவும், காடுகள் சம்பந்தமான சட்டங்களை விலக்கி விடுவதாகவும், வரிகளைக் குறைப்பதாகவும் வாக்களித்திருந்தார். அதுவன்றி, நார்மன் பாரான்கள் அவர்களைப் பல வகைகளில் வதைத்தனர். ஆகவே, குடிமக்கள் அரசருடைய கட்சியில் சேர்ந்து கொண்டனர். வர்சேஸ்தர் (Worcester) என்னுமிடத்து பிஷப்பான (அக்காலத்தில் இருந்த ஒரே ஓர் இங்கிலீஷ் பிஷப்பான) உள்ப்ஸ்தன் (Wulfstan) என்பவரும் அரசருடன் சேர்ந்து கொண்டார். ஆதா அரன்தல் கோட்டையில் இருந்தபடி, நார்மண்டியிலிருந்த ராபர்த்தின் வருகையை எதிர்பார்த்த சமயத்தில் வில்லியம் II பெருத்த இங்கிலீஷ் சேனைகளுடன் சென்று அரன்தல் கோட்டையை சுமார் ஏழுவார காலம் முற்றுகை போட்டு, அதைப் பிடித்துக்கொண்டார்; ராச்சேஸ்தரைத் தமது வசம் ஒப்படைத்து விடும்பொருட்டு, வில்லியம் ஆதாவை அந்தக் கோட்டைக்கு அனுப்ப, அவர் வஞ்சகமாக நடந்துகொண்டு, கோட்டைக்குள் புகுந்தவுடன், வில்லியத்தை எதிர்க்கலானார். அப்போது வில்லியம் ஏராளமான இங்கிலீஷ் சேனைகளைத் திரட்டி வைத்துக் கொண்டு அந்த இடத்தை முற்றுகை போட்டுப் பிடித்துக் கொண்டார். ஆதாவுக்கு மரண தண்டனை விதிக்கும்படி இங்கிலீஷ்காரர்கள் கூறினராலும் அரசர், தமது சிறிய தகப்பனார் விஷயத்தில் தயாளம் வகித்து, அவரை நாட்டை விட்டு வெளியில் துரத்திவிட்டார். அந்தக் கலகத்தில் சேர்ந்திருந்த ராஜர், மாண்ட்காமரி முதலியோர் அரசரிடம் சரணாகதி யடைந்தனர். ஆனால் வடக்கில் இருந்த ராபர்த் மௌப்ரே (Robert Mowbray) என்பவர் மாத்திரம் அப்போதும் அடக்கப்படாமல் இருந்தார்.

நார்மண்டியில் ராபர்த்தோடு சச்சரவு

1089-ம் வருஷத்தில் லான்பரங்க் காலகதி யடைந்தார். அவர் இருந்த வரையில் அவருடைய செல்வாக்கினால் வில்லியம் II ஒழுங்காக ஆண்டு வந்தார். அவர் இறந்து போகவே, வில்லியம் II அடக்குவாரற்று சுயேச்சையாக நடந்துகொள்ளத் தொடங்கி நார்மண்டியையும், கூடுமானால் மெயினையும் கைப்பற்றிக்கொள்ளக் கருதி 1090-ம் வருஷம் புறப்பட்டார். ராபர்த் நார்மண்டியை ஆளும் திறனற்றிருந்தாராதலால், அந்நாட்டில் அராஜகம் குடிகொண்டிருந்தது. அவருக்கு எப்போதும் பணத்தேவை அதிகமாதலால், அவர் தமது நார்மண்டி சமஸ்தானத்தில் மேற்கு பாகமாகிய கோதண்டன் (Cotentin), அவைரஞ்சன் (Avaranchin) என்னும் பகுதிகளை, தமது இளைய சகோதரரும், வில்லியத்தினது புதல்வர்கள் எல்லோரிலும் மிக புத்திசாலியுமான ஹென்ரி என்பவருக்கு விற்றுவிட்டார். ராபர்த்தைவிட வில்லியம் II அதிக பராக்கிரமசாலி என்றுணர்ந்து சில பாரான்கள் பின்னவருக்கு உதவி செய்யலாயினர். 1091-ல் வில்லியமே ஒரு சேனையோடு நார்மண்டிக்குப் போய்ச் சேர்ந்தார். பிரான்ஸ் தேசத்தரசரும், சில பாரான்களும் மத்தியஸ்தமாயிருந்து சமாதானம் செய்துவிட்டனர். அதனால் சகோதரர்கள் இருவரும் கேயன் என்னுமிடத்தில் 1091-ல் உடன்படிக்கை செய்துகொண்டனர். ராபர்த்து இங்கிலாந்தில் சில சமஸ்தானங்களைப் பெற்றுக்கொண்டு, அவைகளைத் தவிர தமக்கு இங்கிலாந்தில் வேறு உரிமையில்லையென்று விடுதலை எழுதிக்கொடுத்தார். நார்மண்டியில் சில உறுதியான கோட்டைகளை வில்லியம் II வைத்துக் கொள்ள அநுமதிக்கப்பட்டார். அந்த உடன்படிக்கையில் இன்னொரு சரத்தும் சேர்க்கப்பட்டது. இருவருள் யார்

முன்னால் இறந்துபோனாலும், உயிரோடிருப்பவர் இங்கிலாந்தையும் நார்மண்டியையும் ஆளுவது என்று நிர்ணயித்துக் கொண்டனர். அந்த உடன்படிக்கை முடிவானவுடன் இரண்டு சகோதரர்களும் சேர்ந்து மூன்றாவது சகோதரரான ஹென்றியைத் தாக்கி அவருடைய நிலங்களைப் பிடுங்கிக்கொண்டனர். அப்போது நார்மண்டியிலிருந்த எத்திலிங் எட்காரும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்.

ராஹுல்ப் பளம்பரட் (Ranulf Flambard)

லான்பரங்க் இறந்துபோன பின் சுமார் நான்குவருஷ காலம் வரையில் கண்டர்புரி அரச்பிஷப்பின் பதவிக்கு அரசர் எவரையும் நியமிக்காமலே இருந்தார். அந்த சந்தர்ப்பத்தில் அரசருக்கு யோசனைகள் சொல்லவும், அவருக்குப் பிரதிநிதியாயிருந்து காரியங்களை நிர்வகிக்கவும் ஒருவர் ஏற்பட்டார். அவருடைய பெயர் ராஹுல்ப், அல்லது, ரால்ப் என்பது. பளம்பரடு என்பதற்கு தீவட்டி என்று பொருளாம். அதாவது, தீவட்டிக் கொள்ளைக்காரர், அல்லது; பந்தத்தைக் கட்டிக் கொளுத்துகிறவர் என்பது உட்கருத்து. அந்தப் புனைப்பெயரால் எல்லோரும் அவரைக் குறித்தனர். (பரடு என்பதற்கு புலி என்று ஓர் அர்த்தமுண்டு. பளம்பரடு என்பது பழைய புலி என்ற கருத்தைத் தருகிறது?) இவர் முதலில் நார்மண்டியில் ஒரு குமாஸ்தா வேலையில் இருந்து, தமது புத்தி சாதுர்யத்தினால் படிப்படியாய் உயர்ந்து பெரிய பதவியை அடைந்தவர். இவர் ஆசியமாய்ப் பேசுகிறவர்; கூர்மையான புத்தியுடையவர். ஆனால், எதையும் கூசாமல் செய்யக்கூடிய அயோக்கியர். அரசருடைய கஜானாவை சுலபமாய் நிரப்புவதற்கு யுக்திகள் சொல்வதில் இவர் நிபுணர். கன்பெஸர் எட்வரடின் காலத்தில் இவர் இங்கிலாந்

தில் இருந்தவர். டூம்ஸ்டே நிலக்கணிதி நடந்த காலத்தில், இவர் அதில் ஒரு கமிஷனராயிருந்தார். இவரை வில்லியம் II துரஹும் சமஸ்தானத்தின் பீஷப்பாக நியமித்ததன்றி, தமது ஜஸ்டிசீயராகவும் நியமித்துக்கொண்டார். அரசர் நார்மண்டி முதலிய இடங்களுக்குப் போன காலங்களில் பிரதிநிதிகளை நியமித்துவிட்டுப் போவது வழக்கம். அதற்காக ஜஸ்டிசியர் என்னும் ஓர் உத்தியோகத்தை வில்லியம் II ஏற்படுத்திவிட்டார். அது முதல்மந்திரி பதவிக்கு சமதையானது. அரசர் நாட்டில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், நாட்டின் நிர்வாகப் பொறுப்பை அவர் வகித்தார். அரசருக்கு பதிலாக அவர் தம் பெயரால் அரச ஆக்கினைகளைப் பிறப்பித்தார். அந்தப் பதவிக்கு, அரசர் தமக்கு சாப்பளைய (Chaplain) ருயிருந்த ரானுல்பை நியமித்துவிட்டார். அவர் நாடு முழுதும் பிரயாணம்போய் வழக்குகளைப் பரிசிலனை செய்து, இலஞ்சம் பறிக்கலானுர். அவர் இன்னொரு யுக்தியும் செய்தார். ஒரு பீஷப்போ, அப்பாத்தோ இறந்துபோனுல், அந்தப் பதவியில் வேறு எவரையும் நியமிக்காமல் அதைக் காலியாகவே வைத்திருந்து அதனுல் கிடைத்த வரிகளை அரசருக்குச் சேர்த்துவிடுவார். ரானுல்ப் என்பவர் தாம் வசூலித்த அக்கிரம இலஞ்சங்கள், வரிகள் ஆகிய யாவற்றிற்கும் சட்டபூர்வமான ஆதாரத்தைக் காட்டியே அவைகளை அபகரித்தார். பீஷப்புகள் முதலிய மதஸ்தாபன அதிகாரிகள் வைத்திருந்த நிலங்களும் பியூடல் முறைமைப்படி கொடுக்கப்பட்டவை என்ற வியாக்யானத்தை அவர் அரசருக்குச் சொல்லி, இதர குடிமக்களிடம் வசூலிக்கப்பட்ட வரிகளையெல்லாம் மதஸ்தாபன அதிகாரிகளிடத்திலும் வசூலிக்கத் தொடங்கினுர். அவர்கள் உத்தியோகங்களை வகிக்கும் காலத்தில், தலைமைக் குடியானவர்கள்

செலுத்தியதுபோலப் பணம் செலுத்தக் கட்டாயப்படுத்தப் பட்டனர் ; மதஸ்தாபன அதிகாரிகளுடைய நிலங்களை அரசர் இச்சைப்பட்டால் பிடுங்கிக்கொள்ளலாம் என்ற அநுஷ்டானத்தையும் ஏற்படுத்திவிட்டனர். வார்சுதாரர்கள் மைனராயிருந்தால், அவர்களுடைய வருமானங்களையெல்லாம் அரசர் அபகரித்துக் கொண்டார். பணக்கார வார்சுதாரிகள் மைனராயிருந்தால், அவர்களை அரசர் தம் நண்பர்களுக்கு விவாகம் செய்து வைத்துவிட்டார். மைனருடைய நிலங்களை அரசருடைய உத்தியோகஸ்தர்கள் நாசமாக்கியதன்றி, அவற்றிலிருந்த மரங்கள் முதலியவற்றை வெட்டி நிலங்களைப் பாழ்படுத்தி, குடியானவர்களை ஏழையாக்கி அந்த நிலைமையில், நிலங்களை மேஜரானவர்களிடம் ஒப்படைத்தனர். இவ்வாறு பியூடாலிஸத்தை ஆதாரமாகக்கொண்டு பலவிதமான அக்கிரமங்கள் இழைக்கப்பட்டதற் கெல்லாம், ராஜுல்ப் உத்தரவாதியா யிருந்தார். மதஸ்தாபன உத்தியோகஸ்தர்களுடைய பதவிகளைக் காலியாகவே வைத்துக் கொள்ளையடிப்பதை அரசர் எவ்வளவு தூரம் அநுஷ்டித்தாரென்பதை நாம் சில புள்ளிகளைக் கொண்டு நிரூபிக்கலாம். அவருடைய அரசாட்சி முடிவில் ஓர் அரச்பிஷப், நான்கு பிஷப்புகள், பதினொரு அப்பாத்கள் ஆகியோருடைய பதவிகள் காலியாயிருந்தனவாம். பாடுபட்டு உழைத்த ஏழைகள் முதல் பாரான்கள் வரையிலுள்ள சகலமானவர்களையும் ராஜுல்ப் சகிக்கவொண்ணாத வரிச்சுமையால் ஒறுத்தார். கொள்ளைக்காரன், கொலைஞன் ஆகியோரைத் தூக்கிலிடும் சமயத்தில், அவர்கள் ஏதேனும் இலஞ்சம் கொடுத்தால், ராஜுல்ப் உடனே அவர்களுடைய கழுத்துச் சுருக்கைத் தளர்த்திவிடத் தயாராகிவிடுவாராம்.

மால்கம் கன்மாரது படையெடுப்பு

அரசர் தமது அண்ணனோடு உடன்படிக்கை செய்து கொண்டவுடனே இங்கிலாந்திற்குத் திரும்பிவர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. நார்மண்டியிலிருந்து துரத்தி விடப்பட்ட ஏயட்காரை ஸ்காட்லண்ட் அரசரான மால்கம் கன்மார் (Malcolm Canmore=மால் கொல்லம் கன்மார் = மால்கொல்லம் கருமார். கொல்லர்=கருமார் ?) மறுபடி ஏற்று ஆதரித்ததன்றி, நான்காவது தடவை இங்கிலாந்திற்குள் படையெடுத்து வந்தார். வில்லியம் II தமது அண்ணன் ராபர்த்தோடு 1091-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் வடக்கில் செல்ல, லோத்தியன் என்னுமிடத்தில் இருதாத்தாரும் சந்தித்தனர். மால்கம் வில்லியத்தை(II)ப் பணிந்து, அவருக்கு அடங்கிய மனிதர் ஆனார். அதற்கு அடுத்த வருஷத்தில், வில்லியம் II இங்கிலாந்தின் வடக்கு எல்லையை பலப்படுத்தக் கருதி, தார்விண்ணன் (Thorfinn) என்னும் சீமானுடைய அநுபவத்திலிருந்த கம்பர்லண்ட் (Cumberland) என்ற நாட்டைக் கைப்பற்றி, அதை ஒரு புதிய இங்கிலீஷ் கவுண்டியாக்கி, கேரளீஸ் (இல்)ல (Carlisle) என்ற இடத்தைப் பிடித்து அதை ஓர் எல்லைப் பட்டண மாக்கினார். அடுத்த அரசருடைய ஆட்சியில் இது ஒரு புதிய பீஷப்பின் இருப்பிடமாயிற்று. கம்பர்லண்டில் இங்கிலீஷ்காரர்களும், பிளமிஷ்காரர்களும் குடியேறினர். அதன்பிறகு களௌசேஸ்தர் என்னுமிடத்தில் ரூபஸ் மால்கத்தை தூஷித்தது காரணமாய், 1093-ல் மால்கம் இங்கிலாந்தின்மீது படையெடுத்து வர, இருவருக்கும் போர் நடந்தது. மால்கமும், அவருடைய மூத்த குமாரரான எட்வரடும் இறந்துபோயினர். அதன் பிறகு, ஸ்காட்லண்டிற்கு யார் அரசராவ தென்பதைப் பற்றி அவ்விடத்திலிருந்த இரண்டு கட்சிக்காரர்

களுக்குள் மிக பயங்கரமான சச்சரவுகள் ஏற்பட்டன. முடிவாக, 1097-ல், ஏத்திலிங் எட்கார், ஓர் இங்கிலீஷ் சேனையினது உதவியைக் கொண்டு, மால்கமுக்கும் மார்க்கரத்துக்கும் உதிக்க புதல்வரான எட்கார் என்பவருக்கு முடிசூட்டினார். அதன் பிறகு, இங்கிலாந்தின் இராஜ வம்சத்தினரது அதிகாரம் ஸ்காட்லண்டிலும் நிலைத்துப் போயிற்று.

ராபர்த்தோடு புதிய சச்சரவு

வில்லியம் II தமது தமயனுக்குச் சேரவேண்டிய உடன்படிக்கை தஸ்தாவேஜை (Indemnity)யைக் கொடுக்காமல் தாமதப்படுத்திக் கொண்டே வந்தார். அது மறுபடி கலகத்தை விளைவித்துப் போரில் முடிந்தது. வில்லியம் தமக்கு எதிர்ப்பட்ட இடங்களையெல்லாம் பிடித்துக் கொண்டு போக, மறுபடி பிரான்ஸ் அரசர் தலையிட்டார். அந்த நெருக்கடியில் வில்லியம் இங்கிலீஷ் காலாட்படையொன்றைத் திரட்டுமாறு தமது ஜஸ்டிசியரான பளம்பரடு என்பவருக்கு உத்தரவனுப்பினார். பளம்பரடு ஹேஸ்டிங்ஸ் என்னுமிடத்தில் சுமார் 20,000 இங்கிலீஷ்காரரை வரவழைத்தார். அவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் ஷயரில் கொடுக்கப்பட்ட 10 ஷில்லிங் பணத்துடன் வந்து கூடினர். பளம்பரடு அவர்களிடமிருந்த பணத்தையெல்லாம் வசூலித்துக்கொண்டு, அவர்களை வீடுகளுக்குத் திருப்பி யனுப்பிவிட்டார். இவ்வாறு அபகரிக்கப்பட்ட 10,000 பவுனும் வில்லியத்திற்குப் போய்ச் சேர, அவர் அதை பிரான்ஸ் அரசருக்கு இலஞ்சமாகக் கொடுத்து, பின்னவர் ராபர்த்துக்கு அநுகூலமாகத் தலையிடாதிருக்கும்படி செய்தனுப்பிவிட்டு, நார்மண்டியைப் பிடித்துக்கொள்ள முயல, அதற்குள் வேல்ஸ் எல்லைப் புறங்களில் நடந்த சில சம்பவங்களைக் கேட்டு

உடனே நார்மண்டியை விட்டுத் திரும்பி வரவேண்டியவ ரானார்.

வில்லியமும் II, வேல்ஸும்

வெற்றி கொண்ட வில்லியம் தமது சேனைகளுடன் அதற்கு முன் ஸேயின்ட் டேவிட்'ஸ் (St. David's) என் னும் இடம் வரையில் போய், கார்டிப் கோட்டையை (Cardiff Castle)க் கட்டினார். ஆனால் ரூபஸ் அரசர் காலம் வரை யில் வேல்ஸில் விபரீதமான கலகம் எதுவும் ஏற்படவில்லை. 1094-ம் வருஷம் வில்லியம் II நார்மண்டியில் இருந்தா ரென்பதை அறிந்து கொண்டவுடன், வேல்ஸ்காரர்கள் மாண்ட் காமரி கோட்டையைப் பிடித்துக்கொண்டனர். அத னால் எல்லையில் திறப்பு ஏற்பட்டுப் போகவே, அவர்கள் தங்களுடைய மலைக் காடுகளுக்குள்ளிருந்து சீஷயர், ஷராப் ஷயர், ஏயர்போர்ட்ஷயர் என்னப்படுமிடங்களுக்கு வந்து நிறைந்துபோயினர். 1094, 1095-ம் வருஷங்களில் வில்லி யம் II வேல்ஸ்காரரோடு மூன்றுதரம் சண்டையிட்டா ரானு லும், அவர்களை வெல்ல, அவரால் இயலவில்லை. ஏனென் றால், அவர்கள் சேனைகளோடு வந்து நின்று ஒழுங்கான யுத்தத்தை நடத்தாமல் மலைச் சந்துகளில் ஒளிந்து ஒளிந்தி ருந்து, தனித் தனியா யகப்படுவோரை வெட்டித் தீர்த்தனர். ஆகவே, வில்லியம் II அவர்களை அடக்க வேறு யுக்திகளைச் செய்யலானார். தம் நாட்டுப் பாரான்கள் வேல்ஸ் நாட்டில் நுழைந்து எவ்வளவு நிலத்தைக் கைப்பற்றிக் கொண்டாலும், அதை அவர்கள் வரி செலுத்தாமல் இனமாக வைத்துக் கொள்ளலாம் என்று அறிக்கையிடவே, எல்லைப் புறத்தி லிருந்த முரட்டுப் பாரான்களுக்கு அந்த விஷயத்தில் ஒரு வித ஆவேசம் கிளம்பிவிட்டது. அவர்கள் வேல்ஸின் தென்

பாகம், வேல்ஸின் பள்ளத்தாக்கு பாகம் ஆகியவற்றைக் கைப்பற்றிக் கொண்டனர். பிரெஞ்சுக்காரர்கள், இங்கிலீஷ் காரர்கள், பிளமிஷ்காரர்கள் ஆகியோர் பலர் அவ்விடங்களில் குடியேறவும் தொடங்கினர். அவ்விதம் வேல்ஸினது தென் பாகத்தைக் கைப்பற்றிய பாரான்களுடைய பாதுகாப்பிற் காக வில்லியம் அரசர் சீஷயர் எல்லை, செவரன் பள்ளத் தாக்கு ஆகிய இடங்களில் குன்றுகளின்மேல் வரிசையாகப் பல கோட்டைகளைக் கட்டி, அவைகளை ஷெ பாரான்கள் வசத்தில் ஒப்படைத்துவிட்டார். இவ்வாறு எல்லைப்புறத்தில் கிளம்பிய பாரான்கள் மா(அ)ரசர்ஸ் (Marchers or Lords of the Marches) என்று குறிக்கப்பட்டனர்.

ராபர்த் மௌபரை (Robert Mowbray) கலகம்

1095-ம் வருஷத்தில் வில்லியம் II இன்னொரு கலகத்தை அடக்கவேண்டியவரானார். நார்த்தம்பர்லண்டின் ஏயரானான ராபர்த் மௌபரை என்பவர் அரசரை சிம்மாசனத்திலிருந்து ஓட்டிவிட வேண்டுமென்ற கருத்தோடு சேனைகளை பாம்பரக் (Bamborough) என்ற கோட்டையில் சேர்த்துக்கொண்டிருந்தார். வில்லியம் II தமது சேனைகளுடன் அங்கே சென்று அந்தக் கோட்டையை வளைத்துக்கொண்டார். ஆனால், அது நிரம்பவும் அழுத்தமான கோட்டையாதலால், அதற்குள் நுழைவது கூடாததாயிருந்தது. அதுவன்றி, கடலின் பக்கமாய் அதற்குள் உணவுப்பொருட்கள், தளவாடங்கள் முதலியவை வர ஏராளமான வசதிகள் இருந்தமையால், அதற்குள் இருந்தவர்களைப் பட்டினி போட்டுக் கொல்வதும் பலியாததாயிற்று. ஆகவே ரூபஸ் ஒரு யுக்தி செய்தார். அந்தக் கோட்டைக்கு எதிரில் இன்னொரு கோட்டையைக் கட்டி அதற்கு மேல்வாயசன் (Malvoisin=மேல்

பக்கத்துக் காக்கை?) என்று பெயரிட்டார். அதற்கு "துர்க் குறியைக் காட்டும் சகா" என்பது கருத்தாம். வில்லியம் அதைக் கட்டி அங்கு தம் படைகளை வைத்துவிட்டுத் தெற்கில் சென்றுவிட்டார். அவருடைய தந்திரம் பலித்து விட்டது. மௌபரை வெளியில் வரத்தொடங்கவே, வில்லியத்தினது சேனைகள் அவரைப் பிடித்துக் கொண்டன. அவருடைய மனைவி கோட்டையை அப்போதும் விடாமல் வைத்துக்கொண்டிருந்தாள். அவள் பார்த்துக்கொண்டிருக்கையில் மௌபரையின் கண்களை அவித்து விடுவதாக சேனைகள் பயமுறுத்தவே, 1095ம் வருஷத்தில் அவள் கோட்டையை விட்டுவிட்டாள். அவருடைய அபாரமான சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டுப் போயின; அவரும், ஆயுள்காலம் முடிய சிறைச்சாலை தண்டனை யடைந்தார். அதோடு பியூடல் கட்சியார் முற்றிலும் பயந்து ரூபஸ் அரசாட்சி முடிய அமைதியாயிருந்தனர்.

பியூடல் கடமைகள்

நிலத்தைப் பெற்றுக்கொள்வோர் தம் தலைவருக்கு வழக்கமாகச் செலுத்தும் வரிகள் பியூடல் கடமைகள் என்னப்படுகின்றன. இவைகளே இரண்டாவது சேரிளஸ் காலம் வரையில் அரசருடைய வருமானத்தில் பெரும்பகுதியாயிருந்தன. அரசருக்கு இன்றியமையாத குதிரைப்படை வீரர்களை சேகரிப்பதே பியூடலிஸத்தின் அடிப்படையான உத்தேசம். அரசருடைய தலைமைக் குடியானவர்கள் மீது அந்தப் பொறுப்பு சுமத்தப்படவே, அவர்கள் தம் தம் படைகளுக்குப் பரம்பரையான சேனாதிபதிகளாயிருந்தனர். அவர்களுள் எவரேனும் இறந்து போனால், அவருடைய நிலங்கள் அரசருக்கு வந்து சேர்ந்து போனதாகக் கருதப்

பட்டன. இறந்து போனவருடைய வார்சுதாரர் ரிலீப் (Relief); அல்லது, ரிலேவியம் (Relevium) என்று குறிக்கப்பட்ட ஒரு தொகையைச் செலுத்தவேண்டும். செலுத்தாவிடில், நிலங்களை அவர் பெற்றுக் கொண்டவர் ஆகமாட்டார்; வார்சுதாரர் மைனராயிருந்தால், அரசர் ஒரு போஷகரை நியமிப்பார். அவர் அரசருடைய உரிமையைப் பாதுகாக்கும் பொருட்டு மைனருடைய சொத்தை நிர்வகிப்பார். அதனால் அரசருக்கு ஊதியம் ஏராளமாக ஏற்பட்டது. மைனர் மேஜர் ஆனவுடன் ரிலீப் என்ற தொகையைச் செலுத்தி சொத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மைனர் பெண்பிள்ளையாயிருந்தால் அவள் அரசருடைய பகைவரை மணக்கக் கூடாதென்னும் காரணத்திற்காக, அரசரே அவளுக்குப் புருஷனை வரிக்கும் அதிகாரத்தையும் வகித்தார். அந்த இனத்தில் அரசருடைய நண்பர்களுக்கு, சொத்துகள் வாய்ந்த பணக்காரப் பெண்கள் விவாகம் செய்து வைக்கப்பட்டனர். அரசரால் வரிக்கப்பட்ட மணமகன் பெண்ணுக்குப் பிடித்தமாயில்லாவிடில், பெண் அந்த நிர்ப்பந்தத்திலிருந்து தன்னை விலக்குவதற்காக அரசருக்கு ஓர் அபராதத்தொகையைச் செலுத்தவேண்டும். மேலே குறிக்கப்பட்ட மூன்று வகையான வருமானங்கள் குடியானவர்களுடைய வாழ்க்கையின் மாறுதல்களினால் அரசருக்கு ஏற்பட்டவை. அரசருடைய குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் சில மாறுதல்களின் பயனாகவும் அவருக்குக் குடிமக்களிடமிருந்து சில வருவாய்கள் கிடைத்தன. அரசர் சிறைப்பட்டுப்போனால், அவரை விடுவிக்கக் கொடுக்கப்படும் தொகை, அவருடைய மூத்த குமாரியை முதல் தடவை மணம் புரிவிக்கையில் கொடுக்கப்படும் ஸ்ரீதனம், அரசருடைய மூத்த குமாரர் நைட் பட்டம் பெறும்போது

சன்மானம் வழங்குவது ஆகிய இனங்களில் அரசருக்கு ஏராளமான கடமைப் பணம் கிடைத்தது. அரசருடைய தலைமைக் குடியானவர்களும் இதேபோல தமக்கு உள்பட்ட கீழ்க்குடியானவர்களிடம் இத்தனை வித வருமானங்களையும் பெற்றுக்கொண்டனர். ஆனால் அவைகள் ஹிறியத் (Heriot= இறையத், றயத்வாரி?) என்று குறிக்கப்பட்டன.

வில்லியமும் (II), மதஸ்தாபனமும்

மதஸ்தாபனத்தைச் சேர்ந்த குருமார்களும், மற்ற சாதாரணக் குடியானவர்கள் போலவே, நிலங்களை பியூடல் ஏற்பாட்டில் அரசரிடம் பெற்றுக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்களது விஷயத்தில் மைனரை போஷிப்பது, வார்சுதாரிகளை மணம் புரிவிப்பது என்பன இல்லையாதலால், அதனால் அரசருக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஈடு செய்து கொள்வதற்காக பளம்பரடு, காலியாகும் ஸ்தானங்களுக்கு வேறு எவரையும் நியமிக்காமல் அவைகளைக் காலியாகவே வைத்துக்கொண்டு, அவற்றிலிருந்து வந்த வருமானங்களை யெல்லாம் அபகரித்ததன்றி,புதிதாய் நியமிக்கப்படுவோரிடம் ரிலீப் என்ற பெயரால் ஒரு பெரிய தொகையைப் பெற்றுக் கொண்டார். லான்பரங்க் இறந்துபோன பிறகு, கண்டர்புரி யின் வருமானத்தையெல்லாம் அபகரிக்க வேண்டுமென்னும் கருத்துடன், அந்தப் பதவிக்கு வேறு எவரையும் நியமிக்கா மல் பளம்பரடும், அரசரும் 1093ம் வருஷம்வரையில் வைத்தி ருந்தனர். வில்லியம் II ஜுரநோயில் வீழ்ந்து, தாம் இறந்துபோய் விடுவோம் என்று அஞ்சும்படியான நிலை மையை அடையவே, அவர் தாம் செய்த அக்கிரமங்களைப் பற்றிக் கழிவிரக்கங் கொண்டதன்றி, முக்கியமாக மதஸ் தாபன விஷயத்திலேயே ஆஹ்லாதமடைந்து, உடனே ஓர்

V50
N34

அரச்பிஷப்பை நியமித்தார். புதிய அரச்பிஷப்பான அஞ்செலம் (Anselm = அம் + செல்லம் = அஞ்செல்லம் — அழகிய செல்வக்குமாரன்?) என்பது. அஞ்செலம் என்பவர் இற்றாலியில் அயாஸ்தா (Aosta) என்ற ஊரில் பிறந்தவர். அவர் லான்பரங்கைப் போலவே பொருளீட்டும் பொருட்டு நார்மண்டிக்குப் போய், விரக்தியடைந்து உலகைத் துறந்தவர். லான்பரங்கிற்குப்பின் அவர் பேக் (Bec) என்னும் மடாலயத்தில் பெரியார் பதவியை வகித்தார். அவ்விடத்தில் அவரால் எழுதப்பட்ட குர் தேயஸ் ஹோமா (Cur Deus Homo) என்ற நூல், அவர் பெரிய மகான் என்பதைக் காட்டுகிறது. உண்மையில் அவர் லான்பரங்கைவிடப் பன்மடங்கு மேலானவர். அவரைப்போன்ற பரமதயாளுவும் தூய்மையான மனிதரும் அக்காலத்தில் கிடைப்பது அரிதாகையால், அவரை எல்லோரும் தெய்வமாகக் கொண்டாடினர். அவர் அபாரமான மனோதிடமும், மனோதைரியமும், மாசுமறுவற்ற ஒழுக்கத்தூய்மையும் வாய்ந்தவராயிருந்தார். வில்லியம் II தம்மைக் கண்டர்புரியினது அரச்பிஷப்பாக நியமிக்க விரும்புகிறார் என்பதைக் கேட்ட காலத்தில், வயோதிக நிலைமையை யடைந்திருந்தவரான அஞ்செலம் அதை ஏற்றுக்கொள்ள விரும்பாதவராய், "மதஸ்தாபனமாகிய ஏரை உரமான இரண்டு எருதுகள் இழுத்து வந்திருக்கின்றன. என்னைப்போன்ற ஓர் எளிய துர்ப்பலமான கிழ ஆட்டை ஒரு பயங்கரமான காளையோடு பிணைத்தால், நான் எத்தகைய நன்மையைச் செய்ய மாட்டுவேன்!" என்றாராம். ஆனால் அவர் அப்போது இங்கிலாந்திற்கு வந்திருந்தாராதலால், நோயாளியாகப் படுத்திருந்த அரசரிடம் வரும்படி அவர் வற்புறுத்தப்பட்டார். அவ்விடத்தில் அவரைச் சுற்றியிருந்த பிஷப்பு

68289

கள், அரச்பீஷப்பினது சிலுவைத்தண்டத்தை அஞ்சேலத்தின் கையில் வலுக்கட்டாயமாகக் கொடுத்து, அவரை காத்தீதிரில் ஆலயத்தில் அவருடைய பீடத்தில் அமர்த்தும் பொருட்டு விசையாய் அழைத்துக்கொண்டு போயினர். அவர் அந்தப் பீடத்திற்கு முற்றிலும் தகுதியானவரென்பது உண்மையே; ஆனால், வில்லியம் II தேறி எழுந்தபின், தமது பழைய அக்கிரமச் செய்கைகளை நடத்தத் தொடங்கி விட்டார். அவருடைய குணத்திற்கும், அஞ்செலத்தினது குணத்திற்கும் சிறிதும் பொருத்த மென்பதே இல்லை. அரசர் மதஸ்தாபன சொத்துகளைக் கொள்ளை கொண்டதையும், அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் இழைத்த பாவகரமான செய்கைகளையும் பார்க்க, அஞ்சேலம் சஞ்சலமடையலானார். அந்த சமயத்தில் ரோம் நகரில் பாப்பினது பீடத்திற்கு இரண்டு உரிமையாளிகள் ஏற்பட்டிருந்தனர். ஒருவருடைய பெயர் அரப்பன் (Urban); இன்னொருவருடைய பெயர் கிளமன்ட் (Clement). அஞ்சேலம் தமது பீடத்தை வகித்தவுடன், அரப்பனிடம் தாம் சென்று தமது பாலியத்தைப் பெற்றுக்கொண்டு வரும் பொருட்டு ரோம் நகருக்குப் போக அநுமதி வேண்டுமென்று கேட்க, வில்லியம் II அரப்பனையும், கிளமன்டையும் பாப்பாய் அங்கீகரிக்க வில்லை யாதலால், அஞ்செலம் கோரிய அநுமதியைக் கொடுக்க அரசர் மறுத்து விட்டார். 1095ம் வருஷத்தில் ராகிங்ஹாம் (Rockingham) என்னும் கோட்டையில் ஒரு பெரிய மந்திராலோசனை மகாநாடு கூட்டப்பட்டது. அஞ்சேலம் ரோமுக்குப் போகிறதா கூடாதா என்பதைத் தீர்மானிக்கவே அந்த சபை கூட்டப்பட்டது. மதகுருமார்களுள் பெரும்பாலோர் அரசருக்கு அநுகூலமாயிருந்தனர். மதஸ்தாபனத்தில் சம்பந்தமற்ற பாரான்கள் அஞ்சே

லத்திற்கு ஆதரவா யிருந்தனர். கிரமப்படி பார்க்கை யில், வெற்றி அஞ்சேலத்திற்கே கிடைத்ததானாலும், எவ் வித தீர்மானமும் நிறைவேற்றாமல் மகாநாடு கலைந் தது. இரண்டு வருஷ காலத்திற்குப் பிறகு அரசருக் கும், அஞ்சேலத்திற்கும் இன்னொரு சச்சரவு ஏற்பட் டது. அஞ்செலம் வேல்ஸிற்கு அனுப்பிய சேனை சொற்ப மாயும், ஒழுங்கானபடி ஆயுதங்கள், இதர வசதிகள் முதலியவற்றைச் சேகரித்து வராததாயு மிருந்ததுபற்றி, வில்லியம் II அஞ்செலத்தின் மீது கோபங்கொண்டு, பின்னவர் தமது பியூடல் கடமையில் தவறியதாகக் குற்றம் சுமத்தி, அதைப்பற்றி விசாரணை நடத்தும்படி தமது நீதிஸ்தலத்தாரிடம் கேட்டுக் கொண்டார். அஞ்சேலம் அதைப்பற்றி பாப்புதான் விசாரணை நடத்த வேண்டு மென்றார். அரசர் அதை எதிர்த்தார். விண்சேஸ்தர் (Winchester) என்ற இடத்தில் கூடிய மந்திராலோசனை சபையில் அஞ்செலத்தினது கட்சிக்கு ஆதரவு கிடைக்க வில்லை. ஆனாலும், 1097ல் அஞ்செலம் அரசருடைய உத்தரவின்றி புறப்பட்டு ரோமிற்குப் போக, அவ்விடத்தில் பாப்பு அவரை வரவேற்று, மதஸ்தாபனத்தினது உரிமை களைக் காத்தது பற்றி, அவரைப் புகழ்ந்தார். அவ்வாறு சென்ற அஞ்சேலம், வில்லியம் II உயிரோடிருந்தவரையில் திரும்பி இங்கிலாந்திற்கு வரவே இல்லை. ஆனால் வில்லியம் II அரச்பிஷப்பினது சொத்துகளை யெல்லாம் சுயேச்சையாய் அபகரிக்கலானார். வில்லியம் II பணப் பேராசையினாலும் கொடுங்கோன்மையினாலும் அவ்வாறு நடந்துகொண்டா ரென்பது சந்தேகமற விளக்குகிறது; அஞ்சேலம் தமக்கு உத்தியோகம் கிடைத்ததற்காக பெரிய தொகையை அரசருக்கு வழங்க மறுத்ததன்றி, தமது

பாலையத்தை கண்டர்புரி ஆலயத்தின் பலிபீடத்திலிருந்து எடுத்துக் கொள்ளலாமே யன்றி அரசரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ள இயலாதென்று பிடிவாதமாகக் கூறினர். ஆனால், அரசர் அரப்பனை பாப்பாகப் ஏற்றுக் கொள்ளா திருக்கையில் அஞ்சேலம் அந்தப் பாப்பினது அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்தது பியூடல் கிரமப்படி தவறு; அதுவன்றி, அந்த விஷயத்தில், அஞ்சேலம் பாப்பினிடம் முறையிட்டுக்கொள்ளச் சென்றது, பியூடல் முறையில் பாப்பு அரசருக்கு மேற்பட்டவரென்று ஸ்தாபிப்பதுபோ லாயிற்று. இந்த சச்சரவு பல வகைகளில் மிக முக்கியமானது. பியூடல் நியதிகளுக்கு மேற்பட்ட தத்துவங்களைக் கடைப்பிடிக்கும் துணிவுடையோராய், அரசரைக்கூட எதிர்க்கும் மனிதர்களும் சிலர் அக்காலத்திலேயே இருந்தனர் என்பது குடிமக்களுக்கு விசதமாயிற்று. அதுவன்றி, அரசரும், அரச்பீடமும் ஒற்றுமையா யிருந்தாலன்றி வெற்றி கொண்ட வில்லியத்தின் ஏற்பாடுகள் பெரிய கலகத்திலேயே முடியுமென்பதும் விளங்கியது.

முதலாவது குருசேடு (Crusade)

முதலாவது குருசேடு 1095-ம் வருஷத்தில் ஆரம்பமாயிற்று. ஜிருசேலம் (Jerusalem = ஸ்ரீசைலம் ?) என்னும் இடத்தில் ஈஸ்டர் காலத்தில் கூடிய சந்தை (Easter Fair) உலகத்தில் கூடிய பல பெரிய சந்தைகளுள் ஒன்று. அப்போது அவ்விடத்தில் மேற்குநாட்டு வர்த்தகர்களும், கிழக்குநாட்டு வர்த்தகர்களும் குழுமித் தங்கள் சரக்குகளைப் பரிவர்த்தனை செய்துகொள்வது வழக்கம்; ஆனால் 1076-ல், சல்ஜக்கையன் (Seljukian) துருக்கர்கள் ஜிருசேலத்தைப் பிடித்துக்கொண்டு வர்த்தகர்களை வதைத்து, யாத்திரீகர்

களைப் பல கொடுமைகளுக்கு உட்படுத்தினர். பாப்பும், பீட்டர் என்னும் துறவியும் அந்த விஷயத்தில் ஐரோப்பாக் கண்டத்தின் நாட்டினர் எல்லோரிடத்திலும் முறையிட, ஸிஸிலி முதல் நார்வே வரையில் இருந்த நாட்டினர் அதைப்பற்றி வீராவேசங் கொண்டனர். பாப்பு அரப்பனது (II) வேண்டுகோளுக் கிணங்க, ஜிருசேலத்தை விடுவிக்க ஏராளமான ஜனங்கள் வந்து திரண்டுபோயினர். பீட்டர் என்னும் துறவியும், (Peter, the Hermit), வால்திர் (Walter, the Penniless) என்னும் பரம தரித்திரரும் அவர்களை நடத்தினர். போருக்குப் பயிற்றப்படாத பாமர ஜனங்கள் கும்பலாக பிரான்ஸிலிருந்து புறப்பட்டு ஹங்கரை, பல்கேரியா வழியாகச் சென்று, வழியில் கொள்ளை, கொலை, முதலிய சகலமான அட்டூழியங்களையும் செய்தனர். ரஸ்தாவிலும், துருக்கரிடம் அகப்பட்டும் சுமார் 250,000 ஜனங்கள் மாண்டு போயினர். ஆனால் அவர்களுக்குப் பின்னால், சிறந்த போர் வீரர்களைக் கொண்ட ஆறு படைகள் கிளம்பி வந்தன. அவர்களை நடத்தியவர்கள் தாரன்டாவின் பாகிமன்ட் (Bahemund of Taranto), போயஇல்லன் காத்வரை (Godfrey of Bouillon), நார்மண்டி ராபர்த், பளாய்ஸ் ஸ்டீவன் (Stephen of Blois) முதலிய பல வீரர்களாவர். இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாட்டு அரசர்கள் அந்தப் படையெழுச்சியை ஆதரித்ததற்கு முக்கியமான காரணம், தம் நாட்டிலிருந்த துஷ்டர்களான பல குடிகள் அங்கே போய் அழிந்து போகட்டும் என்ற நோக்கமேயாகும். அவர்கள் 1099-ம் வருஷம் நல்ல வெள்ளிக்கிழமை யன்று ஜிருசேலத்தைக் கைப்பற்றினர்; அதன் பின்னர் மூன்று தினங்கள் வரையில் கொலைத் தொழிலிலேயே அவர்கள் ஈடுபட்டிருந்து 70,000, முஸ்லிம்களைக் கொன்று வீழ்த்தினர். அப்

போது ஜிருசேல இராஜ்யத்தினது முடியைச் சூடும்படி எல்லோரும் கூறி அதை ராபர்த்துக்கு வழங்க, அவர் அதை ஏற்றுக்கொள்ளாமல் மறுத்துவிட்டார். அதை போயஇல்லன் காத்வரை ஏற்றுக்கொண்டார். துருக்கர்கள் அந்தப் பரிசுத்த நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். பியூடல் முறையில் ஒரு கிறிஸ்தவ ராஜ்யம் அங்கு ஸ்தாபிக்கப்பட்டது. இதுவே முதலாவது குருசேடு என்று குறிக்கப்படுகிறது. (சேடன் = சேஷன், குருசேடு Crusade = குருவின் உத்தரவை நிறைவேற்றச்சென்ற சேஷமகாஜனம்?) அவ்வாறு நடத்தப்பட்ட குருசேடுக்கு, ராபர்த்தோடு எட்கார் எத்திலிங்கும் போயிருந்தார். இவ்வாறு நடத்தப்பட்ட குருசேட்டினுல் மிக முக்கியமான சில பலன்கள் ஏற்பட்டன. துருக்கர்களுக்கு அதற்குமேல் வெற்றி ஏற்படுவது அதிக காலம் வரையில் தடுக்கப்பட்டுப் போயிற்று. கிழக்குச் சக்கரவர்த்தியினது அரசாட்சிக்காலம் வளர்த்தி விடப்பட்டதுபோலாயிற்று. அது வரையில் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படாமல் பிரிந்திருந்த ஐரோப்பிய நாடுகளுக்குள் அன்னியோன்னியத் தன்மையும், ஒத்துழைக்கும் பழக்கமும் ஏற்பட்டன. நாகரிகமற்றவர்களாயிருந்தவர்கள் நாகரிகமானவர்களைக் கண்டு அபிவிருத்தி யடையலாயினர். கிழக்கு நாடுகளது சுகானுபவங்களை மேல்நாட்டார் கண்டு, தங்கள் நிலைமையையும் அவர்களுடைய நிலைமைக்கு உயர்த்திக்கொண்டனர். கல்வி, இலக்கியம் முதலியவை பலனடைந்தன. பல பெரிய அரசுகள் ஒன்றுபட்டதால், நாடுகளில் அமைதியும் சமாதானமும் திறமையாக நிலைநாட்டப்பட்டன. இற்றாலி நாட்டு வர்த்தகர்கள் மறுபடியும் கீழ்நாடுகளோடு வர்த்தக சம்பந்தம் வைத்துக்கொண்டனர். இது சம்பந்தமாய் இங்கிலாந்தரசருக்கு ஏற்பட்ட அநுகூலமும் அபாரமானது.

ராபர்த்

நார்மண்டி நாட்டு ராபர்த் குருசேடுக்குப் போக ஆவல் கொண்டாராஞலும், அவரிடம் பணம் இல்லையாதலால், அவர் நார்மண்டியைத் தமது தம்பி வில்லியத்திடம் 1096-ம் வருஷத்தில் அடமானம் வைத்து, 6666 பவுன் அல்லது, 10000 மார்க்ஸ் பெற்றுக்கொண்டார். தமக்கு அடிக்கடி உபத்திரவம் கொடுத்துக்கொண்டிருந்த தமது அண்ணன் அவ்வாறு போனது, வில்லியத்திற்குப் பலவகையில் சந்தோஷத்தைக் கொடுத்தது. நார்மண்டி அவருக்குக் கிடைத்ததிலிருந்து, அவர் மேற்கு ஐரோப்பாவில் எல்லா அரசர்களையும் விட அதிக செல்வாக்குடையவராஞர். ராபர்த்தினது ஆட்சி காலத்தில், கலகம் விளைத்த சமஸ்தாஞதிபதிகளையெல்லாம் வில்லியம் அடக்கி, நார்மண்டியில் அமைதியை நிலைநாட்டிஞர்; அவர் லே மன்ஸ் என்ற இடத்தையும் திருப்பி சுவாதீனப் படுத்திக்கொண்டு, பிரான்ஸ் அரசர்மீது போருக்குச் சென்ருர். அப்போது அக்குவிடேயின் என்ற நாட்டின் தலையரசரும் குருசேடுக்குப் போகும்பொருட்டு தமது நாட்டையும் வில்லியத்திடம் அடமானம் வைக்க இணங்கிஞர். வில்லியம் தாம் ஐரோப்பாக் கண்டத்தின் பெரும் பாகத்திற்கு அரசராகிவிடலாமென்று மனப்பால் குடித்திருந்தார்.

வில்லியத்தின் அகால மரணம்

வெற்றி கொண்ட வில்லியத்திற்கு வேட்டையாடுவதில் எவ்வளவு ஆசை இருந்ததோ, அவ்வளவு ஆசை அந்த விஷயத்தில் இரண்டாவது வில்லியத்திற்கும் இருந்ததாகையால், பின்னவர் காடுகளை அதிகப்படுத்தி அவைகள்

சம்பந்தமான சட்டங்களை முன்னிலும் அதிக கடுமையும், கண்டிப்புமானவைக ளாக்கிவிட்டார். அதனாலும், மற்றும் பல அநீதச் செய்கைகளாலும் அவர் இங்கிலாந்தினது குடி மக்களுடைய பகைமையை சம்பாதித்துக் கொண்டிருந்தார். அவருக்குக் கூடிய விரைவில் பயங்கரமான முடிவு நேர்ந்து விடப் போகிறதென்று எப்படியோ ஜனங்கள் எதிர்பார்த் தனராதலால், அந்தப் பிரஸ்தாபம் அவருடைய மரணத் திற்கு முன்னரே நாட்டில் ஏற்பட்டிருந்தது. 1100-ம் வரு ஷம், ஆகஸ்ட் மாதம், 2-ம் தேதியன்று அவர் வேட்டை யாட எண்ணிய காலத்தில், அவருடைய நண்பர்கள் அதைத் தடுத்தனர். அதற்கு முந்திய நாளிரவில் அவர்களுக்கு ஏற் பட்ட கனவில், பல அசுபக் குறிகளும், அபாயங்களும் தோன்றினவாதலால், அவர்கள் அச்சங்கொண்டு, அவ்வாறு அவர் வெளியில் போக முயன்றதைத் தடுத்தனர். அதற் கிணங்கி அவரும் தமது விருப்பத்தை அடக்கிக்கொண் டார். ஆனால், அவர் தமது போஜனத்தை முடித்துக் கொண்டு, சாராயத்தை தாராளமாகக் குடித்துவிடவே, அவ ருக்குக் கோபமுண்டாகி விட்டது; அவர் தமது நண்பர் களைப் பார்த்து, "இந்த மாதிரியான பாட்டிகளுடைய மனப் பிராந்திகளை வைத்துக்கொண்டு சஞ்சலப்பட என்னை நீங்கள் இங்கிலீஷ்காரன் என்று நினைத்துக்கொண்டீர்களா?" என்று விருப்பாகப் பேசிவிட்டு, தமது குதிரையைக்கொண்டு வரச்செய்து அதன்மீது பாய்ந்து ஏறி உட்கார்ந்து கொண் டார். அவருடைய சகோதரர் ஹென்ரி, அவருடைய பிரிய நண்பரான வள்திர் தையரில் (Walter Tyrrel) இன்னம் சிலர் ஆகியோர் அரசருடன் கூடச்சென்றனர். அவர்கள் காட்டிற்குள் நுழைந்து, வேட்டையாடிக்கொண்டு பல இடங் களில் பிரிந்து செல்ல, திடீரென்று ஒரு கூக்குரல் உண்டா

யிற்று. அரசர் கொல்லப்பட்டார் என்ற செய்தி ஒருவர் வாய் மூலமாய் இன்னொருவருக்குப் பரவியது. எல்லோரும் ஓடிப் பார்க்க, அரசர் தரையில் விழுந்து கிடந்தார். அவருடைய மார்பில் ஓர் அம்பு பாய்ந்திருந்தது. அது தற்செயலாகப் பட்ட வேடனுடைய அம்பா, அல்லது, கொலைஞனுடைய அம்பா என்பதை எவராலும் சொல்லவும் இயலவில்லை, கண்டுபிடிக்கவும் இயலவில்லை. வள்திர் தையிரில் (Walter Tyrrel) உடனே பிரான்ஸிற்கு ஓடிவிட்டாராதலால், எல்லோருக்கும் அவர்மீது சம்சயம் ஏற்பட்டது. ஆனால், அவர் அதைப்பற்றி தமக்கு எதுவும் தெரியாதென்றே சொல்லிவிட்டார். ஹென்ரி உண்மையில் தமது அண்ணன் இறந்துபோனாரென்பதை நிச்சயப்படுத்திக்கொண்டதுதான் தாமதம்; அவர் உடனே குதிரையை எவ்வளவு விசையாகத் துரத்தஇயலுமோ அவ்வளவு விசையாகத் துரத்திக்கொண்டு விண்சேஸ்தருக்குப் போய் கஜானாவின் சாவிகளைப் பெற்றுக் கொண்டார். மூத்தவரான ராபர்த்துக்கு முடிசூட்ட வேண்டுமென்று சிலர் கூற, உடனே ஹென்ரி தமது உடைவாளை உருவிக்கொண்டு, அன்னிய நாட்டில் பிறந்தவன் எவனும் இங்கிலாந்திற்கு அரசனாகக் கூடாதென்றும், தாம் இங்கிலாந்தில் பிறந்து வளர்ந்தவராதலால், தாமே நியாயமான வார்சுதார் என்றும் கூறி அதட்டினார். அரசருடைய உடம்பு வேட்டைக்காரனால் கொல்லப்பட்ட காட்டுப் பன்றிபோல், ஒரு கரி வண்டியில் விண்சேஸ்தருக்கு வந்து சேர்ந்தது. அவரோடு வேறு எவரும் வரவில்லை. அவர் எப்படி இறந்தார் என்று கூட எவரும் கேட்கவில்லை. விசாரணையும் நடக்கவில்லை. சாவு மணியும் அடிக்கப்படவில்லை. தொழுகையும் நடத்தப்படவில்லை. இரத்தம் கசிந்தபடி இருந்த சரீரம் விண்சேஸ்தர் மாதாகோவிலில் சவக்குழியில் வைத்து மூடப்

பட்டது. மிக சாதாரணமான ஒரு பலகைக்கல்லால் அது மூடப்பட்டது. அதை இப்போதும் நாம் பார்க்கலாம். அவர் அடிபெற்று விழுந்த இடத்தில் ரூபஸ் கல் என்று ஒரு கல் நாட்டப்பட்டிருப்பதையும் இப்போது நாம் காணலாம். "அவர் குடிமக்களுக்குப் பரம அசங்கியமானவராயும், கடவுளால் அருவருக்கப்பட்டவராயும் இருந்தாரென்பதை அவருடைய முடிவு நிரூபித்தது. அவர் தாம் செய்த சண்டாளச் செய்கைகளினிடையில், பிராயச் சித்தத்திற்கோ, பரிகாரத்திற்கோ இடமின்றி காலத்திற்கு முன்னர் மாண்டு போனார்" என்று சரித்திராசிரியர் எழுதியிருக்கிறார்.

அவருடைய ஆட்சியின் பலாபலன்கள்

அவருடைய அரசாட்சி முழுதும் அக்கிரம ஆட்சியாய் முடிந்ததானாலும், சில விஷயங்களில் அது முக்கியமானதென்றே நாம் கருதவேண்டும். அஞ்சேலம் அரசரோடு சச்சரவிட்டு ரோமுக்குப் போனது பிந்திய காலத்தில், துரைத்தனத்திற்கும் மத ஸ்தாபனத்திற்கும் இருக்கவேண்டிய சம்பந்த விஷயமாய் நேரவிருந்த முக்கியமான பல பெரிய சம்பவங்களுக்குப் பந்தற்கால் நாட்டியது போன்றது. பளம்பரடின் பதவியும், அவருடைய நிர்வாக உத்தேசங்களும் நார்மன் அரசர்களது துரைத்தன முறையின் அபிவிருத்தியில் மிக முக்கியமான அம்சங்கள். வில்லியம் II ஸ்தல நீதி ஸ்தலங்களினது முக்கியத்தன்மையை அவ்வளவாய் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அவருடைய ஆட்சி காலத்தில் ஹண்ட்ரட், ஷயர் ஆகிய நீதிஸ்தலங்கள் அநேக ஊர்களில் மலினமடைந்துவிட்டன. ஷீரப்புகள் குடிமக்களுடைய நன்மைகளை அசட்டை செய்து, கொடுங்கோன்மை நடத்தியதை அடக்க அரசர் எவ்வித நடவடிக்கைகளும் எடுத்துக்கொண்

டதாகத் தெரியவில்லை. பிரான்ஸ் அரசரிடத்திலிருந்து மேயினை மறுபடி அடைய வில்லியத்தால் இயலவில்லையானு லும், இங்கிலாந்தின் எல்லை வேறு வகையில் அதிகரித்தது; பியுடாலிஸமும் அடக்கப்பட்டுப் போயிற்று. கம்பர்லண்டை யும், தெற்கு வேல்ஸையும் கைப்பற்றியது வெற்றிகொண்ட வில்லியம் கோலிய அஸ்திவாரத்திற்குமேல் கிரமப்படி ஏற் படவேண்டிய கட்டிடங்களே. வில்லியம் II பாரான்களுடைய இரண்டு கலகங்களை இங்கிலீஷ்காரர்களுடைய உதவியைக் கொண்டு நிரம்பவும் வெற்றிகரமாக அடக்கியது, பாரான் களுடைய சுயேச்சாதிகார முயற்சிகளை அடக்கும் விஷயத் தில் எப்போதும்போல், அரசரும் குடிமக்களும் ஏகமன தாய் வேலை செய்தனரென்பதைக் காட்டுகிறது. அவரும் அவருடைய துர்மந்திரியான பளம்பரமே அக்கிரமச் செய் கைகளை நடத்திய கொடிய பாவிகளானுலும், அவர்க ளுடைய அபாரமான ஊக்கத்தினுலும், இராணுவத் திறமை யினுலும், நாடு அராஜகத்திற்கு உட்படாமல் மீந்தது. அன்னிய நாட்டில், அரசர் நார்மண்டியை அபகரித்ததால் ஐரோப்பாக் கண்டத்திலும் அவர் அதிக செல்வாக்குடை யவரானுர். நாட்டில் அரசருக்கும், குடிமக்களுக்கும் பாரான் களை அடக்கும் விஷயமாய் ஏற்பட்ட ஒற்றுமை பிற் காலத்தில் ஹென்ரிக்குப் பெரிதும் நன்மை பயப்பதாய் முடிந்தது. குருசேட் நடந்ததனுல் இங்கிலாந்தின் பட்ட ணங்கள் முக்கியமான சில அனுகூலங்களையும் நன்மைகளை யும் அடைந்தன. ஜிருசேலமுக்குப் போக விரும்பிய அநேக பாரான்கள் சில பட்டணங்களிலும், ஐக்கிய சங்கங்களி லும் இருந்து பெருந் தொகைகளைப் பெற்றுக்கொண்டு, அவைகளுக்குத் தங்களுடைய அதிகாரங்களையும் உரிமை களையும் விடுதலை செய்து கொடுத்துவிட்டனர். வில்லியம் II

சிறந்த கட்டிட வேலைகளையும், சிற்பத்தையும் ஆதரித்தார். லண்டன் கோபுரத்தைச் (Tower of London) சுற்றிலும், அரசர் ஒரு மதில் சுவர் எழுப்பினர். தேம்ஸ் நதியின்மேல் கல் பாலம் (London Bridge) ஒன்றைக் கட்டினர். இப்போது, பார்லிமெண்டு மாளிகைகளிரண்டிற்குள்ளும் நுழையுமிடத்தில் காணப்படும் மிக சிலாக்கியமான ஹாலை (Westminster Hall) அவரே கட்டினவர்.

வில்லியம் (II) ஆட்சி காலத்தில் நிகழ்ந்த முக்கியமான சம்பவக் குறிப்புகள் :—

1087 வில்லியம் II விட்டான் சபையோரால் அரசராக நியமிக்கப்பட்டது.

1088 ஆதாவைத் தலைவராகக் கொண்டு பாரான்கள் கலகமிழைத்தது ; இங்கிலீஷ் விருதினுல் அடக்கப்பட்டது.

1089 லான்பரங்க் காலமாகுதல்.

1091 வில்லியத்திற்கும், ராபர்த்திற்கும் நடந்த உடன்படிக்கை.

1093 அஞ்சேலம் கண்டர்புரி அரச்பிஷப்பாகுதல்.

1094 ரானுல்ப் பளம்பரடு ஜஸ்டிசீய்ராகுதல்.

1096 ராபர்த் நார்மண்டியை வில்லியத்தினிடம் அடமானம் வைத்தது.

1097 அஞ்சேலம் ரோமுக்குச் செல்லுதல்.

1099 ஜிருசேலம் மீட்கப்பட்டது.

1100 புதிய காட்டில் வில்லியம் II கொல்லப்பட்டது.

ஸ்காட்லண்ட் நாட்டின் அரச வம்சாவளி

அரசர் தங்கன் (Duncan) 1034-1040

- அரசர் மால்கம் III (1057—1093) = (1) இங்கப்ஜாரத்
  - தங்கன் II (அரசர் 1094)
- அரசர் மால்கம் III = (2) மார்க்கரத் (எட்மண்ட் ஐயரன் சைடின் பேர்த்தி)
  - எட்வார்ட் (1093-ல் கொல்லப்பட்டார்)
  - எட்மண்ட் (தானல்ட் பேனோடு கூட்டரசு) (1095—1097)
  - எட்கார் (அரசர் 1097-1107)
  - அலெக்ஸாண்டர் I (அரசர் 1107-1124)
  - தாவீத் I = வல்தேயபின் குமாரி (David I) அரசர் 1124-53
    - ஹென்ரி, ஹண்டிங்தான் எயரான் (1152-ல் மரணம்)
      - மால்கம் IV (1153—1165)
      - வில்லியம், சிங்கம் (The Lion) (1166—1214)
      - தாவீத், ஹண்டிங்தான் எயரான்; இ புரூஸுக்கும், பாலியா லுக்கும் மூதாதை
  - எயதகையீத் அல்லது மாத்தில்தா அல்லது மாது (Maud) = ஹென்ரி I
- தானல்ட் பேண் (Donald Bane) (1093-94) தனியரசு (1095-97) கூட்டரசு

8

அத்தியாயம்—5

ஹென்ரி I (1100—1135)

ஹென்ரி I முடிசூடல்

வில்லியம் II மாணமடைந்த காலத்தில், ராபர்த் கிழக்கு தேசங்களிலேயே இருந்தமையால், அவருடைய தம்பியான ஹென்ரியைத் தவிர வேறு தகுதியானவர் எவரும் ஸ்தலத்தில் இல்லை. ஹென்ரி, வெற்றிகொண்ட வில்லியம் இங்கிலாந்தைக் கைப்பற்றிய பின்னர், 1068-ல், பிறந்தவர்; அவருக்கு 32 வயது நிறைந்திருந்தது. தந்தை அவருக்கு எங்கும் நிலம் கொடுக்காமல், 5000 பவுண்டு வெள்ளியைக் கொடுத்தாரென்பதை நாம் முன்னரே தெரிந்து கொண்டோம். அவர் அதில் ராபர்த்துக்கு மூவாயிரம் பவுன் கொடுத்து, நார்மண்டியில் சில ஊர்களை விலைக்கு வாங்கியிருந்தார். 1095-ம் வருஷத்திற்குப் பிறகு அவர் வில்லியத்தோடு நட்பாக நடந்து அவருடன் இங்கிலாந்திலேயே இருந்து வந்தார். வில்லியம் II புதிய காட்டில் கொல்லப் பட்ட சந்தர்ப்பத்தில் அவரும் அரசருடைய சகாக்களில் ஒருவராய் அங்கு சென்றிருந்து, அங்கிருந்து ஓட்டமாக வந்து, கஜானாவைக் கைப்பற்றிக்கொண்டு, அவ்விடத்திருந்த சில சீமான்களையும், மத குருமார்களையும் ஒரு சபையாகக் கூட்டி, அவர்கள் தம்மை அரசராக நியமிக்கும்படி செய்து கொண்டு, அங்கிருந்து லண்டனுக்கு ஓடினார்; அரச் பிஷப்

பான அஞ்சேலம் அப்போது ரோமிலிருந்தா ராதலால், லண்டன் பிஷப்பான மயரீஸ் என்பவரால், ஹெண்ரி சில தினங்களில் வெஸ்ட் மின்ஸ்டரில் முடிசூட்டப் பெற்றார்.

அவருடைய சமாதான தந்திரங்களும், உரிமைப் பட்டயமும்

அவர் அவ்வாறு சுலபத்தில் அரசர் ஆகிவிட்டா ராலும், அவருக்குள் தமது அண்ணனை ராபர்த்தைப்பற்றிய அச்சம் இருந்தது. அவர் வெற்றிகொண்ட வில்லியத்தின் மூத்த குமாரர்; அதுவன்றி அவரும், இரண்டாவது வில்லியமும் செய்துகொண்டிருந்த உடன்படிக்கையின் படியும் ராபர்த்துக்கே பட்டம் உரியது. எனவே, அவர் இங்கிலாந்தின் அரசர் ஆக எப்படியும் முயற்சிப்பாரென்று ஹெண்ரி அஞ்சினார்; அதுவன்றி தாம் தமது பதவியின் கௌரவத்தையைப் பாதுகாக்க பாரான்களோடும் போர் புரிய நேருமென்று அவர் எதிர்பார்த்தார். ஆகவே தமக்கு ஒரு கட்சியையும், பக்க பலத்தையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற கருத்தோடு, அவர் சில முக்கிய இராஜரீக தந்திரங்களை அநுஷ்டித்தார். அவற்றில் நான்கு காரியங்களை நாம் முக்கியமானவையாகக் குறிப்பிடலாம். (1) ஸ்காட்லண்ட் அரசர் மால்கம் III, மார்க்கரத் ஆகியோருக்கு உதித்த ஏயதகையீத் என்னும் மாத்தில்தாவை (Matilda = மாற்றில் தாய் = மாற்றிலாத தங்கம் போன்ற தாய்?) ஹெண்ரி I மணந்து கொண்டார், (2) ரானுல்ப் பளம்பரடை சிறைப்படுத்தினர், (3) அஞ்சேலத்தை ரோம் நகரிலிருந்து திரும்ப அழைத்துக்கொண்டார். (4) உரிமைப் பட்டயமொன்றைப் பிறப்பித்தார். ஸ்காட்லண்டின் அரசப் பெருமாட்டியான மார்க்கரத் என்பவள் பழைய சாக்கிழான் வம்சத்தரசரான

எட்மன்ட் அயரன் சைட் அரசருடைய பேர்த்தி யாதலால், அவளுடைய புதல்வியான மாத்தில்தாவை ஹென்ரி மணந்தது, இங்கிலீஷ் குடிமக்களுக்கு ஒரு பெரிய திருப்தியை யளித்தது. எப்படியென்றால், ஹென்ரிக்கும் மாத்தில்தாவுக்கும் பிறக்கும் குழந்தை பழைய சாக்கிழான் வம்சம், வெற்றி கொண்ட வில்லியத்தின் வம்சம் ஆகிய இரண்டிற்கும் கிரமமான வார்சுதாரர் ஆகிவிடுவாராதலால், தங்களுடைய புராதன அரச வம்சம் போய்விடாமல், இன்னமும் இருந்துகொண்டு வருகிறது என்னும் திருப்தி உண்டாகக்கூடிய நிலைமை ஏற்பட்டது. ராபர்த்தை அரச ராக்கினுல், அந்தத் திருப்திக்கு இடமில்லை. ஆகவே, அந்தக் காரியம் இங்கிலீஷ் குடிமக்கள் ஹென்ரியைப் பூர்த்தியாக ஆதரிக்கும்படி செய்யத் தக்க சாதுர்யமான யுக்தியாயிருந்தது. அவர் வெளியிட்ட உரிமைப் பட்டயம் மூன்று வகைகளில் முக்கியமானது (1) அரசர் முடிசூடியவுடன் குடிமக்களுக்கு தமது ஆட்சி திட்டத்தை அவ்வாறு வெளியிட்டது அதுவே முதன் முதலானது, (2) பின்னுல் மாக்கன சரத்தா (Magna charta) என்பதற்கு இதுவே அஸ்திரவாரமானதா யிருந்தது, (3) சீமான்கள், மத குருமார்கள் ஆகியோருடைய முக்கியமான குறைபாடுகளை இதன் மூலமாய் அரசரே ஒப்புக் கொண்டதுபோலாயிற்று. அந்த உரிமைப் பட்டயத்தில் முக்கியமாகத் தாம் மூன்று காரியங்களை நிறைவேற்றுவதாய் ஹென்ரி வாக்களித்திருந்தார். (i) தாம் மதஸ்தாபன உத்தியோகஸ்தர்களுடைய நிலங்களை அநுபவிப்பது, குத்தகைக்கு விடுவது, விற்பது ஆகிய காரியங்களைச் செய்வதில்லை யென்று அவர் மதஸ்தாபனத்தாருக்கு உறுதி கூறினர்; (ii) தம் தலைமைக் குடியானவர்கள், கீழ்க் குடியானவர்கள் (Vavasours = வவசாயர் = விவசாயர்கள் ?) முதலியோரிடத்தி

லிருந்து நியாயமான வரிகளை மாத்திரம் வசூலிப்பதாகவும், வார்சுதாரிகளையும், விதவைகளையும் அவர்களுடைய விருப்பத்திற்கு மாருக விவாகம் செய்துவைப்ப தில்லையென்றும் உறுதி கூறினர் (iii) டேன் கில்ட் என்னும் வரியை விலக்கி விடுவதாய் ஒப்புக்கொண்டார். தாம் தமது தலைமைக் குடியானவர்களை நடத்துவதுபோலவே, அவர்களும் தங்களுக்குக் கீழ்ப்பட்ட குடியானவர்களை நடத்த வேண்டுமென்றும் அவர் கட்டளையிட்டிருந்தார். நாணயங்களைப் பொறித்துச் செலாவணி செய்யும் உரிமை அரசருக்கே இருந்தது, எவரும் பணம் முதலிய சொந்த சொத்துகளை அவரவருடைய இச்சைப்படி உயில் மூலமாய் விநியோகம் செய்துகொள்ளலாம், ஒருவருடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுமானல், அவருடைய எல்லா சொத்துக்களையும் அபகரிக்காமல், நியாயமான ஒரு பகுதியை மாத்திரம் பறிமுதல் செய்யவேண்டும், எட்வர்ட் அரசருடைய சட்டம், வெற்றிகொண்ட வில்லியத்தால் செய்யப்பட்ட அபிவிருத்தி சகிதம், மறுபடி அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்பனவும், பிறவுமான மாறுதல்களைத் தாம் செய்யப்போவதாய் அவர் தம்முடைய உரிமைப் பட்டயத்தில் கண்டிருந்தார். இவ்வாறு வெளியிடப்பட்ட பட்டயத்தின் நகல் ஒவ்வொரு ஷயரிலும் ஓர் அப்பே (Abbey) மடாலயத்திற்கு அனுப்பப்பட்டது. அஞ்சேலம் திரும்பவும் அழைத்துக் கொள்ளப்பட்டதைப் பற்றியும், பளம்பரடு சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டதைப் பற்றியும் மதஸ்தாபன அதிகாரிகள் பெரிதும் களிப்படைந்தனர். ஆனல், பளம்பரடு சிறைச்சாலையில் அதிக காலம் தங்கவில்லை. அவர் சிலருக்கு இலஞ்சம் கொடுத்து, தமக்கு அனுப்பப்பட்ட ஒயின்ஜாடிக்குள் ஒரு கயிற்றை ஒளித்து வைத்தனுப்பும்படி செய்து, சிறைக்

காவலாளர்களுக்கு ஒயினைக்கொடுத்து, அவர்கள் மயங்கிக் கிடக்கும்படி செய்து, கயிற்றைக் கட்டி வெளியில் தொங்க விட்டு, அதன் மூலமாகக் கீழே இறங்கி, நார்மண்டிக்குப் போய், ஹென்ரிக்கு விரோதமா யிருந்த கட்சியாரோடு சேர்ந்து கொண்டார்.

ராபர்த் பட்டத்திற்காகப் போர் புரிதல்

ஹென்ரி அரசரானதற்கு சொற்ப காலத்திற்குப் பிறகு ராபர்த் நார்மண்டிக்கு வந்து தமது பதவியை வகித்தார். அப்போது பளம்பரடும், இங்கிலாந்தின் பெரும்பாலான பாரான்களும், ஹென்ரிக்கு விரோதமாக யுத்தம் நடத்தி அவரை விலக்கிவிட்டு தங்களுக்கு அரசராகும்படி ராபர்த்தி னிடம் வேண்டிக்கொள்ள, அவர் அதற்கிசைந்து, ஒரு சேனையைச் சேர்த்துக்கொண்டு, 1101-ம் வருஷம் போர்ட்ஸ் மவுத் (Portsmouth) என்னுமிடத்தில் வந்திறங்கினர். ஹென்ரியினது விஷயத்தில், பாரான்கள் துரோக சிந்தை யாக நடந்து அவரைக் கைவிட்டுவிட்டனராலும், அஞ் செலமும், இங்கிலீஷ் குடிமக்களும் அரசருடைய கட்சி யையே ஆதரித்து, அவருடன் சேர்ந்துகொண்டனர். எனவே, ஹென்ரி பெரிய சேனையுடன் ஆல்தான் (Alton) என்னுமிடத்தில் ராபர்த்தைச் சந்தித்தார். ராபர்த் அவ்வளவு பெரிய சேனையைத் தாம் எதிர்ப்பது அநுசிதமான தென்று கருதி, சமாதானம் செய்துகொள்ள முயற்சிக்க, ஹென்ரி அதற்கு இணங்கினர். உடனே இருவரும் சமாதானம் செய்துகொண்டனர். இங்கிலாந்தினது அரசாட்சி யுரிமையை ராபர்த் விட்டுவிடுவது, அதற்காக, ஹென்ரி நார்மண்டியி னது பெரும்பாகத்தையும் ராபர்த்துக்குக் கொடுப்பது, அதுவன்றி, தம்பி அண்ணனுக்கு வருஷவாரி 2000 பவுன்

உபகாரச் சம்பளம் வழங்குவது, இருவருள் எவரேனும் சந்ததி யில்லாமல் இறந்துபோனுல் உயிரோடிருப்பவர் இரண்டிடங்களையும் அடைவது என்ற நிபந்தனைகளின்மேல் இருவரும் சமாதானம் செய்துகொண்டனர். அதற்குமேல் ராபர்த் தம் சேனைகளுடன் நார்மண்டிக்குத் திரும்பிப் போய் விட்டார்.

பலஸ்மி (Robert of Belesme) ராபர்த்தினது கலகம்

இவ்வாறு அரசருடைய அண்ணன் சமாதானம் செய்துகொண்டு போய்விடவே, அவரைக் கிளப்பியழைத்து வந்த இராஜத் துரோகிகளான பாரான்களது நிலைமை துன்ப கரமானதாகிவிட்டது. அவர்கள் அரசரது கோபத்திற்கும், பகைமைக்கும் பாத்திரரானதே அவர்களுக்கு மிஞ்சியது. அவ்வாறு தம்மிடம் சிறிதும் பற்றுதல் இல்லாமல் நடந்து கொண்ட பாரான்களுடைய அபாயகரமான செல்வாக்கைப் போக்கிவிடத் தீர்மானித்து ஹென்ரி அவ்விஷயத்தில் தகுதி யானபடி வேலைசெய்ய ஆரம்பித்தார். அவ்வாறு தீங்கிழைத்த பாரான்களுள் பரம துஷ்டரும், மூர்க்கரும், மற்றவர்களை விட அதிக செல்வாக்குடையவருமான ஷ்ரூவ்ஸ்புரி ஏயரா ளான பலஸ்மி ராபர்த் (பலஸ்மி=பல+சிம்மி=பலம் பொருந் திய சிம்மம்?) என்பவரைத் தாம் உடனே அடக்குவது அத்தியாவசியமான காரியம் என்று அரசர் உணர்ந்தார். அவருக்கு நார்மண்டியில் நிலம் ஏராளமா யிருந்தது. அதோடு ஸஸ்ஸெக்ஸில், அரன்தல், சீசேஸ்தர் என்ற சமஸ் தானங்களுக்கும் அவர் அதிபதி. அதுவன்றி, அவர் வேல்ஸ் எல்லையிலிருந்த ஷ்ரூவ்ஸ்புரியினது பலத்தையன் ஏயராள் பதவியை வகித்தவர். அவர் போரில் பெரிய பராக்கிரம சாலியாதலால், வேல்ஸ் நாட்டை முதன்முதலில் பிடித்த

வர்களுள் அவர் ஒருவர். மத்திய வேல்ஸ், தெற்கு வேல்ஸ் ஆகிய நாடுகளில் பெரும்பாகமும் இவருடையவும், இவருடைய சகோதரர்களுடையவும் ஆட்சிக்குள்பட் டிருந்தன. 1102-ல் ஹென்ரி அவர்மீது நாற்பத்தைந்து இராஜத் துரோகக் குற்றங்களைச் சுமத்தி, நேரில் ஆஜராகி அவைகளுக்கு சமாதானம் தெரிவிக்கும்படி உத்தரவிட, அவர் வாராமல் இருந்துவிட்டார். சவரன் என்னும் ஆற்றங்கரையின்மேலுள்ள பிரிஜ்நார்த் என்ற இடத்தில், ராபர்த் பலமான ஒரு புதிய கோட்டை கட்டி யிருந்தார். ஹென்ரி தமது சேனைகளுடன் அந்த இடத்தின்மேல் படையெடுத்துச் சென்றார். பலஸ்மி ராபர்த் தமது கொடுங்கோன்மையால், வேல்ஸ்காரர், இங்கிலீஷ்காரர் ஆகிய இருதரத்தாருடைய குரோதத்தையும் சம்பாதித்துக்கொண் டிருந்தமையால், இந்த சமயத்தில் அவருக்கு உதவிசெய்ய எவரும் வரவில்லை. அரசர் தமது அண்ணனைத் தூண்டி, பலஸ்மி ராபர்த்துடைய நார்மன் உடைமைகளைக் கைப்பற்றச் செய்ததன்றி, அரன்தல் முதலிய பல கோட்டைகளைப் பிடித்துக்கொண்டார். சுமார் மூன்றுவாரகாலம் அரசர் முற்றுகை போட்டதில், பிரிஜ்நார்த் என்ற கோட்டையிலிருந்தவர்களும் அவரிடம் சரணாகதி யடைந்தனர். பலஸ்மி ராபர்த் கடைசியாக ஷ்ரூவ்ஸ்புரிக்குச் சென்று, தம்மை பந்தோபஸ்துச் செய்துகொள்ள, அந்தக் கோட்டையும் அரசரால் பிடிக்கப்பட்டுப் போகவே, பலஸ்மி ராபர்த் அரசரிடம் சரணாகதியடைந்தார். அரசர் 1103-ம் வருஷத்தில் அவரை நார்மண்டிக்குத் துரத்திவிட்டு, அவருக்கு இங்கிலாந்திலிருந்த நிலங்களை யெல்லாம் பறிமுதல் செய்து, அரசரே எடுத்துக் கொண்டார். அதோடு ஷ்ரூவ்ஸ்புரி பலத்தையன் ஏயாளிடமும் நீக்கப்பட்டுப் போயிற்று. பரம துஷ்டரான பலஸ்மி ராபர்த்தை அரசர்

அவ்வாறு கடுமையாக தண்டித்ததைக் கண்ட குடிமக்கள் எல்லோரும் பெருமகிழ்ச்சி யடைந்து ஏகமனதாக அரச ரைப் புகழ்ந்து கொண்டாடினர். அதேபோல அரசர் மற்றும் சிலரையும் தண்டித்தார். வெற்றிகொண்ட வில்லியத்தால் ஏற்படுத்தப்பட்ட பெரிய ஏயராள் இடங்களில் தூரஹத்து பீஷப் பதவியும், சேஸ்தரது ஏயராள் பதவியுமே மிஞ்சிநின்றன.

தஞ்சபரை (Tinchebrai) யுத்தம்

நார்மண்டிக்குச் சென்ற பலஸ்மி ராபர்த் அரசருடைய அண்ணனை ராபர்த்தைத் தம் சிநேகிதராக்கிக் கொண்டு, அவர் ஹெண்ரியின்மீது பகைமை கொள்ளும்படி செய்யவே, அண்ணன் நார்மண்டியிலிருந்த தம்பியினது குடிமக்களை ஒறுக்க வாரம்பித்தார். 1104-ம் வருஷத்தில் சகோதரர் இருவருக்குள்ளும் போர் தொடங்கியது. 1106-ம் வருஷம், தஞ்சபரை என்னுமிடத்தில், அரசருடைய இங்கிலீஷ் காலாட் படை வீரர்களும், அவரிடம் இராஜ விசுவாச உணர்ச்சியோடு நடந்துகொண்ட ஆங்கிலோ—நார்மன் பாரான்களும் சேர்ந்து ராபர்த்தினது சேனைகளை அடியோடு முரியடித்து விட்டதன்றி, ராபர்த்தையும் சிறைப் படுத்தினர்; சேன்லாக் போரை தஞ்சபரைப் போர் தலைகீழாய் மாற்றிவிட்டது என்று எல்லோரும் சொல்லும்படி ஹெண்ரிக்கு அவ்விடத்தில் பூர்த்தியான வெற்றி கிடைத்தது. அரசருடைய அண்ணனை ராபர்த் சிறைப்படுத்தப்பட்டு கார்டிப் (Cardiff)கோட்டையில் அடைக்கப்பட,அவர் தமது ஆயுட்காலம் முழுதும் அங்கேயே கைதியாயிருந்து, 1135-ம் இறந்துபோனர். எத்திலிங் எட்கார், பலஸ்மி ஆகியோரும் அந்த யுத்தத்தில் சிறைப்படுத்தப்பட்டனர். ஆனல் எட்கார்

விடப்பட்டார். பலஸ்மி தமது ஆயுட்காலம் முழுதும் கைதியாகவே இருந்து இறந்தார். அரசருடைய அண்ணன் புதல்வரான வில்லியம் கிளித்தா என்பவர் பிரான்ஸ் தேசத்து அரசருடைய ஆதரவைப் பெற்று, நார்மண்டியைப் பெறப் பலவகைகளில் முயற்சித்துப் பார்த்தாரானாலும், அதனால் எவ்விதமான பலனும் ஏற்படவில்லை. நார்மண்டி இங்கிலாந்தோடு சேர்த்துக் கொள்ளப் பட்டுவிட்டது. ஆனால் அது பற்றி ஐரோப்பாக் கண்டத்தில் எதிப்பு ஏற்படுமென்று கருதிய ஹென்ரி தமதுகட்சியை பலப்படுத்திக்கொள்ளக் கருதி, தமது குமாரத்தி மாத்தில்தாவை 1114-ல் ஜேரமன் சக்கரவர்த்தி ஹென்ரி V-க்கு மணம் புரிவித்தார். 1117-ம் வருஷம் ஹென்ரிக்கு விரோதமாக ஓர் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. பிரான்ஸ் அரசர், வ்ளாண்டர்ஸ் (Flanders) கவுண்டு, அஞ்செள கவுண்டான பல்க் (Fulk), இன்னம் பல கலகக்காரப் பாரான்கள் ஆகியோர் ஹென்ரிக்கு விரோதமாக ஒன்று சேர்ந்தனர். வில்லியம் கிளித்தாவின் உரிமையைப் பாதுகாப்பதாக அவர்கள் வெளிக்குக் காட்டிக்கொண்டனர். அப்போது அஞ்செள கவுண்ட் பிரிந்துவிட்டார். ஏனென்றால், அவருடைய குமாரியை ஹென்ரி தமது குமாரனுக்கு விவாகம் செய்து கொள்வதாக ஒப்புக் கொண்டதன்மேல், ஷை கவுண்ட் அந்தக் கூட்டுக் கட்சியிலிருந்து விலகி நின்றார். 1119-ம் வருஷத்தில் பரமுளி (Bremule) அல்லது பரண்ணவிளி (Brenneville) என்னும் இடத்தில் நடந்த போரில் ஹென்ரி பிரான்ஸ் அரசரைத் தோற்கடித்து, தம்மை எதிர்த்த நார்மன் சீமான்களுக்கு இங்கிலாந்தில் இருந்த சமஸ்தானங்களைப் பறிமுதல் செய்வதான பிராயச்சித்தத்தையே அநுஷ்டித்தார். அவ்வாறு, "இங்கிலாந்தினது சுயாதீனப் போர் நார்மண்டியில் நடத்தப்பட்டு முடி

வற்றது.'' அதற்குச் சிறிது காலத்திற்குப் பிறகு பிரான்ஸ் அரசரோடு சமாதானம் செய்துகொள்ளப்பட்டது.

அரசருடைய குடும்ப சம்பவங்கள்

அரசர் 1117-ம் வருஷம் முதல் 1120-ம் வருஷம் வரையில் சுமார் மூன்று வருஷ காலம் பெரும்பாலும் நார்மண்டியிலேயே இருந்தார். அவருக்கு வில்லியம் என்ற ஒரு குமாரரும், மாத்தில்தா என்னும் ஒரு குமாரத்தியும் பிறந்திருந்தனர். நார்மண்டியில் கலகம் புரிந்த பாரான்களை அடக்கி, அந்த நாட்டில் தமக்குப் பிற்காலத்தில் எவ்வித சச்சரவும் ஏற்படாமல் செய்யவேண்டுமென்ற கருத்தோடு அரசர் பல ஏற்பாடுகளைச் செய்திருந்தார். பிரான்ஸ் தேச அரசர் முதலியோருடைய பகைமையைக் கருதி, தமது கட்சியை வலுப்படுத்திக்கொள்ளும் பொருட்டு, அவர் தமது குமாரியான மாத்தில்தாவை ஜெரமன் சக்கரவர்த்தியான ஹென்ரி V என்பவருக்கு மணம் புரிவித்திருந்தார். அது வன்றி, தமது குமாரர் வில்லியத்திற்கு அஞ்சௌ கவுண்டினது குமாரியான மாத்தில்தா என்பவளை விவாகம் செய்து வைத்திருந்தார். அதற்கும் ஒரு காரண மிருந்தது. அஞ்சௌ என்பது லாயர் என்னும் நதியின் கீழ்ப்பாகத்தில் உள்ள சிறிய நாடு. ஆனால், அதன் கவுண்டாயிருந்த பரம்பரையார் மிகப் பராக்கிரமசாலிகளாகையால், அது பிரபல மடைந்திருந்தது. அதற்கும் நார்மண்டிக்கும் நடுவில் இருந்த நாடே மெயின் என்னப்படுவது. அந்த இடை நாட்டை இரு திறத்தாரும் அபகரிக்கக் கருதினராதலால், நார்மண்டிக்கும் அஞ்சௌவுக்கும் பரம்பரையாகவே கலகம் இருந்துவந்தது. அதை ஒழித்துவிட வேண்டுமென்ற கருத்தோடும், பிரான்ஸ் தேசத்து அரசாது கட்சியில் அஞ்சௌ

கவுண்டு சேராமல் தம்மோடு சேரும்படி செய்யவும் கருதி, அஞ்சௌ கவுண்டினது குமாரியான மாத்தில்தாவை ஹென்ரியரசர் தமது குமாரர் வில்லியத்திற்கு விவாகம் செய்துவைத்தார். அந்த விவாகத்திற்குப் பிறகு 1120-ம் வருஷம் ஹென்ரியும், அவருடைய குடும்பத்தாரும் இதர பரிவாரங்களும் திரும்பி இங்கிலாந்திற்குச் சென்ற காலத்தில், அரச குமாரரான வில்லியம், வெள்ளைக் கப்பல் (The white ship) என்று பெயர்கொண்ட ஒரு கப்பலில் ஏறிக்கொண்டிருந்தார். அதில் யௌவனப் பிராயத்தினரான பல சீமான்களும், குடிகாரர்களான மாலுமிகளும் இருந்தனர். மற்ற கப்பல்கள் எல்லாம் போனபின் அது கடைசியாக மாலையில் புறப்பட்டுச் சென்றது. அதில் இருந்தவர்கள் எல்லோருக்கும் வில்லியம் சாராயத்தை தாராளமாக வழங்கினாராதலால், குடிவெறியில் சுமார் ஐம்பது மாலுமிகள் தலைகால் தெரியாமல் பிரமாதமான விசையோடு அதை வலிக்கவே, இருளில் அது வழி தவறிப்போய், ஒரு பாறையில் மோதுண்டது. உடனே கப்பலிற்குள் தண்ணீர் விரைவாக வரத் தொடங்கியது. வில்லியம் ஒரு சிறிய படகைத் தள்ளி வலித்துக்கொண்டு தப்பிப்போக, அப்போது கப்பலிலிருந்த அவருடைய ஒன்றுவிட்ட சகோதரியான பரசீ கவுண்டச்சீ (Countess of Perche) வீரிட்டலறிய கூக்குரலை அவர் கேட்டு, அவளைக் காப்பாற்றும் எண்ணத்துடன் படகைத் திருப்பி வலித்துக்கொண்டு கப்பலினருகில் வந்தார். அந்த சமயத்தில், வெறிபிடித்த ஜனங்கள் தம்தம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஆவல் கொண்டு, படகினது நாலாபக்கங்களிலும் தாறுமாறாக வந்து கும்பலாய் ஏறவே, படகு உடனே கவிழ்ந்து போயிற்று. எல்லோரும் தண்ணீருக்குள் முழுகிப் போயினர். வெள்

லைக் கப்பலில் வந்த முன்னூறு ஜனங்களுள், ரௌவன் நகரத்தானான கசாப்புக் கடைக்காரன் ஒருவனே, இந்த சம்பவத்தை உலகத்தாருக்குச் சொல்ல, தப்பிப் பிழைத்து வந்து சேர்ந்தான். மறுநாள் காலையில் அதைக் கேட்ட அரசர் பேச்சு மூச்சற்று அப்படியே கீழே சாய்ந்துவிட்டார்; அதன் பிறகு அவர் இறக்கும் வரையில் அவருடைய முகம் சந்தோஷ மலர்ச்சியை ஒரு நாளிலும் கொள்ளவில்லை. அரசிளங் குமாரனது அகால மரணம் பலவகைகளில் அரசருக்குத் துன்பகரமானதாயிற்று. அவருடைய மனையாளான ஸ்காட்லாந்து தேசத்து நற்குணவதி மாது 1118-ல் இறந்து போய்விட்டாளாதலால், அதற்குப் பிறகு அரசர் லௌவாயன் (Louvain) என்னும் நாட்டினளான ஆடிலயீத் (Adelaide=ஆடு+இலம்+ஈத்து=மேஷ ராசிப் பெண்=வஸந்தா?) என்ற ஸ்திரீயை மணந்துகொண்டிருந்தார். அவள் மூலமாய் அரசருக்குக் குழந்தையே பிறக்கவில்லை. அதுவன்றி, 1125-ம் வருஷம் ஜெரமன் சக்கரவர்த்தி இறந்து போகவே, அவருக்கு வாழ்க்கைப்படுத்தப்பட்டிருந்தவளான இங்கிலாந்தரசரது ஏக புத்திரியான மாத்தில்தா விதவையாய், சந்ததியின்றி, தன் தந்தையினிடம் வந்து சேர்ந்தாள். அதுவும் அரசருக்கு இன்னொரு விடத்தில் இடுப்பு முரிந்து போனதுபோலாயிற்று. ஆயினும் அவர் வேறுவகையில்லாமையால், ஒருவாறு ஆறுதலடைந்து, இங்கிலாந்தினது பட்டத்தை, விதவையாயிருந்த தமது புதல்விக்கே கட்டிவிடக் கருதினார். ஆனால், பாரான்கள், ஒரு ஸ்திரீயினால் ஆளப்படுவதை வெறுத்தனராதலால், அதற்கு இணங்கவில்லையானாலும், அரசர் தமது பணத்தினால் எல்லோரையும் தமது வசப்படுத்தி, 1126-ல், பாரான்கள் மாத்தில்தாவையே அரசருடைய வார்சுதாரியாயேற்றுக்கொள்ளும்படி செய்

தார்; 1127-ல், அரசர் அவளை, அஞ்சௌ கவுண்டின் புதல்வரான ஜியாவரை பிளாண்டாஜெனட் (Geoffrey Plantagenet) என்பவருக்கு மணம் புரிவித்தார். அப்போது கிளித்தா என்பவர் பிரான்ஸ் அரசரால் ஃவ்ளாண்டர்ஸுக்குக் கவுண்டாக்கப்பட்டிருந்தாராதலால், அவர் இங்கிலாந்துக்கும் நார்மண்டிக்கும் தாமே நியாயமான உரிமைக்காரர் என்று கூறித் தமது உரிமையை ஆதரிக்கக் கேட்டுக்கொண்டிருந்தார். ஆனால் 1128-ல் அவர் இறந்துபோய்விட்டாராதலால் அதோடு வார்சுரிமையைப் பற்றிய சச்சரவு ஒழிந்துபோயிற்று. அஞ்சௌவினது ஜியாவரைக்கும், மாத்தில்தாவுக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்து விடவே, அக்குழந்தையே ஹென்ரி II ஆயிற்று. அவர் 1154-ல் இங்கிலாந்திற்கு அரசரானர்.

மதஸ்தாபனத்தாருடன் சச்சரவும் சமாதானமும்

பிஷப்புகளையும், அப்பாத்துக்களையும் குருபீடங்களில் அமர்த்தி ஆவாகனம் செய்யும் விஷயமாய் 1107-ல் ஒரு முக்கியமான மாறுதல் ஏற்பட்டது. மத குருமார்கள் மதஸ்தாபன இலாகாவிற்குப் புறம்பான எந்த அதிகாரியாலும், தங்கள் பீடங்களில் ஆவாகனம் செய்யப்படுதலும், தங்கள் நிலங்களை அவர்களிடம் பெற்றுக்கொள்ளுதலும் கூடாவென்றும் பாப்பு உத்தரவிட்டிருந்தார். அது சம்பந்தமாக பாப்புகளுக்கும் பல சக்கரவர்த்திகளுக்கும் நீடித்த போராட்டம் நடந்து வந்தது. ரோமுக்குச் சென்றிருந்த அஞ்சேலம் பாப்பினது அபிப்பிராயத்தை நன்றாகத் தெரிந்துகொண்டு வந்திருந்தாராதலால், அவரது கட்டளையை இங்கிலாந்தில் நிறைவேற்ற முயற்சித்தார். அப்போது பிஷப், அப்பாத் ஆகியோருக்கு இரண்டு வகையான

கடமைகள் இருந்தன. மாதா கோவில்களில் நடக்கும், சுபாசுபங்கள் சம்பந்தமான பாரமார்த்திக காரியங்களை நிறைவேற்றுவது ஒரு கடமை; அரசருக்குக் கீழ்ப்பட்ட பியூடல் நிலக்காரரா யிருந்ததுபற்றி, அது சம்பந்தமாகப் போர் வீரர்களைத் தயார்ப்படுத்தி, அவர்களுக்கு மேல் தலைமை வகித்து, அரசருடைய உத்தரவுப்படி போர்களுக்கு உதவி புரிவது இரண்டாவது கடமை. இவ்விரண்டும், ஒன்றுக்கொன்று முரண்படும் தன்மையனவா யிருந்தனவானாலும், அதுவே பழக்கத்தில் இருந்து வந்ததாகையால், பீஷப்புகளோ, அப்பாத்துகளோ தம் பகைவரைச் சேர்ந்தோரா யிருத்தல் கூடாதென்ற விஷயம் அரசருக்கு நிரம்பவும் முக்கியமானதா யிருந்தது; அதே போல, தாங்கள் அரசருடைய கட்சியில் சண்டை நடத்தும் கேவலம் போர்வீரர்களாக மாத்திரம் இருப்பது கூடாது என்று மதஸ்தாபனத்தார் உணர்ந்தனர். பீஷப்புகளும், அப்பாத்துகளும் பாதிரிமார்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், அவர்கள் தங்களுடைய பீடத்தினது அதிகார சின்னங்களான பவித்திர மோதிரத்தையும், தண்டத்தையும் அரச் பீஷப்பினிடத்திலிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டுமன்றி, அரசரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளக் கூடாதென்றும் அஞ்சேலம் கூறினர். மோதிரமென்பது பீஷப்பை, அல்லது, அப்பாத்தை அவருடைய பீடத்துக்கு சம்பந்தப்பட்ட நாட்டினது மத சம்பந்தமான ஆட்சியையும் அவரையும் பிணைக்கும் குறியென்றும், தண்டமானது அவருடைய மத சம்பந்தமான அதிகாரத்தைக் காட்டும் குறியென்றும் அஞ்செலம் வியாக்கினம் செய்து, அவ்விஷயங்களில் அரசர் சம்பந்தப்படுவது அர்த்தமற்ற செய்கையென்று வாதித்தார். முதலில் அரசர் அதற்கு இணங்கவில்லையாதலால், அஞ்

சேலம் மறுபடியும் இங்கிலாந்தை விட்டுப் போய்விட்டார். ஆனால் இருவரும் ஆழ்ந்த விவேகிகளாதலால், இருவரும் ஒருவரை யொருவர் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. பாரன்களுடைய கலகம் நடந்தகாலத்தில், அஞ்சேலம் தமக்குப் பெரிதும் ஆதரவாயிருந்ததை எண்ணிய அரசர், அவரிடம் பகைமை பாராட்டக் கருதவில்லை. ஆகையால் 1107-ம் வருஷம் அவர்க ளிருவரும் ஒருவிதமாக சமாதானம் செய்து கொண்டனர். பிஷப்பு, அப்பாத் முதலியோரை, மாதா கோவில் ஜாப்தாவில் (Chapter = சாப்தர் = சாப்தாவில் உள்ளவர்கள் ?) பதியப்பட்டுள்ளவர்கள் தேர்தலின்மூலமாக நியமிக்க வேண்டும், ஆனால் அந்தத் தேர்தல் அரசருடைய தர்பார் மண்டபத்தில் நடைபெற வேண்டும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தங்கள் நிலங்களைப் பெற்றுக் கொள்வதற்காக அரசரைப் பணிந்து அவருக்கு இராஜ விசுவாசப் பிரமாணம் செய்துகொடுக்க வேண்டும், அதன் பிறகு அவர்களை அரச்பிஷப்பும், மற்ற பிஷப்புகளும் பீடத்தில் அமர்த்தி மோதிரத்தையும் தண்டத்தையும் கொடுத்து, பீடாதிபதியாய் ஆவாகனம் செய்யவேண்டும் என்பதே அவர்கள் செய்துகொண்ட சமாதானம். இந்த ஏற்பாட்டில், அரசருடைய அதிகாரமோ, கௌரதையோ பாதிக்கப் படவில்லை; அதுபோல, மதஸ்தாபனத்தாருடைய பாரமார்த்திக கிரியைகளில் அரசர் தலையிடவில்லையாகையால் அவர்களுடைய கண்ணியமும் மனச்சாட்சியும் எவ்வித இழுக்குமின்றி பாதுகாக்கப்பட்டன. அதற்குப் பதினைந்து வருஷ காலத்திற்குப் பிறகு (அதாவது 1122-ல், பாப்பும் ஜேர்மன் சக்கரவர்த்தியும் மற்ற நாடுகள் சம்பந்தமாய் இதே மாதிரி சமாதானம் செய்துகொண்டனர். அது காண்கார்தத் ஆப் வர்ம்ஸ் (Concordat of Worms) என்று குறிக்கப்படு

கிறது. (Concordat=காணிக்காரர்களுடைய தத்து, அல்லது, ஒழுங்கு?) மற்றவர்கள் சுமார் ஐம்பதுவருஷ காலம் சச்சரவிட்டு நிறைவேற்றிய சமாதானத்தை இங்கிலாந்தில் ஐந்து வருஷத்தில் நிறைவேற்றினர். இதனுல், அஞ்சேலம் பெற்ற வெற்றி மிக முக்கியமானது. எப்படி யென்றால், இதனுல் பியூடல் தத்துவமானது அதன் நியாயமான வரம்பிற்குள் அடங்கி யிருக்கும்படி, ஓர் எல்லை ஏற்படுத்தப் பட்டதாகையால், இது மதஸ்தாபனத்தாருக்கும் அரசருக்கும் உள்ள சம்பந்தத்தை சிக்கறுத்து நிர்ணயித்ததுபற்றி, இது சரித்திரத்தில் ஒரு பெரிய சம்பவமென்றே நாம் கருத வேண்டும். வெற்றிகொண்ட வில்லியத்தின் காலத்தில், மதஸ்தாபனத்தாருக்குப் பிரத்தியேகமான நியாயஸ்தலங்கள் ஏற்பட்டன. ஹென்ரி I காலத்தில் முற்றிலும் மத சம்பந்தமான சீநாடு (Synod = ஸ்ரீ மகாநாடு?) ஏராளமாக நடந்ததிலிருந்து, மத ஊக்க அபிவிருத்தி நன்கு புலப்படுகிறது.

சலீஸ்புரி ராஜர் (Roger of Salisbury)

இந்தப் புதிய ஏற்பாட்டின்படி முதன்முதல் சலீஸ்புரி என்ற இடத்திற்கு பிஷப்பு தேர்ந்தெடுக்கப்பட, அந்தப் பதவி, அரசருடைய சொந்தத்தொழுகை ஸ்தலத்தினது சாப்பிளையனுன (Chaplain) ராஜர் என்பவருக்குக் கிடைத்தது. அவர் மிகவும் சிறந்த புத்திமான்; அபாரமான திறமைசாலி. பளம்பரடு துன்மார்க்க விஷயங்களில் இரண்டாவது வில்லியத்திற்கு எப்படி இன்றியமையாதவரா யிருந்தாரோ, அதேபோல, ஹென்ரி நீதியையும் ஒழுங்கையும் கடைப்பிடிக்கும் விஷயத்தில் ராஜர் அரசருடைய வலது கைபோலாய்விட்டார். ஆகவே, அவரை அரசர் ஜஸ்டிசீயர் பத

விக்கு நியமித்தார். அவருடைய மேல்பார்வையில், ஸ்தல நியாயஸ்தலங்களான ஹண்ட்ரட், ஷயர் ஆகியவை ஒழுங்கு படுத்தப்பட்டு, மத்திய நீதிஸ்தலத்தோடு சம்பந்தப் படுத் தப்பட்டன. வெற்றிகொண்ட வில்லியம் காலத்தில், பல இடங்களின் ஷீரப் பதவிகள் பிரபுக்களுக்குக் கொடுக்கப் பட்டனவாதலால், அவை பெரும்பாலும் பரம்பரை பாத்தி யதையாக மாறிப்போயின. அக்காலத்தில் வில்லியமும், லான்பரங்கும் ஒற்றுமையாக நடந்துகொண்டதனால், குடி மக்கள் ஒறுக்கப்படாமல் தப்பினர். இரண்டாவது வில்லி யமும், ரளம்பரடும் பெரும்பாலும் ஷை ஸ்தல நீதிஸ்தலங் களை அசட்டையாகவே விட்டுவிட்டனர்; தவறி அவைகளை உபயோகப் படுத்தினாலும், அக்கிரமப் பண வசூலுக்காகவே அவைகளைப் பயன்படுத்திக்கொண்டனர். ஹென்ரியும், ராஜரும், நாடு முழுதிலும் தக்க அதிகாரவர்க்கங்களை நியமித் தால், தாங்கள் நியாயமான வழியில், தங்களது வரி வசூலை அபாரமாய்ப் பெருக்கிக் கொள்ளலாமென்று உணர்ந்து, அதற்காக அவர்கள் முக்கியமான ஓர் உத்தரவைப் பிறப் பித்து, ஹண்ட்ரட் நீதிஸ்தலமும், ஷயர் நீதிஸ்தலமும் எட் வரட் அரசரது காலத்தில் எந்தமாதிரி நடத்தப்பட்டனவோ, அதே மாதிரி அவைகளை நடத்தவேண்டுமேயன்றி வேறு மாதிரி நடத்துதல் கூடாது என்று திட்டப்படுத்தினர். அத னால் முக்கியமான இரண்டு அநுகூலங்கள் ஏற்பட்டன. (1) நீதி குடியானவருடைய வீட்டண்டையிலேயே வழங்கப் பட்டது. (2) அவைகளுடைய அதிகாரமெல்லாம் பாரான்க ளுடைய கைக்குப் போய்விடாமல் அரசரிடத்திலேயே இருந்தது. ஒவ்வொரு நியாயஸ்தலத்தினது தலைமை அதி காரியான ஷீரப்பும் அரசராலேயே நியமிக்கப்பட்டாராதலால், அவர்கள் குரையா ரஜிஸ்” (Curia Regis=குரு ஐயா ராஜ

ஆஸ்?) என்னப்பட்ட நீதிஸ்தலத்தோடு நேராக சம்பந்தப் படுத்தப்பட்டனர். நார்மன் வெற்றிக்குப் பிற்பாடு வீட்டான் சபை மாகனம் காண்சில்லியம் (Magnum Concilium—மகா கனம் பொருந்திய, சில்லாக் காணியாளர்?) என்ற பெயரால் குறிக்கப்பட்டது. ஆனால் இதில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் நிலத்தை அரசரிடம் பியூடல் முறையில் பெற்றுக்கொண்டோராதலால், வீட்டான் சபை அரசருடைய முக்கியக் குடியானவர்களுடைய மகாநாடாக மாறிப் போய்விட்டது. ஆனால் அதில் சம்பந்தப்பட்டவர்கள் ஏராளமாயிருந்தனராதலால், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அத்தனைபேரும் அழைக்கப்படுவதில்லை. துரைத்தன நிர்வாகம் வருஷம் முழுவதும் நடந்துகொண்டேபோக வேண்டுமாதலால், எப்போதும் சமீபத்தில் இருந்தவர்களான, அரசருடைய சில முக்கிய உத்தியோகஸ்தர்கள் ஒரு சபைபோலக் கூடி, மாகனம் காண்சில்லியம் என்னும் மகா சபையின் நிரந்தரக் கமிட்டியார்போல துரைத்தன நிர்வாக காரியங்களை நடத்தினர். அதற்கு ஜஸ்டிசியர் தலைவராயிருந்தமையாலும், அவர் மத குருவான பிஷப்பாதலாலும், அந்த சபை 'குரு ஐயா ராஜ ஆசு' அல்லது, குரு ஐயாவுடைய ராஜ தர்பார் ஸ்தானம் என்று கருதப்பட்டது. இந்தக் குரையா ரஜஸ், முக்கியமாக, நியாய விசாரணை ஸ்தலமாகவே இருந்தது. பண வசூல்களைச் செய்யும் கடமையை கவனிக்கும்பொருட்டு அதன் ஒரு பகுதி பிரத்தியேகமாகப் பிரிக்கப்பட்டது. அது எக்ஸ்சேக்கர் (Exchequer) என்று குறிக்கப்படுகிறது. இரண்டிடங்களிலும், அநுபவசாலிகளான ஏராளமான குமாஸ்தாக்களும், சட்ட நிபுணர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் துரைத்தன காரியங்களையெல்லாம் மிக சாமர்த்தியமாக நடத்தினராதலால், மற்ற

அரசர்களுடைய காலத்தில் இருந்ததைவிட துரைத்தன நிர்வாகம், நீதி நிர்வாகம் ஆகியவை ஹென்ரியினது காலத்தில் மிகத் திறமையாக நடந்தேறின. குரையா ரஜிஸ் நீதி ஸ்தலத்தில் அரசருடைய தலைமைக் குடியானவர்கள் சம்பந்தப்படும் வழக்குகளும், கீழ் நியாய ஸ்தலங்களிலிருந்து வரும் வழக்குகளும் பரிசீலனை செய்யப்பட்டன. அந்த நீதி ஸ்தலத்திலிருந்து சில நீதிபதிகள் நாட்டுப்புறங்களில் முகாம் செய்து, குடிமக்களுக்கு சௌகரியமாய் அங்கங்கு வழக்குகளைப் பரிசீலனை செய்யும்படி அனுப்பப்பட்டனர். காலக்கிரமத்தில் குடிமக்கள் ஷை பிரயாண நீதிபதிகளால், தங்களுடைய வழக்குகளை முடித்துக்கொள்ள விரும்பினராதலால், நாட்டுப்புறங்களில் இருந்த நீதிஸ்தலங்களுக்கு இவை போட்டி நீதிஸ்தலங்கள்போலாய்விட்டன. எக்ஸ்சேக்கர் அதிகாரிகள் எக்ஸ்சேக்கர் பாரான்ஸ் (Barons of the Exchequer) என்று குறிக்கப்பட்டனர். ஹென்ரி அரசர் வசூலித்த பெருந் திரளான பொருளில் வரவேண்டியது, வசூலாவது, பாக்கி நிற்பது ஆகியவை சம்பந்தமான கணக்குகளை வைத்து தற்காலத்து ரிவினியு இலாகாவினது கடமைகளை வகித்தனர். ஷிரப்புகள் வருஷத்திற்கு இருமுறை தங்கள் கணக்குகளை எக்ஸ்செக்கர் மன்றத்திற்கு ஆஜர் செய்தனர். இடைக் காலங்களில் எக்ஸ்சேக்கர் பாரான்கள் சுற்றுப்பிரயாணம் போய் பண வசூல் முதலிய கடமைகளை மேல்பார்வை பார்த்தனர். அரசருடைய இரண்டு மன்றங்களுக்கும் நியமிக்கப்பட்டவர்கள் பெரிய நார்மன் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அன்றுதலால், அவர்கள் அபிவிருத்தியடைந்து முன்னுக்கு வருவதற்கு அரசருடைய தயவையே நாடியவர்களா யிருந்தனர்.

ஹென்றி I மரணம், நாட்டினது அபிவிருத்திகள்

1135-ம் வருஷம் ஹென்றி I திடீரென்று இறந்து போனார். அவர் 32 வருஷ காலம் இங்கிலாந்தில் அமைதியை நிலைநாட்டினாராதலால், குருசேடினால் ஊக்கப்பட்ட அன்னிய நாட்டு வர்த்தகம் அபிவிருத்தியடையவும், நாட்டினர் ஊதியமடையவும் சந்தர்ப்பம் கிடைத்தது. இங்கிலாந்தும் நார்மண்டியும் ஓர் அரசருடைய ஆட்சிக்குட்பட்டுப் போனதாகையால், இரண்டிற்கும் இடையில் இருந்த இங்கிலீஷ் சானல் (English Channel) என்னப்படும் சமுத்திரத்தில் வியாபாரிகள் எவ்வித அச்சமுமின்றி போய் வந்து வியாபாரத்தைப் பெருக்கினர். அதுவன்றி, அவர்கள் அயர்லண்ட், பிரெட்டன், ஃப்ளாண்டர்ஸ், டென்மார்க் முதலிய இடங்களிலும் போய் வர்த்தகம் நடத்தினர். லண்டனும் பல வகையில் அபிவிருத்தி யடைந்துவிட்டது. ஹென்றி I தமது ஆட்சித் தொடக்கத்தில் அதற்கு ஒரு பட்டயம் அளித்தார். அதைப் பார்த்த இதர பட்டணங்களும் பாரான்களுடைய கொடுங் கோன்மையிலிருந்து விடுதலையடையவும், ஸ்தல சுய ஆட்சி நடத்தவும் முயற்சித்தன. லண்டனுக்கும், பெவர்லி (Beverley) என்னும் பட்டணத்திற்கும் கொடுக்கப்பட்ட பட்டயங்கள் இன்னமும் வைத்துக் காப்பாற்றப்பட் டிருக்கின்றன. அக்காலத்தில் பட்டணத்தார் எவ்விதமான உரிமைகளைக் கோரினர் என்பதற்கு இவைகளை நாம் மாதிரியாக வைத்துக்கொள்ளலாம். அவர்களுடைய முக்கிய கோரிக்கைகள் அடியில் வருவன:—(1) தங்கள் பட்டணத்தினது முக்கிய வரி ஷீரப்பினால் வசூலிக்கப்படாமலும், ஷயரினது வசூல்களோடு சேர்க்கப்படாமலும், நேராக அரசருக்கே செலுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை. (2) தங்கள் சொந்த உத்தியோகஸ்தர்களை நிய

மித்துக் கொள்ளவும், தங்கள் வழக்குகளைத் தங்கள் நியாயஸ்தலங்களில் விசாரித்துக் கொள்ளவும் கோரிக்கை. (3) முக்கியமான வர்த்தகர்கள் பியூடல் சட்டத்திற்கு உள்பட்டு ஐக்கிய சங்கமாய் ஒன்றுசேரக் கோரிக்கை. இவ்வாறு பட்டணங்களில் மத்திய வகுப்பார் ஏற்பட்டதுபோல, மடாலயங்களிலும் பல வகுப்பார் ஏற்பட்டிருந்தனர். களக்னே (Clugny) என்ற மடாலயத்தில் இருந்த சிலர் ஓர் இயக்கத்தைத் தொடங்கினர். அவர்கள் மடாலயங்களை அலங்கரித்தல், கோவிலில் பெரிய மணியைக் கட்டி அடித்தல், அழகான நிறங்களைக் கொண்ட கண்ணுடி ஜன்னல்களை மடாலயங்களில் ஏற்படுத்துதல், தொழுகையை மிக ஒழுங்காக நடத்துதல் முதலிய வெளிப்படையான சாங்கியங்களை மிக முக்கியமாகக் கருதினர். அவர்களை நாம் கிரியா மார்க்கத்தினரான சாங்கியர்கள் என்று கருதலாம். அவர்களைப் பின்பற்றி, ஸிஸ்டர்சீயன்ஸ் (Cistercians) என்ற வகுப்பார் தோன்றினர். அவர்கள் முன்னவருடைய சாங்கியங்களை விலக்கி பக்தி மார்க்கத்தை அநுசரித்தவர்கள். அவர்கள் மனித வாசமில்லாத தனியான இடங்களில் தங்கள் மடங்களை ஏற்படுத்திக் கொண்டனர். அவர்களைத் தவிர ஆஸ்தன் கனென்ஸ் (Austin Canons) என்ற ஒரு வகுப்பார் தோன்றினர். அவர்கள் மடாலய சந்நியாசிகளுக்கும், கிராமங்களில் இருந்த லௌகிகப் பாதிரிக்கும் மத்தியில் வேலை செய்து, பின்னவருடைய பாரமார்த்திக விஷய ஞானத்தை அதிகப்படுத்தினர். வினைதகித்தையன் சந்நியாசிகள் (Benedictine Monks) என்ற இன்னொரு வகுப்பார் இருந்தனர். அவர்கள் தங்களுடைய மடாலயங்களில் கல்வி, கைத்தொழில் முதலியவற்றை போதித்தனர். அவர்களில் முக்கியமானவர் மால்மேயீஸ்புரி வில்லியம் (William of Malmesbury) என்

பவர். இவர் பீடே (Bede) என்பவருக்குப் பின்னால் தோன்றிய சிறந்த சரித்திராசிரியர். இவர் தம்முடைய காலம்வரையில் நிகழ்ந்த, நாட்டின் சரித்திரத்தை எழுதிவைத்தார். இவ்வாறு மடாலயங்கள் கலைஞானமும், கைத் தொழில்களும் கற்பிக்கப்படும் இடங்களாக மாறியதன்றி, சீமான்களுக்குக் கலாசாலையாகவும், ஆசார சீலத்தோடு வாழ்க்கை நடத்துவதற்குச் சட்டகமாகவும் இருந்தன. ஹென்ரி I அரசரே பெரிய கல்விமானாயிருந்தார். அவர் இங்கிலீஷ், பிரெஞ்ச், லத்தீன் ஆகிய மூன்று பாஷைகள் தெரிந்துகொண் டிருந்தார். அவருடைய குழந்தைகள் நன்றாகப் படித்திருந்தனர். அவருடைய வைப்பாட்டி குமாரரான ராபர்த் (Robert of Gloucester) சரித்திராசிரியரான மால்மேயீஸ்புரி வில்லியத்தினது ஆப்த நண்பர். லத்தீன் பாஷையில் உள்ள சிறந்த நூல்கள் பிராபல்ய மடைந்திருந்தன. யூகிலிட் (Euclid) என்னப்படும் கணித நூலில் ஒரு பிரதி இங்கிலாந்திற்கு வந்து சேர்ந்திருந்தது. இப்போதைய ஆக்ஸ்போர்ட் (Oxford) சர்வ கலாசாலை அந்தக் காலத்தில் ஆரம்பமானதாகவே நாம் கருதவேண்டும். ஹென்ரியினது அன்னிய நாட்டு சம்பந்தமும் நன்மையானதாகவே முடிந்தது. அவர் இங்கிலாந்தையும் நார்மண்டியையும் ஒன்றுபடுத்தியதைவிட, தெற்கு வேல்ஸில் பிளமிஷ்காரர்களைத் தொடர்ச்சியாகக் குடியேற்றினது மிக முக்கியமான விஷயம். அவர் வேல்ஸின்மேல் இரண்டு முறைகள் படையெடுத்துச் சென்று, அந்நாட்டினர் தம்மைப் பணியும்படி செய்துகொண்டார். அரசியல் ஒழுங்கு, தேசிய உணர்ச்சி, பொருளீட்டல், கல்விப் பயிர்ச்சி முதலிய ஜீவாதாரமான எல்லா அம்சங்களிலும் பின்னால் ஏற்படவிருந்த மகோன்னத நிலைமைக்கு அறிகுறியான பிரதம காரியங்களை

யெல்லாம் அவர் செய்து முடித்தார். அவரை நியமகேசரி (Lion of Righteousness) என்று இங்கிலீஷ் குடிமக்கள் குறித்தனர். அவரைப்பற்றி சரித்திராசிரியர் அடியில் வருமாறு எழுதி இருக்கிறார். "அவர் நற்குணம் வாய்ந்தவர். அவரிடம் எல்லோரும் பெரிதும் பீதிகொண்டனர். அவருடைய காலத்தில் எவனும் பிறனுக்குக் கெடுதல் செய்யத் துணியவில்லை. அவர் மனிதர்களுக்கு மாத்திரமன்றி மிருகங்களுக்கும் சமாதானமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்தார். தங்கம், அல்லது, வெள்ளியைப் பெரிய பொதியாக ஒருவர் எடுத்துக்கொண்டு போனாலும், பிறர் அவருக்கு இதமான வார்த்தைகளைக் கூறினரேயன்றி வேறு எதையும் செய்யத் துணியவில்லை," என்பது சரித்திராசிரியருடைய சர்ம சுலோகம். இவ்வாறு ஹென்ரி பலவகைகளில் திறமையாக நடந்துகொண்டாராலும், நாட்டிற்கு இரண்டிடங்களிலிருந்து அபாயம் நேரக்கூடிய நிலைமையில் அதை விட்டு அவர் இறந்து போய்விட்டார். அவருக்குப் பிறகு யார் அரசாளுவது என்னும் விஷயம் எல்லோராலும் ஏகமனதாய் அங்கீகரிக்கப்படாத விஷயமாயிருந்தது. அவர் பாரான்களை அடக்கி, அவர்களை சாந்தப்படுத்தி வைத்திருந்தாராலும், திறமையான அரசர் இல்லாவிடில், அவர்கள் தங்களுடைய துஷ்ட குணத்தைக் காட்டக் கூடியவர்களாயிருந்தனர்.

ஹென்ரி I அரசாட்சியில் நிகழ்ந்த முக்கியமான சம்பவக் குறிப்புகள் :—

1100 ஹென்ரி முடிசூடுதல், குடிமக்களுக்குப் பட்டயம் அளித்தல், லண்டனுக்குப் பட்டயம் அளித்தல், ஸ்காட்லாந்து மாதை மணத்தல், பாம்பரடை சிறைப்படுத்தி அஞ்சேலத்தைத் திரும்ப அழைத்துக் கொள்ளல்.

1101 நார்மண்டி ராபர்த்துக்தும் ஹென்ரிக்கும் சமாதானம்.

1102 ராபர்த் பலஸ்மியினது கலகம்.

1103 ஷியார் நார்மண்டிக்குத் துரத்தப்படுதல்.

1106 தஞ்சபரை யுத்தம்.

1107 பீடாதிபதிகளது நியமனத் தகராறு முடிவுறுதல். சலிஸ்புரி ராஜர் ஜஸ்டிசீயராகுதல். குரையா ரஜஸ் ஸ்தாபிக்கப் படுதல்.

1109 அஞ்சேலம் காலமாகுதல்.

1114 அரச குமாரி மாத்தில்தாவுக்கும் ஜேர்மன் சக்கரவர்த்தி ஹென்ரி V க்கும் விவாகம்.

1118 ஹென்ரி I யின் முதல் மனையாட்டி மாது காலமாகுதல்.

1119 பரன்விளி யுத்தம்.

1120 வெள்ளைக் கப்பல் சம்பவம். ஹென்ரியினது குமாரர் வில்லியம் அகால மரணமடைதல்.

1126 மாகனம் காண்சில்லியம் சபையார் மாத்தில்தாவை இங்கிலாந்திற்கும் நார்மண்டிக்கும் அரசியாயேற்பதாகப் பிரமாணிக்கம் செய்தல்.

1128 மாத்தில்தா அஞ்சேள கவுண்டினது குமாரரை மணத்தல்.

1133 ஹென்ரி II ஜனித்தல்.

1135 ராபர்த், ஹென்ரி I ஆகிய சகோதரர்களது மரணம்.

அத்தியாயம்-6

ஸ்டீவன் (1135—1154)

மாத்தில்தாவினது தவறு, ஸ்டீவன் அரசராதல், அவருடைய உரிமைப் பட்டயங்கள்

ஹென்ரி I மரித்த காலத்தில், மாத்தில்தா தன் கணவருடைய நாடான அஞ்சௌவில் இருந்தாள். தனது தந்தை தன்னை இங்கிலாந்திற்கு வார்சுதாரி யாக்கி வைத்து விட்டுப் போனதுபற்றி, பட்டம் தனக்கே கிடைக்குமென்ற நம்பிக்கையினால், அவள் தன் புருஷருடன் உடனே போய் இங்கிலாந்தினது அரசுரிமையைக் கைப்பற்றுமல் முதலில் நார்மண்டியைத் தன் வசப்படுத்திக்கொள்ள எத்தனித்தது பெரிய தவறாக முடிந்தது. ஏனென்றால் அதற்குள் இங்கிலாந்தில் வேறொருவர் அரச பதவியைப் பெற்றுவிட்டார். அவர், வெற்றிகொண்ட வில்லியத்தினுடைய ஏக புத்திரியான ஆடிலா என்பவளுக்கும், பிளாய்ஸ் கவுண்டுக்கும் பிறந்த மூன்றுவது குமாரரான ஸ்டீவன்(Stephen)என்பவர்; அவர் 1094-ம் வருஷம் பிறந்தவர். அவர் பட்டத்திற்கு வந்த காலத்தில் சுமார் நாற்பது வயதடைந்திருந்தார். அவர் அழகான தோற்றமும், சுறுசுறுப்பான சரீரமும் உடையவர்.

அவர் மனோ தைரியமும், சிறந்த ஒழுக்கமும் வாய்ந்தவர். ஸ்காத்திலிங் எட்காருடைய இன்னொரு சகோதரியான கிறிஸ்டினாவினது குமாரத்தியை அவர் மணந்துகொண்டிருந்தவராதலால், அவர்களுக்கு உதித்த குழந்தைகளும், பழைய இங்கிலீஷ் அரச குடும்பத்தாருடைய சந்ததியாரென்றே கருதப் படவேண்டும். ஹென்ரியினது குமாரியான மாத்தில்தாவை இங்கிலீஷ் குடிமக்கள், பெயரினால் மாத்திரம், தெரிந்து கொண்டிருந்தனரன்றி நேரில் பார்த்ததில்லை. ஸ்டீவனோ இங்கிலாந்தில் தன் அம்மானான ஹென்ரியினது அரண் மனையில் பெரும்பாலும் இருந்து வளர்ந்தவர். ஹென்ரி I ஸ்டீவனுக்கு தக்க இடத்தில் விவாகம் செய்துவைத்ததன்றி, அவருடைய சகோதரரான ஹென்ரி, வின்சேஸ்தர் பிஷப் ஸ்தானத்தை அடைய உதவி செய்தார். ஹென்ரி தமது குமாரியான மாத்தில்தாவையே தமக்கு வார்சுதாரியாய் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர் பாரான்களிடம் பிரமாணிக்கம் பெற்ற காலத்தில், ஸ்டீவனிடத்திலும் அவர் பிரமாணிக்கம் பெற்றார். ஆனால், ஹென்ரி இறந்துபோனாரென்ற செய்தியைக் கேட்டவுடன், ஸ்டீவன் தாம் அவருக்குச் செய்துகொடுத்த பிரமாணிக்கத்தைப் பொருட் படுத்தாமல் லண்டனுக்கு வந்து சேர்ந்தார். நார்மன் பாரான்களுக்கும், அஞ்சௌவன் கவுண்டுகளுக்கும் பரம்பரையான பகைமை இருந்து வந்தமையாலும், முன்னவர் ஒரு ஸ்திரீயை அரசியாய் ஏற்க விரும்பவில்லையென்பது அவருக்குத் தெரிந்திருந்ததாமையாலும், பட்டத்தைத் தாம் அடையவேண்டுமென்ற கருத்தோடு ஸ்டீவன் வந்து சேர்ந்தார். ஆனால், அவர் முதன் முதலில் பாரான்களால் நியமிக்கப்படவில்லை. அவர் லண்டனை அடைந்தவுடன் அந்த நகரத்திலிருந்தவர்கள் அவருக்கு ஆதரவு அளிக்க, அவர் உடனே வின்சேஸ்

தரை அடைந்தார். அங்கிருந்த அவருடைய சகோதரரும், பிஷப்புமான ஹெண்ரியினது உதவியால், அவர் அரசருடைய கஜானாவைக் கைப்பற்றிக்கொண்டார். அரசருடைய ஜஸ்டிசியரான ராஜரும், அரசருக்கு உறுதிமொழிகூறியிருந்ததை அசட்டைசெய்து, ஸ்டீவனோடு சேர்ந்துகொள்ளவே, உடனே அரசருடைய நீதிஸ்தலத்து உத்தியோகஸ்தர்களும், குரையா ரஜஸ் நியாயாதிபதிகளும் அவரைப் பின்பற்றினர். ஆகவே, 1135-ம் வருஷம் ஸெயிண்ட் ஸ்டீவன்ஸ் தினத்தன்று லண்டனில் ஸ்டீவன் பகிரங்கமாய் அரசராகத் தேர்ந்தெடுக்கப்படவே, கண்டர்புரி அரச்பிஷப்பு அவருக்கு முடி சூட்டினர். அவர் உடனே குடிமக்களுக்கு சுருக்கமான உரிமைப் பட்டயமொன்றை வெளியிட்டு, நார்மண்டிக்கும் அவரே அதிபதி என்பதை ஸ்தாபித்துக் கொண்டார். அப்போது ஸ்காட்லாந்து அரசரான தாவீதே முதன் முதலில் மாத்தில்தாவுக்கு அநுகூலமாக வெளிக் கிளம்பினவர். ஸ்டீவன் உடனே அவருடன் சமாதானம் செய்துகொண்டு, கேரளீஸ்ல என்ற நாட்டிற்கு அவரை ஏயராளாக்கி, அவருடைய குமாரரான ஹெண்ரிக்கு கம்பர்லண்டைக் கொடுத்தார். அதன்பிறகு ஸ்டீவன் மறுபடி விரிவான இன்னோர் உரிமைப் பட்டயத்தை வெளிப்படுத்தினர். அது இங்கிலாந்தினது மகா ஜனங்களுடைய பெரிய உரிமைப் பட்டயங்களுள் இரண்டாவதானது. அநீதியையும், அக்கிரமப் பண வசூலிப்பையும் தாம் உடனே நிறுத்துவதாகவும், நாட்டினது பழைய சட்டங்களையும், பழக்க வழக்கங்களையும், அமைதியையும், மதஸ்தாபனங்களது சுயாதிகாரத்தையும் தாம் நிலை நாட்டுவதாகவும் அவர் உறுதி கூறினர். அதுவன்றி முதலாவது ஹெண்ரியினல் புதிதாக ஏற்படுத்தப்பட்ட காடுகளை விட்டுவிடுவதாகவும் அவர் ஒப்புக்கொண்டார்.

பாரான்களது கலகம்

ஸ்டீவன் தைரியசாலியானவர்; இயற்கையிலேயே இரக்கமும் தயாளமும் வாய்ந்தவர்; ஆனால் அவர் தாராளமாக வாக்களிப்பதை நிறைவேற்றுவதே இல்லையாதலால் அவரை ஆதரித்தவர்களுக்கு அவரிடம் நம்பிக்கை இல்லாமல் போய் விட்டது. ஆனால், அவர் சிலருக்கு ஏராளமான சொத்துகளைக் கொடுத்து விரயம் செய்தாராறைலும், அவர்களுக்கு உண்மையிலேயே அவரிடம் பற்றுதல் உண்டாகவில்லை. பாரான்களின்மீது அவருடைய அதிகாரம் செல்லுபடியாகவில்லை. அப்போது, 1136ம் வருஷத்தில், அவர் இறந்து போய் விட்டாரென்ற ஒரு பொய் வதந்தி பரவவே, நார்விச் (Norwich), எக்ஷேதர் என்ற இடங்களில் அவருக்கு விரோதமாகக் கலகம் விளைக்கக் கிளம்பிவிட்டனர். அந்த வருஷத்தோடு, அவருடைய மகோன்னத நிலைமை முடிவடைந்தது. அதற்கடுத்த வருஷமாகிய 1138லிருந்து அவருக்கு பல வகைப்பட்ட இன்னல்கள் உண்டாகத் தொடங்கிவிட்டன. அந்த சந்தர்ப்பத்தில் அவர் ஆழ்ந்த விவேகத்தோடு நடந்து சமாதானத்தை நிலைநாட்டுவதை விட்டு, முன்யோசனை யில்லாமல் பல காரியங்களைச் செய்யவே, அவருக்கு எதிர்ப்பு அதிகரித்துவிட்டது. அவர் கூலி கொடுத்து பிளமிஸ்காரர்களைக் கொணர்ந்து தமக்குப் பக்க பலமாக வைத்துக்கொண்டார்; தமக்கு அநுகூலமாயிருந்த பாரான்களுக்கு, கோட்டைகள் கட்டிக்கொள்ள அநுமதி கொடுத்து விட்டார். அதுவன்றி அவர் இன்னொரு விபரீதக்காரியத்தையும் செய்யத்தொடங்கினர். தமக்கு அநுகூலமாயிருந்த சிலருக்கு ஏயராள்பட்டம் வழங்கி, எக்ஸ்செக்கரிலிருந்து பெருந்தொகைகளை அவர்களுக்கு உபகாரச்சம்பளமாகக் கொடுத்துவிட்டார்.

நார்த்தாளர்தான் சண்டை (Northallerton), அல்லது, கொடிச் சண்டை (Battle of the Standard)

1138-ம் வருஷத்தில் ஸ்காட்லாந்து அரசரான தாவீது மறுபடியும் சேனைகளைத் திரட்டிக்கொண்டு, நார்த்தம்பர்லண்ட், துராஹம் ஆகிய இரண்டிடங்களையும் இரக்கமின்றி நாசப்படுத்தி விட்டு, யார்க் ஷயருக்குள் நுழைந்தார். அப்போது வேறிடங்களிலும் ஸ்டீவனுக்கு விரோதிகள் கிளம்பினார்கள். க்ளௌசேஸ்தர் ராபர்த், ஹேயர் போர்ட் மய்ல்ஸ் ஆகியோர் கலகம் விளைவித்தனராதலால், அவர்களை அடக்கும் விஷயத்தில் ஸ்டீவன் தொடர்ச்சியாகப் பல இடங்களில் முற்றுகை போடவேண்டிய நிலைமையிலிருந்தார். ஆனால் நல்ல வேளையாக வடநாட்டுக் கலகத்தை அடக்க, அங்கு தகுதியானவர்கள் இருந்தனர். யார்க்கினது அரச்பிஷப்பான தர்ஸ்தன் (Thurston) என்பவர் இங்கிலீஷ் காலாட்படைகளைச் சேர்த்துக்கொண்டு ஸ்காட்லாந்து அரசரை எதிர்க்கலானார். அவர்கள் தங்கள் சேனைகளுக்கு ஒரு வண்டியில், ஸெயின்ட் பீட்டர், ஸெயின்ட் வில்பரட், ஸெயின்ட் ஜான் ஆகியோருடைய கொடிகளை உயர்த்தி வைத்துக்கொண்டு, அந்தப் போரை நடத்தினராதலால், அது கொடிச்சண்டை என்று குறிக்கப்படுகிறது. இங்கிலீஷ் சேனைகள் ஈட்டிகளையும், வில்லம்புகளையும் வைத்துக் கொண்டு போர் செய்தனர். ஸ்காட்லாந்து அரசருடைய சேனைகள் மிக வீராவேசத்துடன் சமாளித்துப் பொருதனராலும், அவர்கள் தோற்றுப் போயினர். அந்தப் போர் நார்த்தாளர்தான் என்ற இடத்திற்கு இரண்டு மயிலுக்கப்பால், 1138-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 22உ முடிவடைந்தது. ஸ்காட்லாந்து சேனைகளில் சுமார் ஆயிரம் மனிதர்கள்

இறந்து போயினர் அவர்களையும், தங்கள் சாமான்களையும் போட்டுவிட்டு ஸ்காட்லாந்துக்காரர்கள் ஓடிப் போயினர். அதன்பிறகு, அந்த ஞாபகம் சுமார் 200 வருஷ காலம் வரையில் யார்க்கின்மேல் எவரும் படையெடுத்து வராமல் தடுத்தது.

சலீஸ்புரி ராஜருடன் சச்சரவு

வடக்கில் வெற்றி ஏற்பட்ட காலத்தில், தெற்கிலும் ஸ்டீவன் வெற்றி பெற்ருர். ப்ரஸ்தல் (Bristol) கைப்பற்றக் கூடாததா யிருந்தது. ஆனல் ஹேயர் போர்ட், ஷாரவ்ஸ்புரி ஆகிய இரண்டும் அவருடைய வசப்பட்டன. அரசப் பெரு மாட்டி தோவர் (Dover) என்னுமிடத்தைப் பிடித்துக் கொண்டாள். ராபர்த்தும், மயில்ஸாம் நாட்டை விட்டு ஓடிப் போய்விட்டனர். 1138-ம் வருஷத்தில் அரசருக்குப் பல அநுகூலங்கள் ஏற்பட்டன வாஞலும், அடுத்த வருஷம் அவ ருக்கு துரதிர்ஷ்டமானதாய் முடிந்தது. வடக்கில் கிடைத்த வெற்றியின் பயனை அரசரே போக்கடித்துக் கொண்டார். நார்த்தம்பர்லண்ட், கம்பர்லண்ட் ஆகிய இரண்டு நாடுகளை ஸ்காட்லாந்து அரசர், இங்கிலாந்து அரசருக்குக் கீழ்ப் பட்ட ஏயராள் நாடுகளாய் வைத்துக்கொள்ளும்படி ஸ்டீவன் கொடுத்துவிட்டார். அதுவுமன்றி, இன்னெரு விபரீத காரி யமும் நிகழ்ந்தது. அரசர் சலீஸ்புரி ராஜருடன் நட்பாகவே இருந்துவந்தார். பின்னவர் நாட்டினது நிர்வாகத்தை நிரம் பவும் திறமையாக நடத்திவந்தார்; அரசர் ராஜருடைய அமிதமான வேண்டுகோள்களை யெல்லாம் பூர்த்தி செய்து வைத்தார். ஆனல் ராஜர் முதலியோரது விஷயத்தில் அரசர் சம்சயங்கொள்ளலானுர். ராஜர் ஜஸ்டிசியராயிருந்தார். அவ ருடைய குமாரர் சான்சிலராயிருந்தார்; அவருடைய சகோ

தரியினுடைய குமாரர்கள் இருவர் எல்லி, லின்கன என்னும் இடங்களினது பிஷப்புகளா யிருந்தனர். நாட்டில் உள் நாட்டுப் போர் ஏற்படலாமென்று எதிர்பார்த்து அவர்கள் தங்கள் இடங்களில் பலமான கோட்டைகளைக் கட்டியிருந் தனர். அத்தனை பெரிய பதவிகளை வகிப்பவர்கள் தமக்கு விரோதிகளாக மாறி விடுவார்களோ என்று அரசர் சந்தே கித்து, அவர்களுடைய கோட்டைகளைத் தம்மிடம் விட்டு விடும்படி கேட்க, அதிலிருந்து, இருதிறத்தாருக்கும் மனஸ் தாபம் ஏற்பட்டது. அரசர் 1139 ஜூன் மாதத்தில் ஷ நால்வரையும் கைதிகளாக்கி, அவர்கள் பிஷப்புகள் என் பதைக்கூட எண்ணாமல் அவர்களை சிறையிலடைத்து விட் டார். துரைத்தன நிர்வாகப் பொறுப்பு முழுதும் அவர்க ளுடைய வசத்தி லிருந்தமையால், அவர்கள் சிறைப்பட்ட வுடன் துரைத்தன நிர்வாகம் அப்படியே ஓய்ந்து நின்று போய்விட்டது. மத ஸ்தாபனத்தார் எல்லோரும் அரச ருக்கு எதிரிகளாய் மாறினர். அது உள் நாட்டுப் போரைக் கிளப்பிவிட்டதுபோல முடிந்தது.

மாத்தில்தாவினது வருகை, உள்நாட்டுப் போர்

1139-ம் செப்டம்பர் மாதம் 30-ம் தேதி மாத்தில் தாவும், ஹென்ரி I அரசருடைய வைப்பாட்டி புதல்வரான க்ளௌசேஸ்தர் ராபர்த்தும் இங்கிலாந்தில் வந்திறங் கினர்; உடனே நாடு முழுதும் குளறுபிடியாக முடிந்தது. பாரான்கள் கோட்டைகளைக் கட்டினர்; பக்கத்திலிருந்தவர் களுடைய சொத்துகளை நாசமாக்கி பயிர்களை அழித்து ஒருவரோடொருவர் தங்கள் தங்கள் சொந்த யுத்தங்களில் ஈடுபட்டனர். ஆகவே, பியூடல் அராஜகம் அடக்குவாரற்று விபரீதமாகப் பெருகிப் போயிற்று. பராக்கிரமசாலியான

ஓர் அரசன் ஏற்பட்டாலன்றி நாடு ஒன்றுபடாதென்று பொதுஜனங்கள் உணர்ந்தனர். ராபர்த்தினது மாப்பிள்ளையும், ராண்டால்ப் என்னும் பெயருடையவருமான சேஸ்தர் ஏயரான் கைப்பற்றிக்கொண்டிருந்த லின்கன் (Lincoln) கோட்டையை 1141-ம் வருஷம் ஸ்டீவன் முற்றுகை போட்டு, அதைப் பிடித்துக்கொள்ள முயற்சித்தார். ராபர்த்தும், ராண்டால்பும் தங்கள் சேனைகளுடன் போய் அரசருடைய சேனைகளை நாசப்படுத்தி, அவரையும் சிறைப்படுத்தினர். அதுவரையில் அவருடைய கட்சியில் சேர்ந்திருந்தவர்கள் உடனே எதிரிகளோடு சேர்ந்துகொண்டனர். அரசருடைய சொந்த சகோதரரான விண்சேஸ்தர் பிஷப்பான ஹென்ரியே மாத்தில்தாவினுடைய கட்சியை ஆதரித்தார். அதே வருஷம் ஏப்ரல் மாதம் 18-ம் தேதி விண்சேஸ்தரில் பல பாரான்கள் ஒன்றுகூடி, மாத்தில்தாவை இங்கிலாந்திற்கும், நார்மண்டிக்கும் அரசியாக நியமித்து, முடிசூட்டுவதற்காக லண்டனுக்கு அழைத்துக்கொண்டு போயினர். ஆனால், அவளுடைய அகம்பாவமான நடத்தையைக் கண்டு, அவளுடைய நண்பர்களே வெறுப்படைந்து அவள்மீது பகைமை கொண்டனர். லண்டன் நகரத்து மகா ஜனங்கள் ஸ்டீவனிடத்தில் அபிமானமுடையவர்களாதலால், அவர்கள் கலகமிழைத்து அவளை அங்கிருந்து துரத்தி விட்டனர். அவள் விண்சேஸ்தருக்கு வந்து சேர்ந்தாள். ஆனால் அதற்குள் விண்சேஸ்தர் பிஷப்பும், மற்றும் பலரும் மறுபடி ஸ்டீவனோடு சேர்ந்துகொண்டனர். விண்சேஸ்தரில் நடந்த ஒரு போரில் ராபர்த் சிறைப்படுத்தப்பட்டார். அப்போது ஸ்டீவனுடைய மனைவியான மாத்தில்தா கெண்டில் வந்திறங்கி, லண்டனை நோக்கி வந்தாள். அவள் ஏட்மன்ட் அயரன் சைடினுடைய பேர்த்தி மகளாதலால், இங்கிலீஷ்

ஜனங்கள் அவளுடைய கட்சியில் சேர்ந்துகொண்டனர். இரண்டு மாத்தில்தாக்களும் தம்தம் கைதிகளான ஸ்டீவனை யும், ராபர்த்தையும் விட்டுவிடுவதற்கு இணங்கி அப்படியே செய்தனராயினும், அதற்கு மேலும் போர் தொடரப் பட்டது. 1142-ம் வருஷம் ஆக்ஸ்போர்ட் கோட்டையில் இருந்த மாத்தில்தா சக்கரவர்த்தினியைச் சூழ்ந்து ஸ்டீவன் கட்சியார் சுமார் மூன்றுமாத காலம் வரையில் முற்றுகை போட்டனர். ஆனால் அந்த வருஷ முடிவில் அவள் நான்கு நைட்ஸ்களுடைய உதவியினால் அந்த கோட்டையிலிருந்து தப்பி, பனிக்கட்டியின் வழியாக நடந்து, அப்பிங்தன், வாலிங்போர்ட், முதலிய இடங்களைக் கடந்து களௌசேஸ் தரை யடைந்தாள். அதற்குள், அவளுடைய புருஷரான ஜியாவரை நார்மண்டியைப் பிடித்துத் தமது வசப்படுத்திக் கொண்டிருந்தாராயினும், இங்கிலாந்தில் அவளுடைய கட்சி கைவிடப்பட்டுப் போயிற்று. 1147-ம் வருஷம், ராபர்த் இறந்துபோய் விட்டாராதலால், மாத்தில்தா சக்கரவர்த் தினி மனத்தளர்வடைந்து நார்மண்டிக்குத் திரும்பிப்போய் விட்டாள். அப்போது இரண்டாவது தருசேடுக்குப் பல பாரான்கள் போய்விட்டனர். ஸ்டீவனும், விண்சேஸ்தர் பிஷப்பும் சேர்ந்து கண்டர்புரியினது அரச் பிஷப்பான தயாபாலடை (Theobald)த் துரத்திவிட்டு, சேஸ்தர் ஏய ரானை அடக்க, அவர் அரசருக்குப் படிந்துபோனார். அதன்பிறகு ஸ்டீவன் பெயருக்கு மாத்திரம் அரசராயிருந் தாராயினும், நாடுமுழுதிலும் பயங்கரமான சண்டையும் பூசலும் ஒரேமயமாக நிறைந்துபோயிருந்தன. அரசர் நாட் டில் அமைதியை நிலைநாட்ட இயலாத அசக்தராயிருந்தார். ஆனால் 1152-ம் வருஷத்தில், அவர் வாலிங்போர்டை முற் றுகை போட்டார். ஏனென்றால் மாத்தில்தா சக்கரவர்த்தி

னியை மிக உறுதியாய் ஆதரித்தவரான பிரையன் பிட்ஸ் கவுண்ட், அதில் இருந்தாராதலால், அவரை அடக்கும் பொருட்டு அந்த முற்றுகை போடப்பட்டது. அவரைக் காப் பாற்றுவதற்காக மாத்தில்தாவினது புத்திரரான ஹென்ரி நேரில் புறப்பட்டு, 1153-ல் இங்கிலாந்திற்கு வந்து சேர்ந் தார்.

வாலிங்போர்ட் உடன்படிக்கை

ஹென்ரிக்கு அப்போது இருபது வயது நிறைந் திருந்தது. அவர் தமது அம்மானன ஸ்காட்லாந்து அரசர் தாவீதினல் 'நைட்' பட்டம் வழங்கப் பெற்றவர். பிரான்ஸ் அரசர் அஞ்சௌமீது படை யெடுத்த காலத்தில், ஹென்ரி நிரம்பவும் திறமையாகத் தமது நாட்டைப் பாதுகாத்தார். 1151-ல் அஞ்சௌவுக்கும், பிரான்ஸ் அரசருக்கும் சமா தானம் ஏற்பட்டது. அதே வருஷத்தில், ஹென்ரியினது தந்தை இறந்துபோகவே, அவர் அஞ்சௌ, தௌரெயின், மெயின் ஆகிய மூன்றிடங்களையும் பரம்பரை உரிமையின் மேல் பெற்றார். தாயின் மூலமாக அவருக்கு நார்மண்டி கிடைத்தது. 1152-ல் அவர் இலயன்னர் (Eleanor) என் னும், அக்குவிடெயின் தகையரசியை (Duchess of Acqui-taine) மணந்துகொண்டார். அவள் பிரான்ஸ் அரசருடைய மனையாட்டியாயிருந்து கலியாண விடுதலைபெற்றவள். அவள் பாய்டௌ, செயின்டங்கி, லிமௌசின் என்னும் இடங்களி னது கவுண்டேச்சீ (Countess). இவ்வாறு ஹென்ரி விசால மான நாடுகளுக்கு அதிபதியா யிருந்ததோடு, போர், துரைத் தன நிர்வாக தந்திரம் முதலியவற்றிலும் ராபர்த்தினல் நன்கு பயிற்றப்பட்டிருந்தார். அத்தகைய பிரமாதமான மனிதர் தமது தாயினது உரிமையான இங்கிலாந்தின் அரசாட்சியை

அடையும் நோக்கத்துடன், வாலிங்போர்ட் முற்றுகையை ஒரு வியாஜமாக வைத்துக்கொண்டு 1153-ல் வந்து சேரவே, அவ்வளவு செல்வாக்குடைய பகைவரோடு எதிர்த்துப் போர் புரிய ஸ்டீவனுக்குத் துணிவு ஏற்படவில்லை. அதுவன்றி, அவருடைய மனையாட்டியும், புத்திரரான ஏயாஸ்தாஸ் (Eustace) என்பவரும் இறந்து போய் விட்டனராதலால், சொற்பமிருந்த தமது வாழ்நாளை அமைதியாகவே கழித்து விட அவர் விரும்பினர். அதுவன்றி, ஹென்ரியுடன் சமாதானம் செய்துகொள்ளும்படி புத்திமான்களான சில நண்பர்கள் அவருக்கு இதமொழி கூறவே, ஸ்டீவன் அதை அங்கீகரித்து ஹென்ரியுடன் 1153-ம் வருஷம் நவம்பர் மாதம் 7-ம் தேதி வாலிங்போர்ட் என்னுமிடத்தில் உடன்படிக்கை செய்துகொண்டார். ஸ்டீவன் உயிரோடிருக்கும் வரையில் அவர் அரசராயிருப்பதென்றும், அவருக்குப் பிறகு ஹென்ரி அரசராவதென்றும், கூலிக்காரச் சண்டையாட்களை ஸ்டீவன் விலக்கி அனுப்பிவிட வேண்டுமென்றும், லைசென்ஸ்பெறுமல் கட்டப்பட்ட கோட்டைகளையெல்லாம் அழித்துவிட வேண்டுமென்றும், மத ஸ்தாபனத்தார் அக்கிரம வரிக்கு உட்படுத்தப்படக் கூடாதென்றும், நாணயம் அடிப்பது புதுப்பிக்கப்பட வேண்டுமென்றும், அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தவேண்டுமென்றும் நிபந்தனைகளை ஏற்படுத்தி, இருவரும் அந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டனர். அதன் பிறகு ஹென்ரி சொற்பகாலம் இங்கிலாந்திலிருந்து, நாட்டில் சமாதானம் உண்டாக்கும் விஷயத்தில் ஸ்டீவனுக்குத் தன்னுலான உதவியைச் செய்துவிட்டுத் தமது நாட்டிற்குச் சென்றூர்.

ஸ்டீவனது மரணம், அவருடைய ஆட்சியின் தன்மையும், பலாபலன்களும்

ஸ்டீவனுடைய அரசாட்சி காலத்தில் சம்பூர்ணமான அராஜகமும், பொருட்சேதமும், குழப்பமும், சண்டைகளும், அக்கிரமச் செய்கைகளும் ஏற்பட்டனவானாலும், சில அம்சங்கள் அபிவிருத்தி யடைந்தன. அதுவன்றி, பாரான்களுடைய உண்மையான மனப்போக்கும், உத்தேசங்களும் விசதமாக விளங்கின. உள் நாட்டுப் போர்களினால் நாட்டுப்புறங்கள் நிரம்பவும் பாதிக்கப்பட்டுப்போயின வானாலும், பட்டணங்கள் துரிதத்தில் அபிவிருத்தி யடைந்துகொண்டு போயின. லண்டன்,பிரஸ்டல், எக்ஷதர், லின்கன் ஆகிய பட்டணங்கள் சுயாதீனமான முனிசிபல் வாழ்க்கையும், வியவகாரங்களும் நடத்தி, செல்வ நிலைமையில் அபிவிருத்தி யடைந்துகொண்டு போயின. மடாலயத்தார், ஜனங்கள் பரிசுத்தமான வாழ்க்கையை அநுஷ்டிக்கவும், நாட்டினது கைத்தொழில் வர்த்தகங்களைப் பெருக்கவும் உதவிபுரிந்துகொண்டிருந்தனர். ஸ்டீவனுடைய அரசாட்சிக் காலத்தில் 115 புதிய மடாலயங்கள் கட்டப்பட்டன. வடநாட்டில் வெற்றிகொண்ட வில்லியத்தினால் அழித்துப் பாழாக்கப்பட்ட இடங்களில் ஜனங்கள் குடியேறத் தலைப்பட்டனர். அவ்விடத்தில் ஏற்பட்ட மதஸ்தாபனத்தாருடைய வாசஸ்தலங்கள் கைத்தொழில், வியவசாயம் முதலியவற்றை அபிவிருத்தி செய்யும் சாதனங்களாயின. அந்த ஜன சேவையில் வினைதக்த்தையன்ஸ், களக்னியக்ஸ் ஆகியோரே முக்கியமாய் இவற்றில் ஈடுபட்டிருந்தனர். துரைத்தனம், சட்ட நிர்வாகம் முதலிய இலாகாக்களில் மதஸ்தாபனத்தாருடைய செல்வாக்கு அதிகரித்தது. ஸ்டீவன் அரசரானது, அவ

ருடைய ஆரம்ப அபஜெயம், மறுபடி அவர் வெற்றி பெற்றது, முடிவில் வாலிங்போர்டில் உடன்படிக்கை நடந்தது ஆகிய யாவும் பெரும்பாலும் மதகுருமார்களது செல்வாக்கிலேயே நடைபெற்ற நிகழ்ச்சிகள். வின்சேஸ்தர் பிஷப்பான ஹென்ரியும், கண்டர்புரி அரச் பிஷப்பான தயாபாலடும் அவற்றில் சூத்திரதாரிகளாயிருந்தனர். இங்கிலீஷ் மத ஸ்தாபனங்களுக்கும், பாப்பிற்கும் நெருக்கமான சம்பந்தம் ஏற்பட்டது; ரோமுக்குப் போகும் அப்பீல் முறையீடுகள் அதிகரித்தன. ஸிவில் சட்ட ஞானம் இங்கிலாந்தில் அதிகமாய் உள்புகுத்தப்பட்டதாகையால், பாப்பைத் தலைமை அதிகாரியாகக் கொண்ட பிரத்தியேக மதஸ்தாபன நீதி நிர்வாக இலாகா ஒன்று ஏற்பட்டுக்கொண்டு வந்தது. மதஸ்தாபன அதிகாரிகள் ரோமன் முறையிலேயே நடவடிக்கைகளை நடத்தினராதலால், அவர்களுடைய சட்டம் அபிவிருத்தி யடைந்தது. அவர்கள் தங்களுக்கு அதிகப்படியான செல்வாக்கு ஏற்படுவதற்காகப் போராடுவார்கள் என்பதும் நிச்சயப்பட்டது. மதஸ்தாபனத்தாருடைய நிலைமை பலப்பட்டதுபோலவே, ஸ்காட்லாந்து அரசரும் தமது நிலைமையை அபிவிருத்தி செய்துகொள்ள அந்தக் குளறுபடைக் காலமே உரிய தருணமென்று கருதி, அதை சரியானபடி பயன்படுத்திக் கொண்டார். 1139-ம் வருஷத்தில் துரஹம் என்ற இடத்தில் நடந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாவீதினுடைய மூத்த குமாரரான ஹென்ரி நார்த்தம்பர்லண்டின் ஏயராள் பதவியில் உறுதிப்படுத்தப்படுவதென்றும், ஸ்டீவன் அரசர் நவகாசில் (Newcastle), பாம்பரோ என்ற கோட்டைகளை வைத்துக் கொள்வதென்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதுவன்றி, 1149-ம் வருஷம் அஞ்சௌ ஹென்ரி தாவீதை கேரளீஸ்ல என்ற இடத்தில்

சந்தித்த காலத்தில் அவர்கள் சில ஏற்பாடுகளைச் செய்து கொண்டனர். தாவீதரசர் ஸ்டீவனுக்கு விரோதமாகப் போர் நடத்தியதைக் கருதியும், ஹென்ரி இங்கிலாந்திற்கு அரசராகப் போவதைக் கருதியும், வள்தேயப்பினிடத்திலிருந்து வந்ததாக தாவீது உரிமை கொண்டாடிய இங்கிலீஷ் பயப்புகளை யெல்லாம் அவரும், அவருடைய சந்ததியாரும் பரம்பரையாய் அநுபவிக்க வேண்டியதென்று ஹென்ரி அப்போதே உறுதிசெய்து கொடுத்து விட்டார். அதாவது, டைன் (Tyne), டுவீட் (Tweed) என்னும் ஆறுகளுக்கு நடுவிலிருந்த நிலங்களே அவைகள். தாவீது உயிரோடிருந்த வரையில், ஈடன் (Eden), டீஸ் (Tees) ஆகியவைகளே இங்கிலாந்திற்கும் ஸ்காட்லாந்திற்கும் மத்திய எல்லைகளாயிருந்தன. அவர் இறந்த காலத்தில் தரஹம், நார்த்தம்பர்லாந்து, வெஸ்ட்மார்லாந்து ஆகியவை அவருடைய வசத்தில் இருந்தன. எனவே, (1) டைன், டுவீட் ஆகிய ஆறுகளுக்கு நடுவிலிருந்த நாட்டை மறுபடியும் இங்கிலாந்திற்குச் சேர்ப்பது, மத குருமார்களுடைய அதீதமான உரிமைகளைக் கட்டுப்படுத்துவது, பாரான்கள் நாட்டினது சட்டங்களுக்குக் கட்டுப்படும்படி செய்து, நாட்டில் நன்னடத்தை, சமாதானம், அமைதி முதலியவற்றை நிலைநாட்டுவது ஆகிய முக்கியமான நான்கு வேலைகள் ஸ்டீவனுக்குப் பின்னுல் அரசரானவரால் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்களா யிருந்தன.

ஸ்டீவன் அரசாட்சியில் நிகழ்ந்த முக்கியமான சம்பவக் குறிப்புகள் :—

1135 ஸ்டீவன் அரசராகத் தேர்ந்தெடுக்கப்படுதல்.

1136 பாரான்களது கலகம்.

1138 நார்த்தாளர்தான், அல்லது, கோடிச்சண்டை.
1139 சலிஸ்புரி ராஜநுக்தும் அரசநுக்தும் சச்சரவு. தாவீதுக்தும் அரசநுக்தும் துரஹம் உடன் படிக்கை.
1141 லின்கன் முற்றுகை. ஸ்டீபன் கைதியாதல்.
1142 ஆக்ஸ்போர்ட் முற்றுகை. மாத்தில்தா தப்பிப் போகுதல்.
1144 அஞ்சோள ஜியாவரை நார்மண்டியைத் தம் வசப்படுத்திக் கொள்வது.
1147—1149 இரண்டாவது தருசேடு.
1147 களோசேஸ்தர் ராபர்த் மரணம்.
1151 அஞ்சோள ஜியாவரை மரணம்.
1152 அஞ்சோள ஹேன்ரி அக்குவிடேயின் தகையரசியை மணத்தல்.
1153 வாலிங்போர்ட் உடன்படிக்கை.

அத்தியாயம்—7

ஹென்ரி II (1154—1189)

ஹென்ரி II முடிசூடல், அவரது நிலைமை, குணாதிசயங்கள்

அவர் 1133-ல் லேமன்ஸ் என்னும் ஊரில் பிறந்தார். அவர் அஞ்செள கவுண்டான ஜியாவரைக்கும், முதலாவது ஹென்ரியினது குமாரியான மாத்தில்தாவுக்கும் பிறந்த மூத்த குமாரர். அவர் தமது பதினோராவது வயதில் இங்கிலாந்திற்கு வந்து, பிரஸ்டலில் இருந்த கெளௌள சேஸ்தர் ராபர்த்திட மிருந்து கல்வி பயின்றார். அவர் தடிப்பாயும், உயரமாயும், குட்டையான கழுத்துடையவராயும் இருந்தார். அவருடைய கண்கள் எடுப்பாயும், உணர்ச்சிகளை சுலபத்தில் காட்டுவனவாயுமிருந்தன. அவர் உடைகள் தரிப்பதில் அசட்டை காட்டுபவர். அவர் வேட்டையாடுவதில் சிறந்தவர்; அவர் போர்த் தொழிலில் பராக்கிரமம் காட்டியதை விட, வியவகாரங்களையே மிக அக்கரையாய் கவனிக்கும் இயல்புடையவர். அவருடைய உயிர்நிலை மேன்மேலும் நிலங்களைச் சேர்ப்பதிலேயே அடங்கி யிருந்தது. வார்சுரிமையினலும், விவாகத்தின் மூலமாயும், வெற்றியினலும் ஏற்பட்ட அவருடையஆட்சி ஸ்காட்லாந்திலிருந்த

வேட் ஆறுமுதல் பிரான்ஸிலிருந்த பிரினீஸ்வரையில் எட்டியதே அதற்குச் சான்றாகும். அதுவன்றி, அவருடைய அரசாட்சி முடிவடையுமுன் அயர்லாந்தினது பெரிய பகுதியை அவர் கைப்பற்றிக் கொண்டார். எனவே அவருடைய காலத்தில் இருந்த எல்லா அரசர்களிலும் அவரே அதிகமான அதிகாரமும் செல்வாக்கும் உடையவரா யிருந்தார். அவர், தமது தாயின்மூலம் நார்மண்டியையும், தந்தையின்மூலம் அஞ்சௌ, மேயின், தௌரேயின் ஆகியவற்றையும், மனைவியின்மூலம் அக்குவிடேயின் டச்சியையும், அதிலடங்கிய பாய்டௌ, பேரிகறடு, குயரசி, லிமௌசின், காஸ்கனி ஆகியவற்றின் ஆட்சியையும், ரோன் நதிக்கு மேற்குக் கரையிலிருந்த நாட்டின் ஆதிபத்தியத்தையும், டௌலௌஸ் கவுண்டியின் உரிமையையும் பெற்றார்; அவருடைய குமாரரான ஜியாவரைக்கும், பிரிட்டானியின் வார்சுதாரியான கான்ஸ்டான்ஸுக்கும் 1166-ல் விவாக நிச்சயதார்த்தம் ஆனவுடன் அந்த நாட்டின் சர்வாதிகாரமும் வந்துசேர்ந்தது. இங்கிலாந்தின் அரசர் என்ற ஹோதாவில் அவர் வடக்கு வேல்ஸ் அரசகுமாரர்கள், ஸ்காட்லாந்து அரசர் ஆகியோருக்கு பியூடல் தலைவரா யிருந்தார். இவ்வளவு விசாலமாயும், பல இடங்களில் பரவியும் இருந்த சாம்ராஜ்யத்தை ஒருவர் ஆளவேண்டுமானால், அவர் அபார வல்லமையுடையவராயிருப்பது இன்றியமையாத விஷயமல்லவா. உண்மையிலேயே ஹென்ரி அந்த யோக்கியதையை வகிக்க அருகமானவராகவே இருந்தார். அவர் ஒரு விநாடிப் பொழுதுகூட சோம்பி யிராமல், எப்போதும் பரபரப்பாகவும், ஊக்கத்தோடும் காரியங்களைச் செய்துகொண்டே இருப்பார். அவர் போர் நடத்துவதிலும், துரைத்தன நிர்வாக தந்திரங்களிலும் மிகத் திறமை வாய்ந்தவர். அதுவன்றி முதலாவது ஹென்ரியைப்போல

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதையே அவர் முதன்மையாகக் கருதினார். அவர் துரித உணர்ச்சியுடையவராதலால், சில சமயங்களில் அவர் அவசரப்பட்டுக் காரியங்களைச் செய்துவிடுவார், அல்லது, சொற்களை உபயோகித்து விடுவார். அவற்றிலிருந்து, பின்னால், விபரீதங்கள் வந்து நேருவதுமுண்டு. அவருக்கு மனோ வேகமும், தேக சுறுசுறுப்பும் அதிகமாதலால், பாதிரிமார் மதப் பிரசங்கம் செய்வதைக் கேட்டுக்கொண்டிருக்கும்போது கூட, அவருடைய கைகள் சித்திரம் வரைந்துகொண்டேயிருக்கும். அவருடைய நாட்கள் போரிலோ, வேட்டையாடுவதிலோ, துரைத்தன வியவகாரங்களை நடத்துவதிலோ, மிக ஆவேசத்தோடு வாத தர்க்கங்கள் புரிவதிலோ மாறி மாறிச் செலவழியும். அவரோடிருக்கும் சிப்பந்திகளுக்கு ஓய்வு கிடைப்பது அரிதாயிருக்கும். அவர் ஒரே இடத்தில் சேர்ந்தாற்போல் இரண்டு இரவுகளில் தலைசாய்த்துப் படுக்கமாட்டார். அவர் ஓய்வின்றி சுற்றுப் பிரயாணம் போய்க்கொண்டே இருப்பாராதலால், ஒரு குறித்த நாளில் அவரை எந்த இடத்திலும் எதிர்பார்க்கலாம், அவர் இன்ன இடத்தின்தான் இருப்பாரென்பதை நிச்சயமாக நாம் சொல்லவியலாது. அவருக்கு இங்கிலீஷ்காரன் நார்மண்டியான் என்ற வித்தியாச உணர்ச்சியே இல்லை. அவருக்கு ஞாபக சக்தி அதிகமாதலால் ஒருவருடைய முகத்தை அவர் எப்போதாகிலும் பார்த்தால், அதை அவர் இலேசில் மறக்கமாட்டார். அவர் முடிசூடிய காலத்தில், ஸ்டீவனது ஆட்சியிலிருந்த தீங்குகளை யெல்லாம் ஒழிக்கவும், ஒரு பெரிய ஏக சக்ராதிபத்யத்தை ஸ்தாபிக்கவும், கூடுமானால், ரோஎனை அதற்குத் தலைமை நகராகச் செய்யவும், இங்கிலாந்தை அதில் ஒரு சிறிய பகுதியாக வைத்துக் கொள்ளவும் எண்ணியிருந்தார். ஆனால் முதல் காரியத்தை

அவர் நிறைவேற்றினு ராஞலும், இரண்டாவது காரியம் நிறைவேற்றக் கூடாததாக முடிந்தது. அவர் முடிசூடு வதற்கு இங்கிலாந்திற்கு வந்தவுடன், இங்கிலீஷ் மகா ஜனங் கள் அளவற்ற மகிழ்ச்சியோடு அவரை வரவேற்றனர். ஏனென்றால், அவரால் நாட்டில் அமரிக்கையும் ஒழுங்கும் நிலக்குமென்று அவர்கள் எண்ணியதன்றி, அவர் தங்கள் பழைய அரசர் வம்சத்தினது கான்முளை யென்றும் மதித் தனர். 1154-ம் வருஷம் டிசம்பர் மாதம் 19-ம் தேதியன்று வெஸ்ட்மின்ஸ்டரில் அவர் முடிசூட்டப் பெற்றார். அவர் அஞ்செளவன், அல்லது, பிளான்டாஜெனட் அரசவம்சத்து முதல் அரசர் என்று குறிக்கப்படுகிறார். அவருடைய தகப் பனரது மூதாதை பிளான்டா ஜெனிஸ்டா என்ற பெய ருடைய ஒருவகை ஈர்க்குகளை மயில்தோகைபோலச் செய்து தலைக்குல்லாவில் அணிந்துகொண் டிருந்ததுபற்றி, அந்த வம்சத்தாருக்கு அப்பெயர் வந்ததென்று வியாக்கியானம் செய்கிறார்கள். இவருடைய அரசாட்சி காலத்தை நாம் மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம். (i) நாட்டில் சமா தானத்தை நிலைநாட்டியது, (ii) தமஸ் பக்தோடு தகராறு நடத்தியது, (iii) அவருடைய குமாரர்களது கலகம், பகைவர்களை வெல்லுதல் ஆகிய மூன்றுவகைச் சம்பவங் களில் அவர் ஈடுபட்டிருந்ததற்குத் துணையாய் அவர் தமது இராஜ்யத்தினது சட்டங்களைச் சீர்திருத்தி ஒழுங்காயமைக் கும் விஷயத்தில் அவருடைய கவனமும், கவலையும், உழைப் பும் ஓயாமல் பயன்பட்டுக்கொண்டே இருந்தன.

அவருடைய பிரதம நடவடிக்கைகள்

அவர் அரசரானவுடன் ஸ்டீவன் காலத்துக் கெடுதல் களை அகற்றுவதற்கும், வேல்ஸ், ஸ்காட்லாந்து ஆகியவற்றில்

இங்கிலாந்தினது அதிகாரத்தை ஸ்தாபிக்கவும் முயற்சித்தார்; ஸ்டீவனும், மாத்தில்தாவாலும், தாறுமாறாக வழங்கப்பட்டிருந்த நிலப் பயப்பு உத்தரவுகளை யெல்லாம் ரத்து செய்தார்; முன் அரசாட்சியில் உத்தரவில்லாமல் கட்டப்பட்டிருந்த கோட்டைகள் யாவும் இடிக்கப்பட்டுத் தரைமட்டமாயின. அவ்வாறு 1100 கோட்டைகளுக்கு மேல் இடிக்கப்பட்டன. அவைகளில் பெரும்பாலும் பகல் கொள்ளைக்காரர்களே அடைந்திருந்தனராம். அரசருக்குச் சொந்தமான கோட்டைகளை விட்டுவிடும்படி பாரான்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். செலாவணியிலிருந்த கெடுதலான நாணயங்களுக்கு மாறாய் ஒழுங்கான நாணயங்கள் வெளியிடப்பட்டன. அயல்நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டிருந்த கூலிச் சண்டையாட்கள் துரத்திவிடப்பட்டனர். ஸ்டீவன் உற்பத்தி செய்த உபகாரச் சம்பள ஏயராள் பதவிகள் யாவும் உத்வாசனம் செய்யப்பட்டுப் போயின. வடக்கில் ஆமலே(Aumale) கவுண்டும், வேல்ஸ் எல்லையில் ஹ்யூ மார்த்தமரும் (Hugh mortimer) செய்த கலகங்களை ஹென்றி II அடக்கிவிட்டு, அயல்நாட்டிற்குச் சென்றார். அங்கிருந்து திரும்பி வந்தவுடன், ஸ்காட்லாந்தரசரான மால்கம் IV, நவகாசில், பாம்பரோ, கேரளீஸ்ல ஆகிய கோட்டைகளை விட்டுவிட்டு டைனுக்கு அப்பால் போகும்படி கட்டாயப்படுத்தப்பட்டார். வடக்கு வேல்ஸ் அரசரான ஓவன், ஹென்றிக்கு வணக்கம் செலுத்தவும், ரைஸ் - அப் - கிரிபித் என்பவரான தென் வேல்ஸ் ஆட்சிக்காரர் நன்னடத்தைக்காக சில மனிதரை நபர் ஈடாக அனுப்பவும் கட்டாயப்படுத்தினர். அவ்வாறு, ஹென்றி II அடக்குமுறைகளை அநுஷ்டித்தபடியே குரைய ரஜஸ், எக்ஸ்செக்கர் ஆகிய ஸ்தாபனங்களுக்குப் புத்துயிர் கொடுத்து, அவை மறுபடி தம்தம் கடமைகளை நடத்

தும்படி செய்தார். லெய்சேஸ்தர் ஏயராளான ராபர்த்தும், ரிச்சற்டு - டீ - லுசீ என்பவரும் ஜஸ்டிசியர்களாக நியமிக்கப் பட்டனர். சலிஸ்புரி ராஜருடைய மருமானும், எல்லியினது பிஷப்புமான நிகில் (Nigel) என்பவரை எக்ஸ்செக்கருக் குத் தலைவராக நியமிக்க, அவருடைய திறமையினால், ரெவி னுயு வருமானம் அபாரமாகப் பெருகியது. 1155, 1157, ஆகிய இரண்டு வருஷங்களிலும், அரசருடைய நீதிபதிகள் பதின்மூன்று ஷயர்களில் முகாம் செய்து, வழக்குகளை விசாரித்தனர்.

தமஸ் பக்(க)த் (Thomas Becket)

தமஸ் பக்கத்(=பக்தர்?) என்பவர், ஒரு பெரிய நார்மன் வர்த்தகரும், லண்டினில் (Portreeve) மேயராயிருந்தவரு மான கீள்பரத் பக்கத் என்பவருடைய குமாரர். அவருடைய தாயான மாது என்பவள் ரௌவன் நகரத்து ஸ்திரீ; தெய்வ பக்தியும் தெய்வ நம்பிக்கையும் உடையவள். அவள் ஒவ் வொரு வருஷமும் தன் புதல்வனுடைய பிறந்த தினம் கொண்டாடும்போது துலாபார தானம் செய்வது வழக்க மாம்; அதாவது, தனது புத்திரனுடைய நிறையளவு பணம், வஸ்திரங்கள், இதர பதார்த்தங்கள் முதலியவற்றை அவள் ஏழைகளுக்கு தானம் வழங்குகிறது வழக்கமாம். பக்கத் முதல்தரமான கல்வியறிவு உடையவர்; உயரமும் அழகும் வாய்ந்த சரீரமுடையவர்; பெருந்தன்மையும் மனோ திடமும் பெற்றவர். அவர் பாரிஸில் கல்விகற்றவராதலால், அவ்விடத் தில் தயாபாலடுக்கு (கண்டர்புரி அரச் பிஷப்புக்கு)ப் பரிச்சய மாக, அவர் தமஸை கண்டர்புரியின் அரச் தேயக்கோன் (Arch Deacon) உத்தியோகத்தில் அமர்த்தி, தமது அந்தரங்க நண்பராக வைத்துக்கொண்டிருந்தார். அக்காலத்தில், ஸ்டீவ

னுடைய குமாரன் ஏயஸ்தாஸ் (Eustace) என்பவருடைய வார்சுரிமையை பாப்பு அங்கீகரிக்காமல் மறுக்கும்படி பக்கத் செய்தா ராதலால், அதனல் ஹென்ரியினது தயவை அவர் சம்பாதித்துக் கொண்டிருந்தார். ஹென்ரி II அரசரான சிறிது காலத்திற்கெல்லாம், பக்கத்(1154-ல்) சான்சிலர் உத்தியோகத்திற்கு நியமிக்கப்பட்டார். அவருடைய வேலைத் திறமையும், லலித குணமும் அரசருக்கு திருப்திகரமா யிருந்தமையால், இருவரும் அன்னியோன்னிய நண்பர்கள்போல நடந்துகொண்டனர். சான்சிலர் பதவி மிக மேலான அதிகாரஸ்தானம். பட்டையம், உடன்படிக்கை முதலியவைகளில் அழுத்தப்படும் அரசருடைய முகர் (சீல்) சான்சிலரிடத்திலேயே இருக்கும். அவர் அரசருடைய அன்னியநாட்டு வியவகாரங்களைநடத்திய பிரதான மந்திரிபோன்றவர். காலியாகும் மதஸ்தாபனப் பதவிகளுக்கு நியமனம் செய்பவர் அவரே. முக்கியமான எல்லா விஷயங்களிலும் அவரே அரசருக்கு யோசனைகள் சொல்பவர். அரசருடைய அரண்மனையில் வழங்கப்படும் தான தருமங்களை யெல்லாம் பகிர்ந்து கொடுப்பவர் அவரே. அரசருடைய பணச்செலவு அதிகாரம் முழுதும் அவருடைய வசத்திலேயே இருந்தது. அரசர் அவரை 1158-ல் ஒரு முக்கியமான காரியத்தை முடிக்கும்படி பிரான்ஸுக்கு அனுப்பி வைத்தார். அப்போது மூன்று வயதே அடைந்திருந்த அரசருடைய குழந்தையான ஹென்ரிக்கு, பிரான்ஸ் தேசத்து அரசரான லௌவீஸ் (Louis VII) என்பவருடைய ஆறுமாதத்துப் பெண் சிசு மார்க்கரத்தை விவாகம் செய்துவைக்க நிச்சயம் செய்துகொண்டு வரும்படி அரசரால் பக்கத் அனுப்பப்பட்டார். அவ்வாறு அரசர் இரண்டு இளங் குழந்தைகளுக்கும் விவாக நிச்சயம் செய்யும்படி தூதனுப்பியது இராஜ்ய காரணத்தைக் கருதியேயன்றி

பைத்தியக்காரத் தனத்தினுலல்ல. ஹென்ரிக்கு ஐரோப்பாக் கண்டத்தில் ஏற்பட்டிருந்த தலைமைக் குடியானவர்கள் பலர் அவரிடம் பகையை கொண்டவர்களா யிருந்தனர். பிரான்ஸ் அரசர் அவருக்கு எக்காலத்திலும் விரோதியாகவே இருந்தார். சரியாக நிர்ணயிக்கப்படாமலும், சரியானபடி பாதுகாக்கப்படாமலு மிருந்த ஹென்ரியினுடைய நாடுகளினது எல்லைகள், பகைவர்கள் அடிக்கடி நுழைய அநுகூலமானவையா யிருந்தன. பிரிட்டானி எதிரிகளுடைய வசத்திற்குப் போய் விடத் தக்க நிலைமையிலிருந்தது. ஆவேர்கனி, டௌலௌஸ் ஆகிய இடங்களில் இளையன்னருடைய உரிமையைப் பற்றி ஆட்சேபங்கள் ஏற்பட்டன. பாரீஸுக்குப் போகும் ரஸ்தாவில் உள்ள வேக்ஷின் அவரை விட்டுப் போய்விட்டது. இவைகளை உத்தேசித்து பிரான்ஸ் அரசருடைய பாந்தவ்வியத்தை அடைந்து தமது கையை பலப்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன், அரசர் அந்த சிசு விவாகத்தை நிச்சயிக்க தமது சான்சிலரை அனுப்பி வைத்தார். அந்த சந்தர்ப்பத்தில் சுமார் இருநூறு 'நைட்'களும் சீமான்களும் அவருக்கு மெய் காப்பாளராகச் சென்றனர். இன்னம் சுமார் ஆயிரம் பேர்களடங்கிய பரிவார மகா ஜனங்கள் பிரான்ஸ் தேசத்தினது பட்டணங்கள் வழியாக வண்டிகள், அலங்காரக் குதிரைகள், தட்டுகள், பணம், ஜபாலயத்துப் பூஜைப் பாத்திரங்கள் ஆகிய சீர் வரிசைகளுடன் ஊர் கோலம்போல மிக ஆடம்பரமாகச் சென்றனர். ஒவ்வொரு குதிரைமீது ஒவ்வொரு குரங்கு உட்கார வைக்கப்பட்டிருந்தது. இருநூற்றைம்பது பாணர்கள் மங்களகிதம் பாடிக் கொண்டே சென்றனர். உயரமான கொடிகள் ஏராளமாகப் பறந்தன. நைட்களினுடைய கேடயங்களைத் தாங்கிய பல எஸ்கொயர்கள் அணியணியாகச் சென்றனர். போர் வீரர்

களும், மத குருமார்களும் இரண்டிரண்டு பேர்கள் ஜதை ஜதையாய் அணிவகுத்துச் சென்றனர்.” தமஸினது படாடோபம், கம்பீரம், பெருமைப்பாடு, தாராளகுணம் முதலியவை ஓர் எல்லைக்குள் அடங்காதவைகளா யிருந்தன. அவ்வித வெளிமயக்கோடு ராஜகம்பீர கோலாகலராய்ச் சென்ற சான்சிலர் தமது உத்தேசத்தை நிறைவேற்றிக் கொண்டே வந்து சேர்ந்தார். விவாக சம்பந்தமாய் அவர் பிரான்ஸ் அரசருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். மார்கரத்திற்கு ஸ்ரீதனமாக, வெக்ஷினை பிரான்ஸ் அரசர் திருப்பிக் கொடுப்பது என்ற ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கு சொற்ப காலத்திற்குப் பிறகு ஹெண்ரியின் ஆதிபத்யத்திற்குள்பட்டு, கோனன் என்பவர் பிரிட்டனியின் தகையரசராக்கப்பட்டார்.

டௌலௌஸ் தகராறு, ஸ்கூடேஜ் (Scutage) வரி

1159-ம் வருஷம் டௌலௌஸ் என்னும் இடத்தை ஹெண்ரி II முற்றுகை போடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. டௌலௌஸ் கவுண்டிக்கு மேற்பட்ட அதிகாரம் அக்குவிடெய்ன் தகையரசருக்கு உண்டா என்பது சந்தேகமாயிருந்து வந்தது. ஆனால் இளையன்னர் பிரான்ஸ் அரசரான லௌவீஸ் VII-க்கு மனையாட்டியாயிருந்த வரையில், அவர் ஷை அதிகாரம் தமக்குண்டென்றுகூறி, உரிமைகொண்டாடிக்கொண்டிருந்தார். அவர் அவளை விலக்கிவிட்ட நிலைமையில், அவள் ஹெண்ரி IIக்கு மனையாட்டி ஆனபிறகு, ஷை பிரான்ஸ் அரசர் அந்த அதிகாரம் இல்லையென்று மறுத்து, டௌலௌஸ் கவுண்டுக்கு உதவிசெய்ய வரவும் ஆயத்தமாகி விட்டார். தமஸ் பக்கத் சுமார் 700 நைட்களோடு சென்று, அந்த இடத்தை முற்றுகை போட்டதன்றி, அவரும் மிக

பராக்கிரமமாகப் போர் நடத்தினர். ஆனால் பிரான்ஸ் அரசர் அதில் தலையிட்டதைக் கண்ட ஹென்ரி II, தாம் தமது பியூடல் தலைவரான பிரான்ஸ் அரசரோடு போர் நடத்தினால், தமக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு, கெட்ட வழியைத் தாமே காட்டியதுபோ லாகுமென்று கருதி, தமது சேனைகளை அழைத்துக்கொண்டு போய்விட்டார். முடிவாக 1172-ல், டௌலௌஸ் கவுண்டு இரண்டாவது ஹென்ரியைத் தமது அதிபதியென்று ஒப்புக்கொண்டு வணக்கம் செலுத்தினர். அந்த டௌலௌஸ் படையெடுப்பு ஒரு முக்கியமான வரி ஏற்பாட்டிற்குக் காரணமாக முடிந்தது. பியூடல் சட்டப்படி ஒரு பிரதானக் குடியனவார் ஒரு வருஷத்திற்கு நாற்பது தினங்கள் (போகவும் வரவும் பிடிக்கும் நாட்கள் நீங்கலாக) தாமேயோ, பிரதிநிதியைக் கொண்டோ அரசருக்கு சேவை செய்யவேண்டும். அரசர் இங்கிலாந்திற்குள்ளும், வேல்ஸ், ஸ்காட்லாந்து முதலிய சமீப நாடுகளிலும் போர்நடத்திய வரையில் அந்த ஏற்பாடு சௌகரியமாக நிறைவேறியது. அரசர் ஐரோப்பாக் கண்டத்திலும், தூரமான இடங்களிலும் போர்நடத்தினால், அது குடியானவருக்கு நிரம்பவும் கொடுமையானதா யிருந்தது. ஆகவே, ஹென்ரி II, 1156-ம் வருஷம், தமது சகோதரரை எதிர்த்துப் போர்நடத்த நார்மண்டிக்குச் சென்ற காலத்தில், மதகுருமார்கள் அனுப்பவேண்டிய ஒவ்வொரு ‘நைட்’டுக்கும் இவ்வளவு தொகை வீதம் பணம் கொடுத்துவிடுவ தென்ற ஏற்பாட்டைச் செய்து, அதைப் பெற்றுக்கொண்டார். 1159-ல் அதே சௌகரியத்தை நார்மண்டி, இங்கிலாந்து ஆகிய இரண்டிடங்களினது பாரான்களுக்குச் செய்து, அவர்கள் ஆள்களை அனுப்புவதற்கு மாறாக அவர்களிடம் பணம்பெற்றுக்கொண்டார். அவ்வாறு சேர்ந்த 180,000 பவுனைக்கொண்டு அரசர் கூலிச்

சண்டை யாட்களை அமர்த்திக்கொண்டும், தமது தந்தையினது நாடு, அக்குவிடெயின் முதலியவற்றிலிருந்து தமக்குக் கிடைக்கவேண்டிய பியூடல் போர்வீரர்களை வைத்துக்கொண்டும் தமது போரை நடத்தினர். அந்த வரியே ஸ்கூடேஜ் என்று குறிக்கப்படுகிறது. அந்த வரி விதிப்பு அரசருக்கும், பாரான்களுக்கும் முதன்முதலில் சௌகரியமாயிருந்ததானாலும், அது உண்மையில், பியூடாலிஸத்தைப் பெரிதும் பாதிப்பதாக முடிந்தது. அரசர் கூலிப் போர்வீரர்களை அமர்த்திக் கொண்டதால், அவர்கள் பாரான்களுடைய உதவியை நாடாமல் சுயேச்சையாக நடந்துகொள்ள அது இடம் கொடுத்தது; ஒரு சந்தர்ப்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட அந்த ஏற்பாடு எல்லா சந்தர்ப்பங்களுக்கும் உபயோகப்படுத்தப்பட்டது. அதனால் காலக்கிரமத்தில் பாரான்களுடைய போர்த்திறமை மலினமடைந்து போய்விட்டது. பியூடாலிஸமென்பது பிரதானமாகப் போர்வீரர்களை உதவுவதற்குச் செய்யப்பட்ட ஏற்பாடு என்பது மாறி, பூர்த்தியாய் வரி வசூலிக்கும் ஏற்பாடாக மாறிவிட்டது.

ஐரோப்பிய நாடுகளும், ஹென்ரி(II)யினுடைய நோக்கமும்

1162, 1163-வது வருஷங்களில் ஐரோப்பாவில் ஹென்ரி IIக்கு அபாரமான செல்வாக்கு ஏற்பட்டிருந்தது. ரோமில் பாப்புஸ்தானத்திற்கு இரண்டு உரிமையாளிகள் ஏற்பட, அலிக்ஷாண்டார் III என்பவருடைய கட்சியை ஹென்ரியும், பிரான்ஸ் அரசரும் ஆதரித்தனர். இன்னொரு பாப்பின் கட்சியை ஜேர்மன் சக்கரவர்த்தி ஆதரித்தார். ஆனால் முன்னவருடைய கட்சிக்கே வெற்றி ஏற்பட்டது.

ஹெண்ரி, ஸிஸிலியிலிருந்த நார்மன் அரசர்களுக்கு அதிபதி யென்ற ஹோதாவில், ஜிருசேலம் அரசர்களுக்கு அவர் வார்சுதாரராகக் கருதப் பட்டார். அவர் ஜேரமன் சக்கரவர்த்திக்கும் பாந்தவ்விய முடையவரா யிருந்தார்; அந்தியக்(Antioch)அரசகுடும்பத்தாருக்கும் அவர் தலைவரா யிருந்தார். அவருடைய குமாரர் ஹெண்ரி பிரான்ஸ் அரச ருடைய இராஜ குமாரியை மணந்துகொண்டார். ரிச்சறடு என்ற சிறு குழந்தையான இன்னொரு குமாரருக்கு அரகன் (Aregon) அரசருடைய குமாரியை மணம்புரிவிக்க நிச்சய தார்த்தம் செய்யப்பட்டிருந்தது. அவர் தமது விசாலமான நாடுகளை பல இராஜதானிகளாய் வகுத்து, ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சிற்றரசரை நியமித்து, எல்லோருக்கும் மேல் தாம் ஏக சக்கராதிபதியா யிருந்து ஆளவேண்டு மென்பது அவருடைய கருத்து. ஆனால் அந்த எண்ணம் கைகூடவில்லை யானலும், அதுவரையில் தனித்து நின்ற இங்கிலாந்தை அவர் ஐரோப்பிய நாடுகளுடன் நெருங்கிய சம்பந்தங்க ளுடையதாக்கி வைத்தார். அவருடைய காலத்திலிருந்தே, ஜேரமனி, இற்றலி, ஸிஸிலி, ஸ்பேயின் ஆகிய நாடுகளுக் கும் இங்கிலாந்துக்கும் அன்னியோன்னிய நட்பு ஏற்பட்டு, ஐரோப்பிய சரித்திரத்தின் மத்திய கால முடிவு வரையில் நீடித்திருந்தது. அவருடைய காலத்திலிருந்தே பிரான்ஸ் தேசத்திற்கும்,இங்கிலாந்திற்கும் தொடர்ச்சியாகப் பகைமை இருந்துகொண்டே வந்து, ஒள்சேயின் (Wolsey) காலம் வரையில் நீடித்திருந்தது.

தமஸ் பக்கத் அரச் பீஷப்பாகுதல்

தமஸ் பக்கத் சான்சிலர் பதவியை வகித்து, அரசரு டைய நோக்கத்தைப் பூர்த்தியாக நிறைவேற்றி வைத்தார்;

டௌலேஸ் முற்றுகை நடந்த காலத்தில் தமஸ் பக்கத் போர்க்கவச மணிந்து சென்று பல அரிய செய்கைகளை முடித்தார். அங்கு அவர் ஒரு பிரஞ்சு நைட்டோடு துவந்த்வ யுத்தம் செய்து வெற்றி பெற்றார். அதன்பிறகு ஏற்படுத்தப் பட்ட ஸ்கூடேஜ் வரியை வசூலிப்பதில் அவர் பட்சபாத மின்றி, மத ஸ்தாபனத்தார் என்பதைக் கூடப் பாராமல், அதை வசூலித்தார். அது விஷயத்தில் மதஸ்தாபனத்தாருக் குத் தம்மீது அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது என்பதைக்கூடப் பொருட்படுத்தாமல், அவர் தமது கடமையை ஒழுங்காக நிறைவேற்றினர். அவர்மீது அரசர் பூர்த்தியான திருப்தி யடைந்து, அவருக்குக் கண்டர்புரியின் அரச்பீஷப் பதவி யையும் கொடுத்துவிட்டால், மதஸ்தாபன இலாகாவும் தமது ஆளுகைக்கு உட்பட்டதாகி விடுமென்று கருதியிருக்க, அப்போது தயாபாலடு 1161-ல் இறந்து போய்விட்டார். அவரும் தமஸையே தமக்குப் பிந்திய அரச்பீஷப்பாக்க வேண்டுமென்று தமது விருப்பத்தைத் தெரிவித்திருந்தார். எனவே, 1162-ம் வருஷம், (ஸ்கூடேஜ் சம்பந்தமாய் ஆட்சே பித்த ஒருவர் நீங்கலாக மற்ற) மத குருமார்களெல்லோரும் அரசருடைய விருப்பத்திற்கிணங்க ஏகமனதாய் அவரை அரச்பீஷப்பாக நியமித்தனர். முதன்முதலில் தமஸ் அது விஷயத்தில் அரசரை எச்சரித்தார். "நான் மதஸ்தாபன மனித னாகிவிட்டால், அரசருக்கு மேல் கடவுளை வைக்க வேண்டியதாகும்" என்றார். அதுபற்றி அரசர் அவரோடு பல வாறு வாத தர்க்கங்கள் நடத்திக் கெஞ்சி மன்றாடி அவர் அந்தப்பதவியை ஏற்றுக்கொள்ளச் செய்தார். ஆனால் அரசர் எதிர்பார்த்த பலனுக்கு நேர் விரோதமான பலனே கிடைத் தது. தமஸ் பக்கத் தமது புதிய பதவியை வகித்தவுடன், அவர் அடியோடு புதிய மனிதராக மாறி, தாம் அதற்கு முன் அர

சருக்கு அந்தரங்கமான இராஜபக்தியோடு தமது கடமைகளைச் செலுத்தியதுபோல, தாம் கடவுளுக்கும், மதஸ்தாபனத்திற்கும் மனப் பூர்வமாகத் தமது கடமைகளைச் செய்ய வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார். அவர் உடனே சந்நியாசியின் ஜுப்பா, கம்பளி ஷர்ட் முதலியவற்றை இரவு பகல் கழற்றுமல் அணிந்து கொள்ளுகிறுர்; ஒவ்வொரு நாளும் ஏழைகளுக்குத் தமது சொந்த விடுதியிலேயே அன்னமளித்து, தாமே கூட இருந்து பரிமாறுகிறுர்; பிரயாணத்தினுல் அழுக்கடைந்துள்ள, அவர்களுடைய கால்களைத் தாமே அலம்பிவிடுகிறுர். அவர் பெரிய சீமான்களையும், பாரான்களையும் தமது ஹாலில் வைத்து உபசரிக்கிறுர்; ஆனுல், அவருடைய சொந்த மேஜையில் உட்கார சந்நியாசிகளை மாத்திரம் அநுமதிக்கிறுர்; விருந்து நடக்கையில் வாசிக்கப்படும் சங்கீத வாத்தியங்களை விலக்கி, அதற்குப் பதிலாக, லத்தீன் பாஷையிலுள்ள ஸ்லோகங்களை உரக்கப் பாராயணம் பண்ணச் செய்கிறுர். அவர் தொழுகை நடத்துகையில், தமது பழைய கர்மங்களையும் பாவங்களையும் நினைத்து நினைத்து நெடுமூச்செறிந்து தேம்பித் தேம்பி யழுகிறுர். இப்படி அவர் அடியோடு புது மனிதராக மாறிப் போய்விட்டார்.

மத ஸ்தாபனத்தாருடைய அதீதமான செல்வாக்கு

மதஸ்தாபனத்தாருடைய அதிகாரமும் செல்வாக்கும் அளவுகடந்து பெருகிக்கொண்டு போனதைக் கண்ட ஹென்ரி II தாம் பாரான்களை அடிக்கிய பின் மதஸ்தாபனத்தாரையும் ஒரு வரம்பிற்குள் நிறுத்தவேண்டுமென்ற கருத்தைக்கொண்டு, தமஸ் பக்கத் அந்த விஷயத்தில் தமக்கு அநுசரணையா யிருப்பாரென் றெண்ணி அவரைக் கண்டார்

புரிக்கு அரச் பீஷப்பாக நியமித்தார். அப்போது இங்கிலாந்தில் மதஸ்தாபனத்தாருக்குப் பிரத்தியேகமான தங்கள் சொந்த நீதிஸ்தலங்களும், பிரத்தியேகமான சட்டங்களும் ஏற்பட்டிருந்தன. இதர ஜனங்களுக்கு வேறு நியாயஸ்தலங்களும் சட்டங்களும் இருந்துவந்தன. மதஸ்தாபனத்தார் அரச துரைத்தனத்திற்கு அஞ்சாமல், பிரத்தியேகமான ஓர் அதிகார ஸ்தாபனமாயிருந்து, தாங்கள் அரச துரைத்தனத்திற்கு மேற்பட்டவர்கள் என்று கருதியும் காட்டிகொண்டுமிருந்தனர். அந்த இலாகாவில் ஏராளமான மனிதர்கள் வேலை செய்தனர். எழுதப் படிக்க அறிந்த ஒவ்வொருவனும் அநேகமாய் மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவனுயிருந்தான். மத ஸ்தாபனத்தார் ஏழு பெரிய வகுப்பார் இருந்தனர். இல்லாக் கொடுமையினுலும், பாரான்களுடைய உபத்திரவங்களைப் பொறுமலும் அநேகர் அதில் சேர்ந்திருந்தனர். அதில் சேர்ந்திருந்தவர்களுள் அநேகர் சுத்த அயோக்கியர்கள். அவர்களால், சில வருஷகாலத்திற்குள் சுமார் நூறு கொலைகள் செய்யப்பட்டு விட்டன. அவ்வாறு மதஸ்தாபனத்தைச் சேர்ந்தோரால் செய்யப்பட்ட கொலைக் குற்றத்திற்குக்கூட, அவர்களுடைய சொந்த நீதிஸ்தலத்தார் சொற்பமான தண்டனையையே விதித்தனர். பீஷப்புகள் கொடுத்த மிகக்கடுமையான தண்டனை யென்னவென்றால், அந்தக் குற்றவாளியினது மதச் சின்னமான ஜுப்பாவைப் பிடுங்கிக்கொண்டு, அவனை சாதாரண மனிதனுக்கி அனுப்பிவிடுவதே யாகும். சாதாரண மனிதன் கொலைக் குற்றத்தைச் செய்தால், அவனுக்கு நாட்டிலுள்ள இதர நீதிஸ்தலத்தார் மரணதண்டனை விதித்தனர். அதே குற்றத்தை மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர் ஒருவர் செய்தால், அதற்கு பீஷப்புகள் தமது நியாய ஸ்தலங்களில் விதித்த தண்டனை அவனுடைய ஜுப்பாவைப்

பிடுங்கிக்கொண்டு, அவனை சாதாரண மனிதனுக மாற்றி யனுப்புவதேயாகும். அதை உணர்ந்த அரசர் அவ்விஷ யத்தில் தக்க சீர்திருத்தம் செய்யக் கருதியிருந்தார். அது வன்றி, அரசருக்கும் தமஸுக்கும் ஒருவரி சம்பந்தமாக மனஸ்தாபம் ஏற்பட்டது. 1163-ம் வருஷம் உட்ஸ்டாக் (Woodstock) என்ற இடத்தில் நடத்தப்பட்ட மந்திரா லோசனை சபையில் அரசர் ஒரு வரித் தீர்மானத்தைப் பிர ரேபித்தார். அதாவது ஒரு ஹைட் நிலத்திற்கு 2 ஷில்லிங் கிற்குக் குறையாமல் அரசருடைய கஜானுவில் நேராகக் கட்டப்பட வேண்டுமென்று பிரரேபித்தார். தமஸ் அதை ஆட்சேபித்ததன்றி, மதஸ்தாபன நிலங்களிலிருந்து அரச ருக்கு வேறு அதிக வரி எதுவும் செலுத்த இயலாதென்று கண்டித்துக் கூறிவிட்டார். அந்த விஷயம் அற்பமானதாயி னும், வெற்றிகொண்ட வில்லியம் காலத்திற்குப் பிறகு, அரசருடைய வரி விதிப்புக்கு அதுவே முதன்முதலில் ஏற் பட்ட எதிர்ப்பு. அதுவே தமஸுக்கும் அரசருக்கும் ஏற் பட்ட முதல் மனஸ்தாபம். அதன் பிறகு மதஸ்தாபனத் தைச் சேர்ந்தவர் குற்றம் செய்வதைப்பற்றி விசாரணை நடத் தும் விஷயமாகவும் இருவருக்கும் வேற்றுமை உண்டா யிற்று. வெற்றிகொண்ட வில்லியம் காலத்திற்குமுன்னர் ஷயர் முதலிய நியாயஸ்தலங்களில் பிஷப்புகளுக்கு இருந்த அதீதமான அதிகாரத்தைக் குறைக்க வேண்டுமென்ற கருத் துடனேயே வில்லியம் I மதஸ்தாபனத்தாருக்கு பிரத்தி யேகமான நீதிஸ்தலத்தை ஏற்படுத்தினர். ஆனால் அதி லிருந்து பல விபரீதமான தீங்குகள் நேருமென்று அவர் எதிர்பார்க்கவில்லை. மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர் குற்றம் புரிந்தால், அவர்களுக்கு பிஷப்புகள் நாம் மேலே குறித்தபடி சொற்ப தண்டனையையே வழங்கினர். அதுவன்றி கனன்

சட்டமென்னும் ரோமன் சட்டங்களை மதஸ்தாபனத்தார் அநுஷ்டிக்கத் தொடங்கியதன்றி, தங்கள் நியாயஸ்தலத் திற்குமேல் முடிவான முறையீடு பாப்புக்குப் போகவேண்டு மென்பதையும் அநுஷ்டானத்திற்குக் கொணர்ந்து விட்ட னர். அரசர் தேர்ந்த சட்ட ஞான முடையவராதலால், நீதி பரிபாலன விஷயத்தில் அவ்வாறு ஊர் இரண்டுபடுவதை அவர் விரும்பவில்லை. அப்போது வர்சேஸ்தரில் இருந்த ஒரு பாதிரி ஒரு பெரிய மனிதரைக் கொன்றுவிடவே, அவரை சாதாரண நீதிஸ்தலத்திற்கு விசாரணைக்கு அனுப்ப வேண்டுமென்று ஹென்ரி கேட்க, தமஸ் பக்கத் அதை மறுத்துவிட்டார். அந்த மனிதருடைய குற்ற பரி சீலனை மதஸ்தாபன நீதிஸ்தலத்திலேயே நடந்தது. அவர் குற்றவாளியென்பதை நிச்சயித்த நீதிபதிகள் அவருடைய ஜுப்பாவைப் பிடுங்கும் தண்டனை யளித்தனர். அதையே தமஸ் ஆதரித்தார். ஆகவே, மதஸ்தாபனத்தை அடக்கும் பொருட்டே நியமிக்கப்பட்ட தமஸ் அரசருக்குப் பெருத்த விரோதியானதன்றி, மதஸ்தாபனத்தின் உரிமைகளை சிறி தும் விட்டுக் கொடாமல் காப்பாற்றும் பொறுப்பாளியாக மாறிப் போனார்.

கிளாரண்டன் அரசியல் சீர்திருத்தங்கள் (Constitutions of Clarendon)

ஹென்ரி II, 1164-ம் வருஷம், ஜனவரி மாதம், சலீஸ் புரிக்கு அருகிலுள்ள கிளாரண்டன் என்ற இடத்தில் ஒரு பெரிய ஆலோசனை சபையைக் கூட்டினார்; ஹென்ரி I காலத்தில், மதஸ்தாபனத்திற்கும், அரச துரைத்தனத்திற் கும் உள்ள சம்பந்த விஷயமாய் அநுஷ்டானத்தில் இருந்து வந்த சில பழக்கங்களைத் திரட்டி அங்கு ஆஜர்ப் படுத்தினார்.

அவை கிளாரண்டன் அரசியல் சீர்திருத்தங்கள் (Constitutions of Clarendon) என்று குறிக்கப்படுகின்றன. அவற்றில் பதினாறு விஷயங்கள் அடங்கி யிருந்தன. சில புதியவை, சில பழையவை. (1) குற்றம் செய்த மதஸ்தாபனத்தார் அரசருடைய நீதிஸ்தலத்தில் விசாரிக்கப்பட வேண்டும்; (2) மதஸ்தாபனத்தார் எவரும் அரசருடைய அநுமதி இன்றி நாட்டை விட்டு வெளியேறுதல் கூடாது, 3) மதஸ்தாபன நீதிஸ்தலங்களிற்கு மேல் அப்பீல் முறையீடுகள் அரசருக்கே வரவேண்டும். அவர் சம்மதித்தால், அது பாப்பிற்குப் போகலாமேயன்றி மற்றப்படி போவது கூடாது, (4) குருமார்கள் அரசருடைய பிரதம குடியானவர் போல் நிலங்களை வைத்துக்கொள்ள வேண்டும், 5) வில்லியர்கள் அவரவருடைய பண்ணைத் தலைவருடைய அநுமதியின்றி மதஸ்தாபனத்தில் சேர்த்துக்கொள்ளப்படுதல் கூடாது, 6) அரசருடைய அநுமதியின்றி அவருடைய குடியானவர்களை மத நீதிஸ்தலத்தார் மதப் பிரஷ்டர்களாக்குவது கூடாது, (7) பிஷப்புகள் அரசருடைய ஜப இல்லத்தில் (Chapel சப + இல் = சபில்) அவருடைய சம்மதியின்மேல் தேர்ந்தெடுக்கப்படவேண்டும், மற்ற பாரான்கள்போல், அவர்களும் அரசருடைய தர்பாரில் ஆஜராயிருக்க வேண்டும், என்பன அவைகளுள் முக்கியமானவை. தமஸ் பக்கத் அவைகளை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார். அரசருக்கும் அவருக்கும் சுமார் ஒன்பதுமாத காலம் அது சம்பந்தமாக சச்சரவுகள் நடைபெற்றன. அரசர் சிலரைத் தூண்டி தமஸின்மீது நாட்டு நியாயஸ்தலங்களில் வழக்குகள் தொடரச் செய்தார்; அவர் சான்சிலராயிருந்த காலத்தில் வசூலித்த பல பணத் தொகைகள் செலவிடப்பட்டதற்கு வயணம் கேட்கத் தொடங்கினர். மற்ற மதகுரு

மார்கள் அரசருக்கு அநுகூலமாயிருந்து சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்ளும்படி தமஸைத் தூண்டினார்கள். ஆனால் அவர் பிடிவாதமாகவே இருந்து, ஷை சீர்திருத்தங்களுக்கு ஆதரவாயிருக்கும் குருமார்களை மதப் பிரஷ்டர்களாக்கி விடுவதாக பயமுறுத்தினர். அவர் இராஜத்துரோகி என்று அரசருடைய சான்சிலர் தமஸின்மீது குற்றம் சுமத்த, தமஸ் பக்கத் பாப்பிற்கு முறையிட்டு அனுப்பிவிட்டு, மாறு வேஷத்தில் பிரான்ஸிற்குப்போய், ஒரு ஸிஸ்டர்சியன் மடாலயத்தில் மறைந்திருந்தார். அரசர் இங்கிலாந்திலிருந்த ஸிஸ்டர்சியன் சந்நியாசிகளையெல்லாம் ஓறுத்து, தமஸினுடைய சொந்தக்காரர்களும், நட்பினருமான சுமார் 400 பேரை இங்கிலாந்திலிருந்து துரத்திவிட்டு, கண்டர்புரியின் நிலங்கள் முழுமையும் கைவசப்படுத்திக் கொண்டார். அதற்குப் பிறகு அந்த மனஸ்தாபம் சுமார் ஆறு வருஷ காலம் நீடித்திருந்தது. அர்ச்பிஷப்பான தமஸ் பக்கத் ஸென்ஸ் (Sens) என்னுமிடத்திலிருந்த பாப்பினிடம் போய்ச்சேர்ந்து அங்கு 1170-ம் வருஷம் வரையில் இருந்தார். அப்போது பாப்பாயிருந்த அளிக்ஷாண்டார்க்கு எதிரிடையான ஓர் உரிமையாளர் அங்கே ஏற்பட்டிருந்தார்; அவரை ஜேரமன் சக்கரவர்த்தி பார்ப்ப ராசா (Barbarossa) ஆதரித்தார். அவருக்கு அநுகூலமாக ஹென்ரி II யும் சேர்ந்துவிடப் போகிறாரே என்ற கவலையினால், அளிக்ஷாண்டார் தமஸ் பக்கத் முறையீட்டை அவ்வளவு அக்கரையோடு ஆதரிக்கவில்லை. அதற்குள் இரு கட்சியினரது மனக்கொதிப்பும் ஒருவாறு தணிவடைந்தது. 1170-ம் வருஷத்தில் இருவருக்கும் ஒரு விதமான சமாதானம் ஏற்பட்டது. அந்த வருஷம் ஜூலை மாதம் 22-ம்தேதி, ஹென்ரிIIம், தமஸ் பக்த்தும் பிரான்ஸில் தேளரேயின் என்னுமிடத்திற்கருகில் சந்தித்தனர். கிளா

ரண்டன் சீர்திருத்தங்களைப்பற்றி அப்போது அவர்கள் பிரஸ்தாபிக்கவில்லை. அரசர், கண்டர்புரியினது சொத்துகளைத் திருப்பி ஒப்புவிப்பதாயும், அவருடைய மனிதர்களை மறுபடி தருவித்துக்கொள்ள உத்தரவு கொடுப்பதாயும், அவருடைய புத்திமதிப்படி நடந்துகொள்வதாயும் வாக்களித்தார். ஆனால் அந்த சமாதானம் முடிந்ததற்குமுன்னர் அதே வருஷம் ஜூன் மாதத்தில் இங்கிலாந்தில் இன்னொரு சம்பவம் நிகழ்ந்திருந்தது. பிரான்ஸ், ஜேரமனி (ஜேரமனி=சேரன்மனை ?) ஆகிய நாடுகளில், அரசர் உயிருடனிருக்கையிலேயே, அவருடைய அடுத்த வார்சுதாருக்குப் பட்டங் கட்டி விடுவது வழக்கம். ஏனென்றால், இளவரசர் தம் தந்தையோடிருந்து அரசியல் விஷயங்களில் அநுபவம் பெறும்பொருட்டு அவ்வாறு செய்வது வழக்கம். அதைப்போல, ஹென்ரி II தமது மூத்த குமாரரான ஹென்ரிக்குத் தம்முடைய ஜீவதசையிலேயே முடிசூட்டத் தீர்மானித்தார். இங்கிலாந்தில் அரசருக்கு முடிசூட்டும் உரிமை கண்டர்புரியினது அரச் பிஷப்பினுடையது. அப்போது தமஸ் பக்கத் அயல் நாட்டில் இருந்தமையால், அரசர் யார்க் அரச் பிஷப்பைக் கொண்டு தம் மூத்த குமாரருக்கு மகுடாபிஷேகம் நடத்தி வைத்தார். அவருக்கு லண்டன், துரஹம், சலீஸ்புரி ஆகிய இடங்களினது பிஷப்புகள் ஆதரவா யிருந்தனர். தமஸ் அரசரோடு சமாதானம் செய்துகொண்டாரானாலும், மகுடாபிஷேகத்தில் சம்பந்தப்பட்ட குருமார்கள்மீது அவருக்கு ஏற்பட்ட கோபம் தணியவில்லை. அவர் 1170-ம் வருஷம், டிசம்பர்மீ, 1௳, கண்டர்புரிக்கு வந்தார்; அவரை ஜனங்கள் மிகுந்த சந்தோஷத்தோடு வரவேற்றனர். ஆனால் அவர் அவ்வாறு வந்ததற்கு முன்பே, மகுடாபிஷேகத்தை நடத்திய குருமார்களில் சிலரை மதப் பிரஷ்டர்களாக்

கியும், சிலரை உத்தியோகத்தி லிருந்து சஸ்பெண்ட் செய்தும் உத்தரவு அனுப்பியிருந்தார். அப்போது அரசர் நார்மண்டியி லிருந்தார். ஷை உத்தரவுகளைப் பெற்ற மத குருமார்கள் உடனே நார்மண்டிக்கு ஓடி, நிகழ்ந்ததை அரச ரிடம் தெரிவிக்க, அவர் ரௌத்திராகாரமான கோபங் கொண்டு, "இங்கே என் சோற்றைத் தின்கிறவர்கள் எல்லோ ரும் சுத்தப் பேடிகளா! இந்த துஷ்டப் பாதிரியை ஒழிக்கக் கூடியவன் எவனுமில்லையா?" என்று ஆத்திரத்தோடு மொழிந் தாராம். அப்படிச் சொன்னபின், ஒரு மந்திராலோசனை சபையைக் கூட்டி, மறுநாள், தமஸை இராஜத் துரோகத்திற் காக சிறைப்படுத்த ஏற்பாடா யிருந்தது. ஆனால், அரசர் கோபத்தில் கூறிய சொற்களைக் கேட்ட நான்கு நைட்கள் அர சர் உண்மையிலேயே அவ்வாறு கருதுகிறார் என்றெண்ணி, உடனே புறப்பட்டுக் கண்டர்புரிக்குப் போய், அரச் பீஷப் பைக் கண்டு, அவர் சில மத குருமார்கள்மீது பிறப்பித்த உத்தரவுகளை நீக்கும்படி அரசர் கேட்பதாகக் கூற, அவர் பிடிவாதமாக அதை மறுத்துவிட்டார். அதன் பிறகு அவர் ஆலயத்திற்குள் நுழைந்துகொண்டிருந்த சமயத்தில் ஷை நைட்கள் அவரை இராஜத்துரோகி என்று அழைக்க, அவர் அதை மறுத்து வீரமாக மறுமொழி கூற, உடனே அவர்கள் தமது கத்திகளை உருவி அவரை வெட்டி வீழ்த்திவிட்டனர். அது 1170-ம் வருஷம், டிசம்பர் மாதம், 29-ம்தேதி நிகழ்ந் தது. அந்த பயங்கரமான செய்தி நாடு முழுதும் பரவவே, ஜனங்கள் அபாரமானவிசனமும்,கோபாவேசமும் அடைந்து பெரிதும் கிலி கொண்டு நடுங்கினர். அதுவரையில் தமஸின் மீது அதிருப்திகரமான அபிப்பிராயம் வைத்திருந்த ஜனங் கள் அவரது முடிவைக் கேட்டு, சகிக்கவொண்ணாத உணர்ச்

சிப் பெருக்கை யடைத்து, அவர் தெய்வாம்சம் வாய்ந்த அவதார புருஷரென்றும், தமது உயிரையே தியாகம் செய்த மகான் என்றும் கொண்டாடினர். தமஸ் அடக்கம் செய்யப்பட்ட இடம் யாத்திரைக் கருகமான புண்ணிய ஸ்தலமாகிவிட்டது. அங்கு பல அதிமாநுஷ அற்புதங்கள் காணப்படுவதாகவும் சொல்லிக்கொண்டனர். அரசர் அந்தப் பழியை நிவர்த்தி செய்து கொள்வதற்குப் பல காரியங்களைச் செய்தார்; அவர் அந்தக் கொலை நடந்த விஷயத்தில் தாம் நிரபராதி யென்று பிரமாணிக்கம் செய்து, பாப்பின் பிரதிநிதிகளிடம் மன்னிப்புப் பெற்றுக்கொண்டார்; அது விஷயமாகப் பாப்பிற்குப் பணிந்து போனார். அதுவன்றி தமஸின் சமாதிக்குப் பலதடவை யாத்திரை சென்று, தமது வாயிலிருந்து கோபமான சொற்கள் வந்ததற்கு தண்டனையாகக் கோல்களால் தம்மை நன்றாக அடிக்கும்படி செய்துகொண்டார். தமஸ் பக்கத் தமது உயிரைக் கொடுத்தது வீணாகவில்லை. அரசர் தமது கிளாரண்டன் சீர்திருத்தங்களை அதோடு விட்டுவிட்டார். ஆனால் அதற்குப் பிறகு, குற்ற விசாரணை விஷயத்தில் சொற்ப மாறுதல் ஏற்பட்டது. எவர் குற்றம் செய்தாலும், அவர் முதன் முதலில் பொதுஜன நீதிஸ்தலத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும். அங்கு அவர், தாம் மதஸ்தாபனத்தைச் சேர்ந்தவர் என்று உறுதி கூறி, அதற்குச் சான்றாக லத்தீன் பாஷைப் புஸ்தகத்தைப் படிக்கும் திறமை தமக்கிருப்பதாகக் காட்டினால், உடனே அவரை மதஸ்தாபன நீதிஸ்தலத்திற்கு அனுப்பி விடவேண்டும். ஹென்ரி II அபாரமான செல்வாக்குடையவரா யிருந்தாராலும், மதஸ்தாபனத்தாரது அதிகாரத்தை அடக்க அவரால் இயலாமல் போய்விட்டது.

ஹென்ரி II அயர்லாந்தை வெல்லுதல்

ஒன்பதாவது நூற்றாண்டிற்குப் பிற்பாடு இங்கிலாந்தின் வடக்கு நாடுகளிலிருந்து சிலர் சென்று அயர்லாந்தினது கரையோரங்களில் குடியேறி இருந்தனர்; ஆனால் அவர்கள் உள் நாட்டில் அரத்திரையாக (Ardriagh) என்னும் அதிபதிக்கு உள்பட்டிருந்த அல்ஸ்தர் (Ulster), கானாடு (Connaught), லேயின்ஸ்தர் (Leinster), மன்ஸ்தர் (Munster) ஆகிய நான்கு கல்திக் (Celtic) இராஜ்யங்களோடு சம்பந்தப் படாமல் அலக்கா யிருந்தனர். வெற்றி கொண்ட வில்லியம் அயர்லாந்தின் மீது படையெடுக்க வேண்டுமென்று உத்தேசித்தார். ஆனால் அது நிறைவேற வில்லை. ஆயினும், நார்மன் காலத்தில் அயர்லாந்தின் பீஷப்புகள் தாம் இங்கிலாந்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் என்பதை ஓரளவு உணர்ந்திருந்தனர். லேயின்ஸ்தர் நாட்டு அரசரான திருமாத் (Dermot) என்பவருக்கும் மற்ற அயரிஷ் அரசர்களுக்கும் சண்டை ஏற்படவே, 1166ம் வருஷம் ஹென்ரி, திருமாத்துக்கு உதவி புரியும்படி ஸ்ரீகையில் ஏயராளான ரிச்சற்டை அநுமதித்திருந்தார். 1170ல், ரிச்சற்ட் 1500 ஆள்கள் அடங்கிய ஒரு சேனையோடு சென்று வாட்டர்போர்ட் (Waterford) என்ற இடத்தைக் கைப்பற்றி, திருமாத்தின் புதல்வியை மணந்து கொண்டு, டப்ளின் (Dublin) என்ற இடத்தைப் பிடித்துக் கொண்டார். 1171ல் திருமாத் இறந்துபோக, அவருடைய நிலங்களது ஆட்சியை ரிச்சற்ட் ஏற்று, லேயின்ஸ்தர் ஏயராள் என்ற பட்டத்தை வகித்தார். அவர் சுயாதீன அரசராய்த் தம்மை ஸ்தாபித்துக் கொண்டுவிடுவார் என்று ஹென்ரி நினைத்து, இங்கிலாந்திலிருந்த அவருடைய நிலங்களைக் கைப்பற்றிக் கொண்டு ஒரு பெரிய சேனையோடு அயர்லாந்திற்குச் சென்று, அவருடைய அதிகாரத்தை அடக்கி,

அவர் தம்மைப் பணியும்படி செய்தார். அதன் பிறகு மற்ற அயரிஷ்காரர்களும், நார்மன்களும் அவரைப் பணிந்தனர். சட்டம், நீதி, அமைதி முதலியவை நிலைநாட்டப் பட்டன. டப்ளினுக்கும் சேஸ்தருக்கும் நடந்த வர்த்தகம் உறுதிப் படுத்தப் பட்டது. காஷில் என்ற இடத்திலிருந்த அயரிஷ் பீஷப்புகள் தங்கள் மதஸ்தாபனத்தை இங்கிலாந்தினது மதஸ்தாபனத்தின் நிலைமைக்குக் கொண்டுவருவதாக ஒப்புக் கொண்டனர். ஆனால் அரசர் அயர்லாந்து முழுதையும் வெல்வதற்கு முன் இங்கிலாந்திற்குத் திரும்பி வரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. டப்ளினை, பிரஸ்டல் வர்த்தகர்களிடம் ஒப்படைத்துவிட்டு, வாட்டர்போர்ட், லேக்ஸ்போர்ட் என்னும் இடங்களில் காவல் சேனைகளை நிறுத்தி விட்டு, அரசர் திரும்பி வந்து சேர்ந்தார். அதற்கப்புறம் அவ்விடத்தில் இரண்டு கட்சிகள் ஏற்பட்டன. அதன் பிறகு பல வருஷ காலம் வரையில் டப்ளின், வாட்டர்போர்ட், லேக்ஸ் போர்ட் ஆகிய இடங்களை விடாமல் பாதுகாக்க இங்கிலீஷ் காரர் அரும்பாடுபட வேண்டியிருந்தது. அம்மூன்று இடங்களும், அவற்றைச் சுற்றிலுமிருந்த ஜில்லாக்களும் இங்கிலீஷ் பாலி (Pale பாலிப்பு=காப்பு) என்று குறிக்கப்பட்டன.

கிளாரண்டன் ஆஸிஸ் (The Assize of Clarendon), பாரான்கள் கலகம்

தமஸ் பக்கத் கொல்லப் பட்டவுடன், அதனால் ஏற்பட்ட விகாரமான நிலைமையில் இங்கிலாந்திலிருக்க விரும்பாமல் ஹென்ரி II அயர்லாந்திற்குப் போய்ச் சேர்ந்தார். அவ்விடத்தில் அவர் சிறிது காலம் இருந்ததற்குள் அவருடைய இராஜ்யத்தில் பிரமாதமான கலகாஸ்பதங்கள்

தோன்றி பலப்பட்டுவிட்டன. அதுவுமன்றி அவர் உடனே திரும்பி வந்து, பாப்பினது பிரதிநிதிகளை வணங்கி சமாதானம் செய்துகொள்ளாவிடில், தமஸ் பக்கத் கொலை சம்பந்தமாகவும் தீங்குகள் விளையுமென்று அரசருக்குச் செய்தி கிடைக்கவே, அவர் உடனே புறப்பட்டுத் திரும்பி வந்து அவைரஞ்சஸ் என்னுமிடத்தில் பாப்பின் பிரதிநிதிகளிடம் தலை வணங்கி பூர்த்தியான பிராயச்சித்தம் செய்து கொண்டார். அதன் பிறகு, 1173, 1174 ஆகிய வருஷங்களில், அரசர், பாரான் முதலியோரால் நடத்தப்பட்ட பெரிய கலகங்களை அடக்க வேண்டியவரானார். அவ்வாறு கலகங்கள் ஏற்பட்டதற்கு நாம் பல காரணங்களைக் குறிப்பிடலாம். (1) ஹென்ரி II பட்டத்திற்கு வந்தது முதல் பாரான்களுடைய பியூடல் அதிகாரங்களைப் படிப்படிப்பாக அடக்கிக் கொண்டே வந்ததுபற்றி, பாரான்களுடைய அதிருப்தியும், ஆத்திரமும் பெருகிக் கொண்டே வந்தன. (2) அரசர் தம்முடைய குமாரர்களுக்குத் தமது நாடுகளைப் பிரித்துக் கொடுக்கும் விஷயமாகச் செய்திருந்த உத்தேச ஏற்பாடுகள் புத்திரர்களுக்கு அதிருப்தியையும் கோபத்தையும் உண்டாக்கின. (3) பிரான்ஸ் அரசருக்கு ஹென்ரியின்மீது ஏற்பட்டிருந்த பொறாமை ஆகிய இம்மூன்று காரணங்களாலும் ஷெ கலகங்கள் உண்டாயின. (1) ஹென்ரி II ஏராளமான கோட்டைகளை இடித்து, மற்றவைகளைத் தமது வசப்படுத்திக் கொண்டதால், பாரான்களுடைய இராணுவச் செல்வாக்கு குறைபட்டுப் போயிற்று. அவர்கள் சொந்த நாணயங்களைப் பொறித்து செலாவணி செய்து கொள்ளும் உரிமையும் போய்விட்டது. ஸ்கூடேஜ் வரி விதிக்கப்பட்டதனால், பாரான்களினது போர்த்திறம் மலினமடையலாயிற்று. அவர்களுடைய தயவின்றி, அரசருக்கு இதர

படைகள் ஏற்பட்டன. அவையன்றி, அது வரையில் பொது வரி யெதையும் செலுத்தாமல் இருந்தவர்களான தாங்கள், அவ்வாறு வரி செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டதே என்று பாரான்கள் ஆங்காரமடைந்தனர். அவை களுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல், அரசர் 1166ல் கிளாரண்டன் ஆஸீஸ் என்னும் சில புதிய சட்டங்களை ஏற் படுத்தியதால், எல்லா வழக்குகளுக்கும் அரசரே முடிவான அதிகாரி யென்பதும், பாரான்களுக்கு பிரத்தியேகமான எவ்வித உரிமைகளோ விதிவிலக்குகளோ ஏற்பட்டிருந்தா லும், அவைகள், அரசர் எல்லோருக்கும் சமமான நீதி வழங்கும் விஷயத்தில், இடையூறாயிருத்தல் கூடாது என்ப தும் நிச்சயப் பட்டுப் போகவே, பாரான்கள் கலகம் விளைக்க லாயினர். ஷ கலகத்தினது விவரங்களை நாம் தெரிவிக்கு முன் கிளாரண்டன் ஆஸீஸ் என்னும் சட்டத்தின் கருத்தை விளக்குவோம். கிளாரண்டன் என்பது வில்ட் ஷயரில் உள்ள ஓரிடம். அரசர் வேட்டையாடும் காலங்களி லெல் லாம் அவ்விடத்திலேதான் போய்த்தங்குவது வழக்கம். அங் கிருந்தபடி அவர் சுருக்கமான பல சட்ட திட்டங்களை வெளி யிடுவார். அவருடைய சட்டம் ஆஸீஸ் (ஆசு+ஈஸ்=நாட்டி னது அதிகாரி ?) என்று குறிக்கப்பட்டன. அவர் 1166ல் வெளியிட்டவை, நீதிஸ்தல நிர்வாகங்களைப் பற்றிய சில புதிய விதிகள். அவருடைய நியாயஸ்தலமான குரையா ரஜஸ் என்பதிலிருந்து நீதிபதிகள் நாட்டுப்புறங்களுக்குப் போய் முகாம் செய்து வழக்குகளை விசாரிக்க வேண்டு மென்று அவருடைய பாட்டனால் ஏற்படுத்தப்பட்ட முறையை 1155ல் ஹென்ரி II அநுஷ்டிக்கத் தொடங்கி னர். அவ்வாறு சென்ற நீதிபதிகள் வழக்குகளை விசாரித் ததோடு, வரி வசூல்களையும் கவனித்தனர்; நாட்டில் சமா

தானம் நிலைப்பதற்கான ஏற்பாடுகள் ஒழுங்காயிருக்கின்றனவா வென்பதையும் கவனித்தனர்; அரசருக்கு பியூடல் பிரமாணிக்கம் செய்ய வேண்டியவர்கள் தவறாமல் செய்கிறார்களா என்பதையும் ஆராய்ந்தனர்; பிராங்க் பிளேஜ் (Frank Pledge) முறைமைப்படி பத்துப் பத்துப்பேர் ஒன்று கூடி ஒருவருடைய நடத்தைக்கு மற்றவர் ஜாமீனாயிருக்கும் ஏற்பாட்டை எல்லோரும் அநுஷ்டிக்கிறார்களா என்பதையும் கவனித்தனர். அந்நீதிபதிகள் ஆறு இடங்களில் முகாம் செய்ய வேண்டு மென்று 1173ல் நிர்ணயம் ஏற்பட்டது. அவை யாவன, அவர்களுடைய தலைமை ஸ்தானத்திலும், மத்திய நாட்டிலும், கிழக்கு, மேற்கு, வடக்கு, வடகிழக்கு ஆகிய திசைகளிலும் முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இவ்வாறு நீதிபதிகள் சுற்றுப்பிரயாணம் செய்ததில் ஹென்ரி II ஸிவில், கிரிமினல் ஆகிய வழக்குப் பரிசீலனை முறைகளில் சில மாறுதல்களை ஏற்படுத்தினார். பழைய இங்கிலீஷ் காலத்தில் ஸிவில் வழக்குகளில், ஷயர் நீதிஸ் தலத்தில் கூடும் தாவாக்காரர்கள் எல்லோரும் ஒன்று கூடி, விஷயங்களைத் தெரிந்து கொண்டிருந்தவர்கள் பிரமாணிக்கத்தின்மேல் கொடுக்கும் வாக்கு மூலங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு வழக்குகளைத் தீர்மானித்தனர். பிற்பாடு ஏற்பட்ட நார்மன் முறைமையில் வாதி, பிரதிவாதிகள் துவந்த்வ யுத்தம் செய்வதில் அவர்களுடைய பலாபலத்தினால் ஏற்படும் முடிவைக் கொண்டே வழக்குகளும் முடிவு செய்யப்பட்டன. இதில் எப்போதும் தேக பலமுடையவனது கட்சிக்கே நியாயமும் அநுகூலமும் ஏற்பட்டன. பட்டணவாசிகளும், பலஹீனர்களும் இந்த முறையை வெறுத்தனர். ஆகையால், ஹென்ரி II இந்தப் போர் முறைக்கு மாறாக பன்னிரண்டு சுயாதீனக் குடியானவர்

களை ஜூரியாக நியமித்துக்கொள்ளவும், அவர்கள் பிரமா ணிக்கம் செய்துவிட்டு, ஒரு குறித்த வழக்கைப் பரிசீலனை பண்ணி முடிவு கூறவும் ஏற்பாடு செய்தார். ஷயர் நீதி ஸ்தலத்தார் யாரையும் சம்மன் மூலமாய் வரவழைக்கலாம் என்ற விதி ஏற்படுத்தப்பட்டது. குற்றவாளிகளைத் தேடிப் பார்க்கும் பொருட்டும், பிராங்க் பிளேஜ் என்னும் முறை எல் லோராலும் அநுஷ்டிக்கப்படுகிறதா என்பதை ஆராயும் பொருட்டும், ஷிரப்புகள் எந்தப் பாரானுடைய சமஸ்தானத் திலும் நுழையலாமென்றும், அவர்களைப் பாரான்கள் தடுக்கக் கூடாதென்றும் அரசர் கட்டளை பிறப்பித்தார். ஹென்ரி I காலத்தில், கவுண்டி நீதிஸ்தலங்களுக்கு வரும்படி பாரான் களுக்கு சம்மன் செய்ய அதிகாரம் இல்லை. அவர்களுடைய சுயாதீனமான சமஸ்தானங்களுக்குள் ஷிரப்புகள் நுழைவதும் கூடாததாயிருந்தது. அவைகளுக்கு இப்போது பரிகாரம் தேடப்பட்டன. இதேபோல கிரிமினல் வழக்குகள் பரிசீலனை செய்யப்படும் முறைகளிலும் அரசர் சில மாறுபாடுகளை ஏற் படுத்தினர். அதற்குமுன் கிரிமினல் வழக்குகள் கம்பர்கேட் டர்களது சாட்சியத்தாலும், திருவுள சாட்சியத்தாலும், துவந்த்வ யுத்தத்தாலும் தீர்மானிக்கப்பட்டன. அரசர் ஒரு புதிய ஏற்பாட்டைச் செய்தார். அரசருடைய நீதிபதிகள் முகாம் செய்கையில், ஒவ்வொரு ஹண்ட்ரடிலும் சட்டப் பரிச்சயமுள்ள பன்னிரண்டுபேரும், ஒவ்வொரு பட்டணத் திலும் சட்டப் பரிச்சயமுள்ள நால்வரும் பிரமாணிக்கம் செய்து, பிரபலமான கொள்ளைக்காரர்கள், கொலைஞர்கள், அவர்களை ஆதரிப்போர் முதலியவர்களைக் கொணர்ந்து ஷை நீதிபதிகளுக்கு முன்னர் ஆஜர்ப்படுத்த வேண்டும், நீதிபதி ஒரு குறித்த கவுண்டிக்கு வராவிட்டால், ஷிரப்புகள் ஷை விசாரணையை நடத்தி, நீதிபதிக்கு அறிக்கை யனுப்பவேண்

டும், அதற்குமேல் நீதிபதிகள் திருவுள சாட்சிய முறைகளை அநுசரித்து அவர்களை தக்கபடி தண்டிக்க வேண்டும் என்று புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவ்வாறு நியமிக்கப் பட்ட பதினாறு மனிதர்கள் ஆஜர் செய்யும் ஜூரிகள் (Jury of Presentment) என்று குறிக்கப்பட்டனர். இவ் வாறு கிளாரண்டன் ஆஸீஸ் விதிகள் ஏற்படுத்தப்பட்ட பிறகு ஷீரப்புகளது அதிகாரமும், செல்வாக்கும் அபார மாய்ப் பெருகிப் போயின. அவர்கள் பெரும்பாலும் ஸ்தலத் தில் பரம்பரையி லிருந்துவந்த பிரபுக்களாகவே இருந்தனர். அவர்களுடைய கொடுமையும், துஷ்கிருத்தியங்களும் அதி கரிக்கவே, குடிமக்கள் அவர்களை வெறுத்தனர். 1170ல் அரசர், ஷீரப் இன்குவேஸ்ட் (Inquest of Sheriffs) என்ற விசாரணையை நடத்தி, பெரும்பாலான ஷீரப்புகளை உத்தி யோகங்களிலிருந்து விலக்கிவிட்டு, எக்ஸ்செக்கர் காரியால யத்தில் இருந்த அநுபவசாலிகளான உத்தியோகஸ்தர்களை ஷெயாருடைய பதவிகளுக்கு நியமித்தார். இவ்வாறு ஒவ் வொரு ஷயரிலும் அரசருடைய அதிகாரம் அதிகப்பட்டது; நாடு முழுதிற்கும் ஒரே சீரான நியாயம் வழங்கப்பட்டது. இராஜ்யத்தினது எல்லா பாகங்களும் இவ்வாறு ஒன்றோ டொன்று சம்பந்தப்பட்டு ஐக்கியமடைந்தன. இவ்விதம் ஹென்ரி II பலவகைகளில் ஏற்படுத்திய சீர்திருத்தங்க ளால், பாரான்களுடைய அதிகாரமும் செல்வாக்கும் குறை யவே, அவர்கள் அதிருப்தியடைந்து அரசரைப் பகைக்கலா யினர். அரசகுமாரர்களுடைய கட்சியை ஆதரிப்பதாகக் காட் டிக்கொண்டு, பாரான்கள் தங்கள் சுயப் பகைமைத் தீர்த்துக் கொள்ள எத்தனித்தனர்; (2) அரசர் தமது மூத்த குமா ரன் ஹென்ரிக்கு மகுடாபிஷேகம் செய்தது, தமஸ் பக்கின் உயிரோடு போகாமல், இன்னொரு தீங்கையும் விளைவித்தது.

தாம் செல்வாக்குடன் இருக்கும்போது தமது குமாரருக்குப் பட்டம் கட்டிவிட்டால், பிறகு எவ்வித தகராறு ஏற்படவும் இடமிராதென்று கருதி அவர் முன்னெச்சரிப்பாக அதை நிறைவேற்றினாரேயன்றி, உடனே இராஜ்யத்தைத் தமது மூத்தகுமாரரிடம் ஒப்புவிக்கவேண்டு மென்னும் கருத்துடன் அல்ல. பிரான்ஸ் அரசருடைய குமாரியை மூத்த குமாரர் மணந்துகொண் டிருந்ததால், பிரான்ஸ் அரசருடைய துர்ப் போதனையும் அக் குமாரருக்கு ஏற்பட்டது. 1172ல் பிரான்ஸுக்குப்போய்த் திரும்பிவந்த மூத்த குமாரர், இங்கிலாந்து, நார்மண்டி, அஞ்செள ஆகிய மூன்றையும் ஓர் இராஜ்யமாக்கித் தமக்குக் கொடுத்துவிடும்படி தமது தந்தையிடம் கேட்கத் தொடங்கினர். அப்படிச் செய்ய அரசர் விரும்பவில்லை. அப்போது அரசருக்கு ரிச்சறடு என்றும், ஜியாவரை என்றும் இரண்டாவது மூன்றாவது குமாரர்களும் இருந்தனர். ரிச்சறடு தமது தாயின் காணியாட்சியான அக்குவிடெயினுக்குத் தகையரசராவதென்றும், ஜியாவரை கோனனுடைய மாப்பிள்ளை என்னும் ஹோதாவில் பிரட்டனியின் தகையரச ராவதென்றும் ஹென்ரி II தமக்குள் திட்டம் போட்டிருந்தார். 1167-ல் அரசருக்கு ஜான் என்னும் பெயருடைய இன்னொரு குமாரர் உண்டாகிவிடவே, அவருக்கு நிலமே இல்லாத நிலைமை ஏற்பட்டுப் போனதால், அரசர் அவருக்கு லாக்லந்து (Lackland) என்று பெயரிட்டார். நிலமில்லாதவன் என்பது அதன் கருத்து. அஞ்செள நாட்டைச் சேர்ந்தவையும், அதற்கு முன்னர் தமது சகோதரருடைய அநுபவத்தி லிருந்தவையுமான சீனன் (Chinon), மிரபேயா (Mirabeau) என்னும் நாடுகளை ஜானுக்குக் கொடுக்க வேண்டுமென்று அரசர் தீர்மானிக்கவே, மூத்த குமாரர் அஞ்செளவின் உரிமையாளர் என்ற ஹோதாவில் அதை

ஆக்ஷேபித்துவிட்டு, இரவோடிரவாகப் புறப்பட்டு பிரான்ஸ் அரசரிடம் போய்ச்சேர்ந்துவிட்டார். அங்கு அவரோடு அவருடைய சகோதரர்களான ரிச்சர்டும், ஜியாவரையும் போய்ச் சேர்ந்துகொண்டனர். அவர்களுடைய தாயான இளேயன்னரும் ஆண்பிள்ளை வேஷந் தரித்து பிரான்ஸுக்கு இரகஸியமாய்ப் போக, வழியில் அவளைப் பிடித்து சிறைப்படுத்தி விட்டனர். பிரான்ஸ் அரசரது அரண்மனை பெரிய சதியாலோசனைக்கு இருப்பிடமாயிற்று. இளவரசர்கள் லஞ்சத்தின் மூலம் முக்கியமான பிரமுகர்களைத் தங்கள் கட்சியில் சேர்த்துகொள்ள முயன்றனர். ஹென்ரி II க்கு ஐரோப்பாக் கண்டத்தில் இருந்த குடியானவர்கள் அந்த சதியாலோசனையில் சேரவில்லை. இங்கிலாந்திலிருந்த பாரான்கள் உடனே அதில் கலந்துகொள்ள, அது மிகப் பிரமாதமான சதியாலோசனைக் கூட்ட மாகிவிட்டது. ஸ்காட்லாந்து அரசரும், சிங்கம் (The Lion) என்ற பட்டப் பெயர் பெற்றவருமான வில்லியத்திற்கு, இளவரசரான ஹென்ரி, டைன் வரையில் உள்ள நார்த்தர்பர்லண்ட் பிரதேசத்தைக் கொடுப்பதாக வாக்களித்து, அவரைத் தமது கட்சியில் சேர்த்துக் கொண்டார்; ஃப்ளாண்டர்ஸ் கவுண்டான பிலிப்புக்கு, கெண்டையும், போயலக்னி, மாத்தேவுக்கு மார்த்தேயனையும் கொடுப்பதாக வாக்களித்து அவர்களையும் சேர்த்துக் கொண்டார். பிஷப்புகளில் துரஹம் பிஷப்பும், அரச வம்சத்தாருமான 'ஹூ' (Hugh) என்பவர் ஒருவர் மாத்திரம் அந்த சதியாலோசனைக் கூட்டத்தாரோடு சேர்ந்தார். இன்னம் ஏராளமான பாரான்களும் அதில் சேர்ந்துகொண்டனர். அவ்வளவு பிரமாதமான பகைவர்களை எதிர்க்க, ஹென்ரி II இங்கிலாந்தில், இங்கிலாந்தின் மதஸ்தாபனத்தார், பட்டணங்களிலிருந்த ஜனங்கள், இதர குடிமக்கள், உத்தியோக

வர்க்கத்தார், அவருடைய ஜஸ்டிசியரான ரிச்சறடு, எஸ்ஸெக்ஸ் ஏயராளான மாண்டவில்லி, லங்காஷயர் ஷிரப்பான ரால்ப் சீனன்வில்லி ஆகியவர்களை நம்பி யிருந்தார்; ஐரோப்பாக் கண்டத்திலிருந்த அவருடைய் நாட்டைப் பாதுகாக்க, அவர் தம்முடைய கூலிப் போராள்களான 20,000 பிரபன்கன்ஸ் (Braboncons), அல்லது, பிரபன்டர்ஸ் (Brabanters) என்போரை நம்பி யிருந்தார். 1173-ல் கலகம் இங்கிலாந்திலும், பிரான்ஸிலும் தொடங்கப்பட்ட தாலும் இரண்டிடங்களிலும் ஹென்ரி II க்கே வெற்றி கிடைத்தது. போயலக்னி கவுண்டு கொல்லப்பட்டுப் போனர்; பிரான்ஸ் அரசர் திரும்பி ஓட்டம் பிடித்தார். தால் (Dol) என்னுமிடத்தில் நடந்த போரில், சேஸ்தர் ஏயராள் முதலிய பலர் சிறைப்பட்டுப் போகவே, அதுவே முடிவைக் காட்டி விட்டது. இங்கிலாந்தில் பாரன்ஹாம் (Fornham) என்னுமிடத்தில் லேயிசேஸ்டர் ஏயராள் தோற்றுப்போக, அவர் அயல் நாட்டிலிருந்து கொணர்ந்த 10,000 போர்வீரர்கள் கொல்லப்பட்டுப் போயினர். 1174-ல் போர் மறுபடியும் தொடரப்பட்டது. அயரிஷ்காரர்கள் கிளம்பினர்கள். ஸ்காட்லாந்து சிங்கம் இங்கிலாந்தின்மீது படை யெடுத்து வந்தார். ஹூ பிகாத் (Hugh Bigod) என்ற தலைவர் பல பாரான்களோடு கிளம்பி, நார்விச், நார்த்தாம்படன், நாட்டிங்ஹாம் என்ற இடங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். பலமான கப்பல் படை யொன்று இங்கிலாந்தை அச்சுறுத்தியது. அதைக்கேட்ட அரசர் நார்மண்டியிலிருந்து இங்கிலாந்திற்குப் பிரயாணமாய் சவுதாம்ப்டனில் வந்திறங்கினர். இறங்கியவர் குடிமக்களுடைய மனதைக் கவருவதற்காக சமயோசிதமான ஒரு தந்திரம் செய்தார். தமஸ் பக்கத் கொலை விஷயத்தில் தாம் நிரபராதி என்பதை சட்டப்படி அவர் நிரூபித்துக்

கொண்டிருந்தார்; பாதிரிமார்களையும் சமாதானம் செய்து கொண்டு விட்டார். பொதுஜனங்கள் உடனே தமது கட்சியில் சேருவதற்காக, அவர் நேராகக் கண்டர்புரிக்குச்சென்று, தமஸின் சமாதியில் பிராயச்சித்தம் செய்துகொள்ளவிரும்பி, சவுதாம்ப்டனை விட்டு, இரவோடிரவாகக் கெண்டிற்குப் பிரயாணம் செய்தார்; அப்போது ரொட்டியையும் தண்ணீரையும் தவிர வேறு எதையும் உட்கொள்ளவில்லை. அதிகாலையில் அங்கே போனவர் ஊருக்கு வெளியிலிருந்தே குதிரையை விட்டுக் கீழே இறங்கி, விசனத்தைக் காட்டும் ஜூப்பாவை யணிந்துகொண்டு, குனிந்த தலையை நிமிர்த்தாமல் வெறுங் காலோடு நடந்து, பட்டணத்திற்குள் நுழைந்தார். நுழைந்தவர் தமது பழைய நண்பரும், பகைவருமான தமஸின் சமாதிக்கு முன்னால் நிரம்பவும் துக்ககரமாகவும், அவருக்கு தாசாநுதாசன்போலும் மண்டியிட்டு வணங்கி, அங்கே கூடியிருந்த ஜனங்களுக்கு முன்னால் பிரலாபித்துத் தேம்பித் தேம்பியழுது, முன் கோபத்தினால் தாம் உபயோகித்த கோபமான சொற்களுக்காக தம் மனது பரிதபித்து உருகுவதாகக் கூறி, அது விஷயமாய்த் தமக்கு தண்டனையாக கோல் கொண்டு சிலர் தம்மை பலமாகப் புடைக்கும்படி தமது உடம்பைக் காட்டி அந்த தண்டனையைப் பெற்றுக் கொண்டார். எண்பது பாதிரிமார்கள், சிலர் ஐந்தடிகள் வீதமும், சிலர் மூன்றடிகள் வீதமும், அரசருக்கு அடிகளை வழங்கினார்கள். அன்றைய இரவு முழுதையும் அவர் அந்த ஆலயத்தில் இருண்ட ஓர் அறையில் இருந்து கழித்தார்; மறுநாள் முழுதும் பட்டினி விரதத்தை அநுஷ்டித்து லண்டனுக்குப் போய்ச் சேர்ந்தார். உடனே அவருக்கு ஜுரம் உண்டாகி விட்டது. ஆனால் சிலதினங்களில் சந்தோஷச் செய்தி கிடைக்கவே, ஜுரம் உடனே பறந்துபோய்விட்டது. அரசர் கண்

டர்புரியில் சமாதிக்கெதிரில் மண்டியிட்டு வணங்கிய அந்த உத்தர க்ஷணத்திலேயே ஸ்காட்லாந்தின் சிங்கத்தை அலன்விக் (Alnwick) என்னுமிடத்தில் அரசருடைய ஜஸ்டிசியர் சிறைப்படுத்திவிட்டார் என்ற செய்தி கிடைக்கவே, அரசர் சந்தோஷப் பெருக்கில் மெய்ம்மறந்து, அந்தச் செய்தியைக் கொணர்ந்தவனுக்கு நிலமான்யம் முதலிய சன்மானங்களை வழங்கி யனுப்பினர். அரசர் செய்த தந்திரமும், அதோடு ஒத்துக்கொண்ட பெரிய வெற்றியும் ஜனங்களுடைய மனதை பிரமிக்கச்செய்தன. அதனால் அரசருக்கு ஏற்பட்ட நன்மை அபாரமானதென்றே நாம் கருதவேண்டும். அதன் பிறகு அரசருடைய வெற்றி மிக சுலபத்தில் பூர்த்தி யடைந்தது. பிளமிஷ்கரைக் கருகில் இருந்த போர்க் கப்பல்கள் துரத்தியடிக்கப்பட்டன. நார்பாக் முதலிய இடங்களிலிருந்த பாரான்கள் எல்லோரும் அடக்கப்பட்டு அரசரிடம் சரணுகதி யடைந்தனர். அரசர் இங்கிலாந்தில் வந்திறங்கியதற்குப் பின் மூன்றுவார காலத்தில் கலகக்காரர்கள் எல்லோரும் அடக்கப்பட்டுப்போகவே, நாடு அமைதி யடைந்துவிட்டது. ஆகஸ்ட் மாதத்தில் அரசர் சானலைக் கடந்து, ரௌவனை விடுவிக்க, செப்டெம்பர் மீ 30உ ஹென்ரியும், பிரான்ஸ் அரசரும் கிஸார்ஸ் (Gisors) என்னுமிடத்தில் சமாதானம் செய்துகொண்டனர்; அரச குமாரர்களும் தந்தையைப் பணிந்து மன்னிப்புப் பெற்றுக் கொண்டனர். அரசர் ஏற்கனவே செய்திருந்த நில ஏற்பாட்டைப் புத்திரர்கள் அங்கீகரித்தனர். பாரான்கள், ஐரோப்பாக் கண்டத்தில் இருந்தது போன்ற பியூடல் அதிகாரத்தை இங்கிலாந்திலும் பெறும் பொருட்டு அரசரோடு செய்த போர்களில் இதுவே கடைசியானது. 1174-ம் வருஷம், டிசம்பர் மாதத்தில், வலயஸ் (Falais) என்ற இடத்தில் ஹென்ரி II க்கும் ஸ்காட்லாந்து

சிங்கத்திற்கும் உடன்படிக்கை நடந்தது. ஸ்காட்லாந்திற்கும், இதர நிலங்களுக்கும் இங்கிலாந்தரசர் அதிபதி என்று ஸ்காட்லாந்து சிங்கம் தமக்காகவும் தம் சந்ததியார்களுக்காகவும் ஒப்புக்கொண்டதன்றி, தாம் அதற்குமேல் ஒழுங்காக நடந்துகொள்வதற்கு ஜாமீனாக, எடின்பர்க், ஸ்டர்லிங், ராக்ஷ்பர்க், ஜித்பர்க், பேர்விக் என்னும் கோட்டைகளில் இங்கிலாந்தினது காவற் சேனைகள் வந்திருக்கும்படி இங்கிலீஷ் அரசருடைய வசத்தில் அவைகளை விட்டுவிட்டார்.

நார்த்தாம்ப்டன் ஆஸீஸ்

இவ்வாறு நாடு அமைதி யடையவே, ஹென்ரி II மேலும் சில சட்டங்களைச் செய்தார். 1176-ம் வருஷம் நார்த்தாம்ப்டன் ஆஸீஸ் என்ற புதிய சட்டம் வெளியிடப்பட்டது. அது கிளாரண்டன் ஆஸீஸைப் புதுப்பித்ததன்றி, இன்னம் அதிக கடுமையான சில விதிகளையும் கொண்டிருந்தது. 1178-ல் அரசர் குரயா ரஜஸ் நீதிஸ்தலத்திலிருந்து ஐந்து நீதிபதிகளைப் பிரித்து, அவர்கள் எப்போதும் தம்மோடிருக்கவும், தமது நீதிஸ்தலத்தில் வரும் பெரும்பாலான வழக்குகளை அவர்களே பரிசீலனை செய்யவும் வேண்டுமென்ற நியதியை ஏற்படுத்தினர். அந்த நீதிஸ்தலமே பிற்காலத்தில் கிங்ஸ் பெஞ்ச், காமன் பிளீஸ், எக்ஸ்சேக்கர் என்று மூன்று நீதிஸ்தலங்களாகப் பிரிந்துபோயின.

இராணுவச் சட்டம் (Assize of Arms)

ஹென்ரி II இயற்றிய இராணுவச் சட்டம் 1181-ல் வெளியிடப்பட்டது. ஆதிகாலத்தில் விருது, (Fyrd) என்ற தேசியப் படையே நாட்டினது பாதுகாப்பிற்கு உபயோகிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பதினாறு வயதிற்கும், அறு

பது வயதிற்கும் உள்பட்ட ஒவ்வொரு குடியானவனும், தேவை உண்டானல், அந்தப் படையில் வந்து சேரவேண்டும். டேனிஷ்காரர்கள், வந்தபிறகு ஹஸ்-கேரளஸ் என்னும், பிரத்தியேகப் பயிற்சி பெற்ற போர்த் தொழிலாளர் தோன்றலாயினர். அதன் பிறகு ஒவ்வோர் அரசரும், கூலிக்கு அமர்த்தப்படும் ஆள்களை முக்கியமாய்க் கோட்டைப் பாதுகாப்பு, போர் நடத்துதல் முதலியவைகளுக்கு உபயோகித்துக் கொண்டனர். ஹென்ரி II ஸ்கூடேஜ் வரியை விதிக்க ஆரம்பித்த பிறகு, அவர் வெளிநாட்டுக் கூலிப் போர் வீரர்களையே பெரும்பாலும் நம்பி யிருந்தார்; அவர்களைக் கொண்டே வெளி நாட்டுப் போர்களை நடத்தினர். ஆனல் அவர்களை இங்கிலாந்து தேச மகாஜனங்கள் ஆதரிக்கவில்லை. இங்கிலாந்தில் புராதனமா யிருந்துவந்த தேசியப் படையான விருதின் (Fyrd) திறமையை மலினப்படுத்திவிட அரசர் விரும்பவில்லை. ஆகையால், அவர் அதை அபிவிருத்தி செய்யப் பல விதிகளை அமைத்தார். ஒவ்வொரு குடியானவனும் அவனுடைய நிலத்தின் பெறுமானத்திற்குத் தக்கபடி இன்னின்ன ஆயுதங்களை ஆயத்தப்படுத்தி வைத்திருக்க வேண்டும் என்றும், அவைகளை, அந்தந்த ஜில்லாவில் இருந்த ஜூரிகள் ஆஜர் பார்க்கவேண்டு மென்றும் அரசர் பூர்த்தியான விதிகளை ஏற்படுத்தினர். அடிமைகளை (Serf= சேர்வ் or சேர்வைக்காரர்?) இந்த விருதில் சேர்க்கப்படுதல் கூடாது. அரசரிடம் இரண்டு வகையான படைகள் இருந்தன. சம்பளம் பெறும் கூலிப்படையார். இவர்களைத் தமது கோட்டைகளைப் பாதுகாக்கவும், வெளி நாடுகளில் நடத்தப்படும் போர்களுக்கும் அரசர் உபயோகப்படுத்தினர்; தேசியப்படையான இலவசப் படையை அன்னிய நாட்டிலிருந்து இங்கிலாந்தின்மீது படை யெடுப்

போரை வெல்லவும், உள் நாட்டுக் கலகங்களை அடக்குவதற்கும் அவர் உபயோகப்படுத்தினர். இதற்குப் பிறகு பியூடாலிஸம் என்பது வெறும் நிலவரி ஏற்பாடுபோ லாய்விட்டது.

உட்ஸ்டாக் ஆஸீஸ் (Assize of Woodstock)

ஹென்ரியினல் உற்பத்தி செய்யப்பட்ட சட்டங்களில் இதுவே கடைசியானது. இது 1184-ம் வருஷத்தில் வெளியிடப்பட்டது. காட்டிலாகா சம்பந்தமான சட்டங்கள், மதஸ்தாபனத்தாரையும், காடுகள் உள்ள ஷயர்களினது மகா ஜனங்கள் எல்லோரையும் கட்டுப்படுத்தும்படி கண்டிப்பான புதிய விதிகள் ஏற்படுத்தப்பட்டன. மற்றவைகளுக்கு இருந்ததுபோல, காட்டிலாகாவுக்கும் பிரத்தியேகமான நீதிஸ்தலங்களும், ஜூரிகளும் ஏற்படுத்தப்பட்டனர். நிலக்காரர்கள் காட்டிலாகா சம்பந்தமாய் அற்ப குற்றம் செய்தாலும் பளுவான அபராதங்கள் விதிக்கப்பட்டன. ஹென்ரி II தமது முன்னேர்களைப்போல சலிப்பின்று வேட்டையாடும் சுபாவமுடையவராதலால் காடுகளையும், வேட்டை மிருகங்களையும் காப்பாற்றும் விஷயத்தில் அவர் நிகரற்ற கொடுங்கோலரசரா யிருந்தார்.

அரசருடைய குடும்ப நிலைமை

1174-ம் வருஷத்திற்குப் பிறகு அரசருக்கு இங்கிலாந்தில் எவ்வித உபத்திரவமும் ஏற்படவில்லை; அப்போது அவர் தமது அதிகார விஷயத்தில் மகோன்னத பதவியிலிருந்தார் என்று நாம கருதலாம். அவர் மாத்தில்தா என்னும் ஒரு மகளை சாக்ஷனே (Saxony) என்ற நாட்டினது தகையரசருக்கு விவாகம் செய்து கொடுத்திருந்தார். அவளுடைய வயிற்றில் உதித்த குமாரர் பிற்காலத்தில் ஆதா

IV (ஆதன் = சூரியன் ?) என்ற பெயருடன் ஜேரமன் சக்கரவர்த்தியானார். இன்னொரு குமாரத்தியான இளையன்னார் என்பவள் காஸ்தில் (Castile) அரசருடைய மனைவியானாள். மூன்றாவது பெண்ணான ஜாஅன்னா ஸிஸிலியின் அரசருக்கு மனைவியானாள். அவருடைய குமாரர்களுள் ஜியாவரை என்பவர் பிரட்டனியின் தகையரச ரானார். 1171-ல் ரிச்சறடு அக்குவிடெயினுக்குத் தகையரசரானார். ஜான் அயர்லாந்தை ஆளுவதென்ற ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது; மூத்த குமாரரான ஹெண்ரி இங்கிலாந்திற்கு முடிசூட்டப்பெற்றிருந்தார். பிரான்ஸ் அரசரான லௌவீஸ் 1180-ல் இறந்த பின்னர் அவருடைய குமாரரான பிலிப் அகஸ்டஸ் என்பவரும், இளைய ஹெண்ரியும் நட்பினராகி விட்டனர். அக்குவிடேயின் என்ற நாட்டில் ஏற்பட்ட சச்சரவுகளிலிருந்து, பகிரங்கமான போர் விளையும்படியான நிலைமை உண்டாகிவிட்டது. பிரட்டனியில் ஜியாவரையினது ஆட்சி அருப்திகரமாயிருந்தமையால், அங்கு குடிகள் அவரிடம் பற்றுதல் கொள்ளவில்லை. அந்த நிலைமையில் மூத்த குமாரரான ஹேெண்ரி 1183-ல் இறந்து போய்விட்டார். அதன் பிறகு 1186-ல் ஜியாவரையும் இறந்து போய்விட்டார். ஆனால் அவருக்கு ஒரு பெண் குழந்தையும், ஓர் ஆண் குழந்தையும் ஏற்பட்டிருந்தனர். அவ்வாறு இரண்டு குமாரர்கள் இறந்துபோனதனால் ஹெண்ரி யரசருடைய நிலைமை நிரம்பவும் கடினமானதாய் முடிந்ததானலும், அந்த சந்தர்ப்பத்தில் மூன்றுவது குருசேடு ஏற்படவே, எல்லோருடைய கவனமும் அதில் சென்றதாகையால், ஹெண்ரி II ஓரளவு சமாளித்துக்கொண்டார். 1188-ல் மூன்றுவது குருசேடு நடக்கப்போவதாய்ப் பறை யறைவிக்கப்பட்டவுடனே, ஜேரமன் சக்கரவர்த்தியான பார்ப்ப ராஸா ஜிருசேலக்

திற்குப் புறப்பட்டுவிட்டார். ஜிருசேலத்தில் சலதீன் என்னும் துருக்க அரசரால் தோற்கடிக்கப்பெற்றவர், அஞ்சவன் வம்சத்தைச் சேர்ந்தவராதலால், அங்கு நேர்ந்த தீங்கைத் தமது சொந்த குருபீடத்திற்கு நேர்ந்ததுபோல ஹென்றி II உணர்ந்தாராதலால், அவர் தாமும் புறப்பட்டுப் போகவேண்டுமென்ற விருப்பத்தைக் கொண்டார். அதற்குத் தேவையான செலவு தொகைக்காக அவர் ஒரு புதிய வரியையும் வசூலிக்கச் செய்தார். அது சலதீன் டைத் என்று குறிக்கப்பட்டது. ஒவ்வொரு மனிதனுக்கும் நிலத்திலும் வர்த்தகத்திலும் வந்த வருமானத்தில், பத்தில் ஒரு பகுதி வசூலிக்கப்பட்டது. நிலத்தைத் தவிர, இதர சொத்துகளின் மேலும் வரி விதிக்கப்பட்டது அதுவே முதல் தடவை; ஒருவருடைய வருமானத்தை நிர்ணயிக்க, அயலார்கள் ஜூரிகளாய் நியமிக்கப்பட்டனர். அவர்களுடைய மதிப்பின் மேல் வரி விதிக்கப்பட்டது. அவ்வாறு அரசர் ஜிருசேலப் பிரயாணத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த காலத்தில், 1189-ல் பிரான்ஸ் அரசரான பிலிப் ஒரு பெரிய சேனையுடன் அஞ்சௌ நாட்டின்மீது படை யெடுத்து வந்துவிட்டார். அரசருடைய குமாரரான ரிச்சறடும் பிரான்ஸ் அரசருடன் வந்து சேர்ந்துகொண்டார். அப்போது ஹென்றி II நோயில் படுத்திருந்தார். அக்காலை அவருடைய வசத்தில் இங்கிலீஷ் சேனைகள் இல்லை. கூலிக்காரப் போர் வீரர்கள் சம்பளம் கொடுக்கப்படாமையால் சமயத்தில் அவரைக் கைவிட்டுவிட்டனர். சிலரே கடைசி வரையில் அரசரிடம் உறுதியா யிருந்தனர். அரசர் செய்த முயற்சிகள் பலிதமடையவில்லை. டௌவர்ஸ், லே மன்ஸ் என்ற இடங்கள் எதிரிகளது வசமாயின. அரசர் நார்மண்டிக்கு ஓடி, அங்கிருந்து தௌரெயினுக்குப் போய்ச் சேர்ந்தார். பிலிப்போடும்

ரிச்சர்டோடும் நேரில் சமாதானம் பேசுவதற்காக கோளம்பியரஸ் என்ற இடத்திற்கு அவரே வரவேண்டியவரானார். அவ்விடத்தில், எதிரிகள் கேட்டதற்கெல்லாம் அவர் இணங்கினார். நோயில் பட்டு தளர்ந்து வீழ்ந்துபோயிருந்த அரசர் சீனோன் என்ற இடத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். அவ்விடத்தில், அவர், தாம் மிக வாத்சல்யத்தோடு வளர்த்த தமது கடைசிப் புதல்வனான ஜானும் அந்தப் போரில் சம்பந்தப்பட்டிருந்தானென்பதைத் தெரிந்துகொள்ளவே, அவருக்கு இந்த உலகத்தில் நம்பிக்கையே யில்லாமல் போய்விட்டது. அவருடைய மனம் அப்படியே இடிந்து வீழ்ந்து போயிற்று. அப்போது அவருடைய நோயும் விபரீதமாகப் பெருகிவிட்டது. "எது எப்படி வேண்டுமானாலும் ஒழிந்து போகட்டும். எனக்கு இனி என்னைப்பற்றிய கவலையுமில்லை; இந்த உலகத்தில் வேறு எதைப்பற்றிய கவலையுமில்லை" என்று சொல்லிவிட்டு "அரசனாகிய நான் தோற்றுப்போக நேர்ந்ததே! என்ன மானக் கேடு! என்ன மானக் கேடு" என்று முணுமுணுத்துக் கொண்டே 1189-ம் வருஷம், ஜூலை மாதம், 7-ம் தேதி, உயிர் துறந்தார்.

அவருடைய மேன்பாடுகள்

சட்டம், இராஜரீக தந்திரம், துரைத்தன பரிபாலனம், பண நிர்வாகம் ஆகிய அம்சங்களில் ஹென்ரி II இங்கிலாந்திற்கு செய்த சேவை அபாரமானது. அவர் எக்ஸ்செக்கருக்குப் புத்துயிர் கொடுத்தாரானாலும், நாட்டினது நிர்வாக அமைப்பிலேயே அவர் தமது கவனத்தைப் பெரும்பாலும் செலுத்தினார். ஆதிகால இங்கிலீஷ் அரசியலில், ஸ்தல நிர்வாகத்திற்கும், மத்திய நிர்வாகத்திற்கும் அன்னியோன்னிய சம்பந்தம் இல்லாதது நிரம்பவும் துர்ப்பலமான

அம்சமாயிருந்தது. அந்தக் குறையை ஹென்ரி II நிவர்த்தி செய்தார். பாரன்கள், மதகுருமார்கள் ஆகிய வகுப்பாருடைய பிரத்தியேக செல்வாக்கும், அதீதமான உரிமைகளும் அடக்கப்பட்டுப் போயின. ஷீரப்புகளுடைய அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. அவர்கள் அரச துரைத்தனத்தாருக்கு உட்பட்டவராயினர். சுற்றுப் பிரயாண நீதிபதிகளும், நிரந்தரமான நீதிஸ்தலமும் ஏற்பட்டதால் கவுண்டிகளுக்கும் மத்திய துரைத்தனத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் ஏற்பட்டது. ஹென்ரி II கவுண்டிகளிலும் ஜூரிகள்மூலம் நீதி வழங்கும் பழக்கத்தை ஸ்தாபித்தார். டேம்ஸ்டே புஸ்தகம் தயாரிக்கப்பட்ட காலத்தில் ஜூரிகள் நியமிக்கப்பட்டனராயினும், நிரந்தரமான நியாயஸ்தலங்களில் ஜூரிகளைப் பயன்படுத்திய புத்தி சாதுர்யம் ஹென்ரியினுடையது. ஆகையால், இங்கிலாந்தினது "ஜூரி முறைமைக்கு ஹென்ரி II தகப்பனார்" என்று கருதப்பட வேண்டியவர். தற்காலத்திலும் ஜூரிகள் தங்கள் அபிப்பிராயத்தில் ஒருவர் குற்றவாளியா, சுத்தவாளியா என்பதைத் தெரிவிக்கின்றனரேயன்றி, தாங்களே முடிவான தீர்ப்பைக் கூறுவதில்லை. இது ஹென்ரி II யின் ஆஜர்செய்யும் ஜூரிகள் (Jury of Presentment) என்ற ஆரம்ப ஏற்பாட்டினுடைய தொடர்ச்சியே யன்றி வேறல்ல. ஹென்ரி II வழியில் தகராறுகளுக்கும், பண வரிவசூல் சம்பந்தமாயும்கூட ஜூரிகளை ஏற்படுத்தினர். ஆனால், இப்போது ஜூரிகள் பெரும்பாலும் கிரிமினல் வழக்குகளுக்கு மாத்திரம் தருவிக்கப்படுகின்றனர். ஆதியில், ராணுவ நோக்கத்தோடு அமைக்கப்பட்ட பியூடாலிஸம், ஹென்ரி II காலத்தில் வரிவசூல் அமைப்பாக மாறுபடத் தொடங்கியது. ஒரு மனிதனுடைய சுயேச்சாதிகாரம், சட்டத்தின் ஆளுகையாக

மாறத் தொடங்கியதும் இவருடைய ஆட்சியிலேயே. ஹெண்ரியின் ஆட்சியை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். 1154—58 நாடு ஒழுங்குப்படுதல் ; 1158—1173 மதஸ்தாபனத்தாரோடும் பாரான்களோடும் சச்சரவு; 1174—1189 வெற்றியும், துரைத்தனச் சீர்திருத்தங்களும் என்று பிரிக்கலாம்.

ஹெண்ரி II அரசாட்சியில் நிகழ்ந்த முக்கியமான சம்பவக் குறிப்புகள் :—

1154 ஹெண்ரி II முடிசூடல், பட்டய வெளியீடு, தமஸ் பக்கத் நியமனம்.

1157 ஸ்காட்லாந்து அரசர் வடக்கு நாடுகளை விட்டுவிடுதல்.

1158 தெந்து வேல்ஸ் அரசரான ரைஸ்-அப்-கிரிபித் ஆள்களை ஜாமீனாகக் கொடுத்தல்.

1159 டேனேலென்ஸ் முற்றுகை, ஸ்கூடேஜ் முதன்முதலில் விதிக்கப்படுதல்.

1160 அரசனுடைய மூத்த குமாரர் பிரான்ஸ் அரச குமாரியை மணத்தல்.

1162 தமஸ் பக்கத் கண்டர்புரி அரச் பிஷப்பாகுதல்.

1163 மதஸ்தாபனக் குற்றவாளிகளைப்பற்றிய தகராறு.

1164 கிளாரண்டன் அரசியல் சீர்திருத்தம், தமஸ் பக்கத் நாட்டை விட்டு வெளியேறுதல்.

1166 கிளாரண்டன் ஆஸிஸ்.

1169 நார்மன் பாரான்கள் அயர்லாந்தின்மீது படை யெடுத்தல்.

1170 வீரப்புகளைப்பற்றிய விசாரணை; பெரும்பாலோர் நீக்கப் படுதல். அரசனுடைய மூத்த குமாரர் மகுடம் சூட்டப்படுவது. தமஸ் பக்கத் கொல்லப்படுவது.

1171 ஹென்ரி II அயர்லாந்தின்மீது படை யெடுத்தல்.

1173-4 பாரான்களது கலகம்.

1174 ஹென்ரி II பிராயச்சித்தம் செய்துகொள்ளல். டேன்கில்ட் விலக்கப்படுதல். கிஸார்ஸ், வலயஸ் உடன்படிக்கைகள்.

1176 நார்த்தாம்ப்டன் ஆஸிஸ்.

1177 ஜான் அயர்லாந்தின் லார்ட் ஆகுதல்.

1180 பிரான்ஸ் அரசர் லோவீஸ் III மரணம். பிலிப் அகஸ்டஸ் முடிசூடுதல்.

1181 இராணுவ ஆஸிஸ்.

1183 அரசனுடைய மூத்த குமாரர் அகால மரண மடைதல்.

1184 உட்ஸ்டாக் ஆஸிஸ்.

1186 ஜியாவரை அகால மரண மடைதல்.

1187 ஜிருசேலம் சலதீன் வசமாதல்.

1188 மூன்றாவது குருசேடு, சலதீன் டைத்.

1188-9 ரிச்சரட் கலகம், ஹென்ரி II மரணம்.

அஞ்சேளவன் அரச வம்சாவளி

ஹென்ரி II = அக்குவிடெயின் இளையன்னர்
(1154—1189)

- ஹென்ரி (1183-ல் மரணம்)
- ரிச்சறட் (1189-1199)
- ஜியாவரை (1186-ல் மரணம்) = கான்ஸ்டான்ஸ் (of Brittany)
  - அறத்தர் (1203-ல் மரணம்)
- ஜான் (1199—1216) = (1) 1189, ஹத்விசா (of Gloucester) = (2) 1200, இசைப்பிள்ளா (Isabella of Angouleme)
- இளையன்னர் = காஸ்தில் அரசர்
  - பளஞ்சி = பிரான்ஸ் லௌவீஸ் VIII
- மாத்தில்தா = ஹென்ரி (of Saxony)
  - ஆதர் IV (ஜேரமன் சக்கரவர்த்தி)
- ஜாஅன்று = வில்லியம் IV (of Sicily)


ஹென்ரி III = இலேயன்னர் (of Provence)
(1216—1272)
இலேயன்னர்
சிம்மன்-தே-மன்ட்வரத் (Simon-de-Montfort)
இசைப்பெல்லா = சக்கரவர்த்தி ப்ரதரிக் II (Frederick)
ரிச்சறட் ரோமன் அரசர்
ஜாஅன்று = அலிக்ஷாண்டர் II (of Scotland)
எட்வர்டு I
(1272—1307)
எட்மன்ட் (Earl of Lancaster)
மார்க்கரத் = அலிக்ஷாண்டர் III (of Scotland)
பீட்ரீஸ் = (வீட்டு + இரு + ஈஸ் ?) = Duke of Brittany
ஹென்ரி (of Almaine)
எட்மன்ட் (of Cornwall)
தமஸ் (of Lancaster)
ஜான் (of Brittany)

அத்தியாயம்—8

ரிச்சறட் (1189—1199)

ரிச்சறட் முடி சூடுதல், அவருடைய குணாதிசயங்கள்

அவர் 1157-ம் வருஷத்தில் பிறந்தவர்; அவர் பட்டத்திற்கு வந்த காலத்தில் அவருக்கு வயது முப்பத்திரண்டு. அவருடைய பதினோராவது பிராயத்தில் ஹென்ரி II அவரை அக்குவிடெயின் தகையரச ராக்கினர். ஹென்ரி II இறந்தவுடன், எவ்வித எதிர்ப்புமின்றி அவர் இங்கிலாந்தின் அரசராக வரிக்கப்பட, உடனே அவர் தமது தாயான இலேயன்னரை இங்கிலாந்திற்கு அனுப்பிவிட்டு, பிரான்ஸ் அரசரான பிலிப்புடன் சமாதானம் செய்து கொண்டார். இரண்டாவது ஹென்ரி உயிரோடிருந்த வரையில் நண்பராயிருந்த பிரான்ஸ் அரசர், அதன் பிறகு பொறாமையினல், ரிச்சறடுக்குப் பகைவராகிவிட்டா ராதலால், பின்னவர் அவருடன் சமாதானம் செய்துகொண்டு இங்கிலாந்திற்கு வந்து, வெஸ்ட் மின்ஸ்டரில் முடி சூடினர். அவர் பத்துவருஷ காலம் இங்கிலாந்திற்கு அரசராயிருந்தாராஞலும், சுமார் ஆறுமாத காலமே அவர் இங்கிலாந்தில் தங்கினர். அதுவன்றி, அவர் இங்கிலாந்தின் ஆட்சியைப்பற்றிச் சிறிதும் அக்கரையும் கொள்ளவில்லை; தமது ஆளுகையைப்பற்றி அவருக்கு எவ்வித

திட்டமும் இல்லை. ஆகையால், ஷை பத்துவருஷ காலமும், உண்மையில், அவருடைய ஆட்சி காலமென்று நாம் கருது வது பொருத்தமாகுமாவென்பது சந்தேகம். அவர் தடித்த உயரமான சரீரமும், நீண்ட கைகால்களும், அழுத்தமான சதைப்பிடியும் உடைய தாட்டியானமனிதர். அவரது சிவந்த மினுமினுப்பான மேனியும், பொன் நிறமான உரோமமும், நீலமான கண்களும் அவர் நார்ஸ் சந்ததியைச் சேர்ந்தவர் என்பதைக் காட்டின. அக்காலத்தில் அவரை மிஞ்சிய பராக்கிரமசாலியும், தைரியசாலியும், உரமான மனத்திரமான முடையவரும் வேறு இல்லையென்றே கூறலாம். போர் புரிவது, போர்த்தலைமை வகிப்பது, யந்திர தந்திர யுக்திகளை அநுஷ்டிப்பது ஆகியவற்றில், ரிச்சறட் தலைசிறந்தவர். அவர் பாய்டோவில் ஆட்சி நடத்திய காலத்தில் மிக திடமாகவே துரைத்தன காரியங்களை நிர்வகித்தாராணாலும், துரைத்தன விஷயத்தில் நிபுணத்வ மடையத் தேவையான சந்தர்ப்பம் அவருக்கு ஏற்படவில்லை. ஆனாலும், அவர் தாமில்லாத காலத்தில் இங்கிலாந்தினது அரசியல் நிர்வாகத்தை நடத்துவதற்கு, தம்முடைய தந்தையினது காலத்திலிருந்த திறமைசாலிகளையே நியமித்தார். கடைசிக்காலத்தில், அவர் தமது தந்தைக்கு துரோகமான காரியங்களைச் செய்தாராணாலும், தந்தை பரிதாபகரமாக மரணமடைந்தாரென்பதைக் கேட்டவுடன், ரிச்சறட் கண்ணீர் விடுத்துக் கதறி அழுதுவிட்டார். அவருக்குப் பாக்களில் விருப்பம் அதிகம்; அவரே பாக்கள் அமைக்கும் திறமையுடையவராயிருந்தார். நாட்டிலிருந்து இராஜ்யத்தை யாளுவதைவிட போர்த் தொழிலில் தமது அரிய பராக்கிரமத்தைக் காட்டி, சௌரியவான் என்று கீர்த்தி பெற வேண்டுமென்பதே அவருடைய நோக்கம். அவருக்கு கோயேயர் சிங்கம் (Coeur

The Lion) அதாவது, ஏயர்களுக்கரசராகிய சிங்கம் என்பது அதன் கருத்து. அவருடைய பத்து வருஷத்திலும் அவர் செய்த காரியங்களை நாம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். (1) மூன்ருவது குருசேடு யுத்தமும், அவர் சிறைப்பட்டதும், (2) தமது பழைய நண்பரும், பகைவருமான பிலிப்புடன் போர்கள் நடத்தியது ஆகிய இரண்டும் அன்னிய நாடு சம்பந்தமானவைகளே.

மூன்ருவது குருசேடும், பணச் சேகரிப்பும்

அவர் முடி சூடிய காலத்திலேயே, அவருடைய மனம் முழுதும் குருசேடுக்குப் போவதிலேயே நாட்டமாயிருந்தது. ஆகவே, தாம் தமது செலவிற்குத் தேவையான பணத்தை வசூலிப்பதும், இங்கிலாந்தினது ஆட்சிக்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்வதுமே அவருடைய முதல் உத்தேசங்களா யிருந்தன. ஸ்காட்லாந்து அரசரான வில்லிய சிங்கத்தினிடம் 10,000 மார்க்குகளைப் பெற்றுக்கொண்டு, அதற்கு மாருக தமது ஆதிபத்தியத்தை விட்டுக் கொடுத்து, அவருக்கு சுயாதீனம் அளித்து இங்கிலீஷார் வசத்திலிருந்த ராக்ஷ்பர்க், பர்விக் என்னும் கோட்டைகளையும் திரும்பக் கொடுத்துவிட்டார். இன்னம் அவர் எதெதைத் தாம் விற்கமுடியுமோ அதையெல்லாம் விற்கத் தொடங்கிவிட்டார்; மதஸ்தாபன நிலங்கள், அரசருடைய நிலங்கள், துரைத்தன உத்தியோகங்கள் ஆகியவற்றை விற்ருர்; ஷீரப் உத்தியோகங்கள், நீதிபதி உத்தியோகங்கள், பட்டங்கள் முதலியவற்றைப் பெரிய தொகை கொடுப்போர் எவரோ அவருக்குக் கொடுத்து விட்டார். அதுவன்றி, சில பாரான்கள்மீது கோபங் கொண்டதுபோல் பாசாங்கு பண்ணி, அவர்களிடம் பளுவான வரிகளையும், பெரும் பெரும்

தொகைகளையும் பிடுங்கினர்; பட்டணங்களுக்கு உரிமைப் பட்டயங்களை விற்று, அவற்றின் மூலமாகப் பணங்கள் பறித்தார். அவர் "லண்டனைக்கூட விற்றிருப்பாராம். ஆனால் அதை வாங்கக் கூடியவர் எவருமில்லையாம்." தூரஹாம் ஏயராள் பதவியை, அதே இடத்து பிஷப்பிற்கு விற்று விட்டார். எல்லி பிஷப்பான லங்கசம்ப் (Longchamp — லங்கை சம்பு?) என்பவரிடம் 3000 பவுன் பெற்று அவருக்கு சான்சிலர் பதவியைக் கொடுத்தார். ரால்ப் கிளான்வில்லி என்பவர் குருசேடுக்குப் போக விரும்ப, அவருடைய ஜஸ்டிசியர் பதவியை ராஜீநாமா செய்வதற்காக அவரிடம் அரசர் பணம் பெற்றார். வில்லியம் மாண்டவில்லி (மாட்சிமை தங்கியவில்லி?) என்பவர் பணம் கொடுத்து ஒரு பெரிய உத்தியோகம் பெற்றார். அப்போது, ஜீவுகளே (Jews) இங்கிலாந்தில் பண லேவாதேவி செய்வோராயும், அசுர வட்டி வாங்குவோராயும், (Bankers & Usurers) இருந்தனர். அரசர் அவர்களிடம் பெருந் தொகைகளைப் பிடுங்கவே, ஜனங்கள் அவர்களைப் பல இடங்களிலும் கொலை செய்யலாயினர். அப்போது தமது சகோதரரான ஜானை எப்படி சரிப்படுத்துவது என்பதே அரசருக்கு பெரிய கலவரத்தை உண்டாக்கியது. அவரைத் தம்மோடுகூட ஜிருசேலமுக்கு அழைத்துப் போவது உசிதமாகத் தோன்றியதாலும், அது பலியாமற் போகவே, அவரை ஐரோப்பாக் கண்டத்தில் ஓரிடத்தில் வைப்பதென்று அரசர் நிர்மானித்தனர். மூன்று வருஷ காலத்திற்கு தாம் இங்கிலாந்துக்கு வருவதில்லையென்று அவர் பிரமாணிக்கம் செய்து கொடுத்ததன்மேல், அவருக்கு அபரிமிதமான தானங்கள் வழங்கப்பட்டன. அவருக்கு மார்த்தாயன் என்ற கவுண்டியைக் கொடுத்ததோடு, இங்கிலாந்து ராஜ்யத்தில் மூன்றில் ஒரு பங்களவுள்ள நாடுகளையும், அவை

களுடைய வரிகளையும் அரசர் அவருக்குக் கொடுத்தார். தாம் இல்லாத காலத்தில் நாட்டினது பொதுநிர்வாகம் தமது தாயான இளையன்னருடைய விவேகத்தினுலும், சாமர்த்தியத்தினுலும் ஒழுங்காக நடைபெறுமென்று அரசர் நம்பினர். அவரால் ஜஸ்டிசியபாக நியமிக்கப்பட்ட லங்கசம்ப் என்பவர் நார்மன் தேசத்தார்; அவர் அரசருக்குத் தகுதியான மந்திரியே; பணப்பசியுடைய அரசருக்குப் பணம் சம்பாதித்துக் கொடுக்கும் விஷயத்தில் எதைச் செய்யவும் அவர் பின்னடைந்தவரன்று. அவரிடம் இராஜ்யத்தின் முழுநிர்வாகத்தையும் ஒப்படைத்துவிட்டு, அரசர் கண்டர்புரி ஆலயத்திற்குப் போய் யாத்திரீகருடைய தண்டம் முதலிய சின்னங்களைப் பெற்றுக் கொண்டு, 1189-ம் வருஷம், டிசம்பர் மாதம், 11-ம் தேதி, இங்கிலாந்தை விட்டுப் பிரயாணமாய், பர்கண்டியில் வஸலே என்னும் மைதானத்தில் சேனைகளோடிருந்த பிரான்ஸ் அரசர் பிலிப்பிடம் போய்ச் சேர்ந்தார். இருவருடைய சேனைகளிலும் மொத்தத்தில் இலக்ஷம் பேர்கள் இருந்தனர்.

மூன்ருவது குருசேடு (1189—92)

இரண்டு அரசர்களும் நேராக ஜிருசேலமுக்குச் செல்லாமல் ஸிஸிலிக்குப் போய் மழைகாலம் முழுதும் அங்கு தங்கினர். அவ்விடத்தில், அவர்களும், அவர்களைச் சேர்ந்த பெரிய மனிதர்களும், ஆட்களும் ஓயாமல் ஒருவரோடொருவர் சச்சரவிட்டுக் கொண்டேயிருந்தனர். பிரான்ஸ் தேசத்தில் தமக்குக் கீழ்ப்பட்ட குடியானவராகிய ரிச்சறட் தமக்குமேற்பட்ட அதிகாரமும், செல்வாக்கும் வகித்ததைப் பற்றி பிலிப் பொருமை கொண்டிருந்தார். ஸிஸிலியினது அரசர் தங்கறடு (Tancred) என்பவர் நார்மன் தேசத்தா

ராதலால், ரிச்சறடு அவருடைய அரண்மனையில் விருந்தினரா யிருந்தார். அக்காலத்தில் ரிச்சறட் பரன்காரியா (Berengaria of Navarre) என்னும் ஓர் அழகான மடந்தையின்மீது மோகம் கொண்டிருந்தார். அவள் அந்த ஊர் அரசரான செங்கோவினது புதல்வி. அக்காலத்தில், அரசருடைய தாயார் இலேயன்னருடம் நான்கு தினங்கள் அவ்விடத்தில் வந்து தங்கினுள். ரிச்சறட் தமது தாயை அனுப்பி பரன்காரியாளே அழைத்துவரச் செய்து விவாக நிச்சயதார்த்தம் செய்து கொண்டார். பாலஸ்தானத்திலுள்ள அக்கர் (Acre) என்னும் இடம் 1188 முதல் இரண்டு வருஷகாலமாகத் துருக்கரது வசப்பட்டிருந்தது. இரண்டு வருஷ காலமாய் கிறிஸ்தவர்கள் அதை முற்றுகை போட்டுக் கொண்டிருந்தனர். ரிச்சறட் அரசர் ஸிஸிலியை விட்டுப் புறப்பட்டு, சீப்பரஸ் (Cyprus) என்னும் தீவை யடைந்து, அந்த நாட்டு அரசரான கம்நன்ஞஸ் என்பவர் சில இங்கிலீஷ் மாலுமிகளேக் கொன்ற குற்றத்திற்காக அவரை அரச பதவியிலிருந்து விலக்கி வேறு துரைத்தனத்தை ஏற்படுத்திவிட்டு, லிம்ஸால் என்னுமிடத்தில் பரன்காரியாளுடைய மணத்தை முடித்துக் கொண்டு, 1191-ம் வருஷம், ஜூன் மாதம், அக்கருக்குப் போய்ச் சேர்ந்தார். 1190-ல் புறப்பட்ட ஜேரமன் சக்கரவர்த்தியான பார்ப்ப ராசா, சீரியா நாட்டில் ஓர் ஆற்றில் மூழ்கி இறந்து போய் விட்டார். அதனுல் ஜேரமன் சேனைகள் சொற்பமாகவே வந்து சேர்ந்தன. பிலிப் 1191-ம் வருஷம், ஏப்ரல் மாதம், அக்கரை யடைந்தார். ரிச்சறட் போனவுடன், தமது உடம்பினது கோயையும் பொருட் படுத்தாமல் முனைந்துவேலை செய்து சில தினங்களில் அக்கரைப் பிடித்துக் கொண்டார். அதைப் பிடித்த பெருமைப்பாடு முழுதும்

தமக்கே வரவேண்டுமென்று அவர் கருதியிருக்க, ஒரு கோபுரத்தைப்பிடித்தவரான ஆஸ்திரியாவினது தகையரசர் அதன் மேல் தமது கொடியை நாட்ட, ரிச்சறட் கோபங் கொண்டு அதைப் பிடுங்கி சாக்கடையில் போட்டு விட்டார். அப்போது பிரஞ்சு அரசர் பிலிப் தமக்கு உடம்பு அசௌக்கியமாயிருக்கிறதென்று கூறி பிரான்ஸிற்குத் திரும்பினார். அப்போது அவர், ரிச்சறடுக்குக் கெடுதலான காரியம் எதையும் தாம் பிரான்ஸில் செய்வதில்லை யென்று அவருக்குப் பிரமாணிக்கம் செய்துகொடுத்தபின் அவ்விடத்தை விட்டுப் போய்விட்டார். போனவர் அந்தப் பிரமாணிக்கத்தின்படி நடந்து கொள்ளாமல், ஜானைச் சேர்த்துக் கொண்டு, ரிச்சறட் அரசருடைய பிரஞ்சு நாடுகளைக் கைப்பற்ற சதியாலோசனை செய்யலானார். அவர் போனபின், ரிச்சறடு அரஸப் (Arsuf) என்னுமிடத்தில் சாரசன்களை(=விபசாரத்தினால் உற்பத்தியான சோரபுத்திரர்?) வென்று ஜிருசேலத்திற்குப் பதின்மூன்று மயிலுக்கிப்பால் வரையில் சென்றார். ஆனால் குளிரினாலும், ஆகாரமில்லாமையாலும், நாலாபக்கங்களிலும் எதிரிகள் வந்து வளைத்துக்கொண்டமையாலும், ரிச்சறட் தமது சேனைகளுடன் 1192-ம் வூ ஜனவரியில் பின்வாங்க வேண்டியவரானார். அதற்குள் குருசேடுத் தலைவர்கள் ஜிருசேலத்திற்கு யார் அரசராவதென்பதைப் பற்றி ஒருவரோ டொருவர் சச்சரவிட்டுக் கொண்டனர். குவை (Guy of Lusignan) என்பவரும், கான்ராட் (of Montferrat) என்பவரும் அதற்குப் போட்டி போட்டனர். 1192வூ ஏப்ரல் மாதம் பின்னவர் கொலையுண்டார். ஆஸ்காலனைப் புதுப்பித்துப் பல கோட்டைகளைப் பிடித்து கொண்ட ரிச்சறடு வெயில் காலத்தில் மறுபடி ஜிருசேலத்திற்குத் தமது சேனையை நடத்தினார். ஆனால் சகாக்கள்

உறுதியாக நடந்து கொள்ளாமையாலும், சேனைகள் குறைந்து போனமையாலும், அவர் அப்போது பின் வாங்க வேண்டியவரானார்; அப்போது ஜானுடைய நடத்தையைப்பற்றி கெடுதலான செய்திகள் அவருக்கு எட்டிக் கொண்டே இருந்தமையால், அவர் ஊருக்குத் திரும்பிவர ஆவல்கொண்டு செப்டெம்பர் மாதத்தில் சலதீன் என்பவரோடு கிறிஸ்தவர்களுக்கு அநுகூலமான ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார். அது மூன்று வருஷம், மூன்று மாதம், மூன்று நாள், மூன்றுமணி காலம் வரையில் அமுலிலிருக்க வேண்டுமென்று அவர்கள் ஒப்பந்தம் செய்துகொண்டனர். அதனால், கிறிஸ்தவர் ஜாப்பாவையும், அதன் ஜில்லாவையும், ஏசுநாதருடைய சமாதிக்குப் போகும் உரிமையையும், வர்த்தகம் செய்யும் உரிமையையும் பெற்றனர். அந்த அக்கர் யுத்தத்தில் கண்டர்புரி அரச்பிஷப் பால்டவனும், ரானுல்ப் கிளான் வில்லியும் அரசர் வருவதற்கு முன்னரே இறந்து போயினர். உடன்படிக்கை முடிந்த பின், அரசர் சீப்பரஸை, குவை (of Lusignan) க்குக் கொடுத்துவிட்டு ஹுபெரத் வள்திரு (Hubert walter) சேனைகளைத்திருப்பி அழைத்துக் கொண்டுவரும்படி திட்டம் செய்துவிட்டு, 1192-ம் வருஷம் அக்டோபர் மாதம் ஊருக்குப் புறப்பட்டார்.

அரசர் சிறைப்படுதல்

அவர் திரும்பி வந்த காலத்தில் ஒரே ஒரு கப்பலோடு வர, அது நாசமாகிவிட்டது. பிரான்ஸின் வழியாகப் பிரயாணம் செய்ய அவர் அஞ்சினராதலால், அவர் ஒரு வர்த்தகரைப்போல மாறுவேஷம் பூண்டு ஆஸ்திரியா வழியாக வந்தார். வியன்னு என்னும் இடத்தில் அவர் வந்த காலத்தில், அவர் கொண்டுவந்த அன்னிய நாட்டுத் தங்கம் அவரைக்

காட்டிக் கொடுத்துவிட்டது. அக்கரில் அவரால் அவமரியாதைப்படுத்தப்பட்டவரான ஆஸ்திரியா தலைபரசரான லயாபால்ட் (Leopald of Austria) ரிச்சறடை சிறைப்படுத்தி ஜேரமன் சக்கரவர்த்தியான ஹென்ரி (VI)யினிடம் 60,000 பவுன் பெற்றுக்கொண்டு விற்றுவிட்டார். சக்கரவர்த்தி ரிச்சறடை ஒரு கோட்டையில் சிறைப்படுத்தி விட்டார். அதன் பிறகு ஜேரமன் சக்கரவர்த்தி அவர்மீது நான்கு குற்றங்களைச் சுமத்தி வர்ம்ஸ் என்ற இடத்தில் கூடிய தயத் (Diet) என்ற சபையாருக்கு முன்னர் விசாரணைக்குக் கொணர்ந்தார். ஜிருசேலத்தில் கொல்லப்பட்ட கான்ராடை ரிச்சறடே ஆள்களை விட்டுக் கொல்லச் செய்தார் என்பது அந் நான்கு குற்றங்களில் முக்கியமானது. ரிச்சறடு தமது வழக்கை சிறந்த வாக்கு வன்மையோடு வாதித்தாராதலால், அந் சபையின் அங்கத்தினர்கள் அவர் குற்றமற்றவர் என்று விடுவித்தனர். ஆனால் ஜேரமன் சக்கரவர்த்தி இங்கிலாந்திலிருந்து பெரிய தொகையைப் பெற்றுக்கொண்டே அவரை விடவேண்டுமென்று எண்ணி, 100,000 பவுன் கொடுக்கப்பட வேண்டுமென்றும், சிப்ரஸ் அரசர் கம்நின்னுஸ் விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும், பிரட்டனியில் இறந்த ஜியாவரையின் குமாரியான இளையன்னரை ஆஸ்திரியா அரச குமாரர்களில் ஒருவருக்கு விவாகம்செய்துவைக்க நிச்சயம் செய்யப்பட வேண்டுமென்றும் கூறி ரிச்சறடை விடாமல் மறுபடியும் சிறையில் வைத்துக்கொண்டார்.

லங்கசம்புவினது ஆட்சி

அரசர் 1189-ம் வருஷம் இங்கிலாந்தை விட்டுப் போனபிறகு, லங்கசம்ப் துரைத்தன நிர்வாகத்தை மிகக்

கடுமையாக நடத்தலானர். அவர் அவ்வளவு நீதியாக ஆளுகிறவர் அன்றாகுலும், அவர் நாட்டினது சட்டங்களை எவரது விஷயத்திலும் தாக்ஷண்யம் பாராமல் பிரயோகிக்க லானர். பீஷப்பு, பாரான், அடிமை ஆகிய எல்லோருக்கும் அவர் ஒரேவிதமான நீதியையே வழங்கினர். அவர் மத ஸ்தாபனம், துரைத்தனம் ஆகிய இரண்டு இலாகாக்களின் மேலும் அதிகாரம் செலுத்த யோக்கியதையுடையவராயிருந் தாராதலால், துரஹம் முதலிய இடங்களினது பீஷப்புகளைக் கண்டித்து, அவர்கள் தங்களுடைய கடமைகளை ஒழுங்காக கவனிக்கும்படி செய்தார். அவர் பாரான்களுக்கும் கோபம் உண்டாகும்படி நடந்துகொண்டார். பாப்பின் பிரதிநிதி, ஜஸ்டிசீயர் ஆகிய இரண்டு உன்னத பதவிகளையும் அவர் வகித்தாராதலால், அவர் வெளியில் புறப்படும்போது, ஆயிரம் குதிரை வீரர்கள், சங்கீதம் பாடும் பாணர்கள், பிரபுக்கள், பணியாளர்கள் ஆகிய 1500 ஜனங்களடங்கிய பரிவாரங்களோடு அவர் பவனி புறப்பட்டுப் போய் வந்தது எல்லோருடைய பொறாமையையும் கோபத்தையும் கிளப்பிவிட்டது. இளையன்னர் ஸிஸிலிக்குப் போயிருந்த காலத்தில், 1191-ல் ஜான் இங்கிலாந்திற்கு வந்து, தமது ஊர்களின் அரசராய் துரைத்தனம் நடத்தத் தொடங்கினர். இரண்டாவது ஹென்ரியினது வைப்பாட்டி குமாரரான ஜியாவரை என்பவர் அப்போது யார்க்கில் அரச் பீஷப்பா யிருந்தார். அவரும் ஜானும் ஒன்றுகூடி, பாரான்களைக் கூட்டி, லங்கசம்புவை உத்தியோகத்திலிருந்து விலக்கிவிடவே, அவர் 1191-ம் வருஷம் நார்மண்டிக்குப் போய்ச் சேர்ந்தார். அப்போது ரேளவான் என்னும் இடத்து அரச் பீஷப்பான வள்திர் (of Coutances) என்பவரை ரிச்சறடு ஜஸ்டிசீயராக நியமித்து, தமது உத்தரவுடன் அனுப்பினராதலால்

அவர் வந்து உடனே துரைத்தன நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டார்.

ரிச்சறட் சிறை நீங்கி வருதல்

ஜான் என்பவர் தமது தந்தைக்கு துரோகம் செய்ததன்றி, தமது சகோதரருக்கும் துரோகம் செய்யலானார். ரிச்சறட் சிறைப்பட்டார் என்ற செய்தி இங்கிலாந்திற்கு வந்தவுடன், ஜான் தமது அண்ணன் இறந்து போய் விட்டார் என்ற பொய்யான செய்தியைப் பரப்பிவிட்டு, இங்கிலாந்திற்கு அரசராக முயன்று, பிரான்ஸ் அரசரான பிலிப்போடு சேர்ந்துகொண்டார். ஜான் இங்கிலாந்திற்கு அரசராகும் விஷயத்தில் தாம் அவருக்கு உதவி செய்வதாக அவருக்கு பிலிப்பும் வாக்களிக்கவே, ஜான் நார்மண்டிக்காக பிலிப்பிற்கு வணக்கம் செலுத்தியதன்றி, வேக்ஷின் டேளவர்ஸ் என்ற இடங்களை விட்டுவிட்டார். அப்போது, ரிச்சறடை விடுவிப்பதற்காக அவருடைய ஜஸ்டிசீயர் ஜேரமன் சக்கரவர்த்தியிடம் மன்றாடிக் கொண்டிருந்தார். ஜேரமன் அரசர் கேட்ட பெருந் தொகையை வசூலிப்பதற்காக ஜஸ்டிசீயரும், இளையன்னரும் அரும் பாடுபட்டுக் கொண்டிருந்த சமயத்தில் பிலிப் நார்மண்டியின்மீது படையெடுத்து வந்தாராலும், அதைக் கைப்பற்றமாட்டாமல் திரும்பினார். அப்போது ஜான் சில கூலிப் போர் வீரர்களுடன் இங்கிலாந்தில் அரசருடைய கோட்டைகளில் பலவற்றைக் கைப்பற்றிக்கொண்டார். ஆனால், அவரை வேறு எவரும் ஆதரிக்கவில்லை. அப்போது ரிச்சறடு இளையன்னரையும், ஜஸ்டிசீயரையும் தம்மிடம் வரவழைத்துக் கொண்டாராதலால், அக்காலத்தில், சலீஸ்புரி பிஷப்பான ஹுபர்த் வள்திர் என்பவர் ஜஸ்டிசீயராகவும், கண்டர்புரி பிஷப்பாகவும் நியமிக்கப்

பட்டார். அவர் இரண்டாவது ஹென்ரியிடம் காரியதரிசியாயிருந்து, அபாரமான அநுபவசாலியாயிருந்தவர். அவரே ஜிருசேலத்திலிருந்து சேனைகளைத் திருப்பி நடத்திக் கொணர்ந்தவர். அரசர் மறுபடி இங்கிலாந்திற்கு வருகிற வரையில் அவர், ஜான் தலையெடுக்காமல் சுலபத்தில் அடக்கி வைத்திருந்தார்.

அரசர் சிறையிலிருந்து மீளுதல்

அரசரை விடுவிக்கத் தேவையான பணத்தை மத ஸ்தாபனத்தாரும், பொதுஜனங்களும் சந்தோஷத்தோடு கொடுத்தனர். ஆனால், தொகை அபாரமானதா யிருந்தமையால், அதை வசூலிக்கப் பலவிதமான யுக்திகளால் வரிகள் விதிக்க வேண்டியாயிற்று. முடிவாக நான்கு வித வரிகள் மூலம் அதை வசூலித்தனர். (1) ஒவ்வொரு நைட் நிலத்திற்கும் (Knight's fee) 20 ஷில்லிங்ஸ் (2) நாட்டிலுள்ள ஒவ்வொரு மனிதனும் தனது வருமானத்திலும், அசையும் பொருளிலும் நான்கில் ஒரு பங்கு, (3) ஸிஸ்டர் சியன்ஸ், கிள்பர்த்தையன்ஸ் ஆகியோருடைய கம்பளங்களில் நான்கில் ஒரு பாகம், (4) நிலத்தின்மீது ஒரு ஹைடுக்கு 2 ஷில்லிங்ஸ் வீதம் இன்னொரு வரி. இவ்வாறு நான்கு வரிகள் விதிக்கப்பட்டதில், அவரவர் விற்கக்கூடியவைகளையெல்லாம் விற்றுப் பணத்தைச் செலுத்தினர். மாதா கோவில்களில் இருந்த பூஜைப் பாத்திரங்கள்கூட விற்கப்பட்டன, அல்லது, அடமானம் வைக்கப்பட்டன. அவ்வாறு வசூலிக்கப்பட்ட பெருந் தொகையைச் செலுத்திவிட்டு, வேறு சில நிபந்தனைகளையும் ஒப்புக்கொண்டு ரிச்சரடு அரசர், 1194-ம் வருஷம், மார்ச்சு மீ, இங்கிலாந்திற்குத் திரும்பி வந்து சேர்ந்தார். நான்கு வருஷ

காலம் வெளிநாட்டில் இருந்து, பதினான்கு மாத காலம் சிறைவாசம் செய்துவிட்டு வந்த அரசர் கண்டர்புரிக்குப் போய், தாம் திரும்பி வந்ததைப்பற்றி கடவுளுக்கு நன்றி யறிதல் செலுத்தினர். சிறைப்பட்டிருந்த களங்கம் நீங்குவதற்காக அவர் மறுபடி விண்சேஸ்தரில் முடி சூட்டப் பெற்றார். உடனே அவர் நாட்டிங்ஹாம், திக்கில் என்ற இடங்களைப் பிடித்துக்கொண்டு, ஜானை மிக தயாளமாக மன்னித்து நாட்டைவிட்டுத்துரத்திவிட்டார். அரசர் அதன் பிறகு இரண்டு மாதகாலம் இங்கிலாந்தில் தங்கி, தாம் இல்லாத காலத்தில் தமக்கு துரோகம் செய்ய முனைந்த பிலிப் போடு போர் நடத்தும்பொருட்டு, ஒரு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு ஐரோப்பாவிற்குப் போய் விட்டார். பிறகு அவர் இங்கிலாந்திற்குத் திரும்பியே வரவில்லை.

ஹூபர்த் வள்திர் ஆட்சி

அவர் 1195-முதல் 1198-வரை ஜஸ்டிசியரா யிருந்தார். அவருடைய ஆட்சிகாலம் மிக முக்கியமானது. ஹென்ரி II நிலை நாட்டிய ஆட்சி முறைகளை அவர் பூர்த்தியாக அநுபவத்திற்குக் கொணர்ந்து, அவைகள் நாட்டில் வேரூன்றி நிலைக்கும்படி செய்தார். அவர் அரசருக்காகப் பணம் வசூலித்ததில், குடிமக்கள் தங்களுக்குத் தாங்களே தேர்தல் நடத்தி வரி வசூலித்து நீதிநிர்வாகம் நடத்துவதான ஸ்தல சுய ஆட்சியில் அவர்களுக்குப் பயிற்சி ஏற்படும்படியான காரியங்களைச் செய்தார். ஜில்லாக்களில் ஜூரிகள் மூலம் வரிகளை நிர்ணயிக்கும் விதத்தையும், பிரதிநிதித்துவம் வாய்ந்த நைட்களைக் கொண்டு நீதிநிர்வாகத்திற்கு அனுகூலமான வசதிகளைச் செய்துகொள்வதையும் அவர் காட்டிக்கொடுத்தார். ஷீரப்பு

கள் அவரவர்களுடைய சொந்தக் கவுண்டிகளில் நீதிபதி உத்தியோகம் வகித்தல் கூடாதென்று அவர் தடுத்து, கரணர் (Coroner=Personal noun of our Kurnam) என்னும் புதிய உத்தியோகஸ்தரை ஏற்படுத்தி, அவர் கவுண்டி நியாயஸ்தலத்தில் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றும், ஷீரப்புகள் அதுவரையில் கவனித்த நீதி இலாகாக் கடமைகளை கரணர் செய்யவேண்டுமென்றும் ஏற்பாடு செய்தார். சுற்றுப் பிரயாணம் போகும் அரசருடைய நீதிபதிகள் கிரிமினல், ஸிவில், அரசருடைய உரிமைகள், முதலிய சம்பந்தமான வழக்குகளைப் பரிசிலனை செய்கையில், தேர்தல் மூலமாக நியமிக்கப்பட்ட பொறுப்பாளிகளுடைய(Recognitors=ஜாமீனுயிருப்பவர்) சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் விதி ஏற்படுத்தப்பட்டது. ஷை பொறுப்பாளிகள் அடியில் வருமாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஷயர் முழுதிற்கும் நான்கு நைட்களைப் பொறுக்க வேண்டும். அவர்கள் ஒவ்வொரு ஹண்ட்ரடிலும் இரண்டு பிரபலஸ்தரைப் பொறுக்க வேண்டும். அவ்விருவரும் சட்ட அறிவாளர் (Legal men) என்று கருதப்பட்டனர். அந்தப் பழக்கம், ஜூரிகள் ஏற்படுவதோடு, தேர்தல் முறையையும் சம்பந்தப்படுத்தியதாகையால், அது மிக முக்கியமானது. 1198-ல், பழைய டூம்ஸ்டே நிலக்கணிதிபோல, இன்னொரு புதிய கணிதி நடத்தப்பட்டது. தேர்தல் மூலமாக நியமிக்கப்பட்ட சட்ட அறிவாளிகளும், கமிஷனர்களும் சேர்ந்து அதைத் தயாரித்தனர். அவ்வாறு நிலத்து மிராசுதார்களுடைய ஒழுங்கான ஜாப்தா ஒன்று தயாரிக்கப்பட்டது. கரக்கேட் (Carucate=கரைக்கேற்ற?) என்னும் வரி 100 ஏக்ராவுக்கு 5 ஷில்லிங் வீதம் ஷை பொறுப்பாளிகளினது சாட்சியத்தின் மூலம் விதிக்கப்பட்டது. அவ்வாறு, வரி விதிப்பதிலும், பிரதிநிதித்

வம் சம்பந்தப்படுத்தப்பட்டது. ஆனால் லண்டனில் ஜஸ்டி சியருக்கு உபத்திரவங்கள் ஏற்பட்டன. லங்க்சம்ப் காலத் தில் லண்டன் கோமன, அல்லது, காமன (Communa= ஆள்வோர் அல்லது காப்போர் மனை, அல்லது, இடம்?) என்னும் முனிசிபல் கார்ப்போரேஷனை ஏற்படுத்திக் கொள்ள உரிமை பெற்றது. அதன் தலைமை அதிகாரி மேயர் (Mayor=மே+ஏயர்?) என்று குறிக்கப்பட்டார். பட் டணத்தின் 12 பகுதிகளிலிருந்தும் 12 ஏயராள்தர்மன்கள் ஏற்பட, அவர்களே பட்டணத்தினது நிர்வாகத்தையெல் லாம் நடத்தினர். அவர்கள் வர்த்தக வகுப்பைச் சேர்ந்தவர் கள். அவர்களால் விதிக்கப்பட்ட தலைவரி ஏழை மக்களுக்குக் கடுமையாயிருந்ததாகையால், அவர்கள் அதை ஆக்ஷேபித்த னர். வில்லியம் பிட்ஸ்-ஆஸ்பரத் (William Fitz-Osbert) என்பவர் அவர்களுக்காகப் பரிந்து பேசத் தலைப்பட்டார். அவர் குருசேடுக்குப்போய் வந்தவர்; அவர் தாடி வைத்திருந் ததிலிருந்து, அவர் கிறுக்குப் பிடித்தவர் என்று கருதப்பட் டார். அவர் ஏழைகளைத் தூண்டிவிடவே, கிளர்ச்சி அதி கப்பட்டது. ஜஸ்டிசியர் ஹுபோத் அதில் தலையிட்டு, கிளர்ச்சிக்காரர்களை மிகக் கொடுமையாக நடத்த, தாடிக் காரர் ஒரு மாதாகோவிலிற்குள் போய் ஒளிந்து கொண் டனர். ஜஸ்டிசியர் அந்த மாதாகோவிலுக்கு நெருப்பு வைத்துக் கொளுத்திவிட உத்தரவிட்டார். உடம்பில் காயங்களோடு தாடிக்காரர் வெளியில் ஓடிவர, அவரைப் பிடித்து, ஆடைகளைப் பிடுங்கிக்கொண்டு, அவருடைய தாடியை ஒரு குதிரையின் வாலோடு பிணைத்து, அதைத் தெருத்தெருவாகத் தூக்கி, முடிவாக அவரையும் அவ ருடைய சகாக்கள் பலரையும் தூக்கி விட்டனர். அந்த மிருகத்தனமான நடத்தை மகாஜனங்களுக்கு ஹுபெர்த்

தின்மீது மிகுந்த ஆத்திரத்தையும், பகைமையும், அருவருப்பையும் உண்டாக்கவே, அவர் தமது பதவியை ராஜீநாமாச் செய்துவிட வேண்டியவரானார்; ஆனால் அரசருடைய வற்புறுத்தலுக் கிணங்கி அவர் மறுபடியும் அந்த உத்தியோகத்தை வகித்தார். ஆனால் 1198-ல் இன்னொரு புதிய உபத்திரவம் கிளம்பியது. ஜனங்கள், அரசர் ஜஸ்டிசீயர் ஆகிய இருவரையும் எதிர்த்தனர். ரிச்சறட் அப்போது பிரான்ஸ் அரசரோடு யுத்தம் நடத்திக்கொண்டிருந்தாராதலால், அவர் பணத்தோடு மாத்திரம் நிற்காமல் முன்னூறு நைட் வீரர்களையும் அனுப்பும்படி கேட்டுக்கொண்டார். பிஷப் ஹூ (Hugh of Avalon, Bishop of Lincoln) என்பவர் பியூடல் சேனைகள் இங்கிலாந்திற்குள்ளேதான் உபயோகப்படுத்தப்பட வேண்டுமன்றி, அயல் நாட்டில் உபயோகப்படுத்தப்படக் கூடாதென்று சட்டம் பேசினார். சலிஸ்புரி பிஷப்பும் அவரோடு சேர்ந்துகொண்டார். ஜஸ்டிசீயரால் கூட்டப்பட்ட ஒரு மகாசபையிலும் ஷை பிஷப்புகள் தங்கள் அபிப்பிராயத்தையே வற்புறுத்தி நிறைவேற்றினர். ஆதலால், ஹூபெர்த் வள்திர் தமது பதவியை முடிவாக 1198-ல் ராஜீநாமாச் செய்துவிட்டார். அதன்பிறகு ஜியாவரை பிட்ஸ்-பீட்டர் (Geoffrey Fitz-Peter பீட்டர்=பெருமையுடையவர்?) ஜஸ்டிசீயர் பதவியை வகித்தார். அவரும் இரண்டாவது ஹென்ரியின் கீழிருந்து தேறியவர்.

அரசருடைய கடைசிக்கால ஏற்பாடுகள், மரணம்

அரசர் தமது கடைசிக்காலத்தை பிரான்ஸ் அரசரும், தமது எதிரியுமான பிலிப்போடு யுத்தம் செய்வதில் செலவிட்டார். அவர்பிலிப்பை அடக்கிவிட்டாரானாலும், அவரும், அவருடைய சந்ததியாரும் அடிக்கடி நார்மண்டி முதலில் இடங்

களின்மீது படையெடுத்துவராமல் தடுப்பதற்கு நிரந்தரமான ஓர் ஏற்பாட்டைச் செய்ய நினைத்து, அதற்குச் சுற்றுவட்டத்திலிருந்த தகையரசர்களை ஒரு கூட்டுக் கட்சியாகச் சேர்த்தார். வ்ளாண்டர்ஸ், சாம்பாக்கன என்ற கவுண்டுகளையும், தமது உதவியால் 1198-ல் ஜேரமன் சக்கரவர்த்தி பதவியையடைந்திருந்த ஆதா IV என்னும், தமது மருமானையும், பிரட்டன்களையும் அக் கூட்டுக்கட்சியில் சேர்த்துக் கொண்டார்; நார்மண்டியினது எல்லையில் சேயின் என்ற ஆற்றின் கரைமீது ஒரு பெரிய கோட்டையைக் கட்டி அதற்கு சேத்தியாய கையில்லார்து (Chateau Gaillard = One belonging to the Courts comprised in the side of the allied Kingdoms?) என்று பெயர் கொடுத்தார். அவர் தம்முடைய சுய யூகத்தினும் சிற்ப அநுபவத்தினுமே அதைக்கட்டி முடித்தாராதலால், அது முடிவடைந்தவுடன், "இந்த அழகான ஒரு வருஷத்து துஷ்டக்குழந்தை என்னுடைய குழந்தையல்லவா?" என்று கேட்டாராம். 1199-ல், அவருடைய உபத்திரவங்கள் யாவும் முடிவடைந்துவிட்டனவென்று கருதத் தக்க நிலைமை ஏற்பட்டது. பிரான்ஸ் அரசர் அவருடைய எல்லைக்கு இப்பால் வரமுடியாதபடி செய்யப்பட்டார். அப்போது எவரும் எதிர்பார்க்காத விதமாய் அரசருக்கு மரணம் நேரிட்டது. அவருக்குக் கீழ்ப்பட்ட ஒரு சமஸ்தானதிபதி தம் நிலத்திலிருந்து ஏதோ ஒரு புதையலை எடுத்ததாக அரசருக்குச் செய்தி எட்ட, அது தமக்கே உரியதென்று அரசர் உரிமை கொண்டாடினர். அந்த நில அநுபவதாரர் அதைக் கொடுக்க மறுத்துவிட்டார். அந்தப் புதையல் பிரமாதமான பெறுமானமுடையதென்று சிலர் அரசரிடம் கோட் சொல்லி அவரைத் தூண்டிவிட்டனர். ஒரு சக்கரவர்த்தி மேஜைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து

பரிவாரங்களோடு இருப்பது போல தங்கத்தினால் ஆன சிலைகள் அகப்பட்டதாக வதந்தி உலாவவே, அரசர் அதை அடையும் பொருட்டு, நில அநுபவதாருடையதான சாலஸ் சப்பரால் என்னும் கோட்டையை முற்றுகைபோட்டார். அது பலமான கோட்டையல்ல. ஏழு நைட்களும், எட்டு வேலைக்காரர்களுமே அங்கிருந்தவர்கள். அவர்களுள் ஒருவர் பாணவியைக் கேடயமாக வைத்துக்கொண்டு நாள் முழுதும், அரசருடைய அம்புகளைத் தட்டிவிட்டு கடைசியாக சமயம் பார்த்து ஓர் அம்பைவிட, அது அரசருடைய கழுத்தில் புகுந்துகொண்டது. அதற்கு வைத்தியம் செய்தவனது அநுபவக்குறைவினாலும், அவருடைய ஆத்திர புத்தியினாலும் அங்கு சதை அழுகிப்போகவே, அதுவே அரசருக்கு எமனாக முடிந்தது. அவர் 12 தினங்கள் படுத்திருந்தார். முற்றுகை போடப்பெற்ற கோட்டையிலிருந்தவர்கள் எல்லோரும் தூக்கிலிடப்பட்டனர். தம்மீது அம்பு பாய்ச்சினவனை அரசர் பார்த்து, "உனக்கு நான் எப்போதாவது கெடுதல் செய்ததுண்டா?" என்றார். அவன் தனது தந்தையும், இரண்டு சகோதரர்களும் அரசரால் கொல்லப்பட்டுப் போனதாகவும், தனக்கு அரசர் எவ்வித தண்டனையை வேண்டுமானாலும் விதிக்கலாமென்றும் கூற, அரசர் அவனை மன்னித்து அனுப்பிவிட்டார். அதன் பிறகு அரசர் தமது தாயினது விருப்பத்திற் கிணங்கி, ஜானைத் தமக்கு வார்சுதாரராக வரித்துவிட்டு இறந்துபோனார். அவருடைய சவம் அவருடைய தந்தையினது சமாதிக்குக் காலடிப்பக்கத்தில் அடக்கம் செய்யப்பட்டது. அவருடையவேண்டுகோளின்படி, அவருடைய இருதயம் ரௌவன் என்னும் இடத்திற்குக் கொண்டு போகப்பட்டு அங்கு அடக்கம் செய்யப்பட்டது.

அவருடைய ஆட்சியினது விசேஷம்

அவருடைய சரீர சம்பத்தும், பராக்கிரமமும், அவருக்கு என்று மழியாத புகழையும், கேசரி என்ற பட்டத்தையும், நற்பெயரையும் உண்டாக்கிவைத்தன. அவர் அபாரமான மனோ தைரியமும் சௌரியமும் உடையவராயிருந்தாலும், சிலசமயங்களில் தயாளகுணம், க்ஷமை முதலியவற்றை வகித்தாலும், சுத்தவீரத்தனம், பரிசுத்தமான பெருந்தன்மை முதலிய அம்சங்களில் அவர் மாசற்றவர் என்று நாம் கருத இயலாது; சுயநலம், குரூரம், தற்பெருமை முதலிய இயல்புகள் அவருடைய மேன்பாட்டை ஓரளவு குறைத்தன. ஆனால் அவர் தமது உற்றார் உறவினரோடு வேடிக்கையாகவும் ஆசியமாகவும்பேசிக்கொண்டு சந்தோஷமாயிருக்கும் சுபாயமுடையர். அவருடைய ஆட்சி காலத்தினது முக்கியமான அம்சம், அவர் அந்தக் காலத்தில் பெரும்பாலும் இங்கிலாந்தில் இல்லாமல் போனதனால், அவருடைய பிரதிநிதி இரண்டாவது ஹென்ரியினால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களை வைத்துக்கொண்டே நாட்டைப் பரிபாலித்து, சந்தர்ப்பத்திற்கேற்றபடி அவைகளை அபிவிருத்தி செய்து, சட்டத்தின் ஆட்சி ஊர்ஜிதப்படும்படி செய்ததேயாகும்; அரசர் அவ்வளவு நீண்ட காலம் இல்லாமல் போயும், நாட்டினது நிர்வாகம் அமைதியாக நடந்துகொண்டு போனது, இரண்டாவது ஹென்ரியினது சட்ட திட்டங்களின் சம்பூர்ணத் தன்மையை நன்கு காட்டுகிறது. அதுவன்றி, அரசரில்லாவிட்டாலும், மந்திரிகளே சட்டங்களைக் கொண்டு நாட்டைப் பரிபாலிக்கலாம் என்பதும் தெளிவாயிற்று. பிற்காலத்தில் மந்திரிகள் பொறுப்பாளிகளாயிருந்து துரைத்தனம் நடத்தும் முறை ஏற்பட்டதற்கு இது அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதுபோலாயிற்று. பட்டணங்கள் பெரிதும் அபிவிருத்தியடைந்தன.

பியூடல் பாரான்களுடைய கலகங்கள் அடியோடு ஒய்ந்து போயின. பாரான்கள் அரசருடைய அதிகாரத்தை அடக்க, மதஸ்தாபனத்தாரோடும், பொது ஜனங்களோடும் ஒற்றுமையாக நடப்பதே சரியான மார்க்கமென்று உணரலாயினர். அவ்வாறு லங்க் சம்ப் என்பவருக்கு விரோதமாக எல்லோரும் ஒன்று கூடியதால் அரசப் பிரதிநிதி விலகியது, பாரான்களுக்குக் கண் திறந்து விட்டதுபோ லாயிற்று.

யூதர்கள் என்னப்படும் ஜீவுகள் (Jews)

இவர்கள் பண லேவாதேவி செய்து அசுரவட்டி வாங்குகிறவர்கள். அக்கிரம வட்டி வாங்கக்கூடாதென்று மத ஸ்தாபனத்தார் சட்ட மியற்றியிருந்தனர். அதை மீறி ஜீவுகள் அதிதமான வட்டிகள் வாங்கினுர்களாதலால், ஜனங்கள் அவர்களை வெறுத்தனர். அவர்கள் தனி வகுப்பாராக சில பட்டணங்களில் வசித்தனர். அவர்களுக்கு பிரத்தியேகமான சட்டங்கள் ஏற்பட்டிருந்தன. அரசருடைய நேரான பாதுகாப்பில் அவர்கள் இருந்தனர். அரசர் மகுடம் சூடிய தினத்தன்று, அவர்களுக்குள் பெரியவர்கள் அரசருக்கு வழங்க விசேஷமான காணிக்கைகளைக் கொணர்ந்தனர். அப்பே (Abbey) மடாலயத்தில் எந்த ஜீவையும் விடுவதில்லை. ஏனென்றால், அவர்கள் மாந்திரீக சக்தியினுல் ஏதாவது தீங்கிழைத்து விடுவார்கள் என்ற பயமே அதற்குக் காரணம். உள்ளே இருந்த கூட்டத்தார், அவ்வாறு வந்த பெரியவர்களை வெளியில் பிடித்துத் தள்ளினர்; அரசருடைய சேவகர்கள் அவர்களை ரஸ்தாவில் துரத்த, அங்கிருந்த காலாடிக் கும்பல் அவர்கள் மேல் விழுந்து அவர்களை அடித்து கையிலிருந்த காணிக்கை வஸ்துக்களைப் பிடுங்கிக்கொண்டதன்றி, ஊரிலுள்ள எல்லா ஜீவுகளையும் கொன்றுவிடும்படி அரசரு

டைய கட்டளை பிறந்திருப்பதாக சிலர் கூக்குரலிட்டனர். அதைக் கேட்ட, மற்ற ஜனங்கள், ஜீவுகள் இருந்த இடங்களைக்கொள்ளையடிக்க முனைந்தோடினர். யார்க்கில் எல்லா ஜீவுகளும் தங்கள் சொத்துகளோடு அரசருடைய கோட்டைக்குள் சரண் புகுந்தனர். ஆனால், அவ்விடத்திலும் அவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்படாமல் போகவே, அவர்கள் தங்கள் மனைவி மக்களைக் கொன்றுபோட்டுவிட்டுத் தாங்களும் குத்திக்கொண்டு இறந்துபோயினர். யார்க்கில் அவ்வாறு சுமார் 500 ஜனங்கள் இறந்துபோயினர். ஆனால் ஜஸ்டிசீயர் அவ்வாறு கலகமிழைத்த ஜனங்களைப்பிடித்துக் கடுமையாகத் தண்டித்தார். ரிச்சறட் அரசருடைய அரசாட்சித் தொடக்கத்தில் ஜீவுகளுக்கு அவ்வித அவகேடு நேர்ந்ததானாலும், அவர்களுக்கு அரசர் தக்க பாதுகாப்பை ஏற்படுத்தினார். அவர்களுக்காக ஒரு பிரத்தியேகமான எக்ஸ்செக்கரை அமைத்து அவர்களிடமிருந்து வந்த பணங்களை அதில் வைக்க ஏற்பாடு செய்தார். அவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க சில பிரத்தியேக நீதிபதிகள் ஏற்படுத்தப்பட்டனர். ராபின் ஹூட் (Robin Hood) என்ற பிரபல தேசப்பிரஷ்டர் ரிச்சறட் காலத்திலேதான் இருந்தவர்.

ரிச்சறட் I ஆட்சியில் நிகழ்ந்த முக்கியமான சம்பவக் குறிப்புகள்:—

1189 அரசர் மூன்றுவது குருசேடுக்குப் போகுதல்.

1190 வில்லியம் லங்கசம்ப் ஜஸ்டிசீயரும், பாப்பின் பிரதிநிதியுமாகுதல்.

1191 ஷெயார் விலக்கப்படுதல், கௌடன்ஸஸ் வள்திர் அவருடைய பதவிக்கு நியமிக்கப்படுதல், அக்கர் முற்றுகையில் ரிச்சறடுக்கு வெற்றி.

1192 ஆஸ்திரியா தகையரசர் ரிச்சறடை சிறைப்படுத்தி ஜேரமன் சக்கரவர்த்தியிடம் விற்பது.

1192 டிசம்பர் முதல் 1194 பிப்ரவரி வரையில் ரிச்சறடு சிறைவாசஞ் செய்தல்.

1194 ரிச்சறடு விடுதலை பெற்று இங்கிலாந்திற்கு வருகை.

1193-98 ஹுபர்த் வள்திருவினது துரைத்தன நிர்வாகம்.

1195 வில்லியம் பிட்ஸ்-ஆஸ்பர்த் கலகம்.

1157 ரிச்சறடு கூட்டுக்கட்சி யமைத்தல், எல்லைப் பாதுகாப்புக் கோட்டை கட்டுதல்.

1198 ஹு (Lincoln) வரி கொடுக்க மறுத்தல், வள்திருவின் ராஜிநாமா.

1198 ஜியாவரை பிட்ஸ் பீட்டருடைய துரைத்தன நிர்வாகம், ரிச்சறடின் மரணம்.

அத்தியாயம்-9

ஜான் (1199—1216)

ஜானுடைய ஆரம்பச் செய்கையும், முடிசூடுதலும்

ரிச்சறடு இறந்தவுடன் இரண்டு வார்சுதாரர்கள் இருந்தனர். ஹென்ரி (II) யினுடைய நான்காவது குமாரரான ஜான் ஒருவர்; மூன்றுவது குமாரரான ஜியாவரையினுடைய புதல்வரான அறத்தர் இன்னெருவர். ரிச்சறடு அறத்தரே தமக்குப் பிறகு முடிசூட வேண்டுமென்று முதலில் கருதினர். ஆனல், பிரட்டனி தேசத்தார் அவரை பிரான்ஸ் அரசருடைய வசத்தில் விட்டிருந்தனராதலாலும், அவர் பிலிப்பினது குமாரரோடு பிரான்ஸ் அரசருடைய அரண்மனையில் கல்வி பயின்றுராதலாலும், ரிச்சறடு தமது முதல் விருப்பத்தை மாற்றிக்கொண்டார். அவரது கடைசிக் காலத்தில், அவர் தமது தாயினது அபிப்பிராயத்திற் கிணங்க, ஜானுக்கே பட்டங்கட்ட வேண்டுமென்று, தமது நண்பர்களிடம் கேட்டுக்கொண்டார். அவர்களுடைய தாயான இலீயன்னர் தன் கணவரது விசாலமான இராஜ்யத்தைப் பிரிக்காமல் வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினுளாதலால், அதற்கு ஜானே தகுதியானவரென்று கருதினுள். ரிச்சறடு இறந்த காலத்தில், ஜான் அயல்நாட்டில் இருந்தா

ராதலால், அங்கிருந்த ஹுபெர்த் வள்திரையும், வில்லியம் மா (அ)ரசாளையும் உடனே இங்கிலாந்திற்கு அனுப்பிவிட்டு, உடனே நார்மண்டிக்குப் போய் அதைத் தமது வசப்படுத்திக் கொண்டார். அதற்குள், அறத்தர், அவருடைய தாயான கான்ஸ்டான்ஸ், பிரட்டன்கள் ஆகியோருடைய உதவியைக் கொண்டு, அஞ்சௌ, மெயின், டௌலௌஸ் என்னுமிடங்களைக் கைப்பற்றிக்கொண்டு, அவைகளுக்காக பிரஞ்சு அரசருக்கு பியூடல் வணக்கம் செலுத்தினர். உடனே இளையன்னர் பிரபன்டையன் கூலிப் போர் வீரர்களுடன் சென்று அஞ்சௌவைத் தாக்கி, அக்குயிடெயின் தனக்கு நேரில் சொந்தமானது என்னும் முறைமையில், தனது பியூடல் உரிமையை பிரான்ஸ் அரசர் ஒப்புக்கொள்ளும்படி தந்திரம் செய்தாள். அவ்வாறு தாயும், புதல்வரும் அக்குவிடெயினையும், நார்மண்டியையும் பத்திரப்படுத்திக் கொண்டு, மே மாதம் இங்கிலாந்திற்கு வந்து சேர்ந்தனர். இங்கிலாந்தில் அறத்தரை அரசராக்க வேண்டுமென்ற விருப்பம் எவருக்கும் உண்டாகவில்லை. ஹுபெர்த் வள்திரு, வில்லியம் மார்ஷால், ஜியாவரை பிட்ஸ் - பீட்டர் ஆகிய மூவரும் முக்கியமான பாரான்க ளெல்லோரையும் நார்த்தாம்ப்டன் என்ற இடத்திற்கு வரவழைத்து, பல நன்மைகளைச் செய்வதாக வாக்களித்து, அந்த மகா சபையார், ஜானை அரசராகத் தேர்ந்தெடுக்கும்படி செய்தனர். அதன் பிறகு அஸென்ஷன் தினத்தன்று ஜான் அரச் பிஷப்பினல், வெஸ்ட் மின்ஸ்டரில் முடிசூட்டப் பெற்றார். அப்போது, அரச் பிஷப், ஜானுக்கு ஒரு முக்கியமான விஷயத்தைத் தெரிவித்தார்; இங்கிலாந்தினது அரச பதவி குடிமக்களுடைய தேர்தலிற்கு உள்பட்டதென்றும், ஜான் நியாயமான வார்சுதார ரன்றாஞலும், அரசவம்சத்தாருள் அவர் திடசாலியா யிருப்பதுபற்றி மகாஜனங்

கள் அவரைத் தேர்ந்தெடுத்தார்க ளென்றும் அரசருடைய மனதில் பதியத்தக்க விதமாகக் கூறினர். அவர் முடிசூடிய காலத்தில், பிட்ஸ் - பீட்டர் ஜஸ்டிசியரா யிருந்தார்; அவர் மாண்டவில்லிக்கு பதிலாக எஸ்ஸெக்ஸ் ஏயராள் பதவியை வகித்தார். வில்லியம் மார்ஷாள் ஸ்ட்ரீகையள் (Striguil) என்றும், பெம்ப்ரோக் ஏயராள் என்றும் குறிக்கப்பட்டார்.

ஜானுடைய குணாதிசயங்கள்

ஜான் 1167-ம் வருஷம் பிறந்து, தமது 32-வது வயதில் பட்டத்திற்கு வந்தார். அவருடைய குணங்களை எடுத்து விளக்குவது சுலபமான காரியமல்ல. அவர் ஒழுங்கா யமைந்த அழகான சரீரம் வாய்ந்தவர்; அவரவருக்குத் தக்க படி நடந்துகொள்ளக் கூடியவர்; வேண்டுமென்று எதையே னும் செய்ய முயன்றால் புத்திசாலித்தனமாகச் செய்யக்கூடிய வர்; போர் நடத்துவதிலோ, இராஜரீக தந்திரத்திலோ இளப்ப மானவ ரன்று. அவர் நன்றாகக் கல்வி பயிற்றப்பட் டிருந்த தன்றி, ஏராளமான புஸ்தகங்களைப் படித்துமிருந்தார். அத் தனை நல்ல அம்சங்கள் அவரிடம் பொருந்தி இருந்தனவாயினு ஆம்,அவை அவருடைய ஆட்சி முற்றிலும் கெடுதலாக முடிந் ததான இளப்பத்தைப் பன்மடங்கு பெருக்கிக் காட்டுகின் றன. அவரிடம், நாணயம், அல்லது, ஒருவிதமான நடத்தை யொழுங்கு என்பது அடியோடு இல்லாமல் போனதே அவ ருடைய அழிவிற்கு முக்கியமான காரணம். அவர் ஒரு காரி யத்தைச் செய்ய விரும்பினால், பொய் மெய் பார்க்கமாட் டார், தமது கடமையை கவனிக்கமாட்டார், இரக்கமென் பதே கொள்ளமாட்டார்; மோசம், புரட்டு, கொலை முதலிய எதற்கும் பின் வாங்குகிறவரன்று. எது போனாலும், எது வந்தாலும், அக்கரையில்லை; அவருக்கு அவருடைய துரா

சைகள் பூர்த்தியடைந்துவிட வேண்டும். அவர் மிக கேவலமான ஒழுக்கமுடைய மனிதராதலால், மற்றவர்களும் தம்மைப்போலவே இருப்பார்களென்று அவர் கருதினர். பாவகரமான காரியங்களைச் செய்தல், அற்ப புத்தி, கொடூர நடத்தை முதலியவை அவரிடம் குடிகொண்டிருந்தன. அவரிடம் வீரத்தனமுமில்லை; நல்லறிவுமில்லை. அவர் இளம்பிராயத்தினரா யிருந்த காலத்தில், ஹென்ரி II அயர்லாந்திலுள்ள அரசர்கள், சமஸ்தானதிபதிகள் ஆகியோருடைய வணக்கத்தைப் பெற்று வரும்படி அனுப்பிய காலத்தில், அவரும் அவருடைய யௌவனத் தோழர்களும் மிக இழிவாக நடந்து, தம்மைப் பணிய வந்தவர்களுடைய நீண்ட தலைமயிரைப் பிய்த்தும், தாடிகளைப் பிடித்து உலுக்கியும் சிரித்து விளையாடினார்கள். அதைக் கேள்வியுற்ற தந்தை உடனே அவரைத் திருப்பி அழைத்துக்கொண்டார். அவர் அவருடைய தந்தையினது விஷயத்திலும் தமயனை ரிச்சறடினது விஷயத்திலும் எப்படி துரோகமாய் நடந்துகொண்டா ரென்பதை நாம் ஏற்கனவே தெரிந்துகொண்டோம். அந்தப் பரம்பரையாருடைய ஆதிகால துர்க்குணங்கள் யாவும் ஜானிடம் சம்பூர்ணமா யமைந்திருந்தன. அவருக்குப் பலவகையான அநுகூலங்கள் ஏற்பட்டிருந்தனவாணும், அத்தனையும் பயன்படாமல் போகவும், மேன்மேலும் துன்பங்களும் அழிவுகளுமே வரும்படியாகவும் அவர் செய்துகொண்டார். அவருடைய ஆட்சியை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முதலாவது, அவர் பிரான்ஸ் அரசரான பிலிப்போடு யுத்தம் செய்து நார்மண்டியை இழந்தது; இரண்டாவது, மதஸ்தாபனத்தாரோடு சச்சரவு நடத்தி முடிவில் பாப்பைப் பணிந்து, அவருக்குக் கீழ்ப்பட்டவரானது; மூன்றாவது, பாரான்களோடும், குடிமக்க

ளோடும் பெருத்த போராட்டம் நடத்தி, முடிவில் மாக்கனா சரத்தாவை ஏற்றுக்கொள்ளும்படியான நிலைமையைத் தாமே உண்டாக்கிக் கொண்டது; இத்தனையாலும் அவருடைய பூர்வீகர்களுக்கு ஐரோப்பாக் கண்டத்தில் சொந்தமாயிருந்த விசாலமான நாடுகளை இழந்ததன்றி, இங்கிலாந்தையும் இழந்துவிடப் பார்த்தார். நல்ல சமயத்தில் அவரே இறந்து போனதனால், அது மிஞ்சியது. ஜானுடைய உதவியற்ற கபடமும், தந்திரமும், பிலிப்பினுடைய அபார வல்லமைக்கு முன் பயனற்றதாயின; இங்கிலாந்தினது மகா ஜனங்கள் எல்லோரும் ஒன்றுகூடி துன்மார்க்கமான ஆட்சி தங்களுக்கு உதவாதென்று தீர்மானித்திருந்த நிலைமையில் ஜானுடைய இழிவான சாகசங்கள் பயன்படாமல் அவருக்கே கேட்டை விளைவித்தன.

ஜானுடைய இரண்டாவது விவாகம்

அவர் தமது முதல் மனைவியான ஹாத்விசாவை (Hadwisa) விலக்கிவிட்டு, இசைப்பிள்ளா (Isabella)வை மணந்து கொண்டதிலிருந்து விபரீதமான பலன்கள் உண்டாகி விட்டன. ஹாத்விசா என்பவள், க்ளௌசேஸ்தர் ஏயராள் ராபர்த்தினுடைய பேர்த்தி. ஷை ராபர்த்தே ஸ்டீவனுக்கு விரோதமாகவும், அஞ்சௌ மாத்தில்தாவுக்கு அநுகூலமாகவும் போர் நடத்தியவர். அவரைச் சேர்ந்த செல்வாக்குடைய பந்துக்கள் ஏராளமாயிருந்தனர்; ஹாத்விசாவை விலக்கினது, அவர்களுடைய பகைமையை விலைக்கு வாங்கினதுபோல முடிந்தது. அதுவன்றி, ஹாத்விசாவை மணந்ததில் அவளுடைய விசாலமான நாடுகள் ஜானுக்கு வந்துசேர்ந்திருந்தன. அவளை விலக்கியவர் கிரமப்படி அவளுடைய நாடுகளைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டியது

அவர்செய்யவேண்டிய முக்கியமானகாரியம். க்ளௌசேஸ்தர் கவுண்டியை மாத்திரம் கொடுத்துவிட்டு,மற்றவைகளை அவரே எடுத்துக்கொண்டார். அதனாலும் அரசருக்கு அவளுடைய உறவினர்களது கொடிய பகைமை ஏற்பட்டது. இதற்குத் துணையாக, அவர் இசைப்பிள்ளாவை மணந்துகொண்டதால் மற்றும் பலருடைய பகைமை வந்துசேர்ந்தது. இசைப்பிள்ளாவுக்கும், லா மாற்சே (La Marche) என்னும் நாட்டுக் கவுண்டினது புத்திரர் ஹூ (Hugh) என்பவருக்கும் ஏற்கனவே கலியாண நிச்சய்தார்த்தம் நடத்தப்பட்டிருந்தது. அவர் குவை (of Lusignan of Jerusalem fame)க்கு மருமான். அதோடு, அவர்கள் பாய்ட்டேள 'நாட்டில் பெயர்போன துஷ்டர்கள். அவர்களுடைய பகைமை இலேசில் போகக் கூடியதல்ல. அந்த சமயத்தில் ஜான் இன்னொரு மூடக் காரியத்தையும் செய்துவிட்டார். அதாவது, அதே குடும்பத்தவருள் இன்னொருவருக்குச் சொந்தமான கோட்டையையும் ஜான் பிடித்துக்கொண்டார்.

பாய்ட்டேள பாரான்களோடு சச்சரவு

1202-ம் வருஷத்தில், பாய்ட்டேள பாரான்களோடு குவை யென்பவர் பிலிப்பினிடம் போய் முறையிட, பிலிப் அதையே வியாஜமாக வைத்துக்கொண்டு உடனே ஜானுக்குக் கெடுதல் செய்ய ஆரம்பித்துவிட்டார். பிரான்ஸ் நீதிஸ்தலத்தில் வந்து ஆஜராய், அவர்மீது வந்திருக்கும் முறையீடுகளுக்கு சமாதானம் சொல்லும்படி ஜானுக்கு பிரான்ஸ் அரசர் உத்தரவு அனுப்ப, அவர் வராமல் இருந்துவிட்டார். உடனே பிரான்ஸ் அரசர் ஜானுக்கு பிரான்ஸில் இருந்த பியூடல் நாடுகளை யெல்லாம் பறிமுதல் செய்துவிட்டார். அதுவன்றி, பிலிப், அறத்தரையும் சேர்த்துக்கொண்டு,

நார்மண்டியின்மீது படையெடுத்துச் செல்லத்தொடங்கினர். அப்போது ஜானுடைய தாயான இளையன்னர் பாய்ட்டௌ பாரான்களது உபத்திரவத்தைப் பொறுமல் மிரபியா (Mirabeau) என்னும் கோட்டைக்குப் போயிருந்தாள். அறத்தர் தமது சேனையுடன் சென்று தமது பாட்டியான இளையன்னர் இருந்த கோட்டையை வளைத்துக்கொண்டு முற்றுகை போடலானர். தமது தாயினது அபாய நிலைமையைத் தெரிந்துகொண்ட ஜான், அறத்தர் வெற்றியடைய இருந்த நல்ல தருணத்தில், தமது சேனையுடன் திடீரென்று வந்து புகுந்து, அறத்தருடைய சேனையை முறியடித்து நாசமாக்கியதன்றி, அறத்தரையும், அவருடைய சகோதரியான இளையன்னரையும் கைதிகளாக்கினர். இளையன்னர் அவளுடைய ஆயுட்காலம் முடிய, அதாவது, நாற்பது வருஷ காலம், சிறையிலேயே இருந்து உயிர் துறந்தாள். ஜான், அறத்தரை முதலில் வலயஸ் (Falais) என்ற இடத்தில் சிறை வைத்தார்; பிறகு ரௌவனில் சிறைவைக்க, அவ்விடத்தில் 1203-ம் வருஷம் எப்ரல் மாதம் அறத்தர் இறந்து போனர். ஜானே தமது கையால் அவரைக் கொலை செய்ததாகச் சொல்லப்படுகிறது.

ஜான் நார்மண்டியை இழப்பது

அறத்தர் இறந்துபோனர் என்ற செய்தி எட்டவே, பிலிப் கோபமடைந்து, ஒரு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு நார்மண்டிக்குள் நுழைய, பட்டணங்கள் ஒன்றன்பின் னென்ருக மிக துரிதத்தில் அவருடைய வசப்பட்டன. சேத்தியாய கையிலார்து என்னும் கோட்டை பிடிபடாமலிருந்த வரையில், ரௌவனைக் கைப்பற்றுவது கூடாததாயிருந்தது. ஆகவே, அந்தக் கோட்டையை முற்றுகை போடு

வதிலேயே வெற்றியோ தோல்வியோ அடங்கியிருந்தது. எனவே, பிலிப் அதை முற்றுகை போட்டார். ராஜர்-தே-லாஸி என்பவர் அதற்குள்ளிருந்து பாதுகாத்தார். அந்தசமயத்தில், ஜான் பெரிய சேனையைக் கொணர்ந்திருந்தால், பிலிப் தோற்று ஓடியிருப்பார்; ஆனால் என்ன காரணத்தினாலோ, அவர் அவ்வளவு ஊக்கத்தோடு முயற்சிகள் செய்யவில்லை. இரவில் எதிரிகளைத் தாக்க, அவரும், பேம்புரோக்கும் செய்த பிரயத்தனமும் பலிக்கவில்லை. ஆகவே, ஜான் மனத்தளர்வடைந்து எவ்வித உத்தேசமுமின்றி அங்குமிங்கும் போவதும் வருவதுமாயிருந்து பொழுதைப் போக்க, 1203 ஆகஸ்ட் முதல் 1204 மார்ச் வரையில் அதைப் பாதுகாத்த ராஜர்-தே-லாஸி தளர்ந்துபோகவே, அது பிலிப்பினது வசப்பட்டது. அதற்குப் பிறகு ஏப்ரல் மாதம், முதல் தேதி, இலியன்னர் இறந்து போனாள். அவள் போனதோடு, ஐரோப்பாக் கண்டத்திலிருந்த தமது நாடுகளை அதற்குமேல் தாம் வைத்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை ஜானுக்கே போய்விட்டது. அவளுடைய அநுபவம், உழைப்புக் குணம், அபாரமான இராஜரீக தந்திரம், அஞ்சவன் குடும்பத்தாரது விஷயத்தில் அவள் கொண்டிருந்த உண்மையான பற்றுதல், அவளுடைய குமாரர்களது ஆட்சியில் அவள் காட்டிய திறமை ஆகிய சிறப்புகள், ஹென்ரி II, ரிச்சர்ட் I ஆகியோரது காலத்தில் பிராபல்யமாயிருந்தவர்களுள் அவளும் ஒருத்தி என்று கருதச் செய்கின்றன. நார்மண்டி போனதனால், சானல் தீவுகளைத் தவிர, மற்ற நாடுகள் எல்லாம் ஜானுக்கு இல்லாமல் போய்விட்டன. அஞ்சௌ, மெயின், தௌரெயின் ஆகியவை போய்விட்டன. வெற்றிகொண்ட வில்லியம், அஞ்சௌ குடும்பத்தார் ஆகியோருக்குப் பரம்பரையாயிருந்து வந்த நாடுகளும் போய்விட்டன. இலியன்னருக்கு

ஸ்ரீதனமாகக் கிடைத்ததான சேரந்த (Charente) என்பு தற்குத் தெற்கு நாடுகள் மாத்திரம் மிஞ்சி நின்றன. 1206-ம் வருஷம் ஜான் பிலிப்போடு மானக்கேடான ஓர் உடன் படிக்கை செய்துகொண்டு, தமது வட நாடுகளை யெல்லாம் தாம் இழந்துவிட்டதாக, தாமே ஒப்புக்கொண்டார்.

நார்மண்டி போனதனுல் ஏற்பட்ட பலாபலன்கள்

நார்மண்டி போனது இங்கிலாந்துக்கு ஒரு விதத்தில், விலை மதிப்பற்ற நன்மையென்றே கருதவேண்டும். அதன் பிறகு இங்கிலாந்தரசர்கள் தங்களை இங்கிலாந்தினது அரச ராகவே கருதின ரன்றி, பிரான்ஸினது தகையரசர்க ளென்று கருதவில்லை. நார்மான் பாரான்கள் இங்கிலீஷ் குடிமக்களுடைய பணத்தைச் செலவிட்டுக்கொண்டு பிரான் ஸில் யுத்தம் நடத்திக்கொண் டிருந்ததும் சாத்தியமற்ற தாயிற்று. "என்னை இங்கிலீஷ்காரன் என்று நினைத்துக் கொண்டாயா?" என்று கூறி நார்மன்கள் இங்கிலீஷ்காரரை இளக்கரப் படுத்துவதும் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது. சுமார் 140 வருஷ காலமாக நார்மன்களும், இங் கிலீஷ்காரரும் ஒன்றுயிருந்ததனுல், ஒருவரிடத் தொருவர் பெண் கொண்டு ஒன்றுபட்டுப் போயினராதலால், நார்ம னுக்கும் இங்கிலீஷ்காரருக்கும் வேறுபாடு தெரியாமல் போய்விட்டது. இங்கிலாந்து, நார்மண்டி ஆகிய இரண் டிடங்களிலும் நிலங்களை வைத்திருந்த பாரான்கள், அது வரையில் சமயத்திற் கேற்றபடி இரண்டு அரசர்களுள் ஒரு வரை எதிர்த்தும், ஒருவருடன் நட்பாயும் இருந்துவந்தனர். அதற்கு இடம் இல்லாமல் போய்விட்ட தாகையால், இங்கி லாந்திலிருந்த நார்மன் பாரான்கள் இங்கிலாந்துக் குடிமக்க ளுடைய நன்மையிலேயே தங்கள் நன்மைகளும் அடங்கி

யிருந்தனவென்று உணர்ந்தனர். நாம் இங்கிலாந்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்ச்சி ஏற்படத் தொடங்கியது. நீதிஸ்தலங்களிலும், உயர்ந்த வகுப்பாராலும் பிரஞ்சு பாஷையே பேசப்பட்டதானாலும், அன்னிய நாட்டார்மீது பகைமையும், அன்னிய நாட்டார் தம் நாட்டு விஷயங்களில் தலையிடுவதைப் பற்றி வெறுப்பும், இங்கிலாந்தில் எல்லோரும் ஐக்கியப்பட வேண்டுமென்னும் வேட்கையும் ஏற்படலாயின.

ஜானுக்கும் பாப்பிற்கும் தகராறு

இளையன்னர் இறந்ததோடு ஐரோப்பாக் கண்டத்தோடிருந்த சம்பந்தமும் சச்சரவுகளும் ஒருவிதமாக முடிவுற்றன. அதற்கு அடுத்த வருஷமாகிய 1205-ல், கண்டர்புரி அரச் பீஷப்பும், அரசருடைய சான்சிலருமான ஹூபெரத் வள்திர் இறந்துபோகவே, அதனாலும் நாட்டில் விபரீதமான நிலைமை ஏற்பட்டது. இரண்டாவது ஹென்ரியினால் நிலைநாட்டப்பட்ட ஆட்சி முறைமை சீர்குலைந்து போவதற்கும், அரசருக்கும் பாப்பிற்கும் விதண்டா வாதம் உண்டாவதற்கும் அது இடம் கொடுத்தது. ஹூபெரத் இறந்தவுடன், கண்டர்புரியில் கீழ்ப் பதவிகளில் இருந்த பாதிரிமார்கள் தங்களுக்குள் இரகஸியத்தில் ஒரு கூட்டம் கூட்டி, அரச் பீஷப்பிற்கு அடுத்த பதவியை வகித்திருந்த இரண்டாவது பெரியாரான ரெஜினல்ட் (Reginald) என்பவரை அரச் பீஷப்பாக வரித்து, பாப்பினிடம் பாலையத்தைப் பெறும் பொருட்டு அவரை இரகஸியமாக ரோமுக்கு அனுப்பிவிட்டனர். அதற்குள் அந்தச் செய்தி, இங்கிலாந்திலிருந்த பீஷப்புகளுக்குத் தெரியவே, அவர்கள் சிலரை ரோமுக்கு அனுப்பி, ரெஜினல்டினது தேர்தலை ஆட்சேபிக்கச் செய்தனர். அப்போது ஜான் மத குருமார்களைக்கூட்டி, தமது நண்

பரும், நார்விச் பிஷப்புமான ஜான் தே கிரே (John de Gray) என்பவரைத் தேர்ந்தெடுக்கும்படி வற்புறுத்தி, 12 துறவிகளை ரோமுக்கு அனுப்பிவைத்தார். பிஷப்புகளோ தாங்களே அரச்பிஷப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கூறி உறுதியாக ஆட்சேபித்தனர். முடிவாக எல்லோரும் பாப்பினிடம் முறையிட்டுக் கொண்டனர். அப்போதிருந்த பாப்பினது பெயர் இன்னசேயன்ட் III (Innocent III = இன்னசேயன்ட்=குற்றம் செய்யாதவன் ?) என்பது. அவர் மிக திறமைசாலி. அவர் மூன்று தரத்தாருடைய நியமனங்களையும் நிராகரித்துவிட்டார். அரசருடைய லைசென்ஸ் இல்லாமல் இரகசியத்தில் ரெஜினல்டினது தேர்தல் நடத்தப்பட்டது பற்றி, அந்தத் தேர்தலை பாப்பு தள்ளுபடி செய்தார். அரசரால் அனுப்பப்பட்ட பாதிரிமார்களிடம் பாப்பு, ஸ்டீவன் லங்கத்தான் (Stephen Langton) என்பவரைத் தேர்ந்தெடுக்கும்படி கூறினர். அவர் இங்கிலீஷ்காரர்; நல்ல படிப்பாளி; கார்தினள் (Cardinal) பதவியிலிருந்தவர்; அவருக்கு 1207-ம் வருஷம், ஜூன் மாதம், 17-ம் தேதி, பாப்பே தீக்ஷை நடத்தி வைத்துவிட்டார். தம்மை அசட்டை செய்து பாப்பு அம்மாதிரி சுயேச்சையாய் ஒருவரை நியமித்தது ஜானுடைய ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டதாகையால், அவர் ஸ்டீவன் லங்கத்தானை அரச் பிஷப்பாய் அங்கீகரிக்க மறுத்துவிட்டார். உடனே பாப்பு 1208-ம் வருஷம், மார்ச் மாதம், 23-ம்உ, இங்கிலாந்தின்மீது மறியல் (Interdict) உத்தரவு பிறப்பித்து விட்டார். பாப்பு அந்த உத்தரவைப் பிறப்பித்தால், நாடு முழுதும் பேய் பிசாசுகளிடம் ஒப்புவிக்கப்பட்டுப்போனது போல ஜனங்கள் கருதினர். மாதாகோவில்கள் யாவும் மூடப்பட்டுவிட்டன. அவ்விடத்தில் நடத்தப்பட்ட சுபதினக் கொண்டாட்டங்கள் நின்றுபோயின.

ஞானஸ்நானம் (சங்கல்ப புண்ணியா வாசனம்) இரகசிய மாகவே நடத்தப்படவேண்டும். மாதா கோவிலில் இருந்த சமாதிக் கட்டம் மூடப்பட்டுப் போனதாகையால், சவங்கள் வயல், வாய்க்கால் முதலிய இதர இடங்களில் உத்தரகிரியை கள், மந்திரம் முதலியவின்றிப் புதைக்கப்பட்டன. அந்த உத்தரவை நிறைவேற்றிய மதகுருமார்களுடைய நிலங்களை யெல்லாம் அரசர் பறிமுதல் செய்து, அவர்களுக்கு சட்டப் பாதுகாப்பு இல்லையென்று கூறிவிட்டார். ஒரு வேல்ஸ்காரன் ஒரு பாதிரியைக் கொன்றுவிடவே, அப்போது அரசர், "அவன் என்னுடைய எதிரியைத்தானே கொன்முன்; அக் கரை இல்லை" என்று கூறினாராம். அந்த நிலைமை சுமார் இரண்டு வருஷ காலம் நீடித்திருக்க, பாப்பு 1209-ம் வரு ஷம் இன்னொரு கொடிய பாணத்தைப் பிரயோகித்தார். அதாவது, அரசரை கிறிஸ்து மதத்திற்குப் புறம்பானவர் என்று மதப்பிரஷ்ட ராக்கிவிட்டார். ஜான் அரசர் உடனே எல்லா பிஷப்புகளுடைய நிலங்களையும் பறிமுதல் செய்து, அவர்களில் பெரும்பாலோரை நாட்டைவிட்டுத் துரத்தி விட்டார்; அதுவன்றி, பொதுவாகவே நாட்டில் வேறு கொடுங்கோன்மைகளையும் அவர் இழைக்கத் தொடங்கினர். ஜீவுகளை (Jews) வதைத்து அவர்களுடைய பொருள்களை அபகரித்தார்; மதகுருமார்களுடைய சொத்துகளையெல்லாம் அபகரித்துக் கொண்டார்; பல கோட்டைகளைப் பிடித்துக் கொண்டு, பல பெரிய மனிதர்களையும், அவர்களுடைய குடும் பத்தாரையும் மிக அநாகரிகமாக நடத்தினர்; ஸ்காட்லாந் தரசர் தம்மைப் பணியவும், தமக்கு 10,000 பவுன் கொடுக் கவும் கட்டாயப்படுத்தப் பட்டார். வேல்ஸ் நாட்டு (இல்)லி வெலியனும் (Llewelyn) தம்மைப் பணியும்படி ஜான் வற் புறுத்தினர். 1210-ம் வருஷம் அவர் அயர்லாந்திற்குப்போய்

இங்கிலீஷ்காரர் வசத்திலிருந்த பகுதியை (Pale) கவுண்டிகளாகப் பிரித்து, பாரான்களுக்குள் சட்ட ஒழுங்கை நிலை நாட்டி, அவர்கள் இங்கிலாந்தினது சட்டத்தை அநுஷ்டிக்கச் செய்தார். அதுவரையில் பாப்பு இன்னுசேயன்ட் பொறுத்துப் பார்த்து, ஜான் பிடிவாதமா யிருந்ததைக் கண்டு, 1211-ம் வருஷம் பண்டேள்ப் (Pandulf) என்னும் பிரதிநிதியை அனுப்பி, தாம் அரசரை சிம்மாசனத்திலிருந்து விலக்கப் போவதாக எச்சரித்தார். அதற்கும் ஜான் அசையவில்லை. துஷ்ட அரசர்கள், கிறிஸ்தவர்களல்லாத அரசர்கள் ஆகியோரை விலக்கும் அதிகாரம் பாப்புகளுக்கு இருப்பதாக அவர்கள் நெடுங்காலமாய் உரிமை பாராட்டிக் கொண்டிருந்தனர். பாப்பு இன்னுசேயன்ட் என்பவர் அதிக சாமர்த்தியமும், செல்வாக்கும், அகம்பாவமும் வாய்ந்தவர். அவர் ஜானை அரச பதவியி லிருந்து விலக்கியிருப்பதாகவும், தமது அதிகாரத்திற்கு உட்பட்ட கிறிஸ்தவர் எவரும் ஜானுக்குக் கீழ்ப்படிதல் கூடாதென்றும் உத்தரவிட்டு, அந்த உத்தரவை நிறைவேற்றி வைக்கும்படி, ஜானுடைய கொடிய பகைவரும், பிரான்ஸ் அரசருமான பிலிப்பை ஏவினர். அப்போது ஜானுடைய தைரியம் தளரவாரம்பித்தது. அதற்கு முன், பீட்டர் (of Wakefield) என்பவர், "ஜான் தமது அரச பதவியை மிக சீக்கிரத்தில் இழந்துவிடப் போகிறார்" என்று தீர்க்க தரிசனம் கூறியிருந்தாராதலால், காரியம் அதுபோல நடக்கவே, ஜனங்களுடைய மனதில் பெரிய அச்சம் தோன்றி விட்டது. தாம் இங்கிலாந்தில் எவருடைய ஆதரவுமின்றி நிர்க்கதியா யிருந்ததை ஜான் அப்போதே உணர்ந்தார். மத குருமார்கள் விரோதிகளாய்விட்டனர்; ஜனங்கள் ஒறுக்கப் பட் டிருந்தனர்; பாரான்களில் பெரும்பாலோர் அவருக்கு எதிரிகளாயிருந்தனர். பிரான்ஸ் தேசத்து பிலிப்போ மிகக்

கொடிய பகைவராயிருந்தார். அவருடைய கப்பல் படைகள் தம்மி(Damme)என்னும் துறைமுகத்தில் வந்து படையெடுப்புக்கு ஆயத்தமாயிருந்தன. ஆகவே, தாம் பாப்பைத் தமது நண்பராக்கிக் கொண்டாலன்றி, தாம் தமது இராஜ்யத்தை இழப்பது நிச்சயமென்று ஜான் உணர்ந்து, எதை இழந்தாகிலும், அவருடைய சிநேகத்தைப்பெறத் தீர்மானித்து, அவர் தெரிவித்த நிபந்தனைகளுக்கெல்லாம் இணங்கி, 1213-ம் வருஷம், மேயீ, 15உ, தோவருக் கருகிலுள்ள ஈவள் (Ewell) என்ற இடத்தில் பாப்பை வணங்கி, தமது இராஜ்யத்தை பாப்பினால் கொடுக்கப்பட்ட பயப்பாக(Fief)ப் பெற்றுக்கொண்டு, அவருக்கு வருஷம்ஒன்றுக்கு 1000 மார்க்ஸ்(இங்கிலாந்திற்கு 700, அயர்லாந்திற்கு 300,) வீதம் கப்பம் கட்டுவதாக இணங்கினர். அதனால் அவர் பாப்பிற்குக் கீழ்ப்பட்ட குடியானவர் ஆனர். அவ்வாறு முடிவில் வெற்றி பெற்ற பாப்பு, அதற்கு மேல் எவ்வித நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று பிலிப்புக்கு ஸ்ரீமுகம் அனுப்பிவிட்டார். அதைப் பெற்ற பிளிப் தமது கவனத்தை ஃப்லாண்டர்ஸ் மீது செலுத்தினர். அதுவே சமயமென்று கண்ட ஜான் பிரான்ஸ் அரசர்மீது கத்தி தீட்ட ஆரம்பித்தார். தமது ஒன்றுவிட்ட சகோதரரும், சலீஸ்புரி ஏயராளுமான வில்லியம் லங்கஸ்வரடு (William Longsword) என்பவரை ஏவ, அவர் இங்கிலீஷ் கப்பற்படைகளோடு சென்று, தம்மி என்ற இடத்தில் இருந்த பிரான்ஸ் தேசத்துக் கப்பற்படையை நாசப்படுத்தி ஒழித்துவிட்டு வந்து சேர்ந்தார். ஜான் தமது அபாயம் நீங்கிப்போய்விட்டதைக் கண்டு மனேதிட மடைந்து, பிரான்ஸிற்குள் படையெடுத்துப் போகவேண்டுமென்று திட்டம்போடத் தொடங்கினர். ஆனல் பாரான்கள், மதப் பிரஷ்டமானவருக்குக் கீழே இருந்து சேவை செய்யமறுக்க,

அவர் உடனே ஸ்டீவன் லங்கத்தானை வரவழைத்து மதப் பிரஷ்ட உத்தரவை நீக்கச்செய்தார். அதற்கு மேலும் பாரான்கள் போருக்குத் தயாராக மறுத்துவிட்டனர். அயல் நாட்டுப் போர்களுக்குத் தங்களை உபயோகப்படுத்திக் கொள்ள அரசருக்கு உரிமையில்லை யென்று வடநாட்டுப் பாரான்கள் அதற்கு சமாதானம் கூறினர். வில்லியம் லங்கத்தான், அவர்களை விசாரணைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், அவர்களுக்கு சமதையான பீர்களை (வீர்களை, அல்லது, வீரர்களை)க் கொண்டு அதை நடத்தவேண்டுமென்றும் கோரினர். ஜியாவரை பிட்ஸ் பீட்டர் மத்தியஸ்தமா யிருந்து, 1213-ம் வருஷம், ஆகஸ்ட் மாதம், ஸெயின்ட் ஆல்பன்ஸ் என்ற இடத்தில் ஒரு மகாசபை கூட்டினர். அதற்குப் பெரிய சீமான்கள் மாத்திரமன்றி, ஒவ்வொரு மேனரிலிருந்தும் றேயவும், நான்கு வில்லியன்களும் வந்து கூடினர். அங்கு நடந்த வாக்குவாதங்களின் பயனாய் ஜியாவரை பிட்ஸ் - பீட்டர், ஹென்ரி I வெளியிட்ட பட்டயத்தின்படி துரைத்தன நிர்வாகத்தை நடத்துவதாக ஒப்புக்கொண்டதன்றி, ஆக்ஸ்போர்ட் என்னுமிடத்தில் ஒரு மந்திராலோசனை சபையைக் கூட்டவேண்டுமென்றும், அப்போது பியூடல் குடியானவர்களோடு கூட, ஒவ்வொரு ஷயரிலிருந்தும் நான்கு நான்கு மனிதர்கள் வீதம் வரவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. அதற்கு மூன்று வார காலத்திற்குப் பிறகு லங்கத்தான் செயின்ட் பால் ஆலயத்தில் பாரான்களை சந்தித்த காலத்தில் ஹென்ரி I வெளியிட்ட பட்டயத்தைப் படித்துக் காட்டி அதைப்போல ஜானும் ஒன்றை வெளியிட்டு, அதன்படி நடப்பதாய் உறுதி கூறச் செய்யவேண்டுமென்று அவரும் மற்ற பாரான்களும் தீர்மானித்துக் கொண்டிருந்தனர். உடனே அக்டோபர் மாதத்தில் பிட்ஸ் பீட்டர் இறந்துபோய் விட்டார்.

பிட்ஸ் பீட்டருடைய மரணத்தினுல் ஏற்பட்ட பலாபலன், போயவனஸ் (Bouvines) யுத்தம்

இளையன்னர் இறந்ததால், பிரான்ஸில் வடக்கு நாடுகள் போயின; ஹுபெர்த் வள்திர் இறந்ததால் பாப்புடன் சச்சரவு, மானக்கேடு முதலியவை நேர்ந்தன. பிட்ஸ்-பீட்டர் இறந்ததால், அவைகளைப்போலவே வேறு பல விபரீதமான பலன்கள் உண்டாயின. ஜான் காலத்தில் இருந்த ஜஸ்டிசியர்கள் ஜானுக்கு அதிகமாய் இடங்கொடாமல் அவரை அடக்கியே வைத்திருந்தனராதலால், பிட்ஸ் பீட்டர் இறந்தவுடன், ஜான் அப்போதுதான் உண்மையில் முதன்முதலில் இங்கிலாந்திற்கு அரசரானவர் போல் உணர்ந்தார். அவர் பீட்டர் - தேஸ்-ராசிஸ் என்பவரை துரைத்தன ஜஸ்டிசியராக நியமித்தார். அவர் பாய்ட்டௌக்காரர். அவரை ஜான் வின்சேஸ்தருக்கு பிஷப்பாக நியமித்திருந்தார். அவர் ஜானுடைய விருப்பம்போல் நடந்து கொள்ளுகிறவராதலால், ஜான் அவரை ஜஸ்டிசியர் பதவிக்கு நியமித்துவிட்டார். அதைக் கண்ட பாரான்கள் தமக்கும் ஜானுக்கும் தகராறுகள் ஏற்படுவது நிச்சயமென்றுணர்ந்து, தங்களுடைய சுய பலத்தைக் கொண்டே தாம் சமாளிக்கவேண்டுமென்று தீர்மானித்திருந்தனர். அப்போது பிரெஞ்சு அரசர் விஷயத்தில், தமது அண்ணனை ரிச்சறுடு I அநுஷ்டித்த தந்திரத்தையே தாமும் அநுஷ்டிக்கவேண்டுமென்று ஜான் தீர்மானித்து, ஒருகூட்டுக் கட்சியை அமைக்க எத்தனித்து, அதன் பொருட்டு அவர் 1214-ம் வருஷத்தில் பெரும்பாலும் ஐரோப்பாக் கண்டத்திலேயே இருந்தார். அந்தக் கட்சியில் ஜேரமன் சக்கரவர்த்தியான ஆதாவும் (VI), வ்ளாண்டர்ஸ் கவுண்டான பரண்டும் (Ferrand அல்லது, வரண்டும்)சேர்ந்திருந்தனர். வ்ளாண்டர்

வில் இருந்த பிலிப்பை வெல்லும்பொருட்டு, ஆதாவுக்கும், பரண்டேக்கும் உதவியாக, சலீஸ்புரி ஏயராளை ஓர் இங்கிலீஷ் சேனையோடு அனுப்பிவிட்டு, ஜான் பாய்ட்டௌவில் போர் நடத்த தாமே நேரில் போய்ச்சேர்ந்தார். 1214-ம் வருஷம், ஜூலை மாதம், 27-ம் தேதி, போயவனஸ் என்ற இடத்தில் நடந்த போரில் பிலிப் பூர்த்தியான வெற்றி பெற்றதன்றி, பரண்டையும், சலீஸ்புரியையும் சிறைப்படுத்திவிட்டார். அந்தச்செய்தியைக் கேட்டவுடன் பாய்ட்டௌவில் ஜானுக்கு உதவியாயிருந்த பெரிய மனிதர்கள் அவரை விட்டுப்போய் விடவே, ஜான் அவமானமடைந்து அங்கிருந்து ஓட்டம் பிடித்தார். அதன் பிறகு ஜான் பிலிப்புடன் ஐந்து வருஷ காலத்திற்கு ஒரு தற்காலிக சமாதானத்தைச் செய்து இங்கிலாந்துக்குத் திரும்பி வந்துசேர்ந்தார். அந்த போயவனஸ் யுத்தத்தில் ஜான் தோற்றுப்போனது இங்கிலாந்தில் ஒரு புதிய சகாப்தத்திற்கு ஆரம்பம் செய்யப்பட்டதுபோ லாயிற்று; இங்கிலாந்தினது சரித்திரத்தையே அது புதிய வழியில் திருப்பி விட்டதாகவும் முடிந்தது. அந்தப் போரைப்பற்றி ஒரு சரித்திராசிரியார் அடியில் வருமாறு எழுதியிருக்கிறார். 'போயவனஸ் தோல்வியே இங்கிலாந்திற்கு மாக்கன சரத்தாவென்ற ஜீவாதாரமான பட்டயத்தைக் கொடுத்தது. அந்தப் போரில் ஜான் வெற்றியடைந்திருப்பாரானால், பாரான்களினது எதிர்ப்பை அவர் அடியோடு அடக்கியிருப்பார்; மாக்கன சரத்தாவோ, இங்கிலீஷ் சுயாதீனமோ ஒரு நாளும் ஏற்பட்டிரா" என்று ஷெ ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

ஜானுக்கும், பாரான்களுக்கும் மறுபடி சச்சரவு

ஜான் திரும்பி வந்த காலத்தில், பாரான்கள் அதற்கு முன் இரகஸியத்தில் சதியாலோசனைகள் செய்தது போல்

நடந்து கொள்ளாமல், வெளிப்படையாகவே எல்லோரும் ஐக்கியப்பட்டு, தங்கள் சட்டத்தையும், சுயாதீனத்தையும் பாதுகாத்துக்கொள்ள முனைந்தனர். மத ஸ்தாபனத்தார், இங்கிலீஷ் சரித்திரத்தில் மூன்றாவது முறையாக, அரசருடைய கொடுங்கோன்மைக்கு விரோதமாகவும், பழைய இங்கிலீஷ் சட்டங்கள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றிற்கு சாதகமாகவும் நாட்டு மகா ஜனங்களோடு ஒன்றுபட்டுப்போராடினர். அஞ்செலம் இரண்டாவது வில்லியத்தை எதிர்த்தார்; ஸ்டீவனுடைய கொடுங்கோன்மையிலிருந்து தயாபாலடு நாட்டைக் காப்பாற்றினர். இப்போது லங்கத்தானுடைய தலைமையின்கீழ் இங்கிலீஷ் பாரான்கள் அரசருடைய கொடுக்கோன்மையை எதிர்க்கவும், அதை ஒழிக்கவும் துணிந்து நின்றனர். அது ஓர் அரசருக்கும், அவருடைய பியூடல் குடியானவர்களுக்கும் ஏற்பட்ட தகராறாக மாத்திரம் இல்லாமல், ஓர் அரசருக்கும், தேசிய மகாஜனங்கள் எல்லோருக்கும் ஏற்பட்ட ஜீவாதாரமான தகராறாக மாறிப்போயிற்று. லங்கத்தான் முதலாவது ஹென்ரியினது பட்டயத்தைக் கொண்டுவர, பாரான்கள் எல்லோரும் அதை வைத்துக்கொண்டு, ஸேயின்ட் எட்மன்ட்புரி என்னும் ஆலயத்தில் பிரமாணிக்கம் செய்து, அரசர் அந்தப் பட்டயத்தின்படி நடக்கும்படியும், எட்வறடு அரசருடைய சட்டங்களையும் பழக்க வழக்கங்களையும் அநுஷ்டிக்கும்படியும் கேட்கவும், தேவையானல், அரசரோடு யுத்தம் செய்யவும் தீர்மானித்தனர். 1214-ம் வருஷத்தில் அவர்கள் அவ்வாறு தீர்மானித்தனர். அப்போதும் ஜான் ஒரு யுக்தி செய்யலானர். தாம் அவர்களைப் பிரித்துவிடுவதே சரியான காரியமென்று கருதி, அதற்கு உத்தரம் கொடுப்பதைத் ஈஸ்டர்வரையில் தாமதப்படுத்தினர். அதற்குள் அவர் வ்ளாண்டர்ஸ், பாய்ட்டௌ

முதலிய இடங்களிலிருந்து கூலிச் சண்டையாட்களை ஏராளமாகவரவழைத்தார்; தமது கோட்டைகளை வலுப்படுத்தினார்: மத ஸ்தாபனத்தாருக்குத் தேர்தல் சம்பந்தமாகப் பல முக்கியமான உரிமைகளைக் கொடுப்பதாய் வாக்களித்து, லங்கத்தானையும், மற்ற குருமார்களையும் பிரித்துவிட முயன்றார்; அதன் பிறகு பாப்பினிடம் முறையிட்டுக்கொண்டார்; தாம் குருசேடர் என்று காட்டிக்கொண்டால், மதஸ்தாபனத்தாருடைய பாதுகாப்பு தமக்கு ஏற்படுமென்ற கருத்துடன் சிலுவையை எப்போதும் கையில் பிடித்துக்கொண்டார். அவர் அத்தனை முயற்சிகள் செய்தாரானாலும், பாப்பு அவருக்கு ஆதரவாயிருந்தாரானாலும், லங்கத்தானும், மற்றவர்களும் ஒரே உறுதியாக நின்றனர். பாரான்கள் எல்லோரும் ஸ்டாம்போர்ட் என்னுமிடத்தில் ஒன்றுகூடி தங்கள் சேனையைத் திரட்டிக்கொண்டு ராபர்த் பிட்ஸ் வள்திர் என்பவருடைய தலைமையில் தெற்கு நோக்கி வர, லண்டன் நகரத்தினரும், இதர ஜனங்களும் அவர்களுடைய கோரிக்கைகளை ஆதரித்தனர். துரைத்தன உத்தியோகஸ்தர்களும் ஜானைக் கைவிட்டுவிட்டனர்.

மாக்கன சரத்தா (Magna Charta)

ஜான் அப்போது விண்ட்சர் (Windsor வீண்டீசர். விண்டு = விஷ்ணு) கோட்டையில் தங்கியிருந்தார். தேம்ஸ் நதியின் தீவொன்றில் வந்து அவர் முகாம் செய்தார். பாரான்கள் ஆற்றினது கரைமீது மேட்டுப்பாங்கான தரையில் இருந்தனர். அந்த இடம் ரன்னிமேடு என்ற பெயருடையது. இந்த ஜீவாதாரமான தஸ்தாவேஜு அங்கே நிறைவேற்றப்பட்டதுபற்றி, அந்த இடம் இங்கிலீஷ் சுயாதீனத்துப் பரிசுத்த பூமி ” என்று குறிக்கப்படுகிறது. இந்த மாக்கன

சரத்தா என்பது லத்தீன் பாஷையில் எழுதப்பட்டதும், 63 சரத்துகள் உடையதுமான தஸ்தாவேஜு. இது இப்போதும் பிரிட்டிஷ் மியூசியத்தில் வைத்துக் காப்பாற்றப்பட்டிருக்கிறது. இதன் சரத்துகள் இங்கிலாந்தினது வாழ்க்கை நிலைமையை விளக்குவதாயும், எல்லா வகுப்பாருடைய உரிமைகளையும் பாதுகாப்பதாகவும் அமைக்கப்பட்டிருந்தன. ஷை சரத்துகளில் முக்கியமானவை அடியில் வருவன :—

I. மத ஸ்தாபனம்:—தனது பூர்த்தியான உரிமைகளையும், சுயாதீனங்களையும் அநுபவிப்பது, முக்கியமாக, பீஷப் முதலியோரது தேர்தல்கள் விஷயங்களில் அரசருடைய தலையீடின்றி சுயேச்சையாகத் தேர்தலை நடத்துவது முதலியன.

II. பியூடாலிஸம் :—இதன்கீழ் முக்கியமான சரத்துகள், பீஷப்புகளும், பாரான்களும் அடங்கிய மகா சபையோராலன்றி, மற்றப்படி நைட்கள், பாரான்கள் முதலியோரிடத்திலிருந்து ஸ்கூடேஜ், அல்லது, இதர சகாய திரவியங்கள் வசூலிக்கப்படக் கூடா. வழக்கமாயிருந்துவரும் மூன்று வரிகள் இதற்கு விலக்கானவை. (1) அரசரை விடுவிப்பதற்குத் தேவையான பணம், (2) அரசருடைய மூத்த குமாரரை ‘நைட்’ ஆக்கும்போது கொடுப்பது, (3) அரசருடைய மூத்த குமாரியினது முதல் மணத்திற்காகக் கொடுப்பது ஆகியவைகளே அவை.

III. நீதிஸ்தலம்:—(1) காமன்பிளீஸ் (Court of Common Pleas) நீதிஸ்தலம் வெஸ்ட்மின்ஸ்டரில் நிலைப்பாயிருக்க வேண்டுமேன்றி துரைய ரஜஸ் நீதிஸ்தலம்போல சுற்றுப் பிரயாணம் போவது கூடாது.

(1) சுயாதீனப் பிரஜை எவனையும், நாட்டினது சட்டக் கிரமப்படியோ, அல்லது அவனுக்கு சமதையானபீர்களுடைய சட்ட சம்மதமான தீர்மானத்தின்படியோ அன்றி, வேறுவகையில் கைதியாக்கக் கூடாது, சிறையிலடைக்கக் கூடாது, சட்டப் பாதுகாப்பற்றவனுக்கக் கூடாது, தேசப் பிரஷ்டனுக்கக் கூடாது, அல்லது, வேறு எவ்விதமான கொடுமைக்கும் உள்படுத்தக் கூடாது.

IV. வர்த்தகம் :—(1) லண்டன் நகரம், நிலத்தின் மூலமாகவும் தண்ணீரின் மூலமாகவும், அதுவரையில் அநுபவித்துவந்த புராதன உரிமைகள், சுயாதீனங்கள், வழக்கங்கள் முதலியவற்றை அநுபவிக்க வேண்டும். அதேபோல, மற்ற பட்டணங்களும், நாட்டுப்புறங்களும் அநுபவிக்க வேண்டும்.

(2) இராஜ்யம் முழுதிற்கும் ஒரேவிதமான படிகளும், நிறைகளும், அளவைகளும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

(3) அரசருடைய குடும்ப உபயோகத்திற்கு அபகரிக்கப்படும் சாமக்கிரியைகளுக்கு, நாட்டு விலைவாசிகளின்படி, கிரயம் கொடுத்துவிட வேண்டும்.

(4) வர்த்தகர் இராஜ்யத்திற்கு வரவும், இராஜ்யத்தை விட்டுப் போகவும் தாராளமாக உரிமையிருக்க வேண்டும்.

V. இராணுவம் :—அயல் நாட்டிலிருந்து கொண்டுவரும் கூலிச் சண்டையாள்களை விலக்கிவிட வேண்டும்.

இதேபோல பாரான்களும், மத குருமார்களும் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களை நடத்த ஒப்புக்கொண் டிருந்

தனர். மேலே குறிக்கப்பட்ட சரத்துகளை நிறைவேற்றி வைக்கவும், அவசியமானால், அரசரை எதிர்த்துப் போர் நடத்தவும் 25 பாரான்களும், லண்டன் மேயரும் ஒரு கமிட்டியாக நியமிக்கப்பட்டனர். அதன்பொருட்டு லண்டன் நகரும், லண்டன் கோபுரமும் (Tower) அவர்களுடைய வசத்தில் விடப்பட்டன.

மாக்கன சரத்தாவின் முக்கியத் தன்மை

ஜானுடைய கொடுங்கோன்மையின் பயனாக, நார்மன் பாரான்கள் பழைமையாயிருந்துவந்த இங்கிலீஷ்காரர் போல் மாறிப்போயினர்; பெரிய கொள்ளைக்காரர்களாயிருந்தவர்களான அவர்கள் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடக்கும் கிரமமான பிரஜைகளாக மாறிப்போயினர். அன்னிய நாட்டானாகவும், துஷ்டக்கொடுங்கோல் மன்னனாகவுமிருந்த ஜான் பாரான்களது கட்டாயத்தினாலும், தண்டலினாலும், அரசியல் சட்ட திட்டங்களின்படி நடந்துகொள்ளும் செங்கோலரசனாக மாற்றப்பட்டான். அந்தப் பட்டயத்தின் விசேஷத் தன்மை, அது சம்பூர்ணமா யமைக்கப்பட்டதும், அதை நிறைவேற்றி வைக்கும்பொருட்டு, ஒரு கமிட்டி நியமிக்கப் பட்டதுமேயாம். அதே பட்டயத்தை 38 அரசர்கள் அவரவரது காலத்தில் உறுதிப்படுத்தி யிருக்கிறார்கள். அதை உறுதிப்படுத்திய கடைசி அரசர் ஹென்றி VI; மகா ஜனங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு நிறைவேற்றிய முதலாவது தேசிய உரிமைப் பட்டயம் அதுவே. ஆயினும், நாட்டினரது உரிமைகளை கிரியாம்சையில் பூர்ணமாகப் பாதுகாக்கத் தக்க வசதிகளும், கருவிகளும் ஏற்படாததற்கு முன்னர், தத்துவத்தில் மாத்திரம் மிக சீக்கிரத்தில் உரிமைகள் ஏற்பட்டுப் போயின. அதுவன்றி, அது ஓர் அரசருடைய

ஆளுகையிலிருந்து, பல சமஸ்தானாதிபதிகளுடைய ஆளுகைக்கு மாறியதுபோ லாயிற்றே யன்றி, உண்மையில் தேசீய ஆளுகையாக மாறவில்லை. (Oligarchy=ஆளிக அரசு?) ஆனால் அப்போது, இரண்டாவது ஹென்ரியினது காலத்தில் நடந்ததுபோல, அரசர், மதஸ்தாபனத்தார், குடிமக்கள் ஆகியோர் பாரான்களுக்கு விரோதமாகக் கிளம்பியது போன்ற நிலைமை ஏற்படவில்லை. மதஸ்தாபனத்தாரும், குடிமக்களும் சேர்ந்து, கொடுங்கோன்மையை அடக்க, பாரான்களுக்கு அதிகாரம் கொடுத்தனர். மாக்கன சரத்தாவில் புதுமையான உரிமை எதுவும் உண்டாக்கப்படவில்லை. 1066-ம் வருஷத்திலிருந்து சட்ட பூர்வமாய் அங்கீகரிக்கப்பட்டவையும், மதஸ்தாபனத்தாருக்கும், பாரான்களுக்கும், வில்லியன்களுக்கும் ஏற்கனவே இருந்தவையுமான உரிமைகளே மாக்கன சரத்தாவில் தொகுக்கப்பட் டிருந்தன. அவ்வாறு இங்கிலாந்தின் சட்டமும், சம்பிரதாயமும் தொகுக்கப்பட்டுப் போகவே, அதற்குமேல் அரசருடைய கொடுங்கோன்மையை, அல்லது, துராட்சியை எதிர்க்க முயன்றவர் எல்லோரும் ஒற்றுமையாய் அதையே எடுத்துக்காட்ட அது ஒரு பெரிய சாதனமாயமைந்தது. ஆனால் அதுவே முடிவான ஏற்பாடாய் அமைந்துவிடவில்லை. பின்னால் ஏற்பட இருந்ததற்கு அது ஒரு விஷய சூசிகைபோ லாயிற்று. நாட்டினது பல திறப்பட்ட உரிமைகளையும், பல வகைப்பட்ட சச்சரவுகளையும் சிக்கறுத்து அவ்விதம் தொகுத்த பெருமை அரச்பிஷப் லங்க்தானுக்கே உரியது. அஞ்சேலம், தமஸ் பக்கத், ஹூ (of Lincoln) ஆகியோர் கூட, அவ்வளவு பகிரங்கமான எதிர்ப்பினால் கொடுங்கோன்மையை அடக்கத் துணியவில்லை. பாப்பு அரசருக்கு அநுகூலமாய் மாறிப்போன நிலை

மையிலும், லங்க்தான் தேசத்தினது நன்மையையே உறுதியாகக் கடைப்பிடித்தார். அதற்கு அநுசரணையாக, பாரான்களுடைய மனப்பான்மையும் மாறுபட்டிருந்தது. அவர்கள் 1174-ல் செய்தது கேவலம் சுயநலம் கருதிய பியூடல் கலகம்; 1215-ல் செய்தது பூர்த்தியாய் எல்லோருடைய நன்மையையும் கருதிய தேசியப் போராட்டம். 1174-ம் வருஷத்திற்குப் பிறகு நேரிட்ட பல சம்பவங்கள் பியூடல் குடியானவர்களை ஜனத் தலைவர்களாக மாற்றி வைக்கும் சாதனங்களா யமைந்தன. பாரான்களில் பெரும்பாலோர் உத்தியோக வகுப்பில் சேர்ந்திருந்தவர்களாயும், ரிச்சறடு I காலத்தில் சுயாதீனமாய் நடந்து அதில் அநுபவம் பெற்றவர்களாயும் இருந்தனர். அதற்கு அநுகூலமாய் நார்மண்டியும் போய் விடவே, அவர்களே இங்கிலாந்தில், ஜனத் தலைவர்கள் ஆகி விட்டனர். இங்கிலாந்தினது உரிமைகளுக்கும், சுயாதீனத்திற்கும் அவசியமான அம்சங்களைத் திரட்டி ஓர் உருப்படுத்தி, அஞ்சாத மனோ தீரத்துடன் உறுதியாக நின்று, அதை நிரந்தரமாக நிலைக்க வைத்த பெருமை முக்கியமாக ஸ்டீவன் லங்க்த்தானுக்கே உரியதாகையால், இங்கிலாந்து அவருக்குக் கடமைப்பட்டிருப்பது விலை மதிப்பற்றதென்றே கூறவேண்டும். 1204-ல் நார்மண்டி இழக்கப்பட்டது. 1215-ல் மாக்கன சரத்தா நிறைவேறியது. அதற்கிடையிலிருந்த பத்து வருஷ காலத்திற்குள்ளாக இங்கிலாந்தினது சுயாதீனம், அரசியலமைப்பு ஆகியவற்றின் விதைகள் மற்ற எந்தக் காலத்திலு மில்லா வகையில், புத்துயிர் பெற்றுத் தளிர்த்தன. நார்மன் பாரான்களும், இங்கிலீஷ் சுயாதீனக் குடிகளும் சட்ட ரீதிப்படி சமமான பிரஜைகளாயினர். இந்த அபாரமான நன்மை ஹேன்ரி II, ரிச்சறடு, ஜான் ஆகியோருடைய ஆட்சியினாலேயே உண்டானது.

ஜான் பாரான்களை ஒறுப்பது, லெளவிஸினது படையெடுப்பு

ஜான் முகமலர்ச்சி காட்டி, மரியாதையாக நடந்து கொண்டு, மாக்கன சரத்தாவில் கையெழுத்திட்டு, அதற்கு முகர் வைத்துக்கொடுத்தாரானுலும், அங்கிருந்து அவர் தமது இருப்பிடத்திற்குப்போகவே, அவருடைய மனம் கட்டிலடங்காத கோபாவேசங் கொண்டு பதறலாயிற்று. அவருடைய அங்கங்களெல்லாம் வீராவேசத்தினல் துடிதுடித்தன. அவர், "இருபத்தைந்து மேல் - அரசர்களை எனக்கு கொடுத்திருக்கிறார்களோ!" என்று வியப்போடு ஆர்ப்பரித்துத் தரையில் கிடந்து புரளுகிறார்; தமது தாடியையும், ஆடைகளையும் பிய்த்துக் கொள்ளுகிறார்; குச்சி, கோல் முதலியவற்றை வாயில் போட்டுக்கொண்டு நறநறவென்று மெல்லுகிறார். அவ்வாறு அவர் தமது அசக்த ஆவேசத்தைப் பலவாறு புலப்படுத்தினர். அவர் அச்சத்தினல் மாக்கன சரத்தாவில் கையெழுத்துச் செய்தாரானுலும், அதன்படி நடக்க விரும்ப வில்லை. அவர் உடனே பாப்பு இன்னுசேயன்டைத் தூண்டி, அவர் தமது கட்சியை ஆதரிக்கும்படி செய்துகொண்டார். ஜான் பாரான்களுக்குச் செய்துகொடுத்த பிரமாணிக்கத்திலிருந்து பாப்பு அவரை மந்திர பூர்வமாக நிவர்த்தி செய்தார்; குருமீசடரான ஜானை எதிர்த்துப் போர் நடத்திய குற்றத்திற்காக மதப்பிரஷ்டம் செய்துவிடுவதாக பாப்பு பாரான்களை பயமுறுத்தினர்; ஸ்டீவன் லங்க்தானை உத்தியோகத்திலிருந்து சஸ்பெண்டு செய்து வைத்தார். ஜான் அயல்நாட்டிலிருந்து ஏராளமான கூலிச் சண்டையாட்களை வரவழைத்துத் திரட்டிக்கொண்டு, தமது நாட்டிற்குள் அட்டகாசமாக பர்விக் வரையில் சென்றார். அவருடைய சேனைகள் இழைத்த அட்டூழியச் செய்கைகள் சொல்லிலடங்கா. அவர்

கள் ஸ்திரீகளையும், குழந்தைகளையும் வெட்டித் தீர்த்தனர். அவர்கள் போனவழியில் பாழிடங்களே மிஞ்சின. அவர்களைப் போல, ஜானும் இரத்தங்குடித்த புலிபோலவேநடந்துகொண்டார். அவர் சிறிய பையன்களையும், பெண்களையும் பட்டினி போட்டுத் தூக்கிலிட்டார்; கிழவர்கள்மீது ஈயக்குண்டுகளை வைத்து நசுக்கிக் கொன்றார். ஒவ்வொரு நாள் காலையிலும், தாங்கள் இரவில் தங்கியிருந்த இடத்தை ஜான் தம்முடைய கையினாலேயே நெருப்பை வைத்துக் கொளுத்தினார். வடநாட்டுப் பாரான்களுக்கு ஆதரவாயிருந்த ஸ்காட்லாந்து அரசரான அளிக்ஷாண்டார் II என்பவரை தண்டிப்பதற்கே அவர் அவ்வாறு வடக்கே சென்றார்; சென்றவர், அவரை மும்முரமாகத் தாக்கினார். ஜானுடைய கூலிச் சண்டையாட்களை எதிர்க்க வல்லமை யற்றவர்களாய், பாரான்கள் பிரான்ஸ் அரசரான பிலிப்பினுடைய மூத்த குமாரர் லௌவீஸுக்கு இங்கிலாந்தினது பட்டத்தைக் கட்டுவதாகச் செய்தி அனுப்பினார்கள். அவர் இரண்டாவது ஹென்ரியினது பேர்த்தியும், பளஞ்சீ (of Castille) என்பவளை மணந்துகொண் டிருந்தார். இங்கிலாந்தினது பாரான்களுடைய கோரிக்கைக்கு இணங்கி, அவர், 1215-ம்வருஷம், நவம்பர்மாதம், ஏழாயிரம் ஆள்களடங்கிய ஒரு சேனையையும், அதற்கடுத்தபிப்ரவரியில் இன்னொரு சேனையையும் இங்கிலாந்திற்கு அனுப்பிவிட்டு, தாமும் 1216-ம் வருஷம் மேமாதம் வந்து சேர்ந்தார். அப்போது ஜான் தமது சேனைகளோடு வின்சேஸ்தரில் தங்கியிருந்தாராதலால், லௌவீஸ் லண்டனுக்கு வந்துசேர்ந்தார். ஸ்காட்லாந்து அரசரும் வந்து லௌவீஸைப் பணிந்தார். ஜனங்களுடைய திருப்தியைக் கருதி, லௌவீஸ் ஸ்டீவன் லங்கத்தானுடைய சகோதரரான சீமான் லங்கத்தானை சான்சிலராக நியமித்தார். ஆனால், தோவர், விண்ட்ஸர் என்னும்

இடங்களைக் கைப்பற்ற லௌவீஸினால் இயலவில்லை. கிழக்குக் கரையிலிருந்த வலையர்கள் எல்லோரும் ஜானிடம் பற்றுதலுடையவர்களா யிருந்தனர். பாப்பும் லௌவீஸை மதப்பிரஷ்ட ராக்கிவிட்டார். மத ஸ்தாபனத்தார், உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் ஜானினது கட்சியிலிருந்தனர். அதுவன்றி, தேசியக்கட்சியில் அவ்வளவாக அக்கரை காட்டாத பாரான்களும் பலர் இருந்தனர். அதுவன்றி, லௌவீஸ் ஒவ்வொரு கோட்டையையும், பயப்பையும் கைப்பற்றியவுடன், அவைகளைத் தம் மனிதர்களுக்குக் கொடுக்கத் தொடங்கினாராதலால், அவரை வரவழைத்த பாரான்களில் பலர் அவர்மீது வெறுப்படைந்து அவரை விட்டுப்போக ஆரம்பித்து விட்டனர்.

ஜானுடைய மரணம்

ஜான் தமது பாரான்கள்மீது போர் நடத்திக்கொண்டு போனகாலத்தில், வாஷ் என்ற நதியைக் கடந்தபோது, அவருடைய மூட்டைகளும், சாமான்களும், நகைகள் பணம்முதலியவைகளும் வெள்ளத்தில் போய்விட்டன. அவ்வாறு ஏற்பட்ட பெருத்த கஷ்டத்தினால் மனவேதனையடைந்த ஜான் ஜுர நோய்கொண்டு படுத்து நவார்க் (Newark) என்னுமிடத்தில், 1216-ம் வருஷம், அக்டோபர்மீ, 19-ம் தேதி, இறந்து போய் விட்டார். அவருடைய வேண்டுகோளின்படி சவம் வர்சேஸ்தரில் அடக்கம் செய்யப்பட்டது. இங்கிலாந்தை ஆண்ட அரசர்கள் எல்லோரினும் மிக இளப்பமானவர் அவர் ஒருவரே. அவருக்கு மேன்மேலும் கெடுதல்களை சம்பவித்தது அவருடைய குற்றத்தினாலேயே. அவரோடு நார்மன் கொடுங்கோன்மை அறுதியாய் ஒழிந்தது. இங்கிலாந்தை ஒன்றுபடுத்தி அமைதியான வாழ்க்கையில் திருப்பிவிட அந்தக்

கொடுங்கோன்மை சிறிது காலத்திற்குத் தேவையாயிருந்தது. அந்தத் தேவை தீர்ந்தவுடன், ஷை கொடுங்கோன்மையும் தேவையற்றதாயிற்று. ஜானைப்பற்றி ஒரு சரித்திராசிரியர் அடியில் வருமாறு எழுதி இருக்கிறார்:— "அவர் சாமர்த்தி சாலியான மனிதர்; ஆனால், அவர், தம்முடைய சாமர்த்தியங்களை, தம்மை அழித்துக் கொள்வதற்கன்றி, வேறு விதத்தில் பயன்படுத்தத் திறமையில்லாதவர்; கபடமான மனிதர், ஆனால் கூர்மையான விவேகமில்லாதவர்; எதைப்பற்றியும் சம்சயமே கொள்ளக்கூடியவர், ஆனால், விஷயங்களின் உண்மையை ஆழ்ந்து அறியும் திறனற்றவர்; படித்தவர், ஆனால் நல்லறிவு பெருதவர்; துடுக்கான முரட்டுத்தனம் வாய்ந்தார், ஆனால் மனோ தைரியம் இல்லாதவர்; பிடிவாதம் பிடிப்பவர், ஆனால் உறுதியும் நிர்ணயமும் இல்லாதவர்; எல்லோரிடமும் தாராளமாகப் பழகுகிறவர்; ஆனால் ஜீவகாருண்ய மற்றவர்; துஷ்டகிருத்தியங்களைச் செய்பவர்; ஆனால் மானம், ஈனம் முதலியவற்றை மதியாதவர்."

ஜானினது ஆட்சியில் நிகழ்ந்த முக்கியமான சம்பவக் குறிப்புகள்

1199 ஜான் முடிசூடுதல்.

1200 லண்டன் கார்ப்போரேஷன் ஆரம்பமாதல்.

1203 அறத்தர் மரணம்.

1204 இலீனர் மரணம், நார்மண்டியை இழத்தல்.

1205 ஹூபர்த் வால்திர் மரணம்.

1206 ஸ்டீவன் லங்கத்தான் அரச் பிஷப்பாக நியமிக்கப்படுதல்.

1208-13 பாப்பினது மறியல்.

1209 ஜான் மதப்பிரஷ்ட ராக்கப்படுவது.

1211 அரசரை சிம்மாசனத்திலிருந்து விலக்குவதாய் பாப்பு பய முறுத்துவது.

1213 ஜான் பாப்பினது பண்ணையாளாகிறர், தம்மி என்ற இடத்தில் பிரான்ஸ் கப்பற்படை அழிக்கப்படுவது, (இதுவே இங்கிலாந்தின் முதல் கடற்போர்) செயின்ட் ஆல்பன்ஸ் என்னுமிடத்தில் முதன்முதல் ஜனப்பிரதிநிதி சபைகூடுவது, செயின்ட் பால்ஸ் கோவிலில் லங்கத்தான் முதலாவது ஹென்ரியினது பட்டயத்தைக் கோணர்ந்து படிப்பது, பிட்ஸ்-பீட்டர் மரணம், பீட்டர் -தேஸ் -ராசிஸ் ஜஸ்டிசியர் ஆவது.

1214 போயவனஸ் யுத்தம், லண்டன் பட்டயம் பெற்றது.

1215 மாக்கன சாத்தா, அல்லது, சர்த்தர், (சரித்திரம்?) ஜானுடைய கடைசி அக்கிரமங்கள், பாரான்கள் லோவிஸை அழைப்பது.

1216 ஸோவீஸ் லண்டனுக்கு வருவது, ஜான் மரணம்.

———

அத்தியாயம்—10

ஹென்ரி III (1216—1272)

ஹென்ரி III முடிசூடுதல், பிரதம ஏற்பாடுகள்

ஜானுடைய மூத்த குமாரரான ஹென்ரி, 1206-ம் வருஷம், பிறந்தவராதலால், ஜான் இறந்த காலத்தில் அவருக்கு ஒன்பது வயதாயிருந்தது. அவ்வாறு அரசருடைய வார்சுதாரர் மைனராயிருந்தது ஒரு விதத்தில் நன்மையாகவே முடிந்தது. ஏனென்றால், ஜானுடைய கொடுங்கோன்மையாலும், கெட்ட நடவடிக்கைகளாலும் ஏற்பட்ட பகைமையும் கோபமும் அவருடைய சவத்தோடு புதைக்கப்பட்டுப்போயின. அறியாத சிறிய குழந்தையின்மீது பகைமை பாராட்ட எவருடைய மனதும் இடங்கொடுக்கவில்லை. ஆயினும் அந்தக் குழந்தையினது கட்சி பலப்பட சிறிது காலம் செல்லவேண்டியதாயிருந்தது. துரைத்தனத்தில் முக்கியஸ்தர்களாயிருந்த பெம்ப்ரோக் ஏயராளான வில்லியம் மார்ஷால், பீட்டர்-தேஸ்-ராசிஸ், சேஸ்தர் ஏயராள், திரபை (Derby) ஏயராள் ஆகியோர் ஒன்றுகூடி ஹென்ரிக்கு முடிசூட்டத் தீர்மானிக்க, பாப்பின் பிரதிநிதியான கையேலா (Gualo) என்பவரும், சில பிஷப்புகளும் க்ளௌசேஸ்தர் என்னுமிடத்தில் 1226-ம், வருஷம், அக்டோபர் மாதம், 28ம் தேதி, மைனர் ஹென்ரிக்கு முடி சூட்டினர். வில்லியம் மார

ஷால் என்பவர் குற்ற மற்ற பரிசுத்தமான ஒழுக்கமுடைய வர்; வயதான பெரியமனிதர்; அவர் நல்லபுத்திமான்; ஜானுக் கும், அவருடைய தந்தைக்கும் நண்பரா யிருந்தவர்; அவர் நாட்டிற்கும் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். குழந்தை யைப் பாதுகாத்து வளர்க்கும் பொறுப்பை பீட்டர் - தேஸ் - ராசிஸ் ஏற்றுக்கொண்டார். ஹூபர்த் - தே-பர்க் ஜஸ்டிசியர் பதவியை வகித்தார். அப்போது பாப்பு பதவிக்கு வந்திருந்த ஹாணரையஸ் III என்பவர் ஹென்ரியினது முடிசூட்டலை ஆதரித்தார். அவ்வாறு இளைய ஹென்ரிக்குப் பட்டம் கட் டிய சீமான்கள் மிக யுக்தியான ஒரு காரியத்தையும் உடனே செய்தனர். பாப்பு இன்னசேயன்ட் செய்த தீர்மானத்தை மாற்றி, கையேலா என்பவர் மாக்கன சரத்தாவை ஹென்ரி ஏற்றுக்கொள்வதாக ஓர் அறிக்கை வெளியிடும்படி வில்லி யம் மாரஷாளை அநுமதிக்க, அவ்வாறே ஓர் அறிக்கை வெளி யிடப்பட்டது. மாக்கன சரத்தாவில் வரி விதிப்பது சம்பந்த மாயிருந்த சரத்தும், காட்டிலாகா சம்பந்தமான சரத்தும், இன்னும் சில விஷயங்களும் நீங்கலாக, மற்ற பாகத்தை ஹென்ரியினது பெயரால் வெளியிட்டனர்.

லெளவீஸ் தோல்வி, லாம்பத்து உடன்படிக்கை

லெளவீஸை வரவழைத்த பாரான்கள், மாக்கன சரத்தாவினது நிபந்தனைகளின்படி ஜான் நடந்துகொள்ள வில்லை யென்ற காரணத்தினலேயே அப்படிச் செய்தனராத லால், ஜான் இறந்துபோனதனாலும், மைனருக்காக துரைத் தனம் நடத்தியவர்கள் தங்களது முக்கியக் கோரிக்கைக் குப் பரிகாரம் தேடிவிட்டனராதலாலும், அவர்கள் மைனர் மீது பகைமை பாராட்ட எவ்வித முகாந்தரமுமில்லை யாத லாலும், லெளவீஸ் கட்சியை விட்டு விலகத்தொடங்கினர்.

அதுவன்றி, பிரான்ஸ் தேசத்திற்கு அரசராகக்கூடியவரைத் தமது நாட்டினது அரசராக்குவது அபாயமான செய்கையென்றும் பாரான்கள் கருதினர்; அதுவன்றி பாப்பு லௌவீஸை மதப்பிரஷ்டம் செய்திருந்தாராதலாலும், மைனர் ஹென்ரியினது கட்சியை ஆதரித்தாராகையாலும், அந்த நிலைமையில் தாங்கள் லௌவீஸை ஆதரிப்பதால் பாப்பினது பகைமையும், மதஸ்தாபனத்தாரது பகைமையும் ஏற்படுமென்று அஞ்சினர். அதுவன்றி, லௌவீஸ், மேலும் சேனைகளை அனுப்பும்படி பிரான்ஸிலிருந்த தமது தந்தைக்கு எழுத, தந்தை பாப்பினுடைய விருப்பத்திற்கு விரோதமாக நடந்துகொள்ள அஞ்சி சேனையை அனுப்பாமல் இருந்துவிட்டார். பிறகு, லௌவீஸ் சேனைகளுக்காக பிரான்ஸிற்குப் போயிருந்த காலத்தில், சலீஸ்புரி, வாரண (Warrene), அரன்தல், முதலிய பல சமஸ்தானங்களது ஏயராள்கள் மைனருடைய கட்சியில் சேர்ந்துகொண்டனர். ஏப்ரல் மாதம், லௌவீஸ் திரும்பிவந்து, அப்போது லின்கனை முற்றுகை போட்டுக்கொண்டிருந்த ராபர்த்-பிட்ஸ்-வள்திருக்கு உதவியாக பரசீ கவுண்டை அனுப்பிவிட்டு, தாம் தோவர் முற்றுகையை மறுபடி ஆரம்பிக்கலானார். லௌவீஸினுடைய சேனையாட்கள், ஜானுடைய சேனையாட்களைப் போலவே எதற்கும் பின்வாங்காத துஷ்டர்களாதலால், பரசீ லின்கனுக்குப் போனதற்குள் அவர்கள் மிக பயங்கரமான அட்டூழியங்களையும், கொடுமைகளையும் நடத்திக்கொண்டே சென்றனர். லிங்கனை விடுவிப்பதற்காக, மாரஷால் நிரம்பவும் பலமான ஒரு சேனையைச் சேர்த்துக்கொண்டு, லின்கனை யடைந்து, எதிரிகளுடைய சேனைகளுக்குப் பின்பக்கமாகப் போய் மிகக் கொடுமையாகத் தாக்கவே, அவைகள் அச்சங் கொண்டு தாறுமாருகக் கலைந்தோட வாரம்பித்தன;

அந்தப் பட்டணத்தின் குறுகலான தெருக்கள் செங்குத்தாக வளைந்து வளைந்து செல்வனவாதலால், மாரஷாருடைய சேனைகள் அவைகளை வளைத்துக்கொண்டு சூறையாடிக் கொன்று குவித்துவிட்டன. பரசீ கொல்லப்பட்டுப்போனார்; பிட்ஸ் வள்திர் சிறைப்படுத்தப்பட்டார். அந்தப் பட்டணத்து ஜனங்கள் இராஜத் துரோகமாய் நடந்துகொண்டதற்காக அவர்களுக்கு தண்டனையாக அந்தப் பட்டணம் நாசமாக்கப்பட்டது. அங்கு சேனைகளுக்கு அபாரமான கொள்ளைப் பொருள் கிடைத்தனவாதலால், அந்தப் போர் லின்கன் சந்தைக்கடை (Lincoln Fair) என்று நெடுங்காலம் வரையில் குறிக்கப்பட்டது. லின்கனில் ஏற்பட்ட பிரமாதமான சேதத்தினால், லௌவீஸினது இராணுவ மேன்பாடு அழிந்துபோகவே, அவர் தோவரை விட்டு லண்டனுக்கு வரவேண்டியதாயிற்று. அப்போதும், அவர் தமது நாட்டிலிருந்து படைகளது வருகையை எதிர்பார்த்தார். அந்தக் காலத்தில் மிகக் கொடிய கப்பல் கொள்ளைக்காரனாயிருந்த ஏயஸ்தாஸ் என்னும் சந்நியாசி (Eustace, the Monk) என்பது கப்பல்களில் சேனைகளைத் திரட்டிக்கொண்டிருந்தார்; லௌவீஸினுடைய மனையாட்டியான பளஞ்சீ என்பவளால் சேர்க்கப்பட்ட படைகளது வருகையையும் அவர் எதிர்பார்த்தார். சிறிதும் அஞ்சாத சுபாவமுடைய ஹூபெர்த்-தே-பர்க் மிக சீக்கிரத்தில் ஒரு கப்பல் படையை சேகரித்து, தோவர் துறைமுகத்தில் நிறுத்தி யிருந்தார். அவரிடம் நாற்பது கப்பல்களே இருந்தனவாயினும், அவர் மனோ தைரியத்தோடு, ஆகஸ்ட் மாதம், 24-ம் தேதி, புறப்பட்டுப்போய் சாந்த்வீச் (Sandwich) என்னுமிடத்திற்கு நேரில், காற்று வாட்டமான இடத்தில், தமது கப்பல்களை நிறுத்திக்கொண்டு, சுண்ணாம்புத் தூளை வாரிக் காற்றோடு

வீசும்படியும், இடையிடையில் அம்புகளை எய்யும்படியும் தூண்டவே, எதிரியினது சேனையாட்கள் கண்களை மூடிக் கசக்கிக்கொண்டு நின்று தவிக்க, இங்கிலீஷ் வீரர்கள் அம்பு களையும், கூரான இரும்புகளையும் பாய்ச்சி, அவர்களைத் தள்ளியபடி அவர்களுடைய கப்பல்களில் ஏறி, கட்டுக்கயிறு களை அறுத்து, கப்பல்களையும் சேனைகளையும் நாசமாக்கி சேனைத் தலைவரையும் கொன்று வீழ்த்திவிட்டனர். அவ் வாறு இங்கிலீஷ் கட்சியாருக்குக் கடலிலும் பூர்த்தியான வெற்றி கிடைத்துவிடவே, லெளவீஸ் கொண்டிருந்த கடைசி நம்பிக்கையும் போய்விட்டது. அப்போது லெளவீஸ் லண் டனி லிருந்தார். அரசருடைய கட்சியார் அவர் இருந்த இடத்தை நோக்கித் திரண்டுபோகத் தொடங்கினர். தாம் அவ்விடத்தை விட்டுத் தமது நாட்டிற்குப் போய்விடுவதே உசிதமான காரியமென்று லெளவீஸ் கருதி, 1217-ம் வரு ஷம், செப்டெம்பர் மாதம், 11-ம் தேதி, லாம்பத்து என்ற இடத்தில் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார்; அதன் பிறகு, சிலவார காலத்தில் லெளவீஸ் இங்கிலாந்தை விட்டுச் சென்றார். அந்த உடன்படிக்கை மிக முக்கியமானது. நடந்துபோன காரியங்களை பரஸ்பரம் மன்னிப்பதென்றும், லெளவீஸ் பறிமுதல் செய்த சொத்துகளைக் கொடுத்துவிட வேண்டுமென்றும், உடன்படிக்கை செய்தனர். லெளவீஸி னுடைய செலவுகளைக் கருதி அவருக்கு 10,000 மார்க்குகள் கொடுக்கப்பட்டன. லெளவீஸ் போனபின், ஸ்காட்லாந்தர சர், வடக்கு வேல்ஸ் அரசர் ஆகியோர் தாம் மைனர் ஹென்ரி கட்சியை ஆதரிப்பதாக இணங்கினர். மூன்றுவது ஹென்ரி யினது ஆட்சி காலத்தை நாம் நான்கு பகுதிகளாகப் பிரிக்க லாம். முதலாவது அரசர் மைனராயிருந்த காலத்தில் பிரதி நிதிகள் ஆட்சி புரிந்தது; இது ஹூபெர்த்தினது வீழ்ச்சி

யோடு முடிவடைகிறது. இரண்டாவது, அன்னிய நாட்டினரான சகாக்களுடைய துராட்சியும், மடப் பாரில்லியமென்று மகாசபை கூடுவதும் அடங்கிய பகுதி, மூன்றுவது, பெரிய பாரான்களுடைய யுத்தமும், லெய்சேஸ்தர் ஏயராள் மரணமும் அடங்கிய பகுதி. நான்காவது, ஷை யுத்தத்திற்கும், அரசருடைய மரணத்திற்கும் இடையில் சொற்ப காலம் அமைதி ஏற்பட்டிருந்த பகுதி.

வில்லியம் மாரஷாளினது ஆட்சி (1216—1219)

லௌவீஸ் இங்கிலாந்தை விட்டுப் போனபின், வில்லியம் மாரஷாள், மாக்கன சரத்தாவை சில புதிய சாத்துகளோடு மறுபடி வெளியிட்டார். கவுண்டி நீதிஸ்தலங்களை ஒழுங்காக நடத்தும் விஷயமாகவும், பியூடல் சேவையை விலக்கிவிடுவதுபற்றியும், கோட்டைகளை இடிக்கவும், சங்கியாசிகளுக்கு நிலம் வழங்காமல் நிறுத்தவும் ஷை புதிய நிபந்தனைகள் சேர்க்கப்பட்டிருந்தன. வரி விதிப்பது, தேசிய சபையின் அநுமதிபெறுவது ஆகிய விஷயங்களை அவர் விட்டுவிட்டது, அந்த முக்கியமான அம்சம் ஆளிகளாகிய தங்களிடமே இருக்க வேண்டுமென்று (Oligarchy = ஆளிக அரசு) அவர் கருதியதைக் காட்டுகிறது. அரசருடைய பெயரால் காட்டுரிமைப் பட்டயம் (Forest Charter) என்னும் இன்னொரு புதிய உரிமைப் பட்டயமும் வெளியிடப்பட்டது. இரண்டாவது ஹென்றியினுடைய உட்ஸ்டாக் ஆசீஸ் என்னும் சட்டத்தினுடைய கொடுமைகளை இது தணித்தது. காட்டிலாகாச் சட்டங்களை மீறி நடப்பவருடைய உயிரை வாங்குவதோ, கண் முதலிய அங்கங்களை அழிப்பதோ கூடாது என்ற நியதி ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்தப் பட்டயம் முக்கியமாக பாரான்களுடைய

நன்மையைக் கருதியதே. இனி பெரிய உரிமைப் பட்டயங்கள் என்று குறிக்கப்பட்டால், அவை, மாக்கன சரத்தாவையும், இந்தக் காட்டுரிமைப் பட்டயத்தையும் குறிப்பதாக நாம் கருதவேண்டும். 1219-ம் வருஷம் வரையில் வில்லியம் மாரஷாள் மிக புத்திசாலித்தனமாக நாட்டை ஆண்டு, அதே வருஷத்தில் இறந்துபோனார். அவர் உள்நாட்டில் நடந்த போரை நிறுத்தி, அரசருடைய ஆட்சியை மறுபடி ஸ்தாபித்தார். ஆனால், பாப்பு அரசருக்கு மேற்பட்ட அதிகாரம் வகித்ததை அவர் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. மைனர் ஹென்ரியை அரசராக்கி, அவருக்கு முடிசூட்டி வைத்து, மாரஷாளோடு ஒற்றுமையாயிருந்து வேலைசெய்த, பாப்பினது பிரதிநிதியான கையேலா (Gualo) என்பவர், 1217-ம் வருஷ முடிவில், ரோமுக்குப் போய்விட்டார். அவருடைய பதவிக்கு நியமிக்கப் பெற்றவரான பண்டேள்ப் (Pandulf) என்பவர் கீழ்த்தரமானவர். பாப்பிற்கு ஜான் வணக்கஞ் செலுத்தியபோது, இவரேதான் பாப்பின் பிரதிநிதியாய் அதை ஏற்றுக்கொண்டவர். வில்லியம் மாரஷாள் இறந்தபின் அவருடைய ரீஜண்ட் பதவிக்கு வேறு எவரும் நியமிக்கப்படவில்லை. ஆனால் ஹூபெர்த்-தே-பர்க் என்னும் ஜஸ்டிசியரே எல்லா நிர்வாகங்களையும் வகித்துப் பார்த்து வந்தார். ஆனால் பண்டேள்ப் மைனர் அரசருடைய துரைத்தன நிர்வாக காரியங்களில் அடிக்கடி தலையிட்டது பலருக்கு அதிருப்தியை உண்டாக்கியதாகையால், அரச் பிஷப்பான லங்கத்தான் ரோமுக்குச் சென்று, பண்டேள்பை அழைத்துக்கொள்ளும்படி பாப்பிடம் கேட்டுக்கொள்ள, பாப்பு அப்படியே செய்தார். அதற்குப் பிறகு பாப்பிற்கு வேறு பிரதிநிதி எவரும் நியமிக்கப்படவில்லை. கண்டர்புரி அரச் பிஷப்பே அந்தப் பதவியையும் வகித்தார். ரோமுக்குச் சென்றிருந்த லங்கத்

தான் மறுபடி திரும்பிவந்து, அரச் பிஷப் பதவியை வகித்து, 1228-ம் வருஷத்தில் இறந்துபோனூர். அதுவரையில் அவர் ஹூபர்த்தோடு ஒற்றுமையாகவே நடந்து, நாட்டில் அமைதியும் வளப்பமும் ஏற்படுவதற்கான காரியங்களைத் தம்மாலேன்ற வரையில் செய்தார். ஹூபர்த் என்பவர் இரண்டாவது ஹென்ரியினது துரைத்தனப் பயிர்ச்சியில் தேறிய திறமைசாலிகளுள் கடைசியாக மிஞ்சியவர்; அவர் ஆட்சி நடத்திய காலமாகிய 1219 முதல் 1232 வரையில் உள்ள காலம் மிக முக்கியமானது. அவர் திறமையாகவும், சுறுசுறுப்பாகவும் வேலைசெய்யக் கூடியவர். சட்ட ரீதிப்படி ஆட்சி நடக்கவேண்டுமென்பதும், சமாதானமும், ஒழுங்கும், அமைதியும் ஏற்படவேண்டுமென்பதும், பிரஜைகளுடைய உடைமைகளுக்கும் உயிருக்கும் பாதுகாப்பு ஏற்படவேண்டுமென்பதும், ஜான் காலத்தில் ஏற்பட்ட ஒழுங்கீனங்கள் ஒழியவேண்டுமென்பதும், நாட்டை அபிவிருத்தி செய்ய குடிமக்கள் உழைத்துப் பாடுபடும்படி செய்யவேண்டுமென்பதும் அவருடைய முக்கிய உத்தேசங்கள். ஏற்கனவே, வில்லியம் மாரஷாளால் தொடங்கப்பட்டிருந்த நிர்வாக ஏற்பாடுகளையெல்லாம் தாம் பூர்த்தி செய்துவைக்க வேண்டுமென்பதும் அவருடைய கருத்து. நாட்டிலிருந்த கோட்டைகள் முழுதையும் கைப்பற்றி அரசருடைய வசத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று வில்லியம் மாரஷாள் ஆரம்பித்த காரியத்தையும் ஹூபர்த் முடிக்கக் கருதினூர். அந்த விஷயத்தில் பழைய பியூடல் கட்சிக்காரர்களுடைய தலைவரான வில்லியம் ஆமலே என்பவர் தமது கோட்டைகளை விடாமல் பெருத்த இடையூறு செய்யலானூர். அவருக்கு பால்கீஸ்-தே-பரையாத்தி என்பவரும், சேஸ்தர் ஏயராளும் அநுகூலமா யிருந்தனர். பால்கீஸ் என்பவர்

கூலிச்சண்டையாள்களினது தலைவர். ஜான் காலத்தில், அவர் மிகத் திறமையாகப் போர் நடத்தியதுபற்றி, அரசர் அவருக்கு ஏராளமான நிலங்களைக் கொடுத்திருந்தார். அவர் களுக்கு பீட்டர்-தேஸ்-ராசிஸ் என்பவரும இரகஸியத்தில் ஆதரவாயிருந்தார். அவர் விண்சேஸ்தர் பிஷப்பாயிருந்த தோடு, அரசருடைய தேக போஷணையை கவனிக்க நியமிக் கப்பட்டிருந்தார். அவர் ஹூபெர்த்தின் விஷயத்தில் நிரம்பவும் பொறாமையும், பகைமையும் கொண்டு குரோதம் பாராட்டி வந்தார். ஹூபெர்த் 1220, 1221-வது வருஷங்களில் வில்லி யம் ஆமலே என்பவருடைய கொட்டத்தை அடக்கி, அவர் பூர்த்தியாக ஒடுங்கிப் போகும்படி செய்தார். அதன் பிறகு பால்கீஸினது முறை வந்தது. அவர் ஆதியில், நார்மண்டி யில் இருக்க மாட்டாமல், இங்கிலாந்தைப் புகலிடமாய் அடைந்தவர்; ஜானுக்காக அட்டூழியச் செய்கைகளை நிறை வேற்றுவதில் தமது சாமர்த்தியத்தைக் காட்டி அவருக்கு வலது கைபோ லிருந்து வந்தவர். அதற்காக ஜான் அரசர் அவருக்கு கணக்கு வழக்கின்றி சன்மானம் வழங்கி யிருந் தார். ஒரு பணக்கார வார்சுதாரி அவளுக்கு மனைவியாக் கப்பட்டாள். ஏராளமான சமஸ்தானங்களை அவர் பெற் றிருந்தார்; ஆறு கவுண்டிகளுக்கு அவர் ஷிரப்பா யிருந்தார். பல கோட்டைகள் அவருடைய வசத்தில் இருந்தன. அவற் றில் முக்கியமானது பெட்போர்ட் (Bedford) கோட்டை யென்பது. ஹூபெர்த் கோட்டைகளை விட்டுவிடும்படி கேட் கவே, 1224-ம் வருஷத்தில் பால்கீஸ் அவரை எதிர்த்துக் கலகம் புரியலானர். ஹூபெர்த், பெட்போர்ட் கோட்டையை முற்றுகை போட்டு, அதற்குள்ளிருந்தவர்களில் எண்பது துஷ்டர்களைத் தூக்கிலிட்டு, மற்றவர்களைக் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தி, பால்கீஸை சாசுவதமாக தேசப்

பிரவ்ஷ்டராக்கி, 1224-ல் இங்கிலாந்திற்கு வெளியில் அனுப்பி விட்டார். அதன்பிறகு பீட்டர்-தேஸ்-ராசிஸ் என்பவர் தமது பொறுமையையும், குரோதத்தையும் காட்டிக் கொள்ளாமல் ஹூபர்த்-தே-பர்க்கோடு 1227-ம் வருஷம், வரையில் இருந்து வேலை பார்த்தார். அந்த வருஷத்தில் ஹென்றியினது மைனர்ப் பருவம் நீங்கிவிட்டதாகையால், அவர் பீட்டர்-தேஸ்-ராசிஸ்ஸை உத்தியோகத்திலிருந்து விலக்கிவிடவே, அவர் தமது பகையாளியினது பிராபல்யத்தைக் கண்டு வெறுப்பும், வைராக்யமும் கொண்டு, தாம் குருசேடுக்குப் போவதாகச் சொல்லிவிட்டு இங்கிலாந்தைவிட்டுப்போய்விட்டார். 1227-ல், ஹென்ரி III தமது இருபதாவது பிராயத்தையடைந்திருந்தார். அவர் அரசாட்சியைத் தாமே நடத்த ஆரம்பித்தவுடன், காட்டுரிமைப் பட்டயத்தைத் தாம் ஒப்புக்கொள்ள முடியாதென்று மறுத்தாராணுலும், மற்ற விஷயங்களில் ஹூபர்த்தினுடைய நோக்கம்போலவே நடந்துகொண்டார். ஹென்ரி III மைனராயிருந்து அரசரானதில், ஒரு புதிய அரசியல் ஸ்தாபனம் ஏற்பட சந்தர்ப்பம் உண்டாயிற்று. நீதி நிர்வாகம், பணவசூல் முதலிய இலாகாக்களை சட்டங்களின்படி பரிபாலித்துக்கொண்டு போக, பிரத்தியேகமான நீதிபதிகளும், மற்ற உத்தியோகஸ்தர்களும் ஏற்பட்டிருந்தனர். ஆனல் இராஜீய தந்திர விஷயமாக அரசருக்கு யோசனைகளும், யுக்திகளும் தெரிவிக்க, உள்ளுக்குள் ஒரு குழுவினர் ஏற்பட்டுத் தொடர்ச்சியா யிருந்து வந்தனராதலால், அந்தக் குழுவே பிற்காலத்தில் (அதாவது இரண்டாவது ரிச்சறடு காலத்தில்) பிரிவி கவுன்ஸில் (Privy Council) என்ற ஸ்தாபனம் உண்டாக ஏதுவாயிருந்தது. ஹென்ரி III மைனராயிருந்த காலத்தில், எந்தத் தவறு நடந்திருந்தாலும், அதற்கு அரசர் உத்தரவாதி யாகாமல், அவருக்கு யோசனை சொன்ன

வர்களே உத்தரவாதியாக்கப்படவேண்டுமாதலால்,'பொறுப்பாளிகள் மந்திரிகள்; அரசர் எந்தத் தவறையும் செய்யமாட்டாதவர்' என்னும் தத்துவங்கள் அந்தக் காலத்திலேதான் ஆரம்பமானவை.

ஹென்ரி (III)யினது துணுதிசயங்கள்

இவரிடம் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பல குணங்கள் அமைந்திருந்தன. இவருடைய தகப்பனுரது துன்மார்க்க நடத்தைகளும் கொரூரச் செய்கைகளும் இவரிடம் அதிகமாகக் காணப்படவில்லையானுலும், அவரிடத்திலும் பெரும்பாலான அஞ்சவன் அரச பரம்பரையாரிடத்திலும் காணப்பட்ட இரண்டு குணங்கள் மூன்ருவது ஹென்ரியிடம் அமைந்திருந்தன. அவை கபட்டுத்தனமும், நன்றிவிசுவாச மில்லாமையுமாம். பிறருடைய பகைமையைக் கிளப்பிவிடும்படி நடந்துகொள்ளுவதில் ஜான் எப்படி அபார சாமர்த்தியம் உடையவரா யிருந்தாரோ, அதே போல புத்திரரும் அந்த அம்சத்தில் கெட்டிக்காரரா யிருந்தார்; ஆனுல் சாமர்த்தியமாகவும், துடியாகவும், உறுதியாகவும் எந்தக் காரியத்தைச் செய்யும் குணம் தகப்பனுருக்கு இருந்ததாலும், அது புத்திரரிடமில்லை. இவருக்கு யுத்தத்தில் நாட்டமே ஏற்படவில்லை; அரசியல் விஷயத்தில் புதுமையான யுக்திகளோ திட்டங்களோ இவருக்கு எதுவுமில்லை. ஆனுல் இவர் பாப்பினிடம் நன்றி விசுவாசமும், பற்றுதலும் உடையவரா யிருந்தார். ஆனுல் மனோதிடமாகவும், உறுதியாகவும் நடந்துகொள்ளும் மனிதரைக் கண்டால் பயந்து அவர்களை வெறுப்பது இவருடைய சுபாவம். ஆனுல், சொந்த நடத்தையில், இவர் குற்றமற்ற ஒழுக்கத்தினர்; தோற்றத்தில் சர்வ சாதாரணமா யிருப்பவர். இவருடைய ஒரு கண்

ணினது இமை தளர்ந்து தணிந்திருந்ததனுல், இவருடைய முகம் சந்தோஷமற்ற நிலைமையைக் காட்டியது. இவருக்கு மதப் பற்றுதல் இருந்ததாகையால், இவர் பாப்பினிடம் பயபக்தி விசுவாசத்தோடு ஒழுகினுர். இவருக்கு சிற்பம், இலக்கியம் முதலியவற்றில் பிரியம் அதிகம். இவரது காலத்தில் அரசருக்கு கூர்மையான விவேகமும், போர் வீரமும் அத்தியாவசியமா யிருக்கவேண்டியவை. சண்டைகளும், பூசல்களும் நிறைந்திருந்த அந்தக் காலத்தில் இங்கிலாந்தின் வியவகாரங்களை நடத்த இவர் அருகமற்றவரா யிருந்தார். அவருடைய பாட்டனுர், பெரிய தகப்பனுர் ஆகியோர் அரும்பாடுபட்டு நிலை நாட்டியதும், பிரிடெரிக்(II)கினது தவறுதலாலும், வீழ்ச்சியினுலும் பிரபல மடைந்திருந்ததும், இதர கிறிஸ்தவ நாடுகளினது அரசர்களுடன் ஏற்பட்ட நெருங்கிய பாந்தவ்வியத்தினுல் செல்வாக்கடைந் திருந்ததுமான இந்தப் பதவி அவருடைய திறமையால் சமாளிக்க இயலாத அபாரமான பதவியா யிருந்தது. அவர் பக்திமான், கல்வி கற்றவர், தயாள குணமுடையவர், கம்பீர மனப் போக்குடையவர், தொழிலாளிகளை ஆதரிப்பவர், அன்னிய நாட்டாருக்குச் சிறந்த உபகாரி; ஆனுல் அவரிடம் திடமான தீர்மானமோ, நம்பிக்கைக்குப் பாத்திரமா யிருக்கும் தன்மையோ இல்லையாதலால், அவர் தமது காலத்திலிருந்த உத்தமமான மனிதர்களுடைய பகைமை உண்டாக்கிக் கொண்டார். அவரிடம் அபாரமான திரவியம் இருப்பதாக ஏற்பட்ட வதந்தியினுல் ஐரோப்பாவில் பணத்தேவை யடைந்தவர்க ளெல்லோரும் அவரிடம் பணம் பறிக்கலாயினர். அவர்களை ஆதரித்ததனுல், இவர் ஏழ்மை யடைந்தார். அந்த ஏழ்மைத்தனம் அவருடைய அற்ப புத்தியையும் மோச குணத்தையும் அவர் காட்டும்படி செய்தது. ஆனுலும்,

ஐரோப்பாக் கண்டத்து மத்திய காலச் சரித்திரத்தில், அவருடைய நூற்றாண்டிற்கு ஈடாக வேறெதையும் சொல்வது பொருந்தாது. ஏனென்றால், சிறந்த அரசர்கள், துரைத்தன நிபுணர்கள், கல்விமான்கள் ஆகியோர் அதில் இருந்திருக்கிறார்கள்; பிரமாதமான பலன்களை அடக்கிய காரியாஸ்பதங்கள் அதில் நிகழ்ந்திருக்கின்றன; தங்களது பெருந் திறமையால் ஜ்வலித்தவர்கள், புதிய புதிய விஷயங்களை உற்பத்தி செய்தவர்கள் ஆகியோர் அதில் தோன்றி யிருக்கிறார்கள். அது சுத்த வீரமும், பராக்கிரமமும் பூர்த்தியாகக் காட்டப்பட்ட காலமா யிருந்தது. வாழ்க்கையில் ஒவ்வோர் இலாகாவிலும், புதுமை புதுமையான விஷயங்கள் அந்தக் காலத்தில் உற்பத்தியானது போல, இதுவரையில் உலகத்தில் உற்பத்தியே ஆனதில்லை. ஆனால், ஹென்ரி III அத்தகைய சந்தர்ப்பத்தில் ஜீவித்திருந்தா ரானாலும், ஐரோப்பாவினது பெரிய சக்கரவர்த்திகளோடு நெருங்கிய சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்தாரானாலும், அவ்வாறு தமக்கு ஏற்பட்ட சந்தர்ப்பங்களையோ, தமது பொறுப்புகளையோ அவர் அவ்வளவாக உணர்ந்தவரன்று. அவரிடத்தில் ஒன்றுக்கொன்று முரண்பாடுபோல் தோன்றும் இன்னொரு கெடுதலும் இருந்தது. பேராசை, பெருஞ் செலவு செய்யும் டம்பாசாரித்தனம் ஆகிய குணங்கள் அவரிடம் அதிகமா யிருந்தன. அவர் எப்போதும் பணத்தைத் தேடுவதிலேயே நாட்டமா யிருப்பார்; அவருக்கு மூத்த குழந்தை பிறந்தவுடன், அரசர் பெரிய சன்மானத்தை எதிர்பார்த்ததாக, அந்த இராஜ்யத்திலிருந்த எல்லாப் பெரிய மனிதர்களுக்கும் செய்தி சொல்லியனுப்பினார். “கடவுள் நமக்கு இந்தக் குழந்தையை யளித்தார். ஆனால், அரசர் இதை ஒவ்வொருவரிடத்திலும் கிரயத்திற்கு விற்கிறார்” என்று ஒரு நார்மன் கூறினானாம். ஒவ்

வொரு காரணத்திற்குமோ, அல்லது, காரணமே இல்லா மலோ, அவர் லண்டன் முதலிய எல்லாப் பெரிய பட்டணங் களிலும் ஏராளமான வரிகளைச் சுமத்தியபடியே இருந்தா ராம். அவ்வாறு அவர் ஓயாமல் பணம் கேட்டதால், குடி மக்கள் மறுக்கத் துணிந்து துணிந்து பழகவே, பணச் செலவு செய்யும் அதிகாரம், தேச மகாஜனங்களுடையதே யன்றி, அரசருடையதல்ல என்னும் தத்துவம் இங்கிலாந் தில் தெளிவாக நிச்சயிக்கப்பட்டு, பரஸ்பரம் பூர்த்தியாய் உணர்ந்து கொள்ளப்பட்ட தாயிற்று.

பாப்பினது வரிகள்

ஹூபர்த் ஆட்சியினது கடைசி ஐந்து வருஷ காலத் தில் வரிகள் வசூலித்ததாலும், ஹென்ரி III, பிரான்ஸி லிருந்த தங்கள் பூர்விக நிலங்களைத் திரும்ப அடையும் பொருட்டுச் செய்த மூடத்தனமான முயற்சிகளாலும் உபத் திரவங்கள் உண்டாயின. 1228-ம் வருஷம், லங்கத்தான் இறந்த பிறகு, பாப்பு கிரிகாரி II இங்கிலாந்தினது மதஸ்தா பனத்தா ரிடத்திலிருந்தும், மற்றவர்க ளிடத்திலிருந்தும் பணம் வசூலிக்க முயற்சி செய்தார். அப்போது பாப்புக் கும் பிரடெரிக் சக்கரவர்த்திக்கும் போர் நடந்துகொண் டிருந்ததாகையால், அதன் பொருட்டு பாப்புக்கு ஏராள மாகப் பணம் தேவையா யிருந்தது. ஆகவே, மதஸ்தாபனத் தாரும், மற்றவர்களும் தங்கள் தங்கள் சொத்துகளில் பத்தில் ஒரு பங்கு கொடுக்க வேண்டுமென்று கேட்க, சேஸ்தர் ஏய ராளான ரானுல்ப் மதஸ்தானத்திற்குப் புறம்பானவர்க ளுடைய சார்பாக எதிர்த்து, அந்த வரியைக் கொடுக்க மறுத்து விட்டார். ஆனல் மதஸ்தாபனத்தார் மேற்படிந்து போய், முதல் வருஷத்தில் வரும் காணிக்கைப் பணம் முழு

வதையும் (First fruits) கொடுப்பதென்றும், வருஷ வருமானத்தில், பத்தில் ஒரு பாகத்தை (Annates) எப்போதும் கொடுத்துக்கொண் டிருப்பதென்றும் ஒப்புக்கொண்டனர். இவையன்றி, பாப்பு, இற்றலி தேசத்தார் பலருக்கு இங்கிலாந்தில் பிழைப்புக்கு வழி செய்துகொடுத்தார். இதர ஜனங்கள் பாப்பை எதிர்த்த விஷயத்தில், ஹூபெர்த் ஜனங்களுக்கு அநுகூலமா யிருந்தாராலும், அரசர் அவ்வாறு எதிர்த்தவர்களை அடக்கினர்.

ஹெண்ரி (III) யினது மூடச்செய்கைகள், ஹூபெர்த்தினது ஆட்சி முடிவு

1228-ம் வருஷம், ஹெண்ரி வேல்ஸின்மீது படையெடுத்துச் சென்று, அபஜயத்தோடு திரும்பிவந்தார். 1230-ம் வருஷம், அவர் ஒரு சேனையைச் சேர்த்துக்கொண்டு, பிரட்டனைக்குச்சென்று, அங்கிருந்து அஞ்சௌ, பாய்ட்டௌ ஆகியவற்றின் வழியாக காஸ்கனைக்குச் சென்று, அவ்விடத்தில் சேஸ்தர் ஏயராளான ரானுல்பையும், பெம்ப்ரோக் ஏயராளுடைய குமாரரான வில்லியம் மாரஷாலையும் அங்கு இருக்கச்செய்து, லௌவீஸை எதிர்த்துப் போர்புரியும்படி திட்டப்படுத்திவிட்டுத் திரும்பி ஊருக்கு வந்து சேர்ந்தார். (பெம்ப்ரோக்கினது குமாரர் அரசருடைய தங்கையான இலேயன்னரை மணந்துகொண் டிருந்தார்) அந்த நிலைமையில், 1231 வருஷம், பீட்டர் - தேஸ் - ராசிஸ் என்பவர் இங்கிலாந்திற்குத் திரும்பிவந்து சேர்ந்து, ஹூபெர்த்தை ஒழிப்பதற்கான காரியங்களைச் செய்யலானர். அப்போது ஹூபெர்த்துக்கு ஏராளமான விரோதிகள் ஏற்பட்டுப் போயிருந்தனர். அவர் சட்டங்களையே அநுசரித்து மிக கண்டிப்பாக துரைத்தனத்தை நடத்தியதால், ஒரு சாரார் அவரைப் பகைத்த

ணர்; அவர் அபாரமான சம்பத்தைச் சேர்த்துவிட்டாரென்ற காரணத்தினல், பலர் அவர்மீது பொருமை கொண்டனர். ஸ்காட்லாந்து அரசருடைய தங்கையை அவர் மணந்து கொண்டதனல், அநேகர் அவர்மீது அழுக்காறடைந்தனர். இவ்வாறு அவர் பலவகையில் செல்வாக்குடையவராயிருந்த தனல் அரசருக்கே அவர்மீது ஆங்காரம் ஏற்பட்டிருந்தது. ஹென்ரி பாரான்கள்மீது படையெடுத்துச் செல்ல உத்தேசித்ததை அவர் தடுத்தார். அவர் அரசருடையசொத்தையெல்லாம் கொள்ளையடித்து விட்டதாக பீட்டர் - தேஸ் - ராசிஸ், அரசருக்குக் கோள்மூட்டினர். அரசருக்குக் கோபம் பொங்கிவிட்டது. உடனே அரசர், ஹுபர்த் பண நிர்வாக விஷயத்தை ஒழுங்கீனமாக நடத்தியிருக்கிறரென்றும், இற்றலி தேசத்துப் பாதிரி ஒருவரை யார்க்ஷயர் நைட் ஸர் ராபர்த் துவண்சே (Sir Robert Twenge) என்பவர் தாக்கிய விஷயத்தில் பின்னவருக்கு அநுகூலமாயிருந்தாரென்றும் குற்றங்களைச் சுமத்தி, அரசர் ஹுபர்த்தை உத்தியோகத்திலிருந்து விலக்கிவிட்டார். அவர்மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் சம்பந்தமாக விசாரணை நடப்பதற்கு முன், அவர் ஒரு ஆலயத்திற்குள் சரண் புகுந்தார். ஹென்ரி அந்த ஆலயத்தைச் சுற்றிலும் அகழிவெட்டி, எவரும் உள்ளே போகாமலும், அவருக்கு உணவு கொடுக்காமலும் தடுத்து, அவர் தாமாகவே ஆலயத்தை விட்டு வெளியில் வரும்படி செய்து, அவருடைய சொத்துகளையெல்லாம் அபகரித்துக்கொண்டு அவரை கௌரவமாக ஓரிடத்தில் சிறைப்படுத்தி வைத்தார். அவர் அங்கிருந்து தப்பியோடி, 1234-ம் வருஷம், இறந்து போனர். இங்கிலாந்தை ஆண்ட சிறந்த ஜஸ்டிசியர்களில் அவரே கடைசியானவர்; இரண்டாவது ஹென்ரியிடம் இருந்து தேர்ச்சிபெற்ற துரைத்தன நிபுணர்களிலும் அவரே

கடைசியானவர். அவருக்குப் பிறகு அரசர் மைனர் பருவத்தைக் கடந்துவிட்டமையாலும், அவர் ஐரோப்பாக் கண்டத்திற்குப்போகும் அவசியமின்றி இங்கிலாந்திலேயே இருந்தமையாலும், ஜஸ்டிசியர் பதவியின் அவசியம் போய்விடவே, அதன் பிறகு, சான்சிலர் பதவியே எல்லா உத்தியோகங்களினும் மேலானதாகப் பிராபல்ய மடைந்தது. குரையா ரஜிஸினுடைய கடமைகளை எக்ஸ்செக்கர், கிங்க்ஸ் பெஞ்ச், காமன் பிளீஸ் என்ற மூன்று மன்றங்களும் பகிர்ந்து கொண்டனவாதலாலும், ஜஸ்டிசியருடைய கடமைகள் குறைந்து போய்விட்டன. ஹூபர்த் இங்கிலாந்து இங்கிலீஷ்காரருக்கே என்னும் தேசிய நோக்கம் கொண்டிருந்தவராதலால், உள்நாட்டில் துஷ்டர்களை அடக்கி, சட்டத்தையும், சமாதான வாழ்க்கையையும் நிலைநாட்டினாலும், பாப்பின் அக்கிரமத் தலையீடுகளையும், அயல்நாட்டாருடைய ஆக்கிரமிப்புகளையும், எதிர்த்தபடியே இருந்தார்; ஹூபர்த்திற்குப் பிறகு அந்தப் பதவியை வகித்தவர்கள் வெறும் சட்டப் பரீட்சைகளில் தேறிய வக்கீல்களே (லாயர்ஸ்). அவர்கள் லார்ட் சீப் - ஜஸ்டிஸ்(Lord Chief Justices)என்ற பட்டப்பெயர் பெற்றனர்.

ஹென்ரி III தாமே அரசுபுரிதல், பாரான்கள் கலகம்

ஹூபெர்த் விலகிய பிறகு, ஹென்ரியே துரைத்தன நிர்வாகத்தை வகித்து, 1232-ம் வருஷம் முதல், 1258-ம் வருஷம்வரையில், நடத்தினராதலால், அந்த இருபத்தாறுவருஷ காலமும் துராட்சிகாலமாகவே முடிந்தது. அதற்கு அவருடைய குணமே முக்கிய காரணமாயிருந்தது. அதுவன்றி, நாட்டில் அப்போது பல மாறுபாடுகள் [illegible] டுக் கொண்டிருந்தன. அவைகளுக்குத் தக்கபடி அரசரும் சரியான

மாறுபாடுகளைச் செய்ய வேண்டியவரா யிருக்க, அதை உணரும் தீக்ஷண்ய புத்தி அவருக்கில்லாமல் போனது இன்னொரு காரணமா யிருந்தது. வெற்றி கொண்ட வில்லியம், ஹென்ரி II ஆகிய இருவரும் ஏராளமாக வைத்திருந்த துரைத்தனத்தாருடைய சொந்த நிலங்களிலிருந்தும், உதவிப் பணங்கள் (Aids), ஸ்கூடேஜ் வரிகள் முதலியவற்றை மிகசாமர்த்தியமாக விதித்ததாலும், அபாரமான பொருளைச் சேர்த்துக் கொண்டிருந்தன ராதலால், அதன் மூலம் அவர்களுக்குப் பெரிதும் செல்வாக்கும் அதிகாரமும் ஏற்பட்டிருந்தன. ரிச்சறடு, ஜான் ஆகியோருடைய அதிதமான படாடோபச் செலவுகளால், அவர்கள் துரைத்தனத்தாருடைய சொந்த நிலங்களில் பெரும்பாகத்தை விரயம் செய்துவிட்டனர். உதவிப்பொருள்கள், ஸ்கூடேஜ் ஆகியவற்றை இராஜீய மகாசபையாருடைய சம்மதமின்றி அரசர் வசூலித்தல் கூடாதென்று மாக்னா சரத்தாவில் ஏற்படுத்தப் பட்டிருந்த நிர்ப்பந்தத்தை ஷை சரத்தாவை மறுபடி வெளியிட்டகாலத்தில் எடுத்துவிட்டன ராகுலும், கிரியாம்சையில், அரசர் குடியானவர்களுடைய விருப்பத்திற்கு மாறாய் அதை வசூலிப்பது பலியாத காரிய மாகிவிட்டது. எனவே, மூன்றாவது ஹென்ரிக்கு எப்போதும் பணத்தேவை இருந்துகொண்டே வந்தது. ஆகையால், அவர் கூலிச்சண்டையாட்களை அதிகமாக வைத்துக்கொள்ள மாட்டாதவராயிருந்தார். நாட்டில் ஏதேனும் கலகம் ஏற்படுமாகில், அதற்கு உள்நாட்டுச் சேனைகளுடைய உதவியிலேயே அவர் நம்பிக்கை வைக்கவேண்டியவரானார். ஆகவே, அவருடைய முக்கிய மந்திரி அரசருக்காக பலத்த ஒரு கட்சியாரை ஏற்படுத்தி நிரந்தமாக அவர்களுடைய ஆலோசனை அபிப்பிராயத்தைத் தேடிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மூன்றாவது ஹென்ரியும், அவ

ருக்குப்பின் அரசரானவர்களும் இந்த முக்கியமான அம்சத்தில் எவ்வளவு தூரம் வெற்றியடைந்தார்கள் என்பதிலேயே அவர்களது வெற்றி தோல்விகள் அடங்கியிருந்தன. இவ்வாறு அடிப்படையான காரணங்களால் ஹென்ரிக்குப் பண நெருக்கடி ஏற்பட்டது மாத்திரமன்றி, அவர் தமக்குத் தாமே செய்துகொண்ட பல காரியங்களாலும் அவருக்கு திரவிய சங்கடம் நிரந்தரமாய் ஏற்பட்டது. அவர் பிறருடைய விருப்பப்படி நடந்து எளிதில் ஏமாறிப்போகக் கூடிய சுலப சாத்தியமான மனிதர்; அதோடு, உற்றார், உறவினரிடத்தில் பற்றுதலோடு நடந்துகொள்ளும் நற்குணம் வாய்ந்தவர். அதுவன்றி, இங்கிலாந்தினது அரசரிடம் அபாரமான சம்பத்து குவிந்து கிடக்கிறது என்ற ஒரு பொய் வதந்தி இதர நாடுகளில் பரவி இருந்ததாகையால், அங்கு எவ்வித யோக்கியதையு மற்றிருந்தவர்களான பலர் பொருள் தேடும் பொருட்டு மூன்றுவது ஹென்ரியிடம் வந்து கூடலாயினர். ஹூபர்த் விலக்கப்பட்ட பிறகு, பீட்டர் - தேஸ் - ராசிஸ் என்பவர் அரசருக்குப் பிரதான மந்திரிபோ லிருந்துவந்தார். அவரே பாய்ட்டேளக்காரர். இங்கிலீஷ்காரர்களையும், அன்னிய நாட்டார்களையும் எந்த முறையில் ஹூபர்த் நடத்தினரோ அதற்கு நேர்மாறாக, பீட்டர் நடத்தத்தொடங்கினர். அவர் வந்தவுடனே அரசருடைய அதிகாரங்களுக் குள்ளடங்கிய இங்கிலீஷ் உத்தியோகஸ்தர்களையெல்லாம் விலக்கிவிட்டு; பாய்ட்டேள, பிரட்டனே, ஆகிய இடங்களைச் சேர்ந்த மனிதர்களையே கொணர்ந்து எல்லா உத்தியோகங்களிலும் நிரப்பிவிட்டதன்றி, இன்னம் தாம் வேறு எந்தெந்த வகைகளில் அவர்களுக்கு அநுகூலங்கள் செய்யக்கூடுமோ, அவைகளையெல்லாம் செய்யலானர். அவர் அவ்வாறு அரசருடைய சொத்துக்களை அன்னிய நாட்டாருக்கு வாரிவிட்டது இங்

கிலாந்து தேசத்து மக்களுக்கு அபாரமான உணர்ச்சியைக் கிளப்பிவிட்டது. பாரான்கள் பிரெஞ்சு பாஷை பேசக்கூடியவர்களாயிருந்தனரானாலும், அவர்களும், தங்களை இங்கிலீஷ்காரர்களாகவே மதித்து அதே மாதிரியான உணர்ச்சியையடைந்தனர். அரசரை எதிர்த்தவர்களில் முக்கியமானவர்களானசேஸ்தர் ஏயராளான ரானுள்ப் இறந்து போய்விட்டார்; பெம்ப்ரோக் ஏயராள் குமாரர்களில் மூத்தவரும் இறந்துவிட்டார். இளையவரான ரிச்சறட் மாரஷாள் என்பவரே அரசருக்கு விரோதமா யிருந்த கட்சியில் தலைமை வகிக்க வேண்டியவரானார். அவர் சிறந்த நற்குணமும், அபாரமான பராக்கிரமமும், தீக்ஷண்யமான இராஜீய ஞானமும், நிஷ்களங்கமான தேசபக்தியும் உடையவராயிருந்தார். அவரைத் தலைவராய்க்கொண்ட பாரான்கள், பீட்டர் - தேஸ்-ராசிஸ்ஸையும், இன்னும் மற்ற அன்னியநாட்டு துர்ப்புத்தி மந்திரிகளையும் அரசர் விலக்கித் துரத்தாவிட்டால், தாங்கள் தங்களுக்கு வேறொரு அரசரை நியமித்துக்கொள்ளப்போவதாகக் கூறி வெருட்டவே, அரசர் ரிச்சறட் மாரஷாள்மீது இராஜத்துரோகக் குற்றம் சுமத்தினர். அப்போது, ரிச்சறடு மாரஷாள் தமக்கு சமதையான பீர்களே தமது குற்ற விசாரணையை நடத்த வேண்டுமென்று கோர, அரசர், "இங்கிலாந்தில் பீர்களே இல்லையே" என்று மிக ஏளனமாக மறுமொழி கூறினர். அதைக் கேட்கவே, பிஷப்புகளும் பாரான்களோடு சேர்ந்துகொண்டு, அரசரோடிருந்த அன்னியநாட்டார் எல்லோரையும் மதப்பிரஷ்டர்களாக்கி யிருப்பதாய் விளம்பரப் படுத்தினர்கள். உள் நாட்டுப்போர் உடனே தொடங்கியது. 1233-ம் வருஷம், அக்டோபர் மாதம், மான் மௌத் என்ற இடத்தில் நடந்த போரில் ரிச்சறட் மாரஷாள்

அரசரைத் தோற்கடித்து விட்டார். ரிச்சறடு மாரஷாள் வேல்ஸ் அரசர்களையும் தமது கட்சியில் சேர்த்துக் கொண்டிருந்ததன்றி, அயர்லாந்துக்காரர்களையும் அரசருக்கு விரோதமாகக் கிளப்பிவிட முயற்சி செய்து கொண்டிருந்தார். அப்போது பீட்டர் ரிச்சறடுக்கு விரோதமாக அயர்லாந்தில் ஒரு கலகத்தைக் கிளப்பி, ரிச்சறடு அங்கே போகும்படியான சந்தர்ப்பத்தை உண்டாக்கினர். அவர் போயிருந்த காலத்தில், 1234-ம் வருஷம், அவ்விடத்தில் சிலர் அவரிடம் வஞ்சகமாக நடந்து அவரைக் கொன்றுவிட்டனர். அந்தக் கொலை பீட்டருடைய சதியாலோசனையினால் நடந்ததென்ற செய்தி அரசருக்கு எட்டவே, அவர் பயந்து நடுங்கிப்போய் விட்டார். அந்த சமயத்தில், அரச் பிஷப் உத்தியோகத்தை வகித்த எட்மண்ட் ரீஸ்(=இரீஸ் = பெரிய ஈசர்) என்பவரும் பிஷப்புகளுடைய கட்சியையே ஆதரித்து, அரசர் தக்க சிர்திருத்தங்களைச் செய்யாவிடில், அரசரையே மதப்பிரஷ்டராக்கத் தாம் தயாராயிருப்பதாகக் கூறி அச்சுறுத்தினர். ரீஸ் என்பவர் கல்வியறிவும் சீலகுணமும் வாய்ந்தவர்; அவர் ஆக்ஸ்போர்டில் ஆசிரியர் பதவி வகித்து பிராபல்ய மடைந்திருந்தவர்; இராஜீய விஷயங்களிலும் திறமை சாலி; அவருடைய பயமுறுத்தலை அசட்டை செய்ய மாட்டாமல் அரசர் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டு, பீட்டரை உடனே விலக்கி பிரபுக்களோடு சமாதானம் செய்துகொண்டார். எட்மண்ட் ரீஸ் என்பவர் பாய்ட்டௌக்காரர்களையும் விலக்கிவிட வேண்டுமென்று கேட்க, அது பெரும்பாலும் வீணாகவே முடிந்தது. அது பற்றி ரோமுக்குப் பலர் முறையீடுகள் அனுப்பிக் கொண்டனர். ஆனாலும் பாப்பு அந்த விஷயத்தில் தலையிடவில்லை. அரசர் பாய்ட்டௌக்காரர்களையும் விலக்கி யனுப்பிவிட்டார்.

அரசருடைய விவாகமும், அதன் பலனும்

பீட்டரும், பாய்ட்டௌக்காரர்களும் போன பிறகு அரசர் ஒழுங்கான நெறியைப் பின்பற்றுவதற்கு அவருக்கு சந்தர்ப்பம் வாய்த்ததானாலும், அதற்கு இடையூறாக ஒரு புதிய கூட்டத்தினர் உறவினர்களாக வந்து சேரவே, அவருடைய நிலைமை முன்னிருந்ததை விட அதிக சங்கடமானதாகிவிட்டது. 1236-ம் வருஷம், அரசர் தமது இருபத்தொன்பதாவது வயதில் பரவன்ஸ் கவுண்டான ராயமண்டு பேரிங்கர் என்பவருடைய அழகான நான்கு குமாரத்திகளில் இரண்டாவதான இளையன்னர் என்பவளை மணந்துகொண்டார். அவளுடைய குடும்பத்தாருடைய வம்சாவளியில் ஒரு சிறிய பகுதியை நாம் அடியில் குறிப்பிடுவோம்:—

சாவாயறடுகள், பரவன்கள் வம்சாவளி

ஆமதயஸ்
(சாவாய் கவுண்டு)

பீட்ரீஸ் = ராயமன்டு பேரிங்கர் (பரவன்கள் கவுண்டு)	பணிவேஸ் (of Savoy) கண்டர்புரி அரச் பீஷப்	இன்னும் பல பெண்களும் பிள்ளைகளும்

பீட்ரீஸ் = ராயமன்டு பேரிங்கர் (பரவன்கள் கவுண்டு):

மார்க்கரத் = லொவீஸ் IX (பிரான்ஸ் அரசர்)	இளையன்னர் = ஹென்ரி III (இங்கிலாந்தரசர்)	சங்கையா = ரிச்சறடு (of Cornwall) (ரோமன்ஸ் அரசர்)	பீட்ரீஸ் = சேரிஸ் (of Anjou) (ஸிஸிலி அரசர்)
பிலிப் III (பிரான்ஸ் அரசர்)	ஏட்வரட் I		

அரசப் பெருமாட்டியான இளையன்னர் வந்த காலத்தில், அவளோடு அவளுடைய சிறிய தகப்பன்மார்கள்,

மாமன்மார்கள் ஆகிய ஒரு பெரிய கூட்டத்தாரும் கூடவே வந்து சேர்ந்தனர். அவர்களுள் வில்லியம் (of Savoy) என்பவர் ஒருவர். அவர் வாலன்ஸ் என்ற இடத்திற்கு பிஷப்பாக வரிக்கப்பட்டிருந்தவர்; பணிவேஸ் (Boniface of Savoy), பீட்டர் (of Savoy) என்பவர்கள் மற்றிருவர்கள். இன்னும் ஏராளமான பரவன்களும் வந்திருந்தனர்; அவர்களுக்குத் தங்கள் நாட்டில் பிழைப்பிற்கு வழியில்லாமையால், இங்கிலாந்திலேயே ஹென்ரியினது தயவில் சுகமாக ஜீவிக்கலாமென்ற கருத்துடன் வந்து சேர்ந்தனர். இளையன்னர் தான் என்ற ஆணவமும், முன் கோபமும், மூர்க்கமான உணர்ச்சிகளும் உடையவள்; அவள் தன் புருஷரிடம் மிக உறுதியான பற்றுதலோடும், சிறந்த பதிவிரதா தருமத்தைக் கடைப்பிடித்தும் நடந்துகொண்டவள்; அவள் இங்கிலீஷ் பாஷையையோ, பழக்கங்களையோ சிறிதும் தெரிந்துகொள்ளாதவள். அவள் தனது புருஷரைத் தவிர, அவருடைய அரசியல் விஷயத்தைப்பற்றி சிறிதும் இலட்சியம் செய்தவளே யன்றுதலால், துரைத்தன நிர்வாக விஷயத்தில், அவள் அவருக்கு அற்பமும் உதவியானவளா யிருக்கவில்லை. அரசர் சாவாய் வில்லியத்தை, விண்சேஸ்தர் பிஷப்பாக்கினர்; சாவாய் பீட்டர், ரிஸ்மன்டு ஏயராள் ஆனார். 1245-ம் வருஷத்தில் கண்டர்புரி பிஷப்பான எட்மன்ட் ரீஸ் இறந்துபோகவே, சாவாய் பணிவேஸ் ,அந்தப் பதவிக்கு நியமிக்கப் பெற்றார்.

தைலிபோயரக் (Taillibourg), சேயின்றஸ் (Saintes) போர்கள்

அரசருக்கு இன்னம் வேறு பல புதிய உறவினர்களும் ஏற்பட்டனர். மூன்றுவது ஹென்ரியினது தாயான

இசைப்பிள்ளா என்பவள் ஜான் இறந்துபோன எதுவை வைத்துக்கொண்டு, தனது பழைய காதலரான ஹூ-டி-தே-லா மாற்சே (Hugh-de-la-Marche) என்பவரை மணந்து கொண்டு, ஏராளமான ஆண் பெண் குழந்தைகளைப் பெற்றிருந்தாள். 1242-ம் வருஷம், ஹேண்ரி III தாம் பெரிய மனிதர் என்பதை ஐரோப்பாக் கண்டத்தில் காட்டிக் கொள்ள வேண்டுமென்ற விருப்பங் கொண்டவராய், பிரான்ஸ் அரசரான ஒன்பதாவது லௌவீஸுக்கு விரோதமாகவும், ஹூ-டி-தே-லா-மாற்சேயிக்கு அநுகூலமாயும் படையெடுத்துச் சென்றார். அவர்கள் இருவருக்கும் சச்சரவு ஏற்பட்டதில், ஹேண்ரி III தம் தாயினது இரண்டாவது புருஷருக்கு உதவியாகப் போய்ச் சேர்ந்தார். அப்போது அவருடைய கஜானாவில் பண இருப்பு நிலைமை நிரம்பவும் கவலைக்கிடமானதா யிருந்தது. அவருடைய மந்திராலோசனை சபையார், அந்த சச்சரவில் தலையிட வேண்டாமென்று கூறினர். அதைப் பொருட்படுத்தாமல் அரசர் படையெடுத்துச் சென்றதில், தைலிபோயரக், சேயின்றஸ் என்னுமிடங்களில் தோற்றுப் போனதன்றி, எதிராளிகளிடம் கைதியாய்ப்போக இருந்த தருணத்தில், அவருடைய தம்பியான ரிச்சறடினது சௌரியத்தினால் காப்பாற்றப்பட்டார். அங்கிருந்து அவர் திரும்பிவந்த காலத்தில், பாய்ட்டௌவிலிருந்து, பல புதிய நண்பர்களையும், இசைப்பிள்ளாவின் பெண்களும் பிள்ளைகளுமான தமது ஒன்றுவிட்ட சகோதர சகோதரிமார்கள் பலரையும், வில்லியம் (of Valence) என்ற இன்னொருவரையும் அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தார். அவர்களுள் குவை என்பவர் ஏராளமான பணத் தொகைகளைப் பெற்றுக்கொண்டார்; வில்லியம் (of Valence) என்பவர் பேம்ப்ரோக் ஏயரான் பதவியைப் பெற்றார். எயில்மார்

(Ailmar = எழில்மால்), அல்லது, ஏத்தில்மார் 1250-ம் வருஷம், வின்சேஸ்தர் பிஷப்பாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அந்தப் படையெடுப்பினால் மூன்றாவது ஹென்ரிக்கு ஒரே ஒரு நன்மை யேற்பட்டது. தமக்கு பாய்ட்டௌவின் மீது எவ்வித உரிமையு மில்லையென்று அவர் திடமாக விட்டுக் கொடுத்துவிட்டார். அவர் கையணி (Guienne)யின் தலைவரசர் என்ற பட்டத்தைக் கொடுக்கப் பெற்றார்; அது காஸ்கனே என்ற ஜில்லாவிற்குமாயிற்று.

ஹென்ரி III பாப்பிற்குக் கடனாளியாவது

இந்த சந்தர்ப்பத்தில் ஹென்ரி III பாப்பிற்கு பெரிய கடன் தொகை கொடுக்கவேண்டிய ஓர் உபத்திரவம் வந்து சேர்ந்தது. ஜேரமன் சக்கரவர்த்தியான பிரடெரிக் II 1250-ம் வருஷத்தில் இறந்த பின், அவருடைய சந்ததியார் ஸிஸிலி, நேப்பிள்ஸ் ஆகிய நாடுகளை ஆளாதபடி அவைகளை வேறொருவருக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று பாப்பு இன்னசேயன்ட் IV கருதி, அவற்றின் முடியை, மூன்றாவது ஹென்ரியினது தம்பியும், காரன்வால் ஏயராளுமான ரிச்சர்டுக்கு சூட்டிவிடுவதாக அரசரிடம் பிரஸ்தாபித்தார். அரசருடைய ஸகோதரியை பிரடெரிக் சக்கரவர்த்தி மணந்து கொண் டிருந்தவராதலால், தமது சகோதரி குமாரனை தமது மருமானுக்குச் சேரவேண்டிய நாடுகளைத் தாம் அபகரிப்பது எச்சிற் கிடமானதென்று கூறி, அரசர் அதை மறுத்துவிட்டார். ஆனால், 1254-ம் வருஷத்தில், அரசருடைய அந்த மருமானும் இறந்துபோகவே, அதன்பிறகு, ஹென்ரி III, தமது இளைய குமாரரான எட்மன்டுக்கு அடி இரண்டு நாடுகளையும் பெற்றுக்கொள்ள இசைந்தார். ஆனால், அரசர் உடனே படையெடுத்துக் கொண்டு, அவ்வளவு தொலைவான

தூரத்திற்குப் போகமாட்டாதவராயிருந்தார். எனினும் பாப்பு உடனே படையெடுத்துச் செல்ல விரும்பி, தாமே போரை நடத்தி, அதற்குப் பிடித்த செலவுகளை யெல்லாம் ஹென்ரி (III)யினது கணக்கில் எழுதி வைத்துவிட்டார். அதை ஆட்சேபிக்க மாட்டாத அரசர் அந்தக் கடனை ஏற்றுக்கொண்டார். 1257-ம் வருஷத்தில் அரசர் பாப்பிற்குக் கொடுக்க வேண்டிய கடன் 135,000 பவுன் ஆயிருந்தது.

பாரில்லியமென்று (Parliament)

அரசருடைய நிலைமை சமாளிக்கக் கூடாத தாகிவிட்டது. அவருடைய துரைத்தனத்தில், அவரே பிரதான மந்திரியினது உத்தியோகத்தை வகித்து நடத்தினர். 1244-ம் வருஷத்திற்குப் பிறகு, அவருக்கு கஜானாத் தலைவரு மில்லை, சான்சிலரு மில்லை, ஜஸ்டிசியரு மில்லை. தம்முடைய குமாஸ்தாக்களது உதவியைக் கொண்டு அரசரே அத்தனை உத்தியோகங்களினது கடமைகளையும் கவனித்து வந்தார். அவர் அதிக திறமைசாலி யன்றாதலால், துரைத்தன நிர்வாகம் பெரிய குளறுபடையாக முடிந்துவிட்டது. எல்லாவற்றிற்கும் பணமில்லாமையே அடிப்படையான காரணமா யமைந்திருந்தது. அரசர் தமது சிப்பந்திகளுக்குப் பல மாதங்களாக சம்பளமே கொடுக்கவில்லை யாதலால், அவர்களில் பலர் வழிப்பறி நடத்தியதாகக் குற்றம் சுமத்தப்பெற்று தண்டனை யடைந்தனர். ஷயர்களிலிருந்த ஷிரீப்புகள் பணம்பிடுங்குவோராயும், நைட்களை ஒறுப்போராயும் ஆகிவிட்டனர். பிஷப்புகளுடைய தேர்தல் சம்பந்தமாக அரசர் சாப்தாக்காரர்களுடன் எப்போதும் தகராறு செய்தபடியே இருந்தார். அவருடைய அன்னிய நாட்டு சிகாக்கள் ஊரைக்கொள்ளையிட்டு, அட்டகாசம் செய்துகொண் டிருந்தனர். அவர்களுடைய

கருவமும், அகம்பாவமும் அதீதமாகப் பெருகிப் போயின. அவர்கள்மீது எந்தப் புகார் வந்தாலும், அவர்கள், "உங்கள் நாட்டு சட்டத்திற்கும் எங்களுக்கும் என்ன சம்பந்தம்? அது இங்கிலீஷ்காரர்களான அநாகரிக முட்டாள்களுக்காக இயற்றப்பட்டதல்லவா?" என்று உத்தரம் கொடுத்தார்கள். ஜானுடைய காலம் சீக்கிரத்தில் திரும்பிவிடுமோ என்று அஞ்சும்படியான நிலைமை ஏற்பட்டுப் போயிற்று. நாடு முழுதிலும் அதிருப்தி அதிகரித்துப் பரவிப்போயிற்று. ஆனால் சரியான தலைவர் இல்லாமையால், பாரான்கள் கலகம் விளைக்கத் துணியவில்லை. 1240-ல், அரச்பிஷப் எட்மன்ட் இறந்து போகவே, முதன்மையான செல்வாக்குடைய தலைவர் எவரும் ஏற்படவில்லை. வில்லியம் மாரஷானுடைய பிள்ளைகள் எல்லோரும் இறந்துவிட்டனர். ஹூபெர்த்-தே-பர்க் 1234-ல் இறந்துபோய் விட்டார். அரசருடைய தம்பியான ரிச்சறடு (of Cornwall) உண்மையில் திறமைசாலியாயும், இங்கிலீஷ்காரர்களிடம் பற்றுதலுடையவராயும் இருந்தாராதலால், அவர் தலைவராக வரக்கூடுமென்று பாரான்கள் எதிர்பார்த்தனராலும், அவர் அரசப் பெருமாட்டியான இலேயன்னருடைய தங்கையான சங்கையாளை மணந்துகொண்டுவிட்டாராதலால், அவரும் அன்னிய நாட்டார்களிடம் பாசம் உடையவராக மாறிப்போனர். 1235-ம் வருஷம் முதல் லின்கன் பிஷப்பாயிருந்தவரும், பாப்பினுடைய பணப்பறிப்புகளைப் பல தடவைகளில் எதிர்த்தவருமான ராபர்த் கராஸ் ஸித்தஸ்டீ (Robert Grosseteste) என்பவரும் 1253-ல் இறந்து போய்விட்டார். கண்டர்புரி அரச்பிஷப் பணிவேஸ் பெரும்பாலும் அயல் நாட்டிலேயே வசித்தமையாலும், அவரும் அன்னிய நாட்டாராதலாலும், அவரிடம் எந்த அநுகூலத்தையும் எதிர்பார்க்க இயலவில்லை.

எனவே, பாரான்கள் தங்களுக்குள் பொருமிக் கொண்டே யிருந்தனர். அரசர் அடிக்கடி பெரிய தேசிய சபையைக் கூட்டிக்கூட்டி, பணம் கேட்க, அவர்கள் முறையிட்டுக்கொள் ளப் பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அவ்வாறு கூடிய தேசிய சபைக்குப் பாரில்லியமன்று(Parliament; பார்=நாட்டினது, இல்லிய=இல்லிக=வீட்டார்களுடைய, மன்று= சபை, அதாவது, நாட்டினது வீட்டான்களுடைய மன்றம்?) 1155-ம் வருஷம் இற்றுலியில் கூடிய ஒரு மகா சபைக்குப் பிரடெரிக் பார்ப்ப ராசாவால் இந்தப் பெயர் முதன் முதலில் கொடுக்கப்பட்டதாம். 1244-ம் வருஷத்தில் கூடிய பாரில் லியமன்றிற்கு வந்திருந்த ஏயராள்கள், பாரான்கள், பிஷப்பு கள் ஆகியோர், அரசர் மந்திரிகளை நியமிக்கும் விஷயத்தில் தங்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டு, அதைச் செய்ய வேண்டு மென்று கோரினர். 1248-ம் வருஷம், கூடிய மகா சபையார், கஜானுத் தலைவர், சான்சிலர், ஜஸ்டிசியர் முதலிய உத்தியோகஸ்தர்களை மறுபடி நியமிக்கும்படி அரச ரிடம் கேட்டுக் கொண்டனர். 1255-ம் வருஷத்தில், அதே வேண்டுகோள் மறுபடி வற்புறுத்தப்பட்டது. அரசர் அதை மறுத்தார். ஆனுலும் அரசருடைய நிர்வாக ஏற்பாடுகளை சரிப்படுத்த தங்களுக்கு உரிமையுண்டு என்பதை தேச மக்கள் உணர்ந்து, மந்திரிகளே தங்களுக்கு உத்தரவாதி களா யிருக்கவேண்டு மென்ற கொள்கையை ஸ்தாபிக்க முயன்றது விசதமாகத் தெரிகிறது. அரசர் பணம் கேட்ட ஒவ்வொரு தடவையிலும், மகா சபையார், பெரிய உரிமைப் பட்டயங்களை அரசர் உறுதிப் படுத்தும்படி செய்வதற்கு ஏற்ற சந்தர்ப்பமாக அதைப் பயன்படுத்திக் கொண்டனர். ஆனுலும், அரசருடைய மனசாட்சி சந்தர்ப்பம் போல வளைந்து கொடுக்கக்கூடியதாயிருந்ததாகையால், அவர் தாராள

மாகப் பிரமாணிக்கங்களையும், உறுதிமொழிகளையும் செய்து கொடுத்தபடி தமது வழியிலேயே சென்றுகொண்டிருந்தார். நாட்டினது துரைத்தன நிர்வாகத்தை அரசப் பெருமாட்டியும், அரசருடைய தம்பியான (காரன்வால்) ரிச்சறடுமே கவனிக்கவேண்டியவர்களாயினர். அவர்களுடைய நிர்வாக காலத்தில், 1254-ம் வருஷத்தில், ஷயர்களில் உள்ள நைட்களும் பாரில்லியமன்றுக்கு வரவழைக்கப்பட்டனர். அவ்வாறு, தேசிய மகா சபைக்கும் ஸ்தல நியாயஸ்தலங்களுக்கும் சம்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அந்தத் தடவை கூடிய பாரில்லிய மன்றில் பாரான்கள் காஸ்கனைக்குப் போக மறுத்துவிட்டனர்; அரசர் பணம் கேட்டதையும் எல்லோரும் வெளிப்படையாகவே கண்டிக்கலாயினர். அரசர் தமது இரண்டாவது குமாரருக்கு ஸிஸிலியின் பட்டத்தைப்பெற, இணங்கியதிலிருந்தே, அரசருக்கு அவ்வளவு அதிதமான பணத்தேவை ஏற்பட்டிருந்த தென்பதை எல்லோரும் தெரிந்துகொண்டனர். அக்காலத்தில் ரிச்சறடு (of Cornwall) ரோமன் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமையால், அவர் 1257-ல் இங்கிலாந்தை விட்டுப் போய்விட்டார்.

சீமான்-தே-மன்ட்பரத் (Simon-de-Montfort) தேசியத் தலைவராகிறார்

அந்த நிலைமையில், சீமான்-தே-மன்பேரத் என்னப்பட்ட ஒருவர் பாரான்களுக்கு உரிய தலைவரானார். ஆனால் அவரும் அன்னிய நாட்டினரே. அவர் தம்முடைய தகப்பனுருக்குக் கடைசிக் குமாரர். தகப்பனர் தெற்கு பிரான்ஸ் நாட்டிலிருந்த அல்பிஜேன்சிஸ் (Albigensis) என்ற கிறிஸ்தவரல்லாதார்மீது குருசேடு யுத்தம் நடத்திப் புகழ்பெற்றவர். அவர், ஜானுடைய அரசாட்சி காலத்தில் இறந்துபோன

லெய்சேஸ்தர் ஏயராளுடைய சகோதரியின் புதல்வர்; அந்த ஏயராளுக்கு அவர் மருமானுயிருந்ததன்றி, அந்த சமஸ்தானத்திற்கு கூட்டு வார்சுதாரர் என்ற உரிமையுடையவராயுமிருந்தார். ஆனல், அந்த ஏயராள் இறந்த காலத்தில், இங்கிலாந்துக்கும், பிரான்ஸிற்கும் கடுமையான யுத்தம் நடந்துகொண் டிருந்தமையால், ஷை மருமான் தமது உரிமையைக் கோரத் துணியவில்லை. அந்த ஏயராளுடைய நிலங்கள், சேஸ்தர் ஏயராளான ரானுல்ப் என்பவருடைய பாதுகாப்பில் விடப்பட்டிருந்தன. அவர் சந்ததியில்லாமல் இறந்துபோனர். சீமானுடைய அண்ணனை ஆமையரி (Amaury) என்பவர் தமது வார்சுரிமையைத் தமது தம்பியான சீமானுக்கு மாற்றிவிடவே, ஹென்ரி III அவரை லெய்சேஸ்தர் ஏயரா ளாக்கினர். அவர் தேகபலமும், சுறுசுறுப்பான பழக்க வழக்கங்களும் உடையவர்; கல்வியறிவு வாய்ந்தவர்; தமது தந்தையைப்போல மதப்பற்றுதலும், தெய்வபக்தியும் உடையவர். அவருடைய காலத்திலிருந்த சிறந்த பிரமுகர்கள் எல்லோரிடத்திலும் அவர் நிரம்பவும் அன்னியோன்னியத் தன்மை வகித்திருந்ததே அவருடைய யோக்கியதாம்சங்களுக்குத் தக்க சான்ருயிருந்தது. 1238-ம் வருஷம் அவர் அரசருடைய தங்கையும், இளைய வில்லியம் மாரஷாளுடைய விதவையுமான இளையன்னரை, மணந்துகொண்டார். ஆனல் அரசரும், அவருடைய சகோதரரான ரிச்சறடும், சீமானை அவ்வளவாக மதிக்கவில்லை. 1240-முதல் 1242-ம் வருஷம் வரையில் சீமான் ஒரு குருசேடுக்குப் போயிருந்தார்; அங்கிருந்து வந்தபின் 1248-ம் வருஷம் வரையில் தமது மாளிகையில் அமைதியாக இருந்தார்; அப்போது அவருக்கு காஸ்கனே (Gascony)யினது கவர்னர் பதவி கிடைத்தது. ஆனல், அவர் நிரம்பவும் ஒழுங்கான

சுபாவ முடையவராதலால், காஸ்கனி நாட்டு முரட்டு மனிதர்களுடைய துஷ்டச் செய்கைகளைப் பொறுமல், அவர் அவைகளை நிரம்பவும் கண்டிப்பாய் அடக்க முயன்றார். ரிச்சறட் I சிறியவராயிருந்த காலத்தில், அவர் அந்தப் பதவியை வகித்தபோதும், இதே நிலைமை ஏற்பட்டது. அந்த நாட்டு துஷ்டர்கள் லௌவீஸினுடைய ஆட்சியை விரும்பாமல், ஹெண்ரியினது ஆட்சியை விரும்பியதற்கு முக்கியமான காரணம் பின்னவர் தொலைவான இடத்தில் இருந்தார் என்பதே. அத்தகைய இயல்புடைய மனிதர்களிடம் சீமான் சட்டத்தின்படி அமுல் நடத்தவே, அவர்கள் வெறுப்பும் ஆத்திரமும் அடைந்து, ஹெண்ரி III யினிடம் வந்து முறையிட்டுக் கொள்ள, அவர் அவர்களுக்குப் பரிந்து, 1254-ம் வருஷத்தில், சீமானை அந்தப் பதவியிலிருந்து விலக்கி விட்டார். அரசர் தம்மை அக்கிரமமாக விலக்கியதைப்பற்றிக் கோபமடைந்த சீமான் வெளிநாட்டிலேயே சொற்பகாலமிருந்துவிட்டு, 1257-ல், இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தார். வந்தவர், அரசருடைய ஒன்றுவிட்ட சகோதரரான வில்லியம் (of Valence) என்பவரோடு சச்சரவிட்டதன்றி, தேசியக் கட்சியினரான பாரான்களோடு சேர்ந்து கொண்டு, அரசருடைய துராட்சியைக் கண்டிப்பதில் முக்கியமான தலைமை ஸ்தானம் வகித்தார். அரசர் மீள மாட்டாதபடி கடனில் ஆழ்ந்திருந்தார். எல்லா வகுப்பாரும் அக்கிரமப் பண வசூலினது கொடுமையால் வருந்தினர். அன்னிய நாட்டார் அரசருடைய கோட்டைகளை வைத்துக்கொண்டு, சட்டம், நியாயம் எதையும் அசட்டை செய்தனர். அரச் பீஷப் பணிவேஸிடம், மதஸ்தாபனத்தார் எவ்வித அநுகூலத்தையும் எதிர்பார்க்க இயலவில்லை. ஆனால் பணிவேஸும், கடைசியில், பாப்பினது கொடுமையை சகியாமல், தேசீய மதஸ்தா

பணக் கட்சியை ஆதரிக்கலானார். 1257-ல், (இல்) லிவலேயன் (of Wales) இங்கிலாந்தரசருக்குச் சொந்தமான சில நிலங்களைக் கைவசப்படுத்திக்கொள்ள, அவரை வெல்ல, அரசராலும் அவருடைய குமாரராலும் இயலவில்லை. அதே வருஷத்தில் சாகுபடிக் குறைவினாலும், கொடிய மாரிகாலத்தினாலும் உண்டான பஞ்சம் ஒருபுறத்தில் ஜனங்களை ஒறுக்கலாயிற்று. அப்போது ஜேரமனியிலிருந்து வர்த்தகர்கள் கொணர்ந்த தானியங்களை அரசர் பிடுங்கி, அவைகளை அதிக விலைக்கு விற்கச் செய்ததும், அதே சமயத்தில் பாப்பினால் ஏற்பட்ட புதிய பணவசூல்களும் சகிக்க இயலாத துன்பங்களாய் முடியவே, சீமான்-தே-மண்டபர்த், க்ளௌசேஸ்தர் ஏயரானான ரிச்சறடு, வர்சேஸ்தர் பீஷப்பான வள்திர் (of Cantelupe) ஆகியோர் ஒன்றுகூடி, எல்லா வகுப்பார்களுடைய சார்பாகவும் அரசரிடம் சென்று, அந்த துராட்சியையும் குழப்பத்தையும் விலக்கும்படி கேட்க ஆயத்தமாயினர்.

மடப் பாரில்லியமன்று (Mad Parliament), ஆக்ஸ்போர்ட் திட்டங்கள் (Provisions of Oxford)

1258-ம் வருஷம், எப்ரல்மாதம், லண்டனில் தேசிய மகா சபையொன்று கூடியது. அது அரசருடைய நண்பர்களால் மடப் பாரில்லியமன்று என்று குறிக்கப்பட்டது. அப்போது பாதிரிமார்கள், ஜனங்களுடைய குறைபாடுகளடங்கிய ஒரு ஜாப்தாவை ஆஜர் செய்தனர். அந்த ஜாப்தா கராஸ் ஸித்த ஸ்டீயால் தயாரிக்கப்பட்டது. அரசர் முதலில் அதை எதிர்த்தார்; அவருடைய கட்சி ஓங்கவில்லை. ஆகவே, அவர்கள் கோரிய சீர்திருத்தங்களைச் செய்வதற்கு இணங்கினார். புது மாதிரியாக துரைத்தனத்தை நடத்த ஒரு திட்டத்தையும், செய்யவேண்டிய சீர்திருத்தங்களுக்கு ஒரு ஜாப்

தாவையும் தயாரிக்கும்படி இருபத்துநான்கு பேர்கள் நியமிக் கப்பட்டனர். அவர்களில் 12 பேர்களை அரசரும், 12 பேர் களைப் பாரான்களும் நியமித்தனர். அவர்கள் சுமார் ஒருமாத காலம் வரையில் அதேவேலையாக லண்டனில் இருந்து, திட் டத்தையும் ஜாப்தாவையும் தயாரித்தனர். மறுபடி அதே வருஷம், ஜூன் மாதம், 11-ம் தேதி, மடப் பாரில்லியமன்று ஆக்ஸ்போர்டு என்னுமிடத்தில் கூடியது. அப்போது பாரான் கள், வேல்ஸ் போரை வியாஜமாகச்சொல்லி, போர்க்கோலத் தோடு வந்திருந்து, பொதுஜனங்களுடைய குறைபாடுக ளடங்கிய ஒரு ஜாப்தாவை ஆஜர் செய்தனர். அவற்றில் இருந்தவைகளுள் முக்கிய மானவை: அரசருடைய கோட்டைகளையெல்லாம் அன்னிய நாட்டாருடைய ஆதி பத்யத்திலிருந்து பிடுங்கி, இங்கிலீஷ்காரர்களிடம் ஒப்பு விக்க வேண்டும், மைனர் வார்சுதாரிகள் எல்லோரையும் இங் கிலீஷ்காரர்களுக்கே வாழ்க்கைப் படுத்தவேண்டும், நீதி வழங்குவதில் தாமதம் கூடாது, அரசருடைய குடும்பத் திற்கு சாமக்கிரியைகள் வாங்குவதற்கு சரியான விலை கொடுக்கவேண்டும், காட்டுரிமைப் பட்டயத்தை அநுபவத் திற்குக் கொண்டுவர வேண்டும், அக்கிரமமான பியூடல் சேவை உதவாது, ஷீராப்புகளது கெடுதல்களை அடக்குவது, அதிக வட்டி வாங்கும் ஜீவு முதலியோரைப் பற்றியது, ஆகிய பலவகையான விஷயங்கள் அந்த ஜாப்தாவில் அடங்கியிருந்தன. தாம்எதிர்ப்பது பயனற்றதென்றுணர்ந்த ஹென்ரி அவைகளை ஏற்றுக்கொண்டார். ஜாப்தாவில் காணப்பட்ட முதலாவது விஷயமான கோட்டைகளை அன் னிய நாட்டார் உடனே அரசர் வசத்தில் விட்டுவிட வேண் டியதென்பதற்கு, அரசருடைய ஒன்றுவிட்ட சகோதரர் கள் இசையவில்லை. அவர்களை மீறி மற்றவர்கள் அந்தத் தீர்

மானத்தை நிறைவேற்றினர். உடனே அன்னிய நாட்டார் எல்லோரும் அந்த மன்றத்தை விட்டு விண்சேஸ்தர் என்ற கோட்டைக்குப் போய் ஒன்றுகூடினர். பாரான்கள் அந்த இடத்தை முற்றுகை போடவே, அன்னியர்களுடைய எதிர்ப்பு பயனற்றதாக முடிந்தது. ஜூலை மாத முடிவிற்குள் அவர்கள் எல்லோரும் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர். அவர்கள் கொண்டுபோன பொருள்களினது மொத்தப் பெறுமானம் சுமார் 6000 மார்க்ஸ் ஆகலாம். அவர்கள் போனது, சீர்திருத்தங்கள் நிறைவேற்றும் விஷயத்தில் ஏற்பட்டிருந்த முக்கியமான இடையூறு நீங்கியதுபோலாயிற்று. அரசர் நற்பெயரெடுக்க அவருக்கு மறுபடியும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. இருபத்துநான்குபேர்கள் ஒரு கமிட்டியாக நியமிக்கப்பட, அவர்கள் 1258-ம் வருஷம், ஜூலை மாதம், ஆக்ஸ்போர்டில் கூடி திட்டங்களைத் தயாரித்தார்கள். எனவே, அவைகள் ஆக்ஸ்போர்ட் திட்டங்கள் என்று குறிக்கப்படுகின்றன. அவைகள் அடியில் வருவன :—(1) குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக இருபத்துநான்கு பேர்களடங்கிய தற்காலிகமான ஒரு குழுவினர் (Committee), (2) அரசருக்கு யோசனைகள் சொல்வதற்காக பதினைந்து பேர்களடங்கிய நிரந்தரமான மந்திராலோசனை சபையார் (3) இப்பதினைந்து பேர்கள் பிப்ரவரி, ஜூன், அக்டோபர் ஆகிய மாதங்களில் ஒருவருஷத்திற்கு மூன்றுதடவைகளில் பாரில்லியமன்றைக் கூட்டி, பாரான்களுடைய பிரதிநிதிகளான பன்னிரண்டு பேர்களோடு கலந்து ஆலோசனைகள் செய்ய வேண்டும். அடிக்கடி பாரில்லியமன்றுக்கு எல்லாப் பாரான்களும் வருவதில் ஏற்படும் பணச்செலவு இல்லாமல் போகும்பொருட்டு அவர்கள் தங்களுக்குள் பன்னிருவரைப் பிரதிநிதிகளாக நியமித்தனுப்பினர். இவர்கள் அரசருடைய நிரந்தர மந்திரா

லோசனையாரான பதினைந்துபேர்களையும் வருஷத்தில் மேலே குறித்தபடி மும்முறை சந்தித்து, நிர்வாக விஷயங்களைப் பற்றிப் பேசினர். (4) வரி யிலாகாவை கவனிப்பதற்காக இருபத்து நால்வர் அடங்கிய இன்னொரு குழுவினரும் அமைக்கப்பட்டனர். முழுப்பாரிஸ்லியமன்றினாலும் நியமிக்கப்பட்ட குழுவினர் மதஸ்தாபனம், பணவுதவி ஆகியவை சம்பந்தமான சீர்திருத்தங்களை கவனிப்போராயினர். நிரந்தரக் கமிட்டியில் முக்கியமானவர்கள் கண்டர்புரி அரச் பிஷப், வர்சேஸ்தர் பிஷப், க்ளௌசேஸ்தர் ஏயரான், லெய்சேஸ்தர் ஏயரான் ஆகியோர். இங்கிலாந்தினது ஜஸ்டிசியர், சான்சிலர், அரசருடைய கோட்டைகளின் கவர்னர்கள் ஆகியோர் அரசருடைய நிரந்தர மந்திராலோசனை சபையாருடைய சம்மதி, அல்லது, அநுமதி யில்லாமல் தாங்கள் எந்தக் காரியத்தையும் செய்யமாட்டோ மென்று பிரமாணிக்கம் செய்ய வேண்டியவர்களாயினர். ஷீரப்புகளும், மற்ற துரைத்தன உத்தியோகஸ்தர்களும் ஒரே ஒரு வருஷத்திற்குத் தான் உத்தியோகம் வகிக்க வேண்டுமென்றும், வருஷ முடிவில் தங்கள் கணக்குகளை ஒப்புவிக்க வேண்டுமென்றும் விதிசெய்யப்பட்டது. இந்த ஆக்ஸ்போர்ட் திட்டங்களைப்பற்றி வெளியிடப்பட்ட அறிக்கை லத்தின் பிரஞ்சு, இங்கிலீஷ் ஆகிய மூன்று பாஷைகளில் வெளியிடப்பட்டன. நார்மன் வெற்றிக்குப் பிறகு முதன்முதலில் இங்கிலீஷில் வெளியிடப்பட்ட அறிக்கை இதுவே. இதுவரை எல்லாம் நார்மன்-பிரெஞ்சு, அல்லது, லத்தீன் பாஷையிலேயே வெளியிடப்பட்டன. இவ்வாறு ஏற்பட்ட அரசியலமைப்பு ஆளிக அரசு (Oligarchy) என்பது நிச்சயமாகத் தெரிந்தது. அதாவது பெரிய சமஸ்தானாதிபதிகள் பலர் சேர்ந்து ஆளுவதாயிற்று. ஆனால், அப்போது அரசருடைய சுயேச்சாதிகாரத்தைக் கட்

டுப்படுத்தவே அந்தப் புதிய ஏற்பாடு செய்யப்பட்டதன்றி, அந்த நிரந்தர மந்திராலோசனை சபையாரே நேரில் எல்லா அதிகாரங்களையும் வகிக்கச் செய்யவேண்டுமென்ற கருத்துடனல்ல. அயல் நாட்டார் துரத்தி விடப்பட்ட பின்னர், அரசரும், அவருடைய குமாரரும் அந்தப் புதிய அரசியலமைப்பின்படி நடந்துகொள்வதாகப் பிரமாணிக்கம் செய்ய வற்புறுத்தப்பட்டனர். அடுத்த வருஷம் ரிச்சறுடு அரசர் இங்கிலாந்திற்கு வந்த காலத்தில், இதேபோல, அவர் பிரமாணிக்கம் செய்தபிறகே, கப்பலிலிருந்து அவர் இறங்க அநுமதித்தனர்.

கட்சிகள், கலகாஸ்பதங்கள், பாரிஸ் உடன்படிக்கை

இந்த ஏற்பாடு 1258-ம் வருஷம் முதல் 1263-ம் வருஷம் வரையில் சற்றேறக்குறைய திருப்திகரமாகவே அநுஷ்டிக்கப்பட்டது. அதற்குள், இரண்டு கட்சிகள் ஏற்பட்டு விட்டனவாதலால், அது உள்நாட்டுப் போரில் முடிந்தது. க்ளௌசேஸ்தர் ஏயராளுக்கும், லெய்சேஸ்தர் ஏயராளான சீமானுக்கும் ஒருவருக்கொருவர் பொறாமை ஏற்பட்டுப் போனதே முக்கியமான ஒரு காரணம். க்ளௌசேஸ்தர் ஏயராளைத் தலைவராகக்கொண்ட கட்சியார் ஆளிக அரசுக் கட்சியார்; அன்னிய நாட்டார் துரத்தப்பட்டுப் போனதோடு அவர்கள் திருப்தியடைந்து விட்டனர். மற்ற சீர்திருத்தங்களை நிறைவேற்ற அவர்கள் ஆவல் கொள்ளவில்லை. நாட்டினது துரைத்தன நிர்வாகம் தங்களிடத்தில் இருந்ததே போதுமானதென்று அவர்கள் கருதினர். சீமானைத் தலைவராகக் கொண்ட கட்சியார் பரந்த தேசிய நோக்கமுடையவர்கள். அவர்கள் கொடுங்கோன்மையே நாட்டில் இராமல் செய்துவிட வேண்டுமென்று கருதினவர்கள். கொடுங்

கோன்மை அரசருடையதோ, பாரான்களுடையதோ, அன்னிய நாட்டார்களுடையதோ, எவருடையதா யிருந்தாலும், அதை அறவே ஒழித்துவிடவேண்டும் என்பதே சீமான் கட்சியாருடைய கொள்கை. 1259-ம் வருஷத்தில், நிரந்தரப் பதினைவரும், பன்னிருவரும் ஒரு முக்கியமான தீர்மானத்தை நிறைவேற்றினர். அரசர் தம்முடைய குடியானவர்களுக்கு என்னென்ன விதிகளை அனுஷ்டிப்பதாய் உறுதி செய்துகொடுத்திருக்கிருரோ, அவ்விதிகளை யெல்லாம், தாங்களும் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களது விஷயத்தில் அநுஷ்டிக்க, தாங்களும், தங்கள் சந்ததியாரும் கட்டுப்படுவதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது சீமானுடைய கட்சியார் மற்ற பாரான் கட்சியார்மீது அடைந்த ஒரு பெரிய வெற்றிபோலாயிற்று. 1259-ம் வருஷம், ஹென்ரி III, பிரான்ஸ் அரசரான ஒன்பதாவது லெளவீஸோடு நிரந்தரமான ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளவேண்டுமென்ற கருத்துடன் பாரிஸுக்கு முகதாவில் சென்றிருந்தார். அப்போது சீமானும் அரசருடன் போயிருந்தார். அச்சமயம், இரண்டு அரசர்களுக்கும், டிசம்பர் மாதம், 4-ந்தேதி, ஓர் உடன்படிக்கை நடந்தது. அது பாரிஸ் உடன்படிக்கை என்று குறிக்கப்படுகிறது. அதன்படி ஹென்ரி III, நார்மண்டி, அஞ்சௌ, பாய்ட்டௌ ஆகியவற்றின் உரிமையை லெளவீஸுக்குக் கொடுத்துவிட்டு, சானல் தீவுகளை மாத்திரம் வைத்துக்கொண்டார். அவை இப்போதும் இங்கிலீஷ்காரருடைய ஆட்சிக்குள்பட்டிருக்கின்றன. ஹென்ரி III காஸ்கனைத் தகையரசர் என்ற ஹோதாவில் பிரான்ஸ் அரசருக்கு பியூடல் வணக்கம் செலுத்தினர். இவைகளுக்குக் கைம்மாருக லெளவிஸ் ஏராளமான பணமும், தம்முடைய அநுபவத்திலிருந்தவை

யான, காஸ்கனேயின் சில நாடுகளேயும் ஹென்ரிக்குக் கொடுத்தார். இவ்வாறு அரசர் பிரான்ஸிற்குப் போயிருந்த காலத்தில், இளவரசரான எட்வரடும், இங்கிலாந்தின் நைட்ஸ்களும் வந்து நிரந்தர மந்திராலோசனை சபையாரைக் கண்டு, அவர்கள் வாக்களித்திருந்த சீர்திருத்தங்களேச் செய்யும்படி வற்புறுத்த, 1259-ம் வருஷம், அக்டோபர் மாதத்தில், வெஸ்ட்மின்ஸ்டர் திட்டங்கள் என்று சில சீர்திருத்தங்கள் வெளியிடப்பட்டன. அக்காலத்தில் எட்வரடு சீமானேடு ஒற்றுமையாகவே நடந்துகொண்டிருந்தார். ஆனல் சில புதிய உபத்திரவங்கள் உண்டாயின. ஹென்ரி III லௌவீஸோடு செய்துகொண்ட உடன்படிக்கை சீமான் மனதிற்கு முற்றிலும் அதிருப்திகரமானதாகப் பட்டதாகையால், அதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லே. இளவரசர் தமது தந்தையோடு ஒத்துப்போய்விட்டாராதலால், ஷை உடன்படிக்கை காரணமாய் சீமானுக்கும் இளவரசருக்கும் வேற்றுமை ஏற்படலாயிற்று. அப்போது, 1262-ம் வருஷத்தில், க்ளோசேஸ்தர் ஏயரானான ரிச்சறடு இறந்துபோகவே, அவருடைய குமாரரும், பத்தொன்பது வயதடைந்திருந்தவருமான, கீள்பரத் (Gilbert) என்னும் புதிய ஏயராள் சீமானுக்கு அன்னியோன்னிய நட்பினராகிவிட்டார். அந்தசமயத்தில் அரசதர்பாருக்கும் துரைத்தன நிர்வாகிகளுக்கும் பகைமை ஏற்பட்டுக்கொண்டே வந்தது. ஆக்ஸ்போர்ட் திட்டங்கள், உண்மையில் அரசருடைய மனத்திற்கு ஒவ்வாதவைகளாயிருந்தன. அதுவன்றி, அவர் செய்த பிரமாணிக்கத்திலிருந்து அவரை மந்திர பூர்வமாக விலக்கியிருப்பதாக முறையே இரண்டு பாப்புகள் ஸ்ரீமுகம் அனுப்பி இருந்தனர். வேல்ஸில் ஹென்ரியும், எட்வரடும், துஷ்டர்களான லார்ட் மாரசர்ஸ் (Lord Marchers) தங்களுக்கு உதவி செய்வார்களென்று

நம்பியிருந்தனர். சீமான் வேல்ஸ் அரசரான லீவலேயனைத் தம்கட்சியில் சேர்த்துக்கொண்டிருந்தார். இவ்வாறு நிலைமை ஒரே குளறுபடையா யிருந்த காலத்தில், 1263-ம் வருஷம், டிசம்பர் மாதத்தில், இருதரத்தாரும் ஒருவித முடிவிற்கு வந்தனர். தங்களுடைய வழக்கை லேளவீஸுக்குத் தெரிவித்து, அவருடைய மத்தியஸ்தத் தீர்மானத்தின்படி இரு சாராரும் நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து, அதன்படி செய்தனர். 1264-ம் வருஷம், ஜனவரி மாதத்தில், பிரான்ஸ் அரசர் தமது தீர்ப்பை வெளியிட்டார். அது மைஸ் ஆப் ஆமயன்ஸ் (Mise of Amiens) என்று குறிக்கப்படுகிறது. பாப்புகள் ஆக்ஸ்போர்ட் திட்டங்களை ரத்து செய்து விட்டபடியால், அவைகளைத் தாமும் ரத்து செய்வதாயும், ஆனல் ஹென்ரி III எந்த அரசபட்டயத்தையோ, உரிமையையோ, சட்டத்தையோ மீறி நடந்து கொள்ளுதல் கூடாதென்றும் ஈரொட்டாகத் தீர்ப்புக் கூறிவிட்டார். அந்தத் தீர்ப்பு இரண்டு கட்சிக்காரர்களுக்கும் அதிருப்திகரமாக முடிந்தது. அவ்வாறு மத்தியஸ்தமும் பலிதமடையாமற் போகவே, யுத்தமே கடைசியான பரிகாரமாக முடிந்தது.

உள்நாட்டுப்போர், லவஸ் யுத்தம் (Battle of Lewes)

பிரஞ்சு அரசருடைய தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதாக சீமான் ஒப்புக் கொண்டிருந்தா ராஞலும், அவர் அதை அங்கீகரிக்க விரும்பவில்லை. பாரான்கள் பெரும்பாலோரும், லண்டன், சிங்க்போர்ட்ஸ் முதலிய இடங்களினது மகாஜனங்களும் அதற்குக் கட்டுப் படவுமில்லை, அதை ஒப்புக்கொள்ளவுமில்லை யென்பதே சீமானுடைய சமாதானம். அவருடைய கட்சியில், வர்சேஸ்தர் பிஷப்பான கண்டிலப் (Can-

telupe) என்பவருடைய மருமானும், ஹேயர்போர்ட் பிஷப்புமான தமஸ், பிஷப்பு முதலிய மத ஸ்தாபனத்தார்களுள் தேசியக்கட்சியார், வேல்ஸ் அரசரான லிவலியன்-அப்-கிரிவித், லண்டன், சிங்க் போர்ட்ஸ் ஆகிய இடங்களின் மகாஜனங்கள், பரையர்ஸ் (Friars) ஆகியோருடைய ஆதரிப்பு ஏற்பட்டிருந்தன. தேவான் (Devon), காரன்வால் (Cornwall), முதலிய வடக்கு நாடுகளும், வேல்ஸ் மாராசஸ்களும் அரசருடைய கட்சியில் சேர்ந்திருந்தன. ஆனால் அரசருடைய கட்சிக்கு, அவருடைய மூத்த குமாரரான லாற்டு எட்வரடே பிரபலஸ்தரா யிருந்தார். அவருக்கு இருபத்து நான்கு வயது நிரம்பியிருந்தது. அவர் சௌரியவானுயிருந்ததன்றி, இராஜீய விஷயம், போர் நடத்துவது முதலியவற்றில் அவருக்கு நல்ல அநுபவமும் ஏற்பட்டிருந்தது. 1254-ல், அவர் காஸ்தில் இளையன்னரை விவாகம் செய்து கொண்டவுடன், அரசர் சேஸ்தர் ஏயராளிடம், அயர்லாந்து, காஸ்கனி, சானல்தீவுகள், வேல்ஸில் அரசருக்குச் சொந்தமான இடங்கள் ஆகியவற்றைத் தமது மூத்த குமாரருடைய வசத்தில் விட்டிருந்தார். அதாவது, அரசருடைய நிலங்களில், அதிக உபத்திரங்கள் ஏற்படக்கூடிய இடங்கள் யாவும் இளவரசரிடம் ஒப்புவிக்கப் பட்டிருந்தன. அவ்விடங்களில் அவருடைய கவனம் அதிகமாகச் சென்று கொண்டிருந்ததாகையால், அவர் தமது தந்தையினது தகராறுகளில் அதிகமாகத் தலையிடாமலும், அவைகளைத் தெரிந்து கொள்ளாமலும் இருந்தாராதலால், சீமானுக்கும், க்ளௌசேஸ்தருக்கும் வேற்றுமை ஏற்பட்ட காலத்தில், இளவரசர் சீமானுக்கு அநுகூலமானவரா யிருந்தார். அவர் அம்மாதிரி இருந்தது. அரசருடைய மனதைப் புண்படுத்தியது. ஆகவே இருவரும் சிறிது காலம் வேற்றுமை யடைந்திருந்தனர். முடி

வில், போர் மூண்ட காலத்தில், இளவரசர் தமது தந்தையினது கட்சியிலேயே சேரவேண்டியவ ரானார். அதற்கு சில காரணங்களும் ஏற்பட்டன. அவருடைய பழைய பகைவரான வேல்ஸ் லிவலேயனுக்கு சீமான் தமது குமாரியை மணம் புரிவிக்க இசைந்தது ஒரு காரணம். க்ளௌசேஸ்தர் ஏயரான் இறந்த பின், அவருடைய குமாரர் இளவரசருக்கு பியூடல் வணக்கம் செலுத்த மறுத்துவிட்டார். அது பற்றி, இளவரசர் அரசருடைய தயவை நாடவேண்டியவ ரானார். இது இரண்டாவது காரணம். அவருடைய தாயான அரசப் பெருமாட்டியை லண்டன் பட்டணத்து ஜனங்கள் அவமரியாதையாக நடத்தியது மூன்றாவது காரணம். அதன் விவரம் அடியில் வருமாறு: அரசப் பெருமாட்டி டவரில் (Tower) வசித்துக் கொண்டிருந்தாள். போர் ஆரம்பமான வுடன், தேம்ஸ் ஆற்றில் மேல் நோக்கிச்சென்று, விண்டேசர் கோட்டையை அடைய முயற்சித்த காலத்தில், லண்டன் மகா ஜனங்கள், அரசப்பெருமாட்டியை நோக்கிக் கற்களை வீசி, அவளை சூனியக்காரியென்று வைது கூச்சலிட்டு, அவள் இருந்த படகில் மலத்தைக் கொட்டி, பெரிய கற்களைப் போட்டுப் படகைக் கவிழ்த்துவிட முயன்றதன்றி, அவள் லண்டன் பாலத்தைக் கடந்து செல்லவிடாமல் தடுத்துவிட்டனர். எட்வர்ட் இளவரசர் தமது தாயிடம் நிரம்ப வாஞ்சையுடையவ ராதலால், இந்த அக்கிரமச் செய்கை அவருடைய கோபாவேசத்தைக் கிளப்பிவிட்டது. ஆகவே, அவர் போரில் தமது தந்தையினது கட்சியில் சேர்ந்துகொண்டார்; அரசருடைய தம்பியான ரோமன்ஸ் அரசர் ரிச்சறடும், வாரண ஏயராளும் அரசருடைய கட்சியில் சேர்ந்து கொண்டனர்.

1264-ம் வருஷம், மே மாதம், 14-ம் தேதி, லவஸ் என்னுமிடத்தில் போர் நடந்தது. பட்டணத்திற்கு வடக்கிலிருந்த

கோட்டைக்கெதிரில் எட்வரட் தமது சேனைகளை அணி வகுத்து நின்றார்; ரிச்சறட் நடுமத்தியில் இருந்தார்; அரசர் தெற்கில் பேரியாருடைய மடாலயத்திற்கெதிரில் தமது சேனைகளுடன் நின்றார். அரசருக்கெதிரில் சீமானுடைய குமாரர்கள் இருந்தனர்; க்ளௌசேஸ்தர் ஏயராள் ரிச்சறடுக் கெதிரிலிருந்தார். லண்டன் பட்டணத்தார் எட்வரடுக்கு எதிரில் இருந்தனர். அரசருடைய கட்சியில் அயல்நாட்டு வில்லாளிகளும், போர்த் தொழிலில் தேறிய அநுபவசாலி களான சண்டையாட்களும் இருந்தனர். சீமானுடைய கட்சி யில் இருந்தவர்கள் எல்லோரும் அப்போதே போருக்காகப் பொறுக்கப் பட்டவர்கள். சீமான் தெய்வபக்தி யுடையவரா தலால், அவருடைய ஆட்கள், மார்பிலும், முதுகிலும் வெள் ளைச்சிலுவை அடையாளங்களை அணிந்து கொண்டிருந்த தன்றி, போர் தொடங்குவதற்குமுன்னர் முழந்தாள் மண்டி யிட்டுத் தொழுகை நடத்தினர். அவர்களுக்கெதிரில் இருந்த எட்வரட் இளவரசர் தமது தாயினது விஷயத்தில் லண் டன் ஜனங்கள் செய்த அக்கிரமத்திற்காக அவர்களை தண் டிக்க தமக்கு சரியான சந்தர்ப்பம் வாய்த்ததுபற்றி மகிழ்ச்சி யடைந்தவராய், மிக உக்கிரத்தோடு தமது ஆட்களை ஏவி, தமக்கெதிரில் இருந்த லண்டன் மகா ஜனங்களைத் துரத்த ஆரம்பித்தார். அவர்கள் தோற்றுப் பின்வாங்கி நாலா பக் கங்களிலும் சிதறி யோடவே, எட்வரடு தமது கோபாவேசத் தில், சுமார் நான்குமயில் தூரம் அவர்களைத் துரத்தி, வெட் டிப் பிளந்து துண்டாடி ஒருவரைக் கூட உயிரோடு விடா மல் சுமார் 3000 ஜனங்களைக் கொன்று தீர்த்துவிட்டுத்திரும் பிப் போர்க்களத்திற்கு வந்து சேர்ந்தார். அதற்குள் அர சருக்குத் தோல்வி ஏற்பட்டுப் போயிருந்தது. சீமானுடைய மற்ற சேனைகள் அரசருடைய சேனைகளை முறியடித்து அர

சரை சிறைப்படுத்திவிட்டன. ரிச்சறடு ஓடி ஒளிந்துகொண்டார். எட்வரடும் கைதியானார். சீமான், எட்வரடை லண்டன் கோபுரத்திலும் (Tower), ரிச்சறடை தோவரிலும் பந்தோபஸ்தாக சிறைவைத்து, ஹென்ரியை விட்டுவிட்டார். இந்தப்போரில் அரசருடைய கட்சி சந்தேகத்திற் கிடமில்லாமல் தோற்றுப்போயிற்று. அதற்கு மறுநாள் மைஸ் ஆப் லவஸ் (Mise of Lewes) என்ற மத்தியஸ்த ஏற்பாட்டின்படி அரசர் ஏழு நிபந்தனைகளுக்கு இணங்கினார். ஆக்ஸ்போர்ட் திட்டங்களைத் தாம் உறுதிப்படுத்துவதாகவும், மந்திராலோசனை சபையில் அன்னியரை நியமிக்காமல் இங்கிலீஷ்காரர்களையே நியமிப்பதாகவும், லெய்சேஸ்தர், க்ளௌசேஸ்தர் ஏயரான்களை மன்னிப்பதாகவும், லார்ட் மாரசர்ஸ்கள் நல்ல நடத்தையாய் இருப்பதற்கு ஜாமீனாக, இளவரசரான எட்வரடையும், அரசருடைய மருமானான ஹென்ரியையும் அரசர் நபர்ஜாமீனாகக் கொடுப்பதாகவும் நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டு அரசரால் அங்கீகரிக்கப்பட்டன. மற்ற விஷயங்களை மத்தியஸ்தர்களைக்கொண்டு தீர்மானிக்க வேண்டுமென்றும் ஏற்பாடுசெய்தனர். அப்போது இராஜ்யத்தின் அதிகாரம் முழுதும் சீமானிடத்திலேயே இருந்ததாகையால், அவர் உடனே தமது பாரில்லியமன்றைப் புதுப்பித்து தமது நிலைமையை பலப்படுத்திக்கொள்ள முயன்றார்.

1265-ம் வருஷத்துப் பாரில்லியமன்று

1264-ம் வருஷம், ஜூன் மாதம், ஒரு பாரில்லியமன்று கூட்டப்பட்டது. ஒவ்வொரு ஷயரிலுமிருந்த சுயாதீனக் குடியானவர்கள் நான்கு நான்கு நைட்கள் விதம் பிரதிநிதிகளை அனுப்பினர். அவ்வாறு கூட்டப்பட்ட மன்றில், ஒரு புதிய துரைத்தனத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் பாரான்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பிரதிநிதிகள் ஒன்பது அங்கத்தினர்களை நியமிக்க, அவர்களும் அரசரும் ஒன்றாயிருந்து துரைத்தனத்தை நடத்துவதுஎன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த வருஷத்தில் நடத்தப்பட்ட பாரில்லியமன்றிற்கு நைட்கள் வரவழைக்கப் பட்டதும், தேசிய மந்திராலோசனைக் கூட்டத்தாருள் அவர்களும் சேர்ந்தவர்களென்று கருதப்பட்டதும், புதுமையான விசேஷங்கள். இதோடு 1258-ம் வருஷத்துக் குழுவுக்கள் ரத்தாகிப்போயின. 1258-ம் வருஷத்து திட்டம் பாரில்லியமன்றின் வரம்பைக் குறுக்கியது; 1264-வது வருஷத்து திட்டம் ஷை வரம்பை விரிவுபடுத்தியது. பாரான்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று புதிய பிரதிநிதிகள் சீமான் - தே - மண்ட்பரத், க்ளௌசேஸ்தர் ஏயரான்,சிசேஸ்தர் பிஷப் ஆகியோர்களாவர். அப்போது சீமானுடைய நிலைமை உறுதியானதா யிருந்ததானாலும் இன்னம் சில இடையூறுகள் நேரக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. வேல்ஸ் எல்லையிலிருந்த மாரசர்ஸ் அரசர் பொருட்டு போர் நடத்த அப்போது யுத்த முஸ்தீபுகளுடனேயே இருந்தனர். பாப்பு அரசருடைய கட்சியை உறுதியாய் ஆதரித்தாராதலால், அவர் மதப் பிரஷ்டம் முதலிய பாணங்களைத் தொடுக்கக் கூடியவரா யிருந்தார். அரசப் பெருமாட்டியான இளையன்னரும், அவளது உறவினர்களும்பிரான்ஸ் கடற்கரையில் ஒரு சேனையை ஆயத்தப்படுத்தி வைத்துக்கொண்டு, இங்கிலாந்தின்மீது படையெடுக்க சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தனர். அவைகளைக் கருதி சீமான்நாட்டினது மகா ஜனங்கள் எல்லோரையும் ஒன்றுபடுத்தித் தமக்கு உதவியாகத் திரட்டுவதே சரியானயுக்தியென்று எண்ணி,1265-ம்வருஷ ஜனவரி மாதத்தில் ஒரு பாரில்லியமன்றைக்கூட்டினார்.

ஷயர்கள், பட்டணங்கள், பட்டயங்கள் பெற்ற சுயாதீன நகரங்கள் ஆகியவற்றிலிருந்தும் பிரதிநிதிகள் வரவழைக்கப் பட்டனர். ஒவ்வொரு ஷயரிலிருந்து இரண்டு நைட்களும், சீமானுக்கு அநுகூலமாயிருந்த முக்கியமான பட்டணங்கள், சுயாதீன நகரங்கள் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலிருந்தும் இரண்டிரண்டு பிரதிநிதிகள் ஆகியோர் வரவழைக்கப் பட்டனர். இவ்வாறு பட்டணங்களிலிருந்து பிரதிநிதிகள் வரவழைகப்பட்டது இதுவே முதல் தடவை. பாரில்லியமன்று என்பதன் அர்த்தத்தின்படி கவனித்தால், இது உண்மையில் பூர்த்தியான பிரதிநிதித்வம் அமைந்த மகாசபை அல்லவென்றே நாம் கருதவேண்டும். பாரான்களுடைய கட்சியை ஆதரித்த மகாஜனங்கள் சம்பந்தப்பட்ட வரையில் அது பிரதிநிதித்வம் வாய்ந்ததென்பது உண்மையே. சீமான் தமது கட்சியினது அநுகூலத்தைக் கருதி இவ்வித யுக்தியைக் கடைப்பிடித்தாராலும், ஷயர்ஸ்திஸ்தலங்களேயும், மத்திய துரைத்தனத்தையும் சம்பந்தப்படுத்துவது, பாரில்லியமன்று வளர்ச்சியடைவதில் ஒரு முக்கியமான அம்சம் என்பதை முதன் முதலில் உணர்ந்த முக்கியஸ்தர்களுள் சீமான் ஒருவர். அதற்கு முன் ஹென்ரி ஷயர்களிலிருந்து நைட்ஸ்களே வரவழைத்து, அவர்களுடைய யோசனைகளேக் கேட்பார்; அல்லது, அவர்களால் அனுப்பப்பட்ட புகார்களேப் பற்றி விசாரிப்பார்; அரசருக்குப் பணம் தேவையாயிருந்தாலும், வர்த்தக விஷயமாக யோசனைகள் கேட்க வேண்டியிருந்தாலும், பட்டணங்களிலிருந்தும், சுயாதீன நகரங்களிலிருந்தும் பிரதிநிதிகளேப் பல தடவைகளில் வரவழைத்திருக்கிறர். ஆனல் சீமான் செய்தது புதுமையான காரியம். அவர் வரிவிதிப்பது முதலிய காரியங்களுக்காக அவர்களே வரவழைக்கவில்லே. பல வகைப்பட்ட வகுப்பினரையும் தேசியக்

கூட்டுக்கட்சியில்சேர்க்கவும், துரைத்தன விஷயத்தைப்பற்றி அவர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்ளவுமே அவர் வரவழைத்தார். மாக்கன சரத்தாவுக்குப் பிறகு அரசருடைய அதிகாரம் கட்டுப்படுத்தப் பட்டிருந்தது. ஆனால், பிஷப்புகளும், பாரான்களும் மாத்திரம் அரசருடைய அதிகாரத்தைக் கட்டுப்படுத்துதல் போதாதென்றும், சிறிய மிராசுதார்கள், வர்த்தகர்கள், இன்னம் சாதாரண நிலைமையிலுள்ளவர் ஆகியோரும் சேர்ந்து கட்டுப்படுத்த வேண்டுமென்பதையும் முதன் முதலில் தெரிந்துகொண்ட அபார பிரக்யாதி சீமான் தே-மன்ட் பர்த் என்பவருக்கே உரியது. அவரால் செய்யப்பட்ட ஏற்பாடு அவ்வளவு சம்பூர்ணமான தல்லவானாலும், பட்டணங்கள், சுயாதீன நகரங்கள் ஆகியவற்றின் உரிமையை ஒருதரம் ஒப்புக்கொண்ட பிறகு, அதை அசட்டை செய்வதென்பது முடியாததாயிற்று, இவ்வாறு கூட்டப்பட்ட பாரில்லியமன்று, லவஸ் உடன்படிக்கையினது ஏற்பாடுகளை உறுதிப் படுத்தியது.

சீமானுடைய வீழ்ச்சி, ஈவஸ்ஹாம் யுத்தம், அதன் முடிவு

ஆனால் சீமானுடைய அதிகாரம் குறைவதாகத் தோன்றியது. அவர் அபாரமான திறமைசாலி யென்பது உண்மையானாலும், வேறு எவரும், அவரோடு அதிககாலம் நீடித்து வேலை செய்வதென்பது கூடாமல் இருந்தது. அவரிடம் சுயநல நாட்டம் சிறிதும் இல்லை யென்று கருதக் கூடாமல் இருந்தது. அதுவன்றி அவர் மூர்க்கமான கோபங் கொள்ளும் தன்மை வாய்ந்தவர்; அவர் மற்றவருடன் ஒத்துப்போவதுமில்லை. அவருடைய பிள்ளைகள் க்ளௌசேஸ்தர் ஏயராளான கிள்பரத்துக்கும், அவருடைய உறவினர்

களுக்கும் கோபமுண்டாகும்படி அடிக்கடி மூர்க்கத்தனமாக நடந்துகொண்டது அவர்களுடைய தந்தைக்கும் பிறருக்கும் ஏற்பட்டிருந்த வேற்றுமையை அதிகப்படுத்தியது; அதுவன்றி இளவரசரான எட்வரட் தேசியக்கட்சியை உண்டாக்குவதிலும், மனிதர்களைத் தமது வசப்படுத்திக் கொள்வதிலும், தம்மைவிட அபார சாமர்த்தியம் வாய்ந்தவரென்பதை சீமான் உணரத்தொடங்கினர். க்ளௌசேஸ்தர் ஏயராளுடைய தம்பியான தமஸ் (of Clare) என்பவருடைய பாதுகாப்பில் எட்வரட் சிறைப்படுத்தப் பட்டிருந்தார். அவருடைய அநுசரணையின்மேல் எட்வரட் சிறையிலிருந்து தப்பியோடி, க்ளௌசேஸ்தர் ஏயராளுடன் சமாதானம் செய்துகொண்டு, தாம் சட்டத்தைப் பாதுகாப்பதாகவும், கெட்ட வழக்கங்களை விலக்கிவிடுவதாகவும், அன்னிய நாட்டாரை ஒட்டிவிடுவதாகவும், இங்கிலீஷ்காரர்களைக் கொண்டே தாம் இங்கிலாந்தை ஆளுவதாகவும் உறுதி மொழி கூறிப் பிரமாணிக்கம் செய்து கொடுத்தார். எட்வரடும் க்ளௌசேஸ்தரும் சேர்ந்து கொண்டார்கள் என்பது தெரியவே, பாரான்களது கட்சி பூர்த்தியாகப் பிரிந்துபோய்விட்டது. எட்வரடு கட்சியில் பலமான சேனைகள்வந்து சேர்ந்து கொண்டன. சீமானுடைய குமாரர்களும், அவரை அண்டியிருந்தவர்களும் தவிர, மற்றவர்கள் எல்லோரும் சீமானுடைய கட்சியைவிட்டுப் போய்விட்டனர். போர் தொடங்கியவுடனே எட்வரடின் கட்சிக்கு வெற்றி கிடைப்பது நிச்சயம் என்பது உறுதிப்பட்டுப் போயிற்று. எட்வரடு சீமானுடைய குமாரர்களையும் அவர்களுடைய சேனைகளையும் கனல்வரத் (Kenilworth) என்ற இடத்தில் அழித்து நாசப்படுத்திவிட்டு, 1255-ம் வருஷம், ஆகஸ்ட் மீ, 4உ, ஈவஸ்ஹாம் என்ற இடத்தில் சீமானுடைய சேனையை வென்று, அவரை

யும் கொன்று வீழ்த்திவிட்டார். அவ்வாறு சீமான் கொல்லப்பட்டதற்கு முன்னர், தோற்றுப்போனதாக சரணாகதியடையும்படி அவரிடம் எட்வரட் கேட்க, அவர் மறுத்துவிட்டார். அப்போது பின்புறத்தில் இருந்து எவரோ அடிக்க, சீமான் கீழே வீழ்ந்தார். அவ்வாறு வீழ்ந்த தேசபக்தரும், இராஜீய நிபுணருமான சீமான், "இதுவும் கடவுளுடைய கருணையே!" என்ற வாக்கியத்தோடு தமது உயிரை நீத்தார். அவருடைய சரீரமும், அவரது குமாரர்களுடைய சரீரங்களும் கண்டதுண்டமாய் வெட்டி நாசமாக்கப்பட்டன. ஆனால் ஈவஸ்ஹாம் என்னுமிடத்திலிருந்த பக்திமான்களான துறவிகள், சீமானுடைய சரீரத்தை எடுத்து அடக்கம் செய்தனர். நெடுங்காலம் வரையில், ஜனங்கள், "நற்குணவானை சீயர் சீமானைக்" குறித்துப் பேசும்போதெல்லாம், அன்போடும், பயபக்தியோடும் குறித்ததன்றி அவரை ஒருபெரிய தியாகியாக மதித்தனர். அவரோடு தேசீயக் கட்சி கலைந்து போய்விட்டது. அந்த யுத்தத்தில் இரண்டு கட்சிகளும் சமபலமுடையவைகளன்றாதலால், அதை நாம் ஒரு கட்சிச் சண்டையென்றே குறிக்கவேண்டும். ஆயினும், எட்வரடு போர்த்திறமை வாய்ந்தவரென்பதையும், லவஸ் யுத்தம் அவருக்கு நற்புத்தி புகட்டிவிட்டதென்பதையும் அது தெளிவுபடுத்தியது. ஆனால், அவர் அதோடு போரை நிறுத்துவதே அமைதியை உண்டாக்குவதற்கு சரியான மார்க்கமென்பதை மறந்துவிட்டார்; வெஸ்ட்மின்ஸ்தர் என்னுமிடத்தில் கூடிய ஒரு பாரில்லியமன்றில் அரசருடைய கட்சியார் எல்லோரும் சேர்ந்து, தங்கள் எதிரிகளுடைய நிலங்களை யெல்லாம் பறிமுதல் செய்துவிட்டதாகத் தீர்மானம் நிறைவேற்றினர். அந்தத் தீர்மானத்தினல் பாதிக்கப்பட்டவர்கள் மேண்

மேலும் கலகத்தை வளர்த்து, கனல்வர்த், எல்லி முதலிய பல இடங்களில் சண்டை செய்யலானார்கள். கடைசியாக, ஏட்வரடுக்கு நற்குணம்திரும்பவே, அவர் கனல்வர்த் தக்த்தம் (The Dictum of Kenilworth—தக்த்தம் = தத்தம் ?) என்னப்பட்ட ஏற்பாட்டினால், கலகக்காரர்கள், நிலத்தின் ஐந்து வருஷ வருமானத்தை அபராதமாகச் செலுத்தி நிலத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியதென்று உத்தரவு பிறப்பித்தார். லிவலியன்-அப்-கிரிபித் என்பவர் அப்போதும் போரை நிறுத்தாமல் நடத்தவே, சண்டையால் அலுத்துப் போன ஏட்வரடு அவரது விஷயத்தில் தயாளமாக நடந்து, ஷூரவ்ஸ்புரி என்னுமிடத்தில் 1267-ம்வருஷம், செப்டெம்பர் மாதம், சமாதானம் செய்துகொண்டார். லிவலியன் வேல்ஸ் இளவரசர் என்றும், அந்த நாட்டிலிருந்த மற்ற தலைவர்கள் எல்லோருக்கும் அவர் அதிபதியென்றும் அங்கீகரிக்கப்பட்டார். அவர் கைப்பற்றிய நாடுகள் அவருக்கே கொடுக்கப்பட்டுப் போயின. சீமானுடைய கட்சிக்காரர்கள் எல்லோரினும் இவர் ஒருவரே வெற்றி பெற்றவர்போல் கௌரவிக்கப்பட்டார். லண்டன் பட்டணம் கனல்வர்த் தக்த்தத்திலிருந்து விலக்கப்பட்டது. அதனுடைய பட்டயம் ரத்துசெய்யப்பட்டது. மேயரும், மற்றவர்களும் ஏராளமான தொகை கொடுத்து, தங்கள் தங்கள் சிறையை விலக்கிக்கொள்ள வேண்டியவர்களாயினர். பட்டணத்திலிருந்த எவனும் போர்க் குதிரையை வைத்துக்கொள்ளக் கூடாதென்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சீமானுடைய கட்சியை ஆதரித்ததற்காக லண்டன் நகரத்தின்மீது 230,000 பவுன் அபராதம் விதிக்கப்பட்டது.

பாரான்களுடைய யுத்தத்தினால் ஏற்பட்ட நிரந்தரமான பலன்கள்

ஏட்வரடு தமது தந்தைக்கு முற்றிலும் மாறான சுபாவமுடையவர்; தமது தந்தையின் செய்கைகளால் நேரிட்ட விபரீத சம்பவங்களிலிருந்து, அவர் ஆழ்ந்த அநுபவஞானம் வாய்ந்தவராகிவிட்டார். சீமானுடைய கொள்கைகளில் நிரந்தரமாக நன்மை பயக்கக் கூடியவைகளை அவர் அசட்டை செய்யாமல், அவைகளுக்குத் தக்க பரிகாரங்கள் தேடி விட்டார். அதன் பிறகு அன்னிய நாட்டாருடைய ஆதிக்கம் இல்லாமலே போய்விட்டது. பாரான்களுடைய சண்டையிலிருந்து, பாப்பு எல்லோர்க்கும் மேலான அதிபதி என்னும் உரிமையும் ஒழிந்துபோனதுபோலாயிற்று. தேசிய மகா ஜனங்கள் எல்லோருடைய பிரதிநிதிகளடங்கிய பாரில்லிய மன்று ஏற்பட வேண்டுமென்பதும், அரசருடைய மந்திரிமார்கள் அவர்களுக்கு உத்தரவாதிகளாயிருக்க வேண்டுமென்பதும் தேசிய வாதிகளது பிரதான உபதேசமாயிருக்க வேண்டுமென்பதும் தெளிவுபட்டது. முடிவாக 1267-ம் வருஷம், மார்ல்பரோ (Marlborough) என்ற இடத்தில் கூடிய ஒரு பாரில்லியமன்றில், 1258-ம் வருஷத்து திட்டங்களில் பெரும்பாலும் சட்டமாக்கப்பட்டுப் போயின. அது மார்ல்பரோ ஸ்டாச்சூட் என்று குறிக்கப்படுகிறது.

கடைசிக் குருசேடு, ஹென்ரி(III)யினது மரணம்

இவ்வாறு சட்டம் செய்யப்பட்ட பின்னர் நாடு அமைதி யடைந்தது. ஹென்ரியினுடைய கடைசிக் காலத்தில் நாடும் சுபிக்ஷமடைந்தது. தந்தை, பெயருக்கு மாத்திரம், அரசரா யிருந்தாரேயன்றி, ஏட்வரடே துரைத்தன நிர்வாகம் முழுதையும் வகித்து தேசியக் கட்சியாருடைய

நோக்கத்தை அநுசரித்து மிகத் திறமையாக நடத்திக் கொண்டு போனார். நாட்டினது நிலைமை முற்றிலும் நிர்ப் பயமானதா யிருந்ததால், 1270-ல்,எட்வரடு நாட்டை விட்டு குருசேடுக்குச் சென்றார். அந்தக் குருசேடை ஏற்பாடு செய்தவரான பிரான்ஸ் அரசர் வழியில் இறந்துபோய் விட்டாராதலால், அவர்கள் எவ்வித நன்மையையும் செய்ய இயலவில்லை. அவர் அவ்வாறு அயல் நாட்டில் இருந்த காலத்தில், 1272-ம் வருஷம், நவம்பர் மீ, 16உ, ஹென்ரி III இறந்துபோய் விட்டார். அவருடைய சவம் வேஸ்ட் மின்ஸ்தர் அப்பேயில் அடக்கம் செய்யப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட சங்கடங்களுக்குப் பெரும்பாலும் ஜானுடைய அக்கிரமச் செய்கைகள் உத்தரவாதமானாலும், இவருடைய திடமற்ற சுபாவத்தினால் பாரான்களோடு பகிரங்கமான சச்சரவுகள் ஏற்பட்டன. இவர் இறந்தகாலத்தில் பாரான் களுடைய கட்சி அடக்கப்பட்டுப் போனதானாலும், அன் னிய நாட்டு சகாக்கள் இங்கிலாந்தில் கும்பல்கூட இடமில் லாமல் போயிற்று, அதன்பிறகு பாப்பும் தமது ஆதிபத்யத் தைப்பற்றி உரிமை கொண்டாடவில்லை. சீமான்-தே-மன்ட் பரத்தினுடைய தேசியப் பாரில்லியமன்றக் கொள்கையும் அடுத்த அரசாட்சியில் பலன் தருவதாயிற்று.

தாமினிகன்ஸ் (Dominicans), பரன்சிஸ்கன்ஸ் (Franciscans) முதலியோர் வருதல்

இந்த அரசருடைய காலத்தில், முக்கியமான வகுப் பார் சிலர் இற்றலி முதலிய இடங்களிலிருந்து இங்கிலாந் திற்கு வந்து குடியேறினர். 1220-ல் வந்தவர்கள் தாமினி கன்ஸ் (Dominicans) என்பவர்கள். அவர்கள் கல்வியறி வுடையவர்களா யிருந்ததன்றி, ஜனங்களுக்கு உபதேசம்

செய்வோ ராயுமிருந்தனர். 1224-ம் வருஷத்தில், வந்தவர்கள் பரன்சிஸ்கன்ஸ் (Franciscans) என்பவர்கள். இவர்கள் முக்கியமாய் கிறிஸ்துமதப் பிரசாரகர்கள். இவ்விரு வகுப்பாரும் பரையர்கள் (பர+ஐயர்=பரையர், பரப்ரம்மத்தை வழிபடுவோர்?) இவர்கள் ஏழைமக்களுக்குக் கல்வியறிவு, பாரமார்த்திக ஞானம், ஜனசார ஒற்றுமை முதலியவைகளை போதிக்கும் திருப்பணியில் ஈடுபட்டவர்கள். பட்டணங்களில் நெருக்கடியான இடங்களில் அடைந்திருந்த ஜனங்கள், அசட்டை செய்து விலக்கப்பட்ட ஏழைகள், ஜாதி கெட்டவர்கள் ஆகியோர், பசியாலும், நோய்களாலும் பீடிக்கப்பட்டு வருந்தாமல், அவர்களுக்குத் தக்க உதவிகள் புரிந்து, அவர்களை ஒழுங்குப்படுத்தும் பரோபகார காரியத்தையும் இவர்கள் ஏற்றுக்கொண்டனர். அதன்பொருட்டு, ஜன நெருக்கடியான இடங்களில் அவர்கள் வசித்து, ஜீவகாருண்யம், பரோபகாரம் முதலியவற்றிலேயே தமது வாழ்நாட்களைச் செலவிட்டு, தங்களுக்குத் தெரிந்திருந்த மருந்துகளைக் கொண்டு நோயாளிகளைக் காப்பாற்றி, தாங்களே ஆசார சீலங்களைக் கடைப்பிடித்துக் காட்டியும், உபதேசம் புரிந்தும், ஜனங்களுடைய சமூக வாழ்க்கை நிலைமை அபிவிருத்தி யடையச் செய்தனர். கிறிஸ்து மதப்பிரசாரம், ஜனோபகாரம் ஆகியவை சம்பந்தமாக, அவர்கள் செய்த பொதுநலம் விலை மதிப்பற்றது. பாப்பாள் நன்சீயா மருதன் (Papal Nuncio Martin) என்பவர் பாப்பின் பிரதிநிதியாக இங்கிலாந்திற்கு வந்து பணப்பறி நடத்திய காலத்தில், மதஸ்தாபனத்தாரும், மற்றவர்களும் ஒன்று கூடி ஆக்ஷேபித்த போழ்து, தலைமை வகித்த லின்கன் பிஷப்பான ராபர்த் கராஸ் ஸித்தஸ்டீ என்பவர், 1224-ம் வருஷம், இந்தப் புதிய கூட்டத்தார்களுக்கு றெக்தர் (Rector=இறைக்

கத்தர்) பதவி வகித்து ஆக்ஸ்போர்டில் உபந்நியாசம் புரிந்தார். ரோம் மதஸ்தாபனத்தார் இங்கிலாந்திலிருந்து அக்கிரமமாகப் பணம் பறித்ததைத் தடுக்கும் விஷயத்திலும் இவ்விரு ஜீவகாருண்யக் கூட்டத்தாரும் முயற்சித்தனர். அப்போது ஆக்ஸ்போர்டில் பிரபல உபாத்தியாயரா யிருந்தவரும், லின்கன் பிஷப்பினது ஆப்த நண்பருமான ஆதாம் (Adam of Marsh) 1236-ல் பரன்சிஸ்கன் வகுப்பில் சேர்ந்து கொண்டவர். அவர் சீமானுக்கும், அரசருக்கும் யோசனைகள் சொல்பவர். அவர் தத்துவ சாஸ்திர அபிவிருத்திக்குக் காரணமா யிருந்தவர். ராஜர் பேகன் (Roger Bacon) என்பவரும் இக்காலத்தில் இருந்தவரே. அவர் 1214-ல் பிறந்து, ஆக்ஸ்போர்ட், பாரிஸ் ஆகிய இடங்களில் கல்வி பயின்றவர். அவர் 1250ம் வருஷவாக்கில் பரன்ஸிஸ்கன் வகுப்பில் சேர்ந்து துறவியானவர். அவர் தத்துவ சாஸ்திரம், இயற்கைசாஸ்திரம் முதலியவற்றில் சிறந்த நிபுணர். அவர் வெடிமருந்து, பூதக்கண்ணாடி முதலிய பல புதிய வஸ்துக்களை உற்பத்தி செய்தவர்.

அஞ்சவன் ஆட்சியில் இங்கிலாந்தினது நிலைமை (1145—1272)

(1) இராஜீயம்: இரண்டாவது ஹென்ரியினால் ஸ்தாபிக்கப்பட்ட உறுதியான சட்ட ஆட்சி ஸ்தல சுய ஆட்சியைச் செவ்வைப் படுத்தியதே யன்றி அதை துர்ப்பலப்படுத்தவில்லை. ஜான் காலத்தில் நார்மண்டி இழக்கப்பட்டதனால், நார்மன்கள் தாங்களும் இங்கிலீஷ்காரர்களே என்று எண்ண வேண்டியவர்களாயினர். பார்லிமென்றை உண்மையில் பிரதிநிதித்வம் வாய்ந்ததாக்க வேண்டுமென்ற கருத்தோடு ஸைமான் செய்த முயற்சி, நாட்டினது பல பாகங்களை

யும் ஒன்றுபடுத்தவும், எல்லாம் பரஸ்பர சம்பந்த முடைய வையென்று உணரவும் செய்தது. அரசருடைய மந்திரிகளை நியமிக்கும் அதிகாரம் யாரிடத்தி லிருக்கவேண்டு மென்பதைப்பற்றி பாரில்லியமன்று நீண்டகாலம் சச்சரவு நடத்த வேண்டியதாயிற்று. முடிவில் அந்த விஷயத்தில் அரச ருக்கே வெற்றி ஏற்பட்டது. ஆனால் மந்திரிகள் அவர்க ளுடைய நடவடிக்கைகள் சம்பந்தமாகத் தங்களுக்கு உத் தரவாதிகளா யிருக்கவேண்டு மென்பதை பாரில்லியமன்றார் நிலை நாட்டினார்கள். அவ்வாறு, உண்மையான இராஜீய அதிகாரம் பாரில்லியமன்றாருடைய வசத்திற்கு வந்து நிலைத்தது. (2) மதஸ்தாபனம்:—இந்தக் காலத்தில் மதஸ் தாபனத்தாருடைய அதிகாரம், செல்வ நிலைமை ஆகியவை பெருகின. ஸ்டீவன் லங்க்தான், பீஷப் ஹூ ஆசியோர் நாட்டின் சுயாதீனத்தைப் பாது காப்பதற்காகத் துணிந்து நின்று போராடியது, இங்கிலாந்தினது மதஸ்தாபனத்தா ருக்குப் பொதுஜனங்களிடம் செல்வாக்கும் பற்றுதலும் ஏற் பட ஏதுவாயிருந்தது. பறையர்ஸ் (Friars) என்னும் ஜீவகா ருண்ய வகுப்பார் இங்கிலாந்திற்கு வந்தது ஏழைமக்களுக்கு அபாரமான நன்மையாக முடிந்தது. அவர்களுடைய உதா ரணத்தைப் பின்பற்றி பிறர் பள்ளிக்கூடங்கள், வைத்திய சாலைகள், தொழுகை ஸ்தலங்கள் முதலியவற்றை ஏற்படுத்து வது, அடிமைத்தனத்தை நிவர்த்தி செய்து வைப்பது முத லிய பரோபகாரச் செய்கைகளில் ஈடுபட்டனர். இவ்வாறு பறையர்களால் ஸ்தாபிக்கப்பட்ட கலாசாலைகளே ஆக்ஸ் போர்ட் சர்வகலாசாலையாயின. (3) பட்டணங்களும், வர்த் தகமும்:—இங்கிலாந்தில் லண்டனே எல்லாவற்றையும்விடப் பெரிய பட்டணமாகப்பெருகிவிட்டது. 1156-ல் அது தலைமை நகரமாயிற்று; அதற்கு இருபது வருஷத்திற்குப் பிறகு

லண்டன் கருங்கல்பாலம் கட்ட ஆரம்பிக்கப்பட்டு முடிவடைய, 33 வருஷகாலம் பிடித்தது. லண்டனுடைய வர்த்தகம், சரித்திரம் ஆகியவை சம்பந்தமாய், லண்டன் கல் பாலம் மிகப் பிரபலமடைந்தது. பாரில்லியமன்றும், பெரிய மந்திராலோசனைக் குழுவும் அடிக்கடிலண்டனில் கூட ஆரம்பித்தன. வர்த்தகர்கள், தொழிலாளிகள் ஆகியோருடைய கூட்டுச் சங்கங்கள் ஏற்பட்டன. இது போல, இன்னம் இதர பட்டணங்களும் வர்த்தகமும் பிரர்பல்யமடைந்தன. (4) பாஷை, இலக்கியம் முதலியவை :—இந்தக் காலத்தில் இங்கிலாந்தினது ஜனத்தொகை 3,000,000க்கு எட்டியது. டேனிஷ் பாஷையும், நார்மன் பிரெஞ்ச் பாஷையும் சுத்தமான இங்கிலீஷ் பாஷையும் ஒன்றுயிருந்து பழகப் பழக, இங்கிலீஷ் பாஷையினது விகுதிகள் பல விலக்கப்பட்டுப்போயின. அதனால் நார்மன்கள் இங்கிலீஷ் பேசுவது சுலபமாயிற்று. இங்கிலீஷ் பாஷை வடக்கு நாடு, மத்திய நாடு, தெற்கு நாடு, ஆகிய மூன்றிடங்களில் வேறுபட்டிருந்தது. இந்தக் காலத்தில் சுவாரஸ்யமாக நூல் இயற்றியவர் ஜியாவரை (of Monmouth) என்பவர். இவர் 1154ல் இறந்து போனர். இவர் பிரிட்டன்களுடைய சரித்திரம், அல்லது, காணைகள் (Chronicle or History of the Britons) என்ற நூலை இயற்றினர். இது ஆதிகாலத்து வீரர்கள் முதலியோரது புராணம். இந்தக் காலத்தில் ஆரம், அல்லது, ஆரமன் (Orm or Ormin) என்னும் பாதிரியார் ஒருவர் ஆரம் உளம் என்ற காவிய நூலை இயற்றினர். இது சுமார் 1215-ம் வருஷம் எழுதப்பட்டது. இதில் இங்கிலீஷ் சொற்களில் விகுதிகள் பெரும்பாலும் விலக்கப் பட்டிருக்கின்றன. இந்தக் காலத்தில், க்ளௌசேஸ்தர் ராபர்த் என்பவர் ஒரு பிரபல நூலாசிரியர். இவர் புண்ணியசீலர்களது ஜீவிய சரித்திரங்கள், இங்கி

லாந்து சரித்திரம் ஆகிய நூல்களைக் காவியமாக எழுதி யிருக்கிறார்.

ஹென்றி III அரசாட்சியில் நிகழ்ந்த முக்கியமான சம்பவக் குறிப்புகள் :—

1216 ஹென்ரி முடிசூடல், பாப்பினது பிரதிநிதிக்கு வணக்கஞ் செய்தல்.

1217 லின்கன் சந்தைக்கடை, சாந்த்லீச் கடற்போர், லாம்பத்து உடன்படிக்கை.

1219 வில்லியம் மாரஷான் மரணம்,

1227 அரசருடைய மைனர் பருவம் நீங்குவது, பீட்டர்—தேஸ்—ராசீஸ் துருசேடுக்குப் போவது, ஹுபர்த் ஜஸ்டிசீயரா யிருப்பது.

1229 அரச்பீஷப் ஸ்டீவன் லங்க்த்தான் மரணம்.

1232 ஹுபர்த் விலக்கப்படுதல்.

1236 அரசர் இலேயனரை மணப்பது.

1238 அரசருடைய சகோதரியை சீமான் மணப்பது.

1244 } 1255 } ஏயரான்கள், பாரான்கள், பீஷப்புகள் ஆகியோர் கூடி, மந்திரிகளை நியமிப்பதில் தங்களுக்கு அதிகாரம் வேண்டுதல், அரசர் மறுப்பது.

1254 முதல் முதலாக ஒவ்வொரு ஷயரிலிருந்தும் இரண்டிரண்டு நைட்ஸ்கள் பாரில்லியமன்றுக்கு அழைக்கப்படுவது.

1258 மடப் பாரில்லியமன்று, ஆக்ஸ்போர்ட் திட்டங்கள்.

1259 பாரிஸ் உடன்படிக்கை.

1264 ஆமயன்ஸ் சமாதானம், லவஸ் யுத்தம்.

1265 புது முறையான பாரில்லியமன்று, நகரங்களுக்கும், கிராமசேஸ்தருக்கும் மனஸ்தாபம், ஈவஸ்ஹாம் யுத்தம்.

1266 கனல்வர்த் தக்த்தம்

1267 எட்வரட் துருசேடுக்குப் போவது, ஷுரவ்ஸ்புரி சமாதானம்.

1272 ஹென்ரியினது மரணம்.